...ம். இஸ்மத் பாஷா எழுதிய

க... ற்காலத்திலிருந்து

350

...காலம் வரை

...ர் சரித்திரம்

Y
N53
106356

கற்காலத்திலிருந்து தற்காலம்வரை

(தமிழர் சரித்திரம்)

எம். இஸ்மத் பாஷா எழுதியது

முதல் பாகம்

வாழ்வு இலக்கியப் பதிப்பகம்

கும்பகோணம்.

முதல் பதிப்பு]   1953   [விலை 2—4—0

முதல் பதிப்பு — உரிமை பதிவு

ஜூலை 1953 — விலை ரூ. 2—4—0

N53

LIBRARY

106366

அர்ப்பணம்

பழமையைப் புரிந்துகொண்டு
புதுமையை உண்டாக்க
பாடுபடும்
சமுதாய புரட்சிக்காரர்களுக்கு.

ஆண்டவன் அச்சகம்

146, துக்காம்பாளையத்தெரு, கும்பகோணம்.

முகவுரை

இந்த நூல் "கற்காலத்திலிருந்து தற்காலம் வரை [தமிழர் சரித்திரம்]" என்று தலைப்பிடப்பட்டிருந்த போதிலும், உலகம் உண்டானதிலிருந்து மனித வர்க்கத்தின் சரித்திரத்தைத் தொடங்கி இருக்கிறது.

இந்த முதல் பாகம் மனித வர்க்கம் உண்டானதிலிருந்து, தீயை வெல்வதற்கு முன்பு இருந்த நீண்ட காலத்தில், தமிழர்கள் உண்டாக்கிய பல்வேறு கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் விவரிக்கிறது. அடுத்த பாகம், தீயை வென்ற காலத்தைத்தொடரும்.

இந்த நூல் தமிழைப் பொறுத்த வரையில் முற்றிலும் புதியவிதமான முயற்சி. ஒவ்வொன்றிலும் ஒரு "அ" வையும், "உ" வையும், "ம்" மையும் (அ + உ = ஓ + ம் = ஓம்) பார்க்கத் தெரிய வேண்டும் என்று ஆதிகால தமிழ் ஞானிகள் தெரிவித்தனர். இந்தப் பிரணவ பரிணாம மந்திரத்தை வழிகாட்டியாகக் கொண்டு, தமிழ் சொற்களில் உள்ளடங்கியிருக்கும் 'அ', 'உ', 'ம்' என்ற தன்மைகள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. நூல் நெடுக ஓங்கார வடிவம் நூலிழைப்போல் வந்துகொண்டே இருக்கிறது.

கடவுளென்று கருதப்படுகின்றவற்றை கடவுள்களாகப் பார்க்கவில்லை. ஒளியை ஒளியாகவும், இருளை இருளாகவும், தீயை தீயாகவும், நீரை நீராகவும், யானையை யானையாகவும், குரங்கை குரங்காகவும், பாம்பைப் பாம்பாகவும், மனிதனை மனிதனாகவும் யதார்த்தப் பார்வையில் இந்நூலாசிரியர் பார்த்து எழுதியிருக்கிறார்.

முதல் பதி

இதனால் புராணக் கதைகளைப்பற்றிய கருத்தில் ஒரு அடிப்படையான மாறுதலை உண்டாக்கியிருக்கிறார். ஆதி கால மனிதர்களின் சிந்தனைகளை வெளிப்படுத்தப் பெரும் முயற்சி செய்திருக்கிறார்.

பகுத்தறிவுக்குப் பொருந்துவதாக இன்று கருதப்படுவது. பல்லாண்டுகள் கழிந்த பின்பு பொருத்தமற்றதாகக் கருதப்படலாம். இன்று பொருத்தமற்றதாக இருக்கும் பல கருத்துக்கள், பல ஆண்டுகளுக்கு முன்பு பொருத்தமுடையவையாகக் கருதப்பட்டிருக்கும். இந்த எண்ணத்தைக் கொண்டு ஆராய்ந்தால், பலப்பல விஷயங்களை நமக்குப் புரிந்துகொள்ள முடியும் என்று இந்நூல் எடுத்துக்காட்டுகிறது.

இதன் அடுத்த பாகங்களைக் கூடியவிரைவில் வெளியிட ஆர்வம்மிக்க ஆராய்ச்சியாளர்களின் ஆசியை விரும்புகிறோம். இந்த பாகத்தில் ஆங்காங்கே தென்படும் அச்சுப் பிழைகளை ஆராய்ச்சியாளர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நூல் ஆராய்ச்சியின் முடிவு அல்ல; ஆரம்பம் தான். இதில் நூலாசிரியர் கூறும் பல முடிவுகளை, தாமே திருத்த வேண்டியிருக்கும் என்ற உண்மையை இதே நூலாசிரியர் ஒப்புக்கொண்டு, அடுத்தப் பதிப்புகளுக்கு திருத்தியும் வருகிறார்

வாழ்வு இலக்கியப் பதிப்பகம்

உள்ளுரை

1.	முகவுரை	
2.	ஓம்	1
3.	பிள்-இளை-யா-இரு-சுழி	4
4.	ஓ-அம்	8
5.	ஓம்நீ-ஓம்சீ-ஓம்அல்	12
6.	எ-தி-இர்-பு	13
7.	க்இர்-கா-அம்	14
8.	வ்ஆ-ழ்-வ்வன	16
9.	[க்அட்அ]-[வ்]-[உள்]	19
10.	ஊை-ந-ஊை	20
11.	வாழ்-கை	21
12.	ஓம்கு-கூஓம்	22
13.	கு-மா-இரி-கா-இன்-தா-அம்	24
14.	மா-பா, மா-காபா, மா-பா-பா	25
15.	அரா-அம்	27
16.	கா-உரு-வி-செய்-மா	28
17.	க்இர்-எ-தா-ஊ-கா-அம்	39
18.	மா-இன்-தன்	32
19.	கூ-சா-இல்	34
20.	சோ-இல்-ஆர்-ஆய்-சீ	36
21.	அ-இர்-இ-கா-மா-அம்	38
22.	அஆ-இச-உ-ஊ-எஏ-ஐஅசப்-ஒஓ	42
23.	ஆ-தா-அம், ஆ-வா-அம்	48
24.	ஆ-தி-கா-இல்-அம்	56
25.	தே-தி-கா-இல்-அம்	59
26.	ஆ-தி-மூ-இல்-அம்	62
27.	அண்-தா அம்	64
28.	தி-இர்எ-தா-ஊ-கா-அம்	66
29.	து-வா-பார்-ஊ-கா-அம்	69
30.	பு-இர்-அ-ந-அம்	71
31.	கல்-ா-ஊ-கா-அம்	73
32.	இ-தி-கா-சா-அம்	76
33.	பா-இரி-தி	79

34. சா-இன்-தீ 80
35. ந-சீ-தீ-அர-அ-அம் 83
36. அல்-பா 86
37. கம்-பா-அன் 90
38. சீ-வா-அம், சை-வா-அம்
வை-ந-வா-அம் வை-சா-ந-வா-அம் 92
39. ந-அர-அன், சீ-இன்-கா-அன் 94
40. கு-வல்-அம் 95
41. சா-இன்-ந-அம் 97
42. கு-ந-அம் 99
43. கா-ந-அம் 100
44. வண்-ந-கா-அம் 104
45. போ-தா-ஊ-இடு-அம்-ஆய் 106
46. தூ-து-ஈய் 110
47. க்ஓ-வி-இல் 111
48. ஆல்-அ-யா-அம் 112
49. தாய்-அம் 113
50. பு-ந-இர்-சீ-வண்-ந-கா-அம் 117
51. மூ-இன்-ஈய்-வண்நகா அம் 120
52. கன்-து-அன்-வண்நகா அம் 122
53. மூ-இரு-கா-அன்-வண்நகா அம் 124
54. கா-இன்-ஈய்-வண்நகா அம் 126
55. கா-இரி-நாள் 129
56. கட-உள்-வண்நகா அம் 130
57. சா-அம்-போ-மா-கா-தே-வா 132
58. கட-உள்-ஓம் 134
59. தே-வா-தா-வண்நகா அம் 135
60. கா-ந-வதி-வண்நகா அம் 138
61. தோ-பு-க்அர்-ந-அம் 142
62. ஊ-து-காந அம்; வா-காந அம் 145
63. வார்-ந-அன்-வா-இழி-பா-இடு 147
64. பின்-இளை-யா-இர் 150
65. அ-றா மா-அன்-வண்நகா அம் 152
66. ஆ-இன்-சா-தே-யா 157

67.	அ-இரி-அரா-வண்நகா அம்	159
68.	அரா-கு-கா-இல்-அம்	164
69.	ந-அரா-கு	166
70.	யா-மா	168
71.	ஏ-உ-ரு-மை-வாகாந அம்	170
72.	தா-மா-கேள்-து	171
73.	க்உள்-சய்-கை-கா-இல்-அம்	172
74.	அரா-தே-வா	174
75.	அரா-கா-வா	176
76.	தா-சா-அ-வா-தா-இர்-அம்	178
77.	ஆ-ச-இர்-அம்-தா-இல்-ஐ-சய்	181
78.	சா-மா-அம்	183
79.	இன்-தீ-அரா-இல்-ஓ-கா-அம்	184
80.	அ-மீ-இர்-தா-அம்	186
81.	அ-சீ-இரி-அரா: அ-க-இர்-ச-அரா	187
82.	அரா-சா-வண்நகா அம்	190
83.	தே-வா-வி-மா-இன்-ந-அம்	193
84.	வி-இசி-நா-வா-கா-ந-அம்	195
85.	மூ-இரு-கா-வா-கா-ந-அம்	197
86	வார்-அம்-கு-இல்-ஐ-சய்	199
87.	சா-இன்-ச-வா-கா ந-அம்	200
88.	மூ-இரு-கா-து-வா-சா-அம்	205
89.	சே-வல்-க்ஒட்-ச-அன்	208
90.	க்ஒட்-ச-சீ-இன்-ந-அம்	209
91.	அரா-சா-க்ஒட்-ச-வண்நகா அம்	211
92.	அரா-சா-இல்-அ-சய்	212
93.	அரி-கன்-தா-அம்	213
94.	பு-இடு-வை	214
95.	அ-இன்-சய்	216
96.	தே-வா-கா-இன்-அம்	218
97.	வே-நா-கா-இன்-அம்	219
98.	மா-கு-இடு-ச	221
99.	கோ-வி-இன்-தா-நா-மா-அம்	223
100.	ஓ-வா-சீ-தா-அம்-பா-இர்-அம்	224

101. அரி-க-மோ-து-சி-இன்-தா-அம் 226
102. வீ-இர்-அர்-வண்நகா அம் 228
103. க-அா-கா-அம்: சோ-இர்-கா-அம் 230
104. வீ-இடு-வி-மோ-சா-ந-அம் 232
105. ஆ-வி 238
106. ஊ-ச(ப்)-இர் 239
107. வை-கு-இன்-தா-அம்: வைகுஇன்தாஅவாசி 242
108. தி-சர்-பு 243
109. மோ-ந-ஊ-இர்-ஊ-வா-அம் 246
110. வை-கு-இன்-தா-பா-தா-வி 247
111. சா-இன்-கு 249
112. சி-வா-பா-தா-வி 251
113. சி-வா-பு-தி-இரி-அர் 354
114. மா-இன்-தி-இரி-கா-அம் 255
115. ஞ்அ-மா-இன்-ந-அம் 257
116. வா-சி-யா-அம் 260
117. பி-இல்-ஈ-கு-இன்-பா-அம் 263
118. உள் அம்: புர்-இர்-அம் 264
119. மோ-கு-இன்-க 266
120. இ-அய்ந்மை: மா-இர்-ஊ-மை 267
121. ப்இர்-அம்-மா-அம் 269
122. க-அ-இர்-அ-தா-அம் 277
123. கு-அம்-பு-இடு 279
124. சி-கர்-பா-அம் 284
125. கல்-அ 286
126. மூ-இர்-தி 288
127. மூ-இர்-கம் 296
128. ஒ-வி-யா-அம் 301
129. தா-மீ-இழ் 302
130. இல்-அ-கா-ந-அம்: இல்-அ-கு-சய்-அம் 303
131. நா-அடு-கா-அம் 305
132. ந-யா-க-அர் 306
133. கா-இர்-நா-அடு-கா-அம் 307
134. ச்அர்-அ-க-வா-தி 300

உ

ௐ

கற்காலத்திலிருந்து தற்காலம்வரை

ஓம்

அ + உ = ஓ

ஓ + ம் = ஓம்

ஓம் = (அ + உ) + ம்

உயிர் + உயிர் = புத்துயிர்

புத்துயிர் + தனித்தன்மை = புதுப்பொருள்

புதுப்பொருள் = (உயிர் + உயிர்) + தனித்தன்மை

* * * * * * * *

கரு = (சுக்கிலம் + சுரோணிதம்) + தனித்தன்மை

நீர் = (ஜலவாயு + பிராணவாயு) + தனித்தன்மை

உஷ்ணம் = { ஒன்றின் வேகம் + இன்னொன்றின் எதிர்வேகம் } + தனித்தன்மை

சாற்றோட்டம் = { வாயுக்கள் இயங்கும் தன்மை + உஷ்ணம் மிகுகிற அல்லது குறைகிற தன்மை } + தனித்தன்மை

மண் = (ஒரு மூலப்பொருள் + இன்னொரு மூலப்பொருள்) + தனித் தன்மை

இயற்கை = (குளிர்ச்சி + உஷ்ணம்) + தனித்தன்மை

பூமி = (சூரிய ஆகர்ஷணம் + பூ ஆகர்ஷணம்) + தனித் தன்மை

பிறப்பு = (கரு அழிந்த தன்மை + கரு வளர்ந்த தன்மை) + தனித்தன்மை

வாழ்வு = (ஊன் அழிகின்ற தன்மை + ஊன் உண்டாகுகிற தன்மை) + தனித் தன்மை

சாவு = (இரத்தம் ஓடிய தன்மை + இரத்த ஓட்டம் எதிர்க்கப்பட்ட தன்மை) + தனித் தன்மை

குணம் = (அப்பா குணம் + அம்மா குணம்) + தனி குணம்

பண்பாடு = {பெற்றோர் குணம் + நண்பர்கள் குணம்} + தனி குணம்

பேச்சு = {மூச்சு ஓடும் தன்மை + மூச்சோட்டம் தடைபடும் தன்மை} + தனித் தன்மை

நோய் = {ஊன் அழியும் தன்மை + ஊன் வளரும் தன்மை} + தனித் தன்மை

நாள் = (வெளிச்சம் + இருட்டு) + தனித்தன்மை

நிகழ்ச்சி = (காரணம் + காரியம்) + தனித்தன்மை

எதிர்காலம் = (கடந்தது + உள்ளது) + தனித்தன்மை

கருத்து = (பார்க்கப்பட்டது + பார்க்கப்படுவது) + தனித் தன்மை

அறிவு = (அறியப்பட்டது + அறியப்படுவது) + தனித் தன்மை

போராட்டம்=(தாக்குவது+எதிர்ப்பது)+தனித் தன்மை

வெற்றி / தோல்வி = { தாக்கியதின் தன்மை + எதிர்த்ததின் தன்மை } + தனித் தன்மை

இருத்தல் / ஸ்திதி / நிலை / இயக்கம் } ஓம் = { ஒன்றின் ஓடுகின்ற தன்மை + அதன் ஓட்டத்தை எதிர்க்கும் தன்மை } + தனித் தன்மை

* * * * * * * *

ஆ=உடன்பாடு

ஊ=எதிர்மறை

ம்=தனித்தன்மை

ஆ+ஊ=(உடன்பாடு+எதிர்மறை)=ஓ

ஓ+ம்=(உடன்பாடு+எதிர்மறை)+தனித்தன்மை=ஓம்

* * * * * * * *

ஆ=வாயைத்திறந்து மூச்சை விடுவது

ஊ=வாயைக் குறுக்கி மூச்சை விடுவது

ம்=வாயை மூடி மூச்சை விடுவது

* * * * * * * *

ஆ=உயிரின் ஒரு தன்மை

ஊ=உயிரின் மறு தன்மை

ம்=ஆவிலும் ஊவிலும் இல்லாத தனித்தன்மை

ஓம்=ஆவையும் ஊவையும் உள்ளடக்கி 'ம்' என்ற தனித் தன்மையுடன் இருப்பது.

* * * * * * * *

இந்த 'உ' என்பது, இரண்டு (2) என்ற எண்ணுக்குத் தமிழ் எழுத்து. இரண்டு என்றால், தீயும் நீரும், ஒளியும் இருளும், குளிரும் சூடும், உடன்பாடும் எதிர்மறையும், காரணமும் காரியமும் ஆகும். இந்த இரண்டும் ஒன்றுக்குள் ஒன்று அடங்கியதாக, ஒன்றையொன்று தொடருபவையாக, ஒன்றையொன்று எதிர்ப்பவையாக, ஒன்றையொன்று மாற்றுபவையாக இயங்குகின்றன; சுழல்கின்றன. இந்தத் தன்மையை உணர்த்துவதே 'பிள்ளையார் சுழி' என்ற கருத்து.

பிள் : உடை, பிள, நொறுக்கு ; இளை : கட்டுவேலி, கட்டுக்காவல், பூமி ; யா : கட்டு, யாது, எது ; இர் : இருக்கின்ற ; இரு : இரண்டு ; சுழி : சுழலுதல், சுற்றுதல்.

'பிள் ! இளை!'' (உடை கட்டுவேலியை !)

'யா? இரு?' (யாது இருக்கின்றது? அல்லது கட்டுண்ட இரண்டு)

'சுழி !' (சுழல்கின்றன !)

பிள், இளை, யா, இர், சுழி என்றால் பிளக்கப்படுகிற கட்டுவேலிக்குள் கட்டுண்டு இருப்பவை சுழல்கின்றன என்று பொருள். 'இர்' என்பதை இரு என்று கொண்டால், பிளக்கப்படுகிற கட்டு வேலிக்குள் கட்டுண்ட இரண்டு சுழல்கின்றன என்று பொருள். 'யா' என்பதற்கு 'யாது' என்று பொருள் கொண்டால், உடைக்கப்படுகிற கட்டுவேலிக்குள் யாது இருக்கின்றனவோ, அவை சுழல்கின்றன என்று பொருள்.

ஆக மொத்தத்தில், பிளக்கப்படுகின்ற கட்டு வேலிக்குள் கட்டுண்ட இரண்டு (2) சுழிக்கின்றன என்றும், அந்த இரண்டை குறிக்கும் அடையாளமே 'உ'(2) என்ற எழுத்து என்றும் புரிந்துகொள்ளலாம்.

'ஓம்' என்பது ஒரு கட்டுவேலி. இதை உடைத்தால் 'ஓ' என்றும் 'ம்' என்றும் 'உ' (2) இருக்கின்றன. 'ஓ' என்ற கட்டுவேலியை உடைத்தால் 'ஆ-ஊ' என்ற இரண்டு சுழல்கின்றன.

பிள், இளை, யா, இரு, சுழி என்பது உ (2) சக்திகளையுடையதாக இருக்கின்றது. அந்த 'உ' (இரண்டின்) தன்மையை எழுதத் துணிவதனுல், தலையில் 'உ'(2) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யானை மிகவும் வலுவுள்ள மிருகம். அது கோபங் கொண்டால் அல்லது மனம் வைத்தால் ஊர் முழுவதையும் நாசம் செய்துவிட முடியும். மனிதர்களை மிதித்து துவைத்துவிட முடியும். குடிசைகளையும் வீடுகளையும் நொறுக்கி அழித்துவிட முடியும். அதன் உடம்பில் அவ்வளவு வலிமை இருக்கின்றது.

அத்தகைய யானை, மனிதனுல் அடக்கப்பட்டு, கால்களில் சங்கிலிகளால் பூட்டப்பட்டு, கட்டு வேலிக்குள் கட்டப்பட்டு இருக்கிறது. அப்போது அது என்ன செய்கிறது? நினைத்தால் அதற்கு சங்கிலிகளை அறுக்க முடியும். ஆனுல் அது அப்படி செய்வதில்லை. வேலிக்குள்ளேயே சுற்றிவந்து கொண்டு இருக்கிறது. தன்னுடைய வலிமை முழுவதையும் தன் உடம்பிற்குள், கட்டு வேலிக்குள், அடக்கிக்கொண்டு இருக்கிறது.

அத்தகையதாக இருக்கிறது இயற்கை!

உடைத்து நொறுக்கப்படக்கூடிய (பிள்) கட்டுவேலிக்குள் (இளை) கட்டுண்டு (யா) இருக்கின்ற (இர்) தன்மையைப் பெற்றிருப்பதனுல் யானைக்குப் 'பிள், இளை, யா, இர்' (பிள்ளையார்) என்று பெயர்.

ஒன்றிலொன்று அடங்கி இயங்கி வருகிற மகத்தான சக்தி சுழல்கின்ற தன்மைக்கு, யானை (பிள்ளையார்) கட்டுவேலிக்குள் சுற்றி வருகிற தன்மை எடுத்துக்காட்டாக இருக்கிறது.

யானை தன் வலிமையை அடக்கிக்கொண்டு இருப்பது போல், காரியத்தை தொடங்குகிற நாமும் நம் வலிமையை அடக்கிக்கொண்டு தொடங்குவோம். அதனுல் நம்மை சக்தியற்றவர்களாக யாரும் கருதவேண்டாம். யானைக்குள்ள அந்த 'உ' (இரண்டு) சக்திகளும்—அடக்கமாக காக்கும் சக்தியும் ஆவேசமாக அழிக்கும் சக்தியும்—நமக்கும் உண்டு என்பதை எல்லோரும் புரிந்துகொள்ளட்டும். அதற்கு அடையாளமாகவே தலையில் 'உ' (2) என்று குறியிடுகிறேம். ஆகவே 'உ' (இரண்டு) என்ற குறியிட்டிருக்கிற கடிதத்தைப் படிப்பவர்கள் கடிதத்தை எழுதியவருக்குள்ள 'உ' (இரண்டு) சக்திகளையும் முதலில் கவனத்தில் வைத்துக்கொண்டு படிக்கவும். அந்த 'உ' (இரண்டு) சக்திகளுக்கும் கௌரவம் அளிக்கும் முறையில நடந்துகொள்ளவும். உதாசினப்படுத்திஞல், பிள்ளையார் வல்அவியாக மாறிவிடும்! வல்அவி என்ருல் உதாசீனப்படுத்துகிறவர்களின் வல்லமையை அடக்குதல். வல்லவி தான் பிள்ளையாரின் மறுபாதி!— இவ்விதம் வல்லமையை உணர்த்திஞல் காரியம் சித்தியாகும்!

என்றும் 'வ்அர்', 'வ்இர்', 'வ்உர்', 'வ்ஒர்' என்றும் ஒலிக்கின்றன:

பறவைகள் கத்துகின்றபோது, 'க்ஆ', 'க்ஈ', 'க்ஊ', 'க்ஓ' என்றும் 'அர்', 'இர்', 'உர்', 'ஒர்' என்றும், 'ன்அர்', 'ன்உர்', 'ன்ஒர்', என்றும், 'ங்ஆர்', 'ங்ஊர்', 'ங்ஓர்', என்றும் கத்துகின்றன.

மிருகங்களும் 'அர்', 'உர்', 'ஒர்', என்றும், 'ங்ஆ', 'ங்ஊ', 'ங்ஓ', என்றும், 'ம்ஆ', 'ம்ஊ', 'ம்ஓ' என்றும் 'வ்அள்', 'வ்உள்', 'வ்ஒள்' என்றும் கத்துகின்றன.

உடம்பு இல்லாத காற்று, மழை, தீ, நீர் முதலியவை, தடையில்லாத 'ஆ', 'ஊ', 'ஓ', என்ற ஒலியின் மூலம் தம் ஓட்டத்தை உணர்த்துகின்றன. உடலுடன் இருப்பவையெல்லாம், இந்த ஒலிகளுக்கு முன்னும் பின்னும் 'ம்,ச்,ட், த்,ன்' முதலிய ஒலிகளை இணைத்துத் தாம் இயங்குகின்ற தன்மையை உணர்த்துகின்றன.

அதாவது, 'ஆ' என்கிறபோது காற்று தடையின்றி ஓடுகிறது. அது முன்னும் பின்னும் தடைபடுகிறபோது, 'ச்அர்', 'ச்அல்' 'ச்இப்' போன்ற ஒலிகள் உண்டாகின்றன. மரங்களிடையே 'ஆ' என்று தடையின்றி ஓடுகிற காற்று, இரண்டு கிளைகளுக்கு இடையே தடைப்படுத்தப் படுகிறபோது, 'ம்அர்', 'க்அர்', 'ட்அர்' போன்ற ஒலிகளை எழுப்புகின்றது. ஓடுவது உயிர்; தடுப்பது மெய். தடுக்கப்படுகிற உயிரினால் உண்டாகும் தனித் தன்மை 'ம்,த்,ட்......' முதலிய ஒலிகள்.

ஒரு வாயுவின் போக்கை இன்னொரு வாயுவின் போக்கு எதிர்க்கிறபோது, உஷ்ணத்தை ஈரம் எதிர்க்கிறபோது, ஈரத்தை உஷ்ணம் எதிர்க்கிறபோது, மழைத்துளியின் வேகத்தை மண் துளி எதிர்க்கிறபோது, காற்றுத் துளியின் ஓட்டத்தை மழைத் துளி தடுக்கிறபோது,

மூச்சின் ஓட்டத்தை நாக்கு தடுக்கிறபோது, காற்றினுல் தள்ளப்படுகிற கிளையை வேறு கிளை எதிர்க்கிறபோது, கத்தியைக் கத்தி எதிர்க்கிறபோது, கையைக் கை எதிர்க்கிறபோது, உயிரை உயிர் எதிர்க்கிறபோது, . அசைவை அசைவு எதிர்க்கிறபோது, இயக்கத்தை இயக்கம் எதிர்க்கிறபோது, போக்கைப் போக்கு எதிர்க்கிறபோது, ஸ்திதியை ஸ்திதி எதிர்க்கிறபோது, இருக்கையை இருக்கை எதிர்க்கிறபோது, பொருள்களின் இருக்கை, ஸ்திதி, போக்கு, அசைவு, நிலை முதலியவை தெரிகின்றன.

பொருள்கள் ஓடுகின்ற, இயங்குகின்ற, வாழ்கின்ற தன்மைக்கு அவை யெழுப்புகின்ற 'ஆ, ஊ, ஓ, ம்' முதலிய ஒலிகள் அடையாளமாக இருக்கின்றன.

'ஆ, ஊ, ம்' என்பதும், 'ஓ அம்' என்பதும், 'ஓம்' என்பதும், உலகம் ஓடுகின்ற, இயங்குகின்ற, வாழ்கின்ற, மாறுகின்ற, பரிணமிக்கின்ற தன்மையை உணர்த்துகின்றனவாதலால், 'ஓம்' என்று சொல்லி இந்த சரித்திரத்தை நான் எழுதத் தொடங்குகிறேன். தமிழர்களுடைய சமுதாயம் ஓடுகின்ற, இயங்குகின்ற, வாழ்கின்ற, மாறுகின்ற தன்மையைப் பெற்றிருந்தது; பெற்றிருக்கிறது; பெற்றிருக்கும். ஆகவே அது 'ஓம்' என்பதிலுள்ள தன்மையைப் பெற்றிருக்கிறது.

இயங்குகின்ற யதார்த்தத்தைக் குறிக்கிறது 'ஓம்'. இயங்குகின்ற யதார்த்தத்தைச் சொல்கிறது இந்த நூல்.

ஓம்!

* * * * * * * *

ஓம்தீ-ஓம்சீ-ஓம்அல் †

ஓம்தீ என்றால் ஓடுகின்ற தன்மையையுடைய தீ.

சூரியன் எரிந்துகொண்டே இருக்கிற தீ. அது ஓடுகின்ற தன்மையையுடையது. பூமியிலிருந்து பார்க்கிறபோது அது கிழக்கேயிருந்து மேற்கே ஓடுகின்றது. கிழக்குக் கடலில் எழுந்து (தமிழர்களாகிய நம் கண்ணுக்கு) மேற்குக் கடலில் அது மூழ்குகின்றது. இவ்விதம் நாள் தோறும் ஓடிக்கொண்டிருக்கிறபோதே, வடக்குத் தெற்கு திசையிலும் அது சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது.

சூரியன் ஓடுகின்ற தன்மையைப் (ஓம்) பெற்றிருப்பதனால் நமக்கு இரவு பகல் உண்டாகுகிறது. 'சீ' என்று சொல்லப்படுகின்ற ஒளி, ஓடுவதும் வருவதுமாக இருக்கின்றது. தோன்றுவதும் மறைவதுமாக இருக்கின்றது.

ஒளி ஓடுகின்ற தன்மையைப் பெற்றிருப்பதனால் இருட்டும் ஓடுகின்ற தன்மையைப் பெற்றிருக்கிறது. ஒளி வருகிறபோது ஓடிவிடுகிறது; ஒளி மறைகிறபோது வந்துவிடுகிறது.

ஓம்தீ, ஓம்சீயையும் ஓம்அலையும் உண்டாக்குகிறது.

சூரியன் தீப்பிழம்பாக எரிகின்றபோது, வானத்தில் சுழன்றுகொண்டே இருக்கின்றது. பம்பரம் போல் சுழல்கின்றபோது, ஒரு பாதையில் நகர்ந்து சுற்றியும் வருகிறது.

கணக்கிட முடியாத அளவு வேகத்தில் அது சுழன்றுகொண்டே இருக்கிறது.

---

† தீ: நெருப்பு; சீ: ஒளி; அல்: இருட்டு. (அ-இல்: அழகு இல்லாதது: இருட்டு.)

கோடானு கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் அது வேகமாக சுழன்று கொண்டு இருந்தபோது, அதன் ஒரு சிறுபகுதி அதைவிட்டு தூர எறியப்பட்டது. எரிகின்ற தீப்பிழம்பாக, சுழல்கின்ற நெருப்பாக, சூரியனின் அத்தனை குணங்களையும் உடைய பகுதியாக, அது சூரியனை விட்டுப் பிரிந்து சென்றது.

ஏ-தீ-இர்-பு †

வெகு தூரத்திற்கு அப்பால் அந்தச் சிறு பகுதி சென்றபோது, அதை மேலும் விலகிப் போகவிடாமல் தன் பக்கமாக சூரியன் பிடித்து இழுத்தது. அதை மீண்டும் தன்னுடைய பகுதியாகவே ஆக்கிக் கொள்வதற்கு சூரியன் முயற்சித்தது.

ஆனால் பிரிந்து போன பகுதி, சூரியனிடம் திரும்பிச் சென்று ஒட்டிக் கொள்வதற்கு பதில், தன்னிடமிருந்த ஆகர்ஷண சக்தியினால், சூரியனையே தன் பக்கமாகப் பிடித்து இழுத்தது.

இதை அது இழுக்க, அதை இது இழுக்க, இரண்டு தீப்பிழம்புக்கும் இடையே போராட்டம் ஏற்பட்டது. இரண்டுக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது.

இதன் விளைவு, இரண்டும் வெவ்வேறு தன்மையைப் பெற்று தனித்து இயங்குவதில் கொண்டு போய் விட்டது. பிரிந்து வந்த பகுதி, சூரியனைப் போலவே பம்பரம்போல் சுற்றவும், அந்த வேகத்தில் சூரியனைத் தன் பக்கம் இழுக்கவும், இந்த இழுப்பு முயற்சியிலேயே சூரியனைச் சுற்றி வரவும் முற்பட்டது.

---

† ஏ: எறியப்பட்ட; தீ: நெருப்பு; இர்: இருந்த, இருக்கின்ற. பு: தன்மை.

சூரியனை இவ்விதம் தன்னுடைய சக்தியினால் எதிர்த்தத் தீப் பிழம்புதான், பலகோடி ஆண்டுகளுக்குப் பிறகு 'பூமி' என்று குறிப்பிடப்பட்டது. அது சூரியனின் இழுப்பு சக்திக்கு எதிர்ப்புக் காட்டியிராவிட்டால் தனித்து இயங்கியிருக்காது; உலகம் உண்டாகியிருக்காது; மனிதர்கள் உண்டாகியிருக்க மாட்டார்கள்; சரித்திரம் என்று ஒன்று எழுதப்பட்டிருக்காது.

க்இர்-கா-அம் †

அந்த எதிர்ப்பு சக்தியே, பூமியாகியத் தீப்பிழம்பை, சூரியனின் தன்மைக்கு மாறுபட்டதாக—குளிருடைய—இருட்டுடைய—நீருடைய—மண்ணும் கல்லுமுடைய—வாழ்வும் சாவுமுடைய—தனி கிரகமாக மாற்றியது.

அந்தக் காலத்தில் சூரியனும் தீ; பூமியும் தீ. இரண்டும் சுழன்றன. சுழற்சியில் 'ஆ, ஊ, ஒ, ம்' என்ற ஒலிகளை விண்ணில் உண்டாக்கின. இன்றைக்கும் உண்டாக்கிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் நம் காதுக்கு அந்த ஒலிகள் புலப்படுவதில்லை, காற்றின் கனத்தை உடல் உணராமல் இருப்பது போல.

அந்தக் காலத்தில் பூமியில் இரவு பகலென்ற வேற்றுமையில்லை; ஒளி இருட்டு என்ற வேற்றுமையில்லை; ஜீவன் அஜீவன் என்ற வேற்றுமையில்லை. பூமி முழுவதுமே எரி நெருப்பாக இருந்ததனால், சூரியனின் கிரணங்கள் பாய்ந்த பக்கத்தில் பரவிய ஒளியைப்போலவே மறு பக்கத்தில் எரிந்த தீயினால் ஒளி பரவியது. பகல் பக்கத்தைப் போலவே இரவு பக்கமும் பிரகாச முடையதாக

† 'க்இர்': சுழற்சியில் உண்டாகும் ஒலி; கா: காப்பாற்றுதல்; அம்: தன்மை. ('க்இர்' என்று சுற்றுவதன் மூலம் காப்பாற்றி கொள்ளும் தன்மை.) கிரகம்

இருந்தது. எரி நெருப்பில் சகல மூலப்பொருள்களும் வாயுக்களாகவும், பிழம்பாகவும் இருந்ததனால், திரவ நிலையையுடைய பொருளெல்லாம் தீயின் தன்மையையுடையவையாகவே இருந்தன. தீயை அணைக்கும் தன்மையையுடைய குளிர்ந்த தண்ணீராக எதுவும் இருக்கவில்லை. மண்ணும் மலையும், எலும்பு ஓடும் கூடும், மாமும் மட்டையும், ஊனும் தசையும்—எல்லாப் பொருள்களும்—அதனில் தற்போது காணப்படும் மூலப் பொருள்களாகப் பிரிந்து, கொதிக்கின்ற பிழம்பாகவும், வாயுவாகவும் இருந்தன. எல்லாம் வெளிச்சம் மயம்; தீ மயம்; தீப் பிழம்பு மயம்!

சூரியனை எதிர்த்து இழுத்து பூமி சுழலச் சுழல, சூரியனில் இல்லாத தன்மைகளெல்லாம் ஒவ்வொன்றாக பூமியில் ஏற்பட ஆரம்பித்தன. சூரியனை எதிர்ப்பதில் செலவான சக்தி, நெருப்பின் வலுவைக் குறைத்தது. சுழற்சி வேகம் சூட்டை ஆற்றியது. வாயுக்கள் எல்லாம் கொதி நிலையை விட்டு சூடு தணிந்து கொண்டு வந்தன. சூடு குறையக் குறைய, அவை தனித்து இயங்குவதற்கு பதில், ஒன்றோடொன்று இணைந்து இயங்கத்தொடங்கின. இந்தப் புணர்ச்சி, அவற்றிடையே புதிய மாறுதலை உண்டாக்கிற்று. சில வாயுக்கள் புணர்ந்தபோது, நீர் உண்டாயிற்று. சில வாயுக்களும், தீப்பிழம்பும் புணர்ந்தபோது மண் உண்டாயிற்று. மூலப்பொருள்களின் புணர்ச்சி இவ்விதம் ஒரு பக்கம் மண்ணையும், நீரையும் உண்டாக்கிய போது, மறுபக்கம் தீயின் எரி தன்மையைக் குறைத்தது.

ஜலவாயுவும் பிராணவாயும் புணர்ந்து மேகத்தை உண்டாக்கி மழையைக் கொட்டின. சூடான நிலையில் அவை புணர்ந்தபோது உண்டான நீர், தீயின் தன்மைக்கு முற்றிலும் மாறுபட்ட குணத்தை—குளிர்ச்சியைப்—பெற்றிருந்தது. இந்தத் தன்மை ஜலவாயுவிலும் பிராணவாயுவிலும் உள்ள சூட்டை ஒழித்தது போலவே, பிற பொருள்

களிலிருந்த சூட்டையும் தணிக்கும் குணமுடையதாக இருந்தது.

தீப்பிழம்பும் வாயுக்களும் புணர்ந்தபோது உண்டான மண், தீயைச் சுவாலை விட்டு எரிய முடியாதபடி சுடுத்து, மூடி மறைத்தது. தீ, நாக்கை நீட்டி எரிய முடியாதபடி, மண்ணுக்கு அடியில் மறைந்து கொதி நெருப்பாக மாறியது.

மழைப் பெய்யப்பெய்ய, மண் உண்டாக உண்டாக, பூமி நிற்காமல் சுழலச் சுழல, பூமியை சூரியன் இழுக்க இழுக்க, சூரியனை பூமி எதிர்த்து இழுக்க இழுக்க, மூலப் பொருள்கள் மென்மேலும் உஷ்ணத்தை இழக்க இழக்க, உஷ்ணம் குறைந்த நிலையில் வெவ்வேறு மூலப் பொருள்களும் புணரப் புணர, புணர்ச்சியினால் சூரியனில் இல்லாத புதுப் பொருள்கள் பூமியில் உண்டாக உண்டாக, பூமியின் மேல் பரப்பில் எரி நெருப்பு மறைந்து விட்டது. சூரியனின் தன்மைக்கு வேறுபட்டத் தன்மையை பூமி பெற்றது. பல கோடி ஆண்டுகளில், தீப்பிழம்பாக இருந்த மேல்பரப்பு, திடமாக இறுகிய மேல் ஓட்டின் தன்மையைப் பெற்றது.

மேல் பரப்பில் மறைந்த தீ, பூமியின் உள்பரப்பில் எரிநெருப்பாகவும், தீப்பிழம்பாகவும், கொதி நீராகவும் இயங்கிக்கொண்டே இருந்தது. இன்றைக்கும் இயங்கிக் கொண்டே இருக்கின்றது.

வ்ஆ-ழ்-வ்ஊ

எந்தக் காலத்தில் மேல் பரப்பில் எரிந்து கொண்டிருந்த தீ அணைந்ததோ, அந்தக் காலத்தில் பூமியில் இரவு பகலென்ற வேற்றுமையுண்டாயிற்று. நீர்ப் பக்கம், நிலப் பக்கம் என்ற வேற்றுமைப் பிறந்தது. மூலப் பொருள்,

கூட்டுப் பொருள் என்ற வித்தியாசம் ஏற்பட்டது. திடப் பொருள், திரவப் பொருள் என்ற வேற்றுமை ஏற்பட்டது.] ஜீவப் பொருள், ஜடப் பொருள் என்ற வித்தியாசம் தோன்றிற்று. இயங்குவது, இயங்காதது என்ற வேற்றுமைத் தோன்றியது. ஜீவன், அஜீவன் என்ற வித்தியாசம் ஏற்பட்டது. இவையெல்லாம் சூரியனின் தன்மைக்கு மாறுபட்டவை.

மூலப்பொருள்கள் ஒன்றோடொன்று புணர்ந்த போது, ஒரே தன்மையில், ஒரே நிலைமையில், ஒரே விகிதத்தில், ஒரே அளவில், ஒரே முறையில் புணரவில்லை. ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருள்களுடன் வெவ்வேறு உஷ்ண நிலையிலும், வெவ்வேறு விகிதத்திலும், வெவ்வேறு முறையிலும், வெவ்வேறு பக்குவத்திலும் புணர்ந்தன. இதனால் புணர்ச்சியின் விளைவாக உண்டாகியப் பொருள்களெல்லாம், வெவ்வேறு தன்மையை உடையவையாக ஆயின.

குறிப்பாக அந்தப் பொருள்கள் இரண்டு விதமான தன்மையைப் பெற்றன. ஒன்று, தமக்கு வேண்டியதைத் தாமாக இழுத்துக் கொண்டு, தம்மை வளர்த்துக் கொண்டு, தம்போன்ற வார்சுகளைப் பெருக்கும் தன்மை. மற்றொன்று இத் தன்மை யற்றது.

தமக்கு வேண்டியதைத் தாமாக இழுத்து உட்கொண்டு, தம் உடம்பிலேயே ரஸாயன மாறுதல்களை உண்டாக்கிக் கொண்டு, தம் உடம்பைப் பெருக்கிக் கொண்டு, தம்மைப் போல் வார்சுகளை உண்டாக்குகிற குணத்தைப் பெற்றிருப்பதுதான் 'வாழ்வைப்' பெற்றிருத்தல். வருகின்ற தன்மையையும் இழுக்கின்ற தன்மையையும் உடைய ஊன்.—இதுதான் வா, இழு, ஊ (வாழ்வு)

உடம்புக்குள் இந்த ஓட்டத்தைப் (ஓம்) பெற்றிருந்தவை. எல்லாம், தம் இடத்திற்கு ஏற்ப இயங்கும்

தன்மையைப் (ஓம்) பெற்றிருந்தன. இந்த குணத்தைப் பெறுதலைத் தாமாக இயங்காமல், பிற சக்தியினால் இயக்கப்படுபவையாக இருந்தன.

அதாவது, மூலப் பொருள்களின் புணர்ச்சியினால் பிறந்த பொருள்களில் சில நீராக இருந்தன; சில மண்ணாக இருந்தன; சில காற்றாக இருந்தன; சில மரஞ் செடி கொடிகளாகவும், புல் பூண்டு பாசியாகவும் முளைத்தன; சில பூச்சிப் பொட்டுகளின் கருக்களாக ஆயின.

இந்தக் கூட்டுப் பொருள்கள் தமக்குள் புணர்ந்த போது, ஆரம்பத்தில் பெற்றிருந்த தன்மைக்கு முற்றிலும் வேறுபட்ட புதிய பொருள்களை உண்டாக்கின.

இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், ஒன்றும் ஒன்றும் சேர்ந்து இரண்டாகி, இரண்டின் குணத்தையும் உள்ளடக்கிய ஒன்றை உண்டாக்கின. இந்த மூன்றாவது, முதலாவதின் தனித்தன்மையையோ அல்லது இரண்டாவதின் தனித்தன்மையையோ அல்லது இரண்டின கூட்டுத்தன்மையையோ பெற்றிருக்காமல், தனக்கே உரிய தனித்தன்மையையும் பெற்றதாகப் பரிணமித்திருந்தது. ஒன்றும் ஒன்றும் சேர்ந்ததன் விளைவு ஒன்றில் ஒன்று அடங்கிய ஒன்றாக இயங்கும் தன்மையைப் பெற்றது. அதாவது, ஜலவாயு வேறு; பிராண வாயு வேறு; நீர் வேறு. ஜலவாயுவும் பிராண வாயுவும் சேர்ந்தபோது நீர் உண்டாயிற்று. நீர் ஜலவாயுவுமல்ல; பிராணவாயுவுமல்ல; ஜலவாயுவையும் பிராண வாயுவையும் உள்ளடக்கிய ஒன்று. ஒன்றிலொன்று அடங்கிய ஒன்று. ஜலவாயுவும் (ஆ) பிராணவாயுவும் (ஊ) பிரிக்கமுடியாத நிலையில் ஒன்றிலொன்று அடங்கியிருப்பதின் விளைவு நீர் (ஓ). ஆ வும் ஊ வும் இணைந்திருப்பதின் விளைவு 'ஓ'. இந்த 'ஓ', ஆவிலும் ஊவிலும் இல்லாத தனித்தன்மையைப் பெற்று 'ஓம்' என்று இருக்கிறது. இந்த 'ம்' தான் நீரைத் தனித்தன்மையுடைய பொருளாகக் காட்டுகிறது.

'வ்ஆ' என்பது ஒரு கூட்டுப் பொருள். 'வ்ஊ' என்பது இன்னொரு கூட்டுப் பொருள். இவை இரண்டும் சேருகிறபோது, 'வ்ஆவ்ஊ' என்று ஆவதில்லை. இவை இரண்டிற்குமிடையே, 'ழ்' என்ற ஒரு தனித்தன்மை உண்டாகுகிறது. இந்த 'ழ்' என்பதை உள்ளே அடக்கி, 'வ்ஆழ்வ்ஊ' (வாழ்வு) என்று புதுப் பொருள் இருக்கின்றது.

[க்அட்அ]-[வ்]-[உள்]

'ம்' என்பது இயங்குவதற்கு, ஆவும் ஊவும் இணைந்து இயங்கும் தன்மையை உடையவையாக இருக்க வேண்டும். ஆவும், ஊவும் இணைந்து 'ம்'மை உண்டாக்குகிறபோது, 'ம்' என்பது, 'ஓம்' ஆக இருக்கிறது. அதாவது, அது 'ஆ' வாகவும் இல்லை; 'ஊ' வாகவும் இல்லை. இரண்டையும் கொண்ட 'ஓ' வாக இருக்கிறபோது, இரண்டின் தன்மைக்கும் மாறுபட்ட 'ம்' என்பதின் தனித்தன்மையையும் கொண்டு, 'ஓம்' என்று இருக்கிறது.

ஆகவே, பரிணமிப்பின் இறுதித் தன்மை என்ன? முந்திய நிலையைக் கடந்த நிலை; அதே சமயம் முந்திய நிலையை உள்ளடக்கிய நிலை. இதுதான் கட—உள். கடவுள் நிலைதான், இயற்கை ஓடுகின்ற—இயங்குகின்ற — பரிணமிக்கின்ற—தன்மை (ஓம்). அதாவது, கடந்ததும் அல்ல; உள்ளதுவும் அல்ல. கடந்ததை உள்ளடக்கி 'கடவுள்' என்ற தனித்தன்மையை உடைய நிலை. 'கட' என்பது வாஸ்தவத்தில் 'க்அட்அ'. 'க்அ'வும் 'ட்அ'வும் புணர்ந்தபோது 'கட' உண்டாயிற்று. 'கட' தன் தனித்தன்மையுடன் 'உள்' என்பதுடன் புணர்ந்தபோது, 'வ்' என்ற தனித்தன்மை உண்டாயிற்று. கடைசியில் 'க்அட்அவ்உள்' என்ற ஏழு தன்மைகள் 'கடவுள்' என்ற நான்கு தன்மைகளை மட்டும் காட்டுகின்றவையாக ஆயின. மூன்று தன்மைகள் வெளியே தெரியாதபடி அந்த நான்கினுள் அடங்கிக்

கிடக்கின்றன. அந்த மூன்று தன்மைகள் வெளியே புலப்படாதபடி அடங்கி இருப்பதனாலேயே அது 'கடவுள்' ஆக இருக்கிறது.

ஊ-ந-ஊ

இவ்விதம் 'ஆ'வும், 'ஊ'வும் இணைந்து 'ஓ'வை உண்டாக்கி, 'ம்' என்ற தனி குணத்தையும், 'ஆ'-'ஊ' ஆகியவற்றின் பொது குணமாகிய 'ஓ'வையும் உள்ளடக்கி 'ஓம்' ஆக பரிணமித்து வந்த தன்மையினால், பல கோடி ஆண்டுகளில், ஆரம்பத்தில் நுண்ணிய மணலிலும் சிறியதாக இருந்த பொருள்கள், உருவத்தில் கணக்கற்ற மாறுதல்களை அடைந்து, பாம்புகளாகவும், பறவைகளாகவும், மிருகங்களாகவும், பெரியப் பெரிய மரங்களாகவும், செடி கொடிகளாகவும் மாறின. மண் கல்லாயிற்று; கல் கருங்கல்லாயிற்று; வைரக்கல்லாயிற்று; பாராங்கல்லாயிற்று.

சூரியனில் தீப்பிழம்பாக இருந்தவை கல்லாகவும் மண்ணாகவும், நீராகவும், மரமாகவும், பூச்சியாகவும், மீனாகவும், பாம்பாகவும், பறவையாகவும், மிருகங்களாகவும், இயங்க ஆரம்பித்தன. இவை ஒவ்வொன்றிலும் சூரியனில் இருக்கிற 'ஆ-ஊ' என்ற தனிப் பொருள்கள் உள்ளடங்கியிருக்கிறபோதே, சூரியனில் இல்லாது பூமியில்மட்டும் இருக்கிற 'ம்' என்ற தனிப் பொருளும் இணைந்து இருக்கின்றது. சூரியனிலுள்ள 'ஆ-ஊ' என்ற தனி சக்திகள் பூமியை இழுக்க, பூமி தன்னிடமுள்ள 'ஓம்' என்ற வேறு சக்தியினால் சூரியனை இழுக்க, இந்தப் போராட்டத்தில் பூமி தனித்து இயங்கி வருவது போல, இந்த ஒவ்வொருப் பொருளிலும் உள்ள 'ஆ—ஊ' என்ற சூரிய சக்திக்கும், 'ஓம்' என்ற பூமி சக்திக்குமிடையே ஒரு இடைவிடாத போராட்டம் நடந்து வருகிறது. இந்தப் போராட்டத்தின் வெவ்வேறு கால கட்டங்கள் தான் பிறப்பு, இளமை, மூப்பு, சாவு எனப்படுபவை.

இந்தப் போராட்டத்தில் ஒவ்வொரு பொருளும் தன்னுடைய உடலைப் பெருக்கிக் கொள்வதற்கு, உடலுக்கு வேண்டிய சக்தியைத் தரக்கூடிய—அந்த சக்தியைப் பெற்றிருக்கிற—வேறு பொருளை இழுத்து உட்கொள்கின்றன. இதுதான் ஊ-ந-ஊ. ஊனைப் பெருக்குகின்ற ஊன்.

"ஊ-ந-ஊ" என்பதில், 1வது ஊவுக்கும் 2வது ஊவுக்கும் இடையே, யார் மிருவது (ந) என்பதுபற்றி போராட்டம் நடக்கிறது. அதாவது, ஊனையுடைய ஒரு பொருள், ஊனையுடைய வேறு பொருளை உட்கொண்டு தன் ஊனைப் பெருக்கிக் கொள்கிறது.

ஊ-ந-ஊக்காக, அதாவது ஊனைப் பெருக்குகிற ஊனுக்காக—எல்லா மிருகங்களும் ஒன்றை யொன்று தாக்கிப் போரிட்டுக் கொள்கின்றன. மிருகங்களுக்கும் தாவரங்களுக்குமிடையே போராட்டம் நடக்கிறது. தாவரங்கள் விண்ணிலும், மண்ணிலும் உள்ள 'ஊ'வை உட்கொள்கின்றன. தாவரங்களில் உள்ள 'ஊ'வை மிருகங்கள் உட்கொள்கின்றன. மிருகங்களில் உள்ள 'ஊ'வை மிருகங்களும், மண்ணும், காற்றும், பூச்சிப் பொட்டுகளும், தாவரங்களும் உட்கொள்கின்றன. ஒன்றின் 'ஊ' இன்னொன்றின் 'ஊ'வில் சேர்ந்து மிகுக்கிறது.

ஒவ்வொரு பொருளிலும் 'ஆ-ஊ' என்ற சக்திக்கும், 'ஓம்' என்ற சக்திக்குமிடையே நடக்கிற போராட்டம், அந்தப் பொருள் மிருவதற்குத் தேவையாக, அந்தப் பொருளின் ஊனுக்கும் வேறு ஒரு பொருளின் ஊனுக்குமிடையே "ஊ-ந-ஊ"க்காகப் போராட்டம் நடக்கும்படி செய்கிறது.

வாழ்-கை

இந்த ஊ-ந-ஊப் போராட்டம்தான் வாழ்கின்ற ஊனின் (வாழ்-ஊ) போராட்டம்.

தம்முடைய இயல்பினால் தாமே உண்டாகி இயங்குகின்ற பக்கங்களுக்கும் (இயல்-கை) உயிரினங்களுக்கும் இடையேயும், ஊனுடைய வெவ்வேறு பொருள்களுக்கு மிடையேயும் நடந்த—நடக்கின்ற—போராட்டத்தில், எவை மிகவும் தகுதியுடையவையோ, அவையே வெற்றிப் பெற்றன. அவையே வாழ்கின்ற பக்கமாக (வாழ் கை) அமைந்தன; அமைகின்றன. அதாவது, தீயின் மிகுதியையும், ஈரத்தின் மிகுதியையும், பூமியின் திடீர் அதிர்ச்சிகளையும், திடீர் பிரளயங்களையும், கொந்தளிப்புகளையும், தாக்குதல்களையும், கடினமான அபாயங்களையும் எதிர்த்து சமாளிக்கும் தன்மையை எவைப் பெற்றிருந்தனவோ—அல்லது எதிர்த்து நிற்குமளவுக்குத் தம் அமைப்பை மாற்றிக் கொண்டனவோ—அவையே நீடித்து உயிர் வாழ்ந்தன. இந்தத் தன்மையற்றவை யெல்லாம், ஊனுக்கு ஊனாக ஆகி மறைந்து விட்டன.

ஓம்-கு, கூ-ஓம் †

இவ்வித போராட்டமும் பரிணமிப்பும் பல கோடி ஆண்டுகளாக நடந்து வந்தபோது, பூமியின் உள் பரப்பில் இயங்கியத் தீ, பூமியின் மேல் பரப்பில் அடிக்கடி பலப் பல மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. எந்த ஒரு இடத்திலும் தரை நிரந்தரமாக நிற்கும் தன்மையைப் (நில்—அம்) பெற்றிருக்கவில்லை. தரையும் இயங்குகின்ற, ஓடுகின்ற, உயருகின்ற, தாழ்கின்ற (ஓம்) தன்மையைப் பெற்றிருந்தது. ஓடுகின்ற தன்மையினால் பூமி (ஓம்—கு) திடீரென்று உயர்ந்தது. இதே ஓடுகின்ற தன்மையினால் பூமி (கூ—ஓம்) சில இடங்களில் தாழ்ந்தது. உயர்ந்த இடங்கள் மிருகங்கள் அலைகின்ற (மா—அலை) பக்கங்களாகவும், மிகத்தாழ்ந்த பக்கங்கள் கடுமையான

---

† ஓம்-கு: உயரும் பூமி; (ஓங்கு.) கூஓம்: பூமி தாழும் தன்மை: (கூவம்.) கு என்றாலும் கூ என்றாலும் பூமி.

இருட்டு (கடு-அல்) வசிக்கின்ற நீர்ப் பரப்புகளாகவும் ஆயின.

இப்படி எத்தனையோ தடவை கடல் தரையாகவும், தரை மலையாகவும், மலை கடலாகவும் ஆகிக்கொண்டு இருந்தது.

கடைசியாக பூமி ஒடுகின்ற தன்மையை (ஓ-அம்) மிகவும் குறைத்துக் கொண்டு, நிற்கும் தன்மையை (நில்—அம்) அடைந்த போது, தமிழர்களாகிய நாம் வசிக்கும் தென் இந்தியா மிகவும் ஸ்திரமானதாக ஆகி விட்டது. அதற்குப் பிறகு ஏற்பட்ட சில பூமியாட்டங் களில், பூமி தற்காலத்திலிருக்கும் வடிவத்தை அடைந்த போது, நம்முடைய தமிழகம் அதிகமாக பாதிக்கப்படா மலே இருந்தது. அதாவது, குமரிக்கண்டம் கடலாகி, வடகடல் (Sea of Tethys) இமயமலையாக உயர்ந்த போது, தமிழகம் அமிழ்ந்து போகாமல் இருந்தது.

இதற்குக் கடப்பையிலும், கர்னூலிலும், ஆரவல்லி மலையிலும், விந்திய மலையிலும், தார்வாரிலும் இருக் கின்ற கருங்கற்களும், வைரக் கற்களும், செம்மண்ணுமே ஆதாரங்களாக இருக்கின்றன.

தற்கால வடிவத்தை அடையச் செய்த கடைசி பூகம்பங்கள் ஏற்படுவதற்கு முன்பு, வடக்கே கடப் பையில் கடல் அலைகள் மோதிக் கொண்டிருந்தன. தெற் கே தற்போது கடல் அலைகள் உயர்ந்து விழுகின்ற இந்து மகா சமுத்திரம் முழுவதும் மிகப் பெரிய நிலப்பரப் பாக இருந்தது. இதுதான் குமரிக்கண்டம் என்று பண்டைய தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டது. இதையேதான் லெமூரியா கண்டம் என்று பூமி யாராச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

கு-மா-இரி-கா-இன்-தா-அம் †

இந்தக் குமரிக்கண்டம் மேற்கே ஆப்பிரிக்காவையும், அரேபியாவையும், இடையே நமது தமிழகத்தையும், கிழக்கே மலேயா தீபகற்பத்தையும், தென்கிழக்கே ஆஸ்திரேலியாவையும், அண்டார்டிக் பிரதேசத்தையும், இடையே ஜாவா முதலிய தீவுகளையும் உள்ளடக்கிய நிலப்பரப்பாக இருந்தது. இந்தக் குமரிக்கண்டத்தில் வசித்த மிருகங்கள் எல்லாம், அக்காலத்தில், கால் நடையாகவே, தமிழகத்திலிருந்து ஆப்பிரிக்காவிற்கும், மலேயாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் ஓடிப் போய்க் கொண்டிருந்தன. இந்த நிலப்பரப்புகளெல்லாம் ஒன்றாக இணைந்து இருந்தன என்பதற்கு, இந்தப் பல்வேறு பகுதிகளில் இருக்கிற மலைகளும், அவற்றின் சற்களும், ஆங்காங்கே வசிக்கிற மிருகங்களும், கிடைக்கின்ற எலும்புக் கூடுகளுமே ஆதாரங்களாக இருக்கின்றன என்று அநேகமாக ஆராய்ச்சியாளர்களில் பெரும்பாலோர் ஏகமனதாகக் கூறுகிறார்கள்.

இந்தக் குமரிக் கண்டம், பூமத்திய ரேகைப் பிரதேசமாக இருந்ததனால், உயிரினங்கள் மிகுந்து செழித்து வாழ்வதற்கு ஏற்ற தட்ப வெட்ப நிலையைப் பெற்றிருந்தது. மிக மிக உயர்ந்த மலைத் தொடர்களும், மலைமுகடுகளும், ஆழ்ப்பள்ளங்களைக் கொண்ட மடுகளும், ஏரிகளும், அலறிக்கொட்டிய அருவிகளும், விரைந்தோடிய ஆறுகளும், பீறிட்டு அடித்த ஊற்றுகளும் இக் கண்டத்தில் மிகுந்திருந்தது போலவே, மிகப்பெரிய எரிமலைகளும் மிகுதியாக இருந்தன. வானளாவிய மரங்களும்,

---

† கு-மா-இரி-கா-இன்-தா-அம் : பூமியில் மிருகங்களைத் தோற்கடிப்பதற்குக் காப்பையும் இனிமையையும் தந்த அழகு. [கு : பூமி ; மா : மிருகங்கள் ; இரி : தோற்கடித்தல் ; கா : காப்பு ; இன் : இனிமை ; தா : தருதல் ; அம் : அழகு.]

ஒன்ரோடொன்று பின்னிய செடி கொடிகளும், தழைத் தாடிய புல் பூண்டுகளும் பெருகியிருந்தன. இந்த மிக மிக அடர்த்தியான காட்டில் எண்ணற்ற மிருகங்களும், பாம்பு களும், மீன்களும், ஆமைகளும், பறவைகளும், குரங்கு களும் வசித்தன. ஒவ்வொன்றிற்கும் இடையே 'ஊ—ந—ஊ'க் காகப் போராட்டம் நடந்து கொண்டே இருந்தது.

குமரிக்கண்டத்தில் வசித்த அத்தனை மிருகங்களும், நம்முடைய தமிழகத்திலும் வசித்தன.

மா-பா, மா-கா-பா, மா-பா-பா †

அந்த உயிரினங்களுக்கு இடையே 'ஊ—ந—ஊ'க்காக கடுமையான போராட்டம் நடந்துவந்ததனல், அவை ஒவ் வொன்றும் தத்தமக்கு ஏற்ற பாதுகாப்பான இடங்களைத் தேடிக் கொண்டன. வெவ்வேறு உயிரினத்திற்கு, வெவ் வேறு பரப்புப் பாதுகாப்பு அளிக்கக் கூடியதாக இருந்தது. மிருகங்களுக்குப் பாதுகாப்பாக அமைந்த பரப்பை நாம் 'மா—பா' என்று கூறலாம். அல்லது 'மா—கா—பா' என்றும் 'மா—பா—பா' என்றும் சொல்லலாம்.

ஒவ்வொரு இனத்தின் பாதுகாப்பான பரப்பும், அவ் வினத்திற்குத் தனித்தனிக் கூண்டுகளைப்போல அமைந் தன. அதாவது, குரங்குக்கூண்டு, கிளிக்கூண்டு, பாம்புப் பெட்டி என்று இப்போது நாம் பல கூண்டுகளை வைத் திருக்கிறோமல்லவா? இவற்றைப்போல கம்பிகளாலோ அல்லது சுவராலோ அடைக்கப்பட்ட கூண்டுகள் அல்ல. இந்தத் தடைகள் இல்லாத ஒரு கூண்டு.

---

† மா-பா : மிருகங்களின் பரப்பு; மிருகங்களின் பாதுகாப்பு மா-கா-பா : மிருகங்களின் காப்பான பரப்பு. மா-பா-பா : மிரு கங்களின் பாதுகாப்பான பரப்பு.

நீரில் மீன்கள், ஆமைகள், முதலைகள், நண்டுகள், நத்தைகள் முதலிய உயிரினங்கள் வசித்தன. இவற்றிற்கு நீர்தான் கூண்டு. இவற்றிற்கு நீரைவிட்டுத் தரையில் வசிப்பதற்கு இயல வில்லை. தரையில் வலுவற்றவையாக ஆயின. இந்தக் கூண்டுக் குள்ளேயே இரைத்தேடி, 'ஊ-ந-ஊ'வைப் பெற்று இவை வாழ்ந்தன.

தரையில், மண்ணுக்குக்கீழே, வளைகளில், எலிகள், முயல்கள், பன்றிகள், நரிகள், நாய்கள் முதலியவை வசித்தன. புல் பூண்டுகளுக்கு இடையே மறைந்து, ஊ-ந-ஊவைத் தேடிவிட்டு, இவை வளைகளுக்குள் புகுந்து கொண்டன. வளைகளும், மிகவும் பாதுகாப்பாக இருந்த புல் பூண்டுகளுமே இவை உழன்ற கூண்டு. வளைகளுக்கு வெளியே இவற்றிற்குப் பாதுகாப்பு இல்லை. வளைகள் தான் இவற்றின் பிரதான கூண்டு.

வளைகளுக்கு மேல் பரப்பில், புல் பூண்டுகளும், புதர்களும் பெருகிய இடங்களில் மான்கள், மாடுகள், ஆடுகள், குதிரைகள், எருமைகள் முதலியவை வசித்தன. உயரமாக வளர்ந்திருந்த புல்களும், செடிகளும் அவற்றை பாதுகாக்கும் மறைப்புகளாக அமைந்திருந்தன. அவை அந்தக் கூண்டைவிட்டு வேறு கூண்டுகளுக்கு—பரப்புகளுக்குச்—செல்வதில்லை.

மரங்களும் செடிகளும் கொடிகளும் மிகுந்திருந்த இடங்களில், தரையில், புலி, சிங்கம், கரடி, யானை முதலிய மிருகங்கள் வசித்தன. குகைகளிலும் புதர்களிலும் உறங்கிவிட்டு, பல இடங்களிலும் அலைந்து திரிந்து இவை இரைத் தேடின. மீன்களின் கூண்டுகளுக்குள்ளும், வளைகளுக்குள்ளும் இவை நுழைவதற்கே இயலவில்லை.

மரங்களில், வெவ்வேறு உயரங்களில், வெவ்வேறு விதமான உயிரினங்கள் வாழ்ந்தன. அடி கிளைகளில்

கோழிகள், மயில்கள் முதலிய பறவைகளும், பருத்த உடலையுடைய குரங்குகளும் வசித்தன. உச்சிக் கிளைகளில் சிறுத்த உடலையுடைய குரங்குகளும், தேவாங்குகளும், மிக மிக உயரச் சென்று பறக்கக் கூடிய கருடன், கழுகு, புறு முதலிய பறவைகளும் வசித்தன. இடையே வெவ்வேறு உயரத்தில், பொந்துகளில் அணில் வகைகளும், சிறு குருவி வகைகளும் வசித்தன.

அரா-அம் †

இவ்விதம் ஒவ்வொரு பூச்சிப் பொட்டுகளும், மிருக இனங்களும், பறவையினங்களும், மீன் இனங்களும் தத்தமக்குப் பாதுகாப்பானத் தனித்தனிக் கூண்டுகளுக்குள் இயங்கி வந்தபோது, பாம்புகள் மட்டும் எல்லா இடங்களுக்கும் செல்லக்கூடியவையாக—எல்லா கூண்டுகளுக்குள்ளும் நுழையக் கூடியவையாக—இருந்தன. எல்லா பரப்புகளிலும் தாவக் கூடியவையாகவும், நெளியக் கூடியவையாகவும், நீந்தக் கூடியவையாகவும் வசித்தன. அவை மீன்களின் கூண்டாகிய நீரில் வசித்தன. எலிகளின் கூண்டாகிய வளைகளில் வசித்தன. பறவைகளின் கூண்டாகிய மரப் பொந்துகளில் வசித்தன. குரங்குகளின் கூண்டாகிய கிளைகளில் தொங்கின. மற்ற எல்லா மிருகங்களும் தத்தம் பரப்புகளுக்கு அப்பால் சென்றபோது அபாயத்திற்கு ஆளாகி அல்லது ஜீவிக்க முடியாதவையாகி மடிந்தபோது, பாம்புகள் தீ வசித்த எரிமலைகளின் உச்சியைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் ஜீவிக்கும் தன்மையைப் பெற்றிருந்தன. கடுமையான வெயிலிலும் வசித்தன. கடுமையான குளிரிலும் வசித்தன.

---

† அரா-அம்: பாம்பின் தன்மை. (ராம்)

கா-உரு-வி-செய்-மா †

இவ்விதம் பாம்புகள் தனித்தன்மையைப் பெற்றிருந்தபோது, குரங்கு இனம் வேறு ஒரு விதத்தில் தனித்தன்மையுடையதாக இருந்தது. எல்லா மிருகங்களும் வாயினால் பிடித்துக் கடித்து இரையைப் புசித்தபோது, குரங்குகள் கைகளினால் எடுத்துப் புசித்தன. எல்லா மிருகங்களும் தம் உடம்பிலுள்ள பற்களினால் கடித்தும், நகங்களினால் கீறி கிழித்தும், கொம்புகளினால் முட்டியும், கால்களினால் மிதித்துத் துவைத்தும், சரீரத்தினால் அழுத்தித் தேய்த்தும், முட்களினால் குத்தியும், தத்தம் அவயவங்களினால் போரிட்டு, பிற மிருகங்களை முறியடித்தன. போரில் பகை மிருகங்களின் உடலுடன் தம் அவயவங்கள் படும்படி, கட்டி உருண்டும், முட்டி மோதியும், கடித்து கிழித்தும் போரிட்டன. குரங்குகள் இதற்குமாறாக, உடலுடன் உடல் தொடாதபடி, எட்டி நின்றே எதிர்த்துப் போரிடுவதற்குப் பழகின. இவை தம் கைகளை உபயோகப் படுத்திக் கீழே கிடந்த கற்களையும் தடிகளையும் எடுத்தன. செடிகளையும் குச்சிகளையும் முறித்துப் பிடுங்கின. பகை மிருகம் தம் அருகே நெருங்குவதற்கு முன்பு அவற்றின் பேரில் வீசி எறிந்தன. தூரத்தில் நின்றபடியே பகை மிருகங்களைக் காயப்படுத்தின. உடலுடன் உடல் ஒட்டாதபடிக்கு எட்டி நின்றும், மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டும் பகை மிருகங்களைச் சாடின. இவ்விதம் கைகளை உபயோகப்படுத்திய போது, இவை மற்ற மிருகங்களிடமில்லாத ஒரு விசேஷ தன்மையை உடையவையாயின. கைகளையும் கால்களையும் மென்மேலும் திறமையாக உபயோகப்படுத்தி, கிளைகளைப் பிடித்துத் தாவிக்

---

† கா-உரு-வி-மா: காக்கின்ற உருவத்தை விரையச் செய்கிற மிருகம். [கா: காப்பு; உரு: உருவம்; வி: விரைதல்; மா: மிருகம்.]

கொண்டே வெகு தூரத்திற்குச் சென்றன. கால்களை ஊன்றி தரையில் ஓடின. தரையிலிருந்து கைகளையும் கால்களையும் திறமையாக உபயோகப்படுத்தி மரங்களில் அவசரமாக ஏறின. தடிகளையும் குச்சிகளையும் முறித்து பொந்துகளில் விட்டு, உள்ளிருந்தவற்றைப் பிடித்தன; அல்லது கொன்றன. நீர் நிலைகளில் தவறி விழுந்தபோது, கைகளையும் கால்களையும் திறமையாக உபயோகப்படுத்தி நீந்தி கரையேறின. இந்த விசேஷ குணங்களோடு, பாம்புகளைப் போலவே இவையும் எல்லா கூண்டுகளுக்கும் செல்வதற்கு முயற்சித்தன. இவை உணவுக்காக மரக் கிளைகளின் உச்சிக்குச் சென்றது போலவே, தரைக்கும் வந்தன.

மேலும், இவை பாம்புகளைவிட சிறந்தவையாக இருந்தன. பாம்புகளுக்கும் இவற்றிற்குமிடையில் ஏற்பட்டப் போராட்டத்தில், இவை வெல்லக் கூடியவையாக இருந்தன. இவைத் தூங்கிக் கொண்டிருந்த போதும், கவனக் குறைவாக நடந்து கொண்டபோதுமே இவற்றைப் பாம்புகளினால் கடிக்கவோ அல்லது மேல்கிளையிலிருந்து பாய்ந்து உடலைக்கட்டி நெரிக்கவோ முடிந்தது. இவை விழித்துக் கொண்டிருந்த போது, கவனமாக இருந்தபோது, பாம்புகளின் வருகையை இவைத் தெரிந்து கொண்டு விட்டபோது, இவற்றினால் தூரத்தில் நின்றபடியே சற்களை எறிந்தும், குச்சிகளால் குத்தியும், பாம்புகளைக் கொல்ல முடிந்தது.

இந்த விசேஷ தன்மையை எந்தக் குரங்குக்கூட்டம் அல்லது இனம் மிக மிகத் திறமையாகப் பயன்படுத்தி, சமயசந்தர்ப்ப சூழ்நிலைமைகளுக்குத் தகுந்தபடி தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும், தம் இரைகளைக் கொள்ளவும் முயற்சித்துக் கொண்டிருந்தனவோ, அந்தக் கூட்டம் அல்லது இனம், மரக்கிளைகளுக்கு இடையே மட்டும் இயங்குவதென்ற தன்மையை இழந்து, கிளைகளாகிய கூண்டைவிட்டு, தம்மைத்தாமே விடுவித்துக் கொண்டன.

என்றைக்கு இவைத் தன்மை அக்கூண்டிலிருந்து விடுவித்துக் கொண்டனவோ, அன்றைக்கே இவை, அதே கூண்டில் உழன்று வந்த மற்ற குரங்குக் கூட்டங்களுக்கும் இனங்களுக்கும் வேறுபட்டவையாக—புதியதோர் இனமாக—மாற ஆரம்பித்துவிட்டன.

க்இர்-ஏ-தா-ஊ-கா-அம் †

பாதுகாப்பான கூண்டைவிட்டு தம்மை இவை விடுவித்துக் கொண்டவுடன், புதிய பரப்புகளுக்கு ஏற்ப, புதிய இருப்பிடங்களுக்கு ஏற்ப, புதிய தட்ப வெட்பத்திற்கு ஏற்ப, புதிய சூழ் நிலைமைக்கு ஏற்ப, தம் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள முற்பட்டன. இவை கிளையில் உட்கார்ந்திருந்தபோது, ஆள்விழுங்கிப் பாம்பு வந்ததென்றால், உடனே தரையில் குதித்தன. தரையில் ஒரு சிங்கம் விரட்டிற்றென்றால், உடனே வேறு ஒரு மரத்தில் ஏறிக்கொண்டன. அந்த மரத்திற்கு ஒரு சிறுத்தை ஏறி வந்ததென்றால், உடனே உச்சிக் கிளைகளுக்குச் சென்றன. உச்சிக்கிளையில் ஒரு கொம்பேறும் மூர்க்கன் சீறிற்றென்றால், உடனே வேறுகிளைக்குப் பாய்ந்தன. அங்கு தம் இனத்தைப் பகைத்தக் குரங்கு வசித்ததென்றால், உடனே பூமியில் குதித்தன. தரையில் புலி உறுமிக்கொண்டு வாயைப் பிளந்ததென்றால், உடனே ஓட்டம் பிடித்தன. ஓடியபோது புலி நெருங்கிவிட்டதென்றால், உடனே அருகே இருந்த குளத்தில் குதித்தன. குளத்தில் முதலைகள் வாயைப் பிளந்து கொண்டு வந்தனவென்றால், அவசரமாக நீந்தி எதிர் கரையில்

---

† க்-இர்-ஏ-தா-ஊ-கா-அம்: க்இர் என்று தொங்கியாடியும், எறிந்து அடித்தும் பாய்ந்தும் ஊனைக் காப்பாற்றிக் கொண்ட தன்மை. [க்இர்; சுற்றி ஆடுதல்; ஏ: எறிதல்; தா: தாவிப் பாய்தல்; ஊ: ஊன்; கா: காப்பாற்றுதல்; அம்: தன்மை. கிரேதா யூகம்)

ஏறின. அங்கு ஒரு யானை மிதிக்க வந்த தென்றால், உடனே வெகு வேகமாக ஓடிப்போய் அருகே இருந்த குன்றில் ஏறிக்கொண்டன. அங்கு ஒரு மலைப்பாம்பு வாயைப் பிளந்தது என்றால், உடனே ஒரு பாராங்கல்லைத் தூக்கி அதன் தலையில் போட்டன. அந்நேரம் நாய்களும் நரிகளும் ஊளையிட்டு ஓடி வந்தன வென்றால், உடனே வேறு மரத்தில் ஏறிக்கொண்டன. மரத்தில் உட்கார்ந் திருந்தபோது மழைக் கொட்டிற்று என்றால், மழை வடியாத இடமாகத் தேடி ஓடின. அங்கு மழை கசிந்தது என்றால் பெரிய இலைகளைப் பறித்துத் தலைக்குமேல் மறைப்பாக வைத்துக் கொண்டன. அந்த இலைகள் பிரயோஜனப் படவில்லை என்றால், உடனே கீழே குதித்து ஓடின. நீட்டிப் புடைத்துக் கொண்டிருந்த பாறைகளுக்கு அடியில் ஒதுங்கிக் கொண்டன. அங்கு சாரல் அடித்தது என்றால், அதன் அருகே இருந்த குகைக்குள் நுழைந்தன. அந்தக் குகைக்குள் வேறு மிருகம் ஒதுங்கியிருந்தது என்றால், கற்களை வீசியெறிந்து அந்த மிருகத்தை எதிர்த்தன. அந்த மிருகத்தைக் கொன்றபோது, மழை விடுகிற வரையில் அதனுள்ளேயே தங்கியிருந்தன. மழைவிட்டு வெயில் இறைத்தபோது வெளியே ஓடி வந்தன. அங்கு ஒரு புலி வந்ததென்றால், உடனே மரத்தில் ஏறிக் கொண்டன. இரவில் மரத்தில் உட்கார்ந் திருந்தபோது, குளிர் மிகவும் அதிகமாயிற்றென்றால், எல்லாம் ஒன்றையொன்று இறுக அணைத்துக் கொண்டன. அப்படியும் குளிர் பொறுக்க முடியவில்லை யென்றால், காய்ந்த சருகுகளையும் மரப்பட்டைகளையும் அள்ளிப் போட்டு அடியில் புதுந்து கொண்டன. மழை விடாமல் பல நாட்களுக்கு பெய்தபோது, குகைக்குள்ளேயே இருந்தன. குகைவாயில் வழியாக மழைநீர் உள்ளே ஓடி வந்த தென்றால், கல்லையும் மண்ணையும் அள்ளிக்கொட்டித் தண்ணீர் உள்ளே வராதபடி அணைபோட்டன. குகையின் தரை மிகவும் ஈரமாகி யிருந்த குளிரை உண்டாக்கிற் றென்றால், காய்ந்த மண்ணைத்தேடி அள்ளி வந்து அதன்

மேல் பரப்பின. குகையிலிருந்த ஒரு வளையின் வழியாக ஒரு பாம்பு வந்ததென்றால், பாம்பைக் கொன்று விட்டு, கல்லைத் திணித்து வளையை அடைத்தன. இன்னொரு பொந்துக்குள் பாம்பு இருக்கிறதா, இல்லையா என்று தெரியாதபோது, ஒரு நீண்ட குச்சியை எடுத்து வந்து, அதனுள் விட்டுக் குத்திப் பார்த்தன. குகைக்குள் அடைவதற்கு வௌவால்கள் வந்தபோது, அவற்றைப் பிடிக்கக் கைகள் எட்டாதபோது, நீண்ட குச்சியினால் அவற்றை அடிக்க முயன்றன. குகைக்குள் வெளிச்சம் துளிகூட வராமல் இருந்தபோது, வழியில் தடையாக இருந்த கற்களை உருட்டி நகர்த்த முயன்றன.

இவ்விதம் மற்றக் குரங்குகளுக்கும் மிருகங்களுக்கும் மாறுபட்ட முறையில், தம் தேவைக்கு ஏற்ப இயற்கையை மாற்றவும், திருத்தவும், தமக்கு வேண்டியதைத் தாமே உண்டாக்கிக் கொள்ளவும், தம் சிந்தனையையும் கைகளையும் கொண்டு பல காரியங்களையும் செய்வதற்கு இந்த புதுவிதமான மிருகங்கள் முயற்சித்துக் கொண்டே இருந்தன. இந்தப் புதுவிதமான மிருகங்களைக் "கருவிகளை உபயோகப் படுத்தும் மிருகங்கள்" என்று சொல்லலாம்.

மா-இன்-தண் †

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளில், கருவிகளை உபயோகப்படுத்திய மிருக இனம், மற்ற எல்லா மிருகங்களுக்கும் முற்றிலும் வேறுபட்ட ஒரு தனி இனமாக பரிணமித்து விட்டது. இதன் மூதாதையர்கள் குரங்குகளாகவா இருந்தார்கள் என்று அதிசயிக்குமளவுக்கு அடியோடு மாறிவிட்டன. நிமிர்ந்து கற்களை எறிவதிலும், நிமிர்ந்து ஓடுதிலும், நிமிர்ந்து நின்று சண்டை போடுவதி

† மா-இன்-தண்: மிருகங்களில் இனிமையும் தண்மையும் உடையவை

னும்—முன் கால்களைக் கைகளாக விடுவித்துக்கொள்வதில் — அவயவங்களை விருப்பப்படி அசைப்பதில் — தலைமுறைத் தலைமுறையாகப் பல தலைமுறைகள் பழகி விட்டதனால், இந்த இனத்தின் முதுகு எலும்பு நிமிர்ந்து நேராகவாகிக்கொண்டிருந்தது. அவசியத்திற்கு ஏற்றபடி நடந்துகொள்ள அடிக்கடி சிந்தித்ததனால், இவற்றின் மூளை மற்ற மிருகங்களின் மூளைக்கு முற்றிலும் வேறுபட்டதாகி விட்டது.

கடைசியாக, மனிதர்களாகிய நமக்கு அடையாளம் புரியக்கூடிய, மிருகங்களிலேயே (மா) இனிமையும (இன்) தண்மையும் (தண்) உடைய "மாந்தன்" இனமாக அது மாறிவிட்டது. "மா-இன்-தண்" இனத்தின் சந்ததிகள் தான் இன்றிருக்கும் மனிதர்களாகிய நாம்.

'மா-இன்-தண்' குரங்கு இனமும் அல்ல; குரங்குக்கு முந்திய ஒரு இனமும் அல்ல. குரங்குக்கு முந்திய இனத்தையும் (ஆ) குரங்கு இனத்தையும் (ஊ) உள்ளடக்கிய (ஓ) இனமும் அல்ல. 'ஓ' இனத்தையும், மாந்தனுக்கே உரிய 'ம்' குணத்தையும் உள்ளடக்கிய 'ஓம்' இனம்.

இந்த 'ஓம்' இனம், 'ஆ' இனத்திற்கும் 'ஊ' இனத்திற்கும், 'ஓ' இனத்திற்கும் முற்றிலும் மாறுபட்ட தனியினம்.

கடந்துபோன இனமும் அல்ல; உள்ள இனமும் அல்ல; கடந்துபோன தன்மையையும், உள்ள தன்மையையும் உள்ளடக்கிய "கட-வுள்" இனம். இது "கட" தன்மைக்கும், "உள்" தன்மைக்குப் மாறுபட்ட "கட-வுள்" தன்மையைப் பெற்றிருப்பது.

இந்த இனத்தின் முந்திய நிலை "மா" நிலை. தற்போதைய நிலையில் புதியது "இன்-தண்" என்ற குணம். இது "மா" வும் அல்ல; இன்-தண்ணுமல்ல; "மா"வின் குணத்தையும், 'இன்-தண்' குணத்தையும் உள்ளடக்கிய "மா-இன்-தண்" குணமுடையது.

இது சூரியனிலுள்ள தனி சக்தியை மட்டும்கொண்டதல்ல; பூமியிலுள்ள தனி சக்தியை மட்டும் கொண்டதுவுமல்ல. சூரியனிலுள்ள சக்தியையும், பூமிக்கே உரிய சக்தியையும் உள்ளடக்கிய ஒரு சக்தி. இது சூரியனிலுள்ள உஷ்ணமும் அல்ல; வாயுவுமல்ல; பூமியிலுள்ள ஈரமும் அல்ல. உஷ்ணத்தையும் வாயுவையும் (ஆஊ) கொண்ட சதையிலேயே (ஓ) பூமியின் குளிர்ச்சியையும் (ம்) கொண்டிருப்பது. 'ஆ'வையும் 'ஊ'வையும் 'ம்'மையும் கொண்ட 'ஓம்' தன்மையுடையது.

கூ-சா-இல் †

'ஓம்' இனமாக மாறிய பிறகும், மாந்தன் இனம் பல காலம் வரையில் மரங்களிலேயே வசித்து வந்தது. தரையிலும் மரங்களிலுமாக மாறி மாறி வசித்தது. ஆபத்து இல்லாதபோது தரையில் இறங்கி இரைத்தேடியது. ஆபத்து நேர்ந்தபோது மரங்களில் ஏறிக்கொண்டது.

அந்தக் காலத்தில்தான் அந்த 'ஓம்' இனம் பேசுவதற்கு ஆரம்பித்தது. பேச்சு என்றால் தற்காலத்தில் நாம் பேசுகிற பேச்சு அல்ல. அவர்களுடைய—(இனிமேல் உயர்திணையிலேயே குறிப்பிடலாம்)—பேச்செல்லாம் வெறும் ஓசைகளே. காட்டுக் கூச்சல்களே.

---

† கூ-சா-இல்; பூமியில் சோர்வை இல்லாமல் செய்வது. [தனிமை காட்டில் சோர்வை அளிக்கும்; மனிதக் கூச்சல் சோர்வை நீக்கும்]

ஆரம்பத்தில் ஒரே மாதிரியான ஓசைகளை உண்டாக்கிக் கொண்டிருந்த அந்த அரைமனிதர்கள், நாக்கைப் புரட்டி, வெவ்வேறு சூழ் நிலைமைகளிலும் சமயசந்தர்ப்பங்களிலும் வெவ்வேறு விதமான ஓசைகளை எழுப்பமுற்பட்டனர். அவசர அவசிய நிலைமைகளில் இயல்பாக எழுந்த ஓசைகள், மீண்டும் மீண்டும் அதே நிலைமைகள் உண்டானபோது, மீண்டும் மீண்டும் நாக்கிலிருந்து புறப்பட்டு, குறிப்பிடத்தக்கத் தனி வடிவங்களைப் பெற்றன. அந்த ஓசை வடிவங்கள் நாக்கிலே மிகவும் நன்றாக பழக்கமானபோது,—அதிக சிரமமின்றி அந்த ஓசைகளை வெளியிட நாக்குக்கு மூளை உத்திரவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டபோது—அந்த ஒலிவடிவங்கள் குறிப்பிட்ட சம்பவங்களையும் தோற்றங்களையும் பொருள்களையும் குறிப்பிடும் வண்ணம் அர்த்த முடையவையாக ஆயின. அந்த ஓசைகளுக்குள்ள அர்த்தங்களைப் புரிந்து கொண்டால் தான், நமக்கு அவர்களுடைய சிந்தனைகளையும், அவர்கள் நமக்காக உண்டாக்கி வைத்துவிட்டுப்போன சொற்களையும்,நம் பாரம்பர்யத்தின் மகோன்னதமான தன்மையையும் நமக்குப் புரிந்து கொள்வதற்கும், பாராட்டுவதற்கும், பெருமையடைவதற்கும் முடியும்.

அந்த ஓசைகள்தான் தற்காலத்தில் நாம் பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன் படுகிற சொற்களுக்கு மூலம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, பதிற்றுபத்து, பத்துப் பாட்டு, பதினெண்கீழ் கணக்கு, குறுந்தொகை, திருமுருகாற்று படை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, திருக்குறள் முதலிய பலப்பல நூல்களை எழுதுவதற்குப் பயன் பட்ட சொற்களுக்கெல்லாம் மூலம். மந்திரவாதிகள் ஜெபிக்கின்ற மந்திரங்களுக்கும், கவச சக்கரங்களில் எழுதுகின்ற அக்ஷரங்களுக்கும் மூலம். ராகு காலம், குளிகைகாலம், எமகண்டம், வாரசூலை முதலிய பழங்கால பழக்கங்களையொட்டி வருகின்ற சம்பிரதாயங்களில் வெளிப்படும் சொற்களுக்கெல்லாம் மூலம்.

தமிழர்கள் கும்பிடுகின்ற எண்ணற்ற தெய்வங்களின் பெயர்களுக்கெல்லாம் மூலம். தமிழ்நாட்டில் வசிக்கின்ற எண்ணற்ற மிருகங்கள், பறவைகள், பூச்சிப் பொட்டுகள் முதலியவற்றின் பெயர்களுக்கும், தமிழ் நாட்டில் வளர்ந்து செழிக்கும் எண்ணற்ற புல் பூண்டு செடி கொடி மரங்களின் பெயர்களுக்கும் மூலம்.

அந்த ஓசைகள் ஒன்றன்பின் ஒன்றாக நாக்கிலிருந்து புறப்பட்டு, வெவ்வேறு சூழ்நிலைமைகளிலும், சமய சந்தர்ப்பங்களிலும் வெவ்வேறு விதமாக அமைந்த தன்மைதான், அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம்வரை நமக்கு வந்திருக்கும் எண்ணற்ற கருத்துக்களுக்கு எல்லாம் மூலம்.

சோ-இல்-ஆர்-ஆய்-சீ †

ஆகவே, அந்த ஓசைகளின் பொருளும், அந்த ஓசைகள் சேர்ந்து இருக்கும் தன்மையினால் புலப்படுகிற பொருளுமே நமக்கு அவர்களுடைய கருத்துக்களையும், அவர்களின் வாழ்க்கையில் நேர்ந்த இன்ப துன்ப உணர்ச்சிகளையும், அவர்களைச் சுற்றி காணப்பட்ட அபாயங்களையும், அவர்கள் பெற்ற வெற்றி தோல்விகளையும், அவர்களுடைய முயற்சிகளையும் நமக்கு உணர்த்தக் கூடியவை.

---

† சோ-இல்-ஆர்-ஆய்-சீ: அரண் இல்லாது நிறைகின்ற நுண்மையின் சிறப்பு. [சோ: அரண்; இல்: இல்லாத; ஆர்: நிறைதல்; ஆய்: நுண்மை; சீ: சிறப்பு.] தடையுத்தரவு போட்டு சொற்களைத் தடுக்கமுடியாது. சொற்கள் எத்தகைய மதில்களையும் தாண்டி உள்ளே புகுந்துவிடும். எத்தகைய கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்காது பிறக்கும். இப்படி பிறந்து நிறையும். நிறைவது சட்டென்று புலப்படாது. மிகமிக நுண்மையான பொருள்கள் நிறைவது போன்று நிறையும். இதுதான் இவற்றின் சிறப்பு. இந்த நுண்மை நிறைந்திருக்கிற தன்மையை கூர்ந்து கவனிப்பதுதான் சொல்லாராய்ச்சி.

அந்த் ஓசைகளைத்தவிர, அந்த ஓசைகளின் தொடர் சேர்க்கையினால் உண்டான சொற்களைத்தவிர, அந்தச் சொற்களை ஆதாரமாகக்கொண்டு இந்நாள் வரை நீடித்து வந்திருக்கும் சம்பிரதாய பழக்க வழக்கங்களைத்தவிர, அந்தப் பழக்க வழக்கங்களுக்குப் பிற்காலத்தவர்கள் கற்பித்த கதைகளைத் தவிர, அந்தக் கதைகளில் புலப்படும் சில அர்த்தங்களைத் தவிர, அவர்களுடைய வாழ்க்கையை உணர்த்துவதற்கு நமக்கு திடமான ஆதாரங்கள் இருக்கவில்லை. அந்த ஓசைகளையும், அவற்றின் தொடர் சேர்க்கையினால் உண்டான சொற்களையும் தேடி ஆராய்கிற போதுதான், சொல் ஆராய்ச்சியின் முக்கியத்வம் வெளிப்படுகிறது.

இந்தச் சொல் ஆராய்ச்சியில் நாம் ஒரு மிக மிக முக்கியமான விஷயத்தை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது, எல்லா சொற்களும் ஒரே சமயத்தில், ஒரே கூட்டத்தில், ஒரே காரணத்தினால் உண்டாகிவிடவில்லை. வெவ்வேறு சமயத்தில், வெவ்வேறு இடத்தில், வெவ்வேறு கூட்டத்தில், வெவ்வேறு காரணத்தினால் உண்டாயின. வெவ்வேறு சமயம் என்கிறபோது, வெவ்வேறு காலத்தையும் குறிக்கிறது. பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, நூறு ஆண்டுகளுக்கு முன்பு, பத்தாண்டுகளுக்கு முன்பு—இவ்விதம் வெவ்வேறு நீண்ட நெடுங்கால இடைவெளிகளை நாம் உணரவேண்டும். பத்து வருடங்களுக்கு முன்பு உண்டான சொற்களை எடுத்துக் கொண்டு, ஆதி மனிதர்களின் சம்பாஷணையில் புகுத்திப் பார்க்க முயற்சிப்பது தவறு. எவை நிச்சயமான ஆதிச் சொற்கள் என்று புலப்படுகின்றனவோ அவற்றை மட்டுமே ஆதிகாலச் சூழ்நிலைமைகளில் பொருத்தி ஆராயவேண்டும்.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற பண்டைய தமிழ் நூல்களை எழுதுவதற்கு பயன்பட்ட சொற்களும், கடவுள்களின் பெயர்களாக அமைந்துள்ள சொற்களும், யந்திரங்களிலும் கவச சக்கர அக்ஷரங்களிலும் காணப்படும் சொற்களும், அன்றுமிருந்து இன்றுமிருக்கிற இயற்கை காட்சிகளைக் குறிக்கும் சொற்களும் நிச்சயமான ஆதிச் சொற்கள். இந்தச் சொற்களில், ஆதி மனிதர்களின் ஓசைகள் சேர்ந்து அமைந்திருக்கும் தன்மையே, நமக்கு அவர்களைப்பற்றிய சூழ்நிலைமைகளை உணர்த்தும். அவர்களுடைய மூளை வேலை செய்த முறையை நமக்கு எடுத்துக்காட்டும். இந்த ஆராய்ச்சியில், இந்தியாவிலுள்ள வேறு பல மொழிகளிலும் காணப்படுகிற ஆதிச் சொற்களை நாம் ஆராயவும் தவறக்கூடாது. ஏனெனில், ஆதி மனிதர்கள் ஒரே இடத்தில் தங்கியிருக்கவில்லை.

அ-இர்-இ-நா-மா-அம்†

இந்த இடத்தில் தமிழ் மொழிக்கும் பிற மொழிகளுக்கும் உள்ள வேற்றுமையை கவனத்தில் நிறுத்த வேண்டும். மற்ற மொழிகளில் ஓசைக்கு ஒரு எழுத்து கிடையாது. தமிழில் ஒவ்வொரு ஓசைக்கும் ஒன்று இருக்கிறது. சிறு குழந்தைகளுக்கு அரிச்சுவடி பாடம் சொல்லிக் கொடுக்கிறபோது இதைத் தெரிந்து கொள்ளலாம். 'பா....டா....இம்.....படம்'——————"மா...டா...இம்...மடம்" 'ஆ...இம்...மா...அம்மா'———'ஊ.. நா...ஊ....உணவு'—. இவ்விதம்தான் பாடம் சொல்லிக் கொடுக்கிறோம். ஆனா, ஆவன்னா, ஈனா, ஈயன்னா என்றுதான் முதலில் கற்றுக் கொடுக்கிறோம். 'ஆனா' என்று சொல்லுகிறபோது, 'அ' என்ற எழுத்தைக் காட்டுகிறோம். 'ஆவன்னா' என்று

---

† அ: அன்று, அப்படி, அது; இர்: இருக்கின்ற, இருந்த; இ: இன்று, இப்படி, இது; நா: நாக்கு: மா: மாற்று, ஓர் அளவு; அம்: தன்மை.

சொல்கிறபோது, 'ஆ' என்ற எழுத்தைக் காட்டுகிறோம். ஒலியைக் கொண்டுதான் தமிழ்க் குழந்தைகள் எழுத்தைப் புரிந்து கொள்கின்றனர். 'பா—டா—இம்' என்ற ஒலிகளின் சேர்க்கையைக் கொண்டு 'படம்' என்ற சொல்லைத் தமிழ்க் குழந்தைகள் அமைக்கின்றனர். "பாாா....டம்" என்ற ஒலியைக்கொண்டு "பாடம்" என்ற சொல்லை எழுதுகின்றனர். "பா" என்ற ஒலிக்கும், "பாாா" என்ற ஒலிக்கும் வித்தியாசம் தெரியாது குழந்தைகள் தவிக்கிற போது, "பானு" என்றும், "பாவன்னு" என்றும் வித்தியாசத்தை உணர்த்துகிறோம்.

அ—இர்—இ—நா—மா—அம் என்றால் (1) அன்று இருந்ததை இன்று நாக்கு மாற்றும் தன்மை (2) அப்படி இருப்பதை இப்படி நாக்கு ஒரு அளவுக்கு உட்படுத்தும் தன்மை (3) "அ" வாக இருப்பதை 'இ' யாக நாக்கும் மாற்றும் தன்மை. "ஆனு" என்று குழந்தைகள் சொல்வதை, 'அ' என்று மாற்றும் தன்மை. 'ஈனு' என்று குழந்தைகள் சொல்வதை, "இ" என்று மாற்றும் தன்மை. பா...டா... இம் என்று சொல்கிற நாக்கைப் படம் என்று சொல்லும் படி செய்யும் தன்மை. அப்படி இருந்தது இப்படி ஒடுகின்ற தன்மைதான் "அ-இர்-இ-ஒ-அம்" (அரிஓம்). 'அரிஓம்' என்று சொல்லி பாடம் படிக்க ஆரம்பிக்கிற குழந்தை "ஆனு", "ஆவன்னு" என்று தொடங்குகிறது. சில நாட்களில் "ஆனு" என்று சொன்ன எழுத்தையே, "அ" என்கிறது. அப்படி "ஆனு" என்று இருந்ததை இப்படி "அ" என்று ஆக்கி விட்டது நாக்கின் மாற்றும் தன்மை (நா-மா அம்)

நாக்கின் மாற்றும் தன்மை (நா-மா-அம்) என்பதில் புலப்படுவது என்ன? "ஆனு" என்று சொல்வதற்குப் பிடிக்கிற நேரத்தை நாக்கு "அ" என்று சொல்கிறபோது குறைத்து விடுகிறது. சாவதானத்தை விரைவாக மாற்றி விடுகிறது.

"விரைவு" ஆக எப்போது மாற்றுகிறது? எந்த வினாடியில் அந்த ஒலியும் எழுத்தும் மூளையில் நன்கு பதிந்துவிடுகிறதோ, அந்த சமயத்திலிருந்து இந்த மாறுதலை உண்டாக்குகிறது. "ஆனு" என்பது பழக்கப்பட்டதாக—பழமையானதாக—அதுவாக—ஆகிய பிறகு, இன்று நினைவில்இருப்பதாக—இதுவாக—இருக்க ஆரம்பிக்கிறபோது, சாவதானம் என்பது "விரைவு" ஆக மாறிவிடுகிறது.

இதைப் புரிந்துகொள்வதற்கு மனித மூளையின் விசேஷ தன்மையை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைமையிலும், சந்தர்ப்பத்திலும் ஒரு சொல்லை அது உண்டு பண்ணி விட்டால், அதன் அர்த்தத்தை வெகுகாலம் வரையில் நினைவில் வைத்துக் கொள்ளும் தன்மை அதற்கு உண்டு. அந்தச்சூழ்நிலைமை இல்லாத சமயத்திலும், அதே சொல்லை உச்சரித்து வெளியிடும்படி நாக்குக்குக் கட்டளையிடும் தன்மை அதற்கு உண்டு. இந்த தன்மையினுல், சம்பவம் நிகழ்ந்தபோது இரண்டு ஓசைகளாக வெளிப்பட்ட கருத்து, சம்பவம் நிகழாத சமயத்தில் ஒன்றுகக் குறுகி விடுகிறது.

'ஆ'என்றும், 'ஊ' என்றும் பிரிந்து பிறந்த ஒரு சொல், சம்பவம் நிகழாத சமயத்தில்—நினைவில் நின்றதைப் பிறருக்கு உணர்த்த வேண்டிய அவசிய நிலைமையில்—'ஓ' என்று பரிணமித்துவிடுகிறது. 'ஆ' 'ஊ' என்ற சம்பவம் 'ஓ' என்றே குறிக்கப் பட்டுவிடுகிறது. உதாரணமாக, 'அ' என்ருல் அழகு என்றும் அது என்றும் பொருள். 'இல்' என்ருல் இல்லை. கருமையான இருட்டில் அழகே இல்லை. ஆரம்பத்தில் இந்தக் கருத்தை வெளியிட்டவன், 'அ-இல்' என்று இருட்டை குறிப்பிட்டான். மீண்டும் மீண்டும் இது குறிப்பிடப் பட்டபோது, 'அல்' என்றே சுருங்கிவிட்டது. 'அல்' என்பது 'அழகு இல்லை' என்ற பொருளை இழந்து, 'இரவு', 'இருட்டு' 'அல்லல்' என்ற பொருள்களை உணர்த்த ஆரம்பித்தது. அல்ல

என்றால் அது இல்லை என்று பொருள். இதே போல், காப்பாற்றும் தன்மையையுடைய நீர், 'கா-அம்' என்று சொல்லப்பட்டது. இதுவே 'கம்' என்று குறுகியபோது, எல்லோருடைய கவனத்திலும் நீர் என்ற தோற்றம் தோன்றிற்றேயொழிய, 'காப்பாற்றும் தன்மையுடையது' என்ற பொருள் தோன்றவில்லை. இதிலிருந்து, 'அல்' என்பதை முதல தடவை 'அழகு இல்லை' என்று பொரு[...] படுத்தினால், இரண்டாவது தடவை 'இரவு' எ[...]பதை பொருள்படுத்த வேண்டியிருக்கிறது. 'கா-அம்' ஐ[...]வேண்டி மீண்டும் சொல்கிறபோது "கம்" என்றே சொ[...]யிருக்கிறது.

இதையே விஞ்ஞானிகளின் பா[...]ஷயில் விளக்குவதென்றால், 'அ' என்ற அணுவும், [...]இல்' என்ற அணுவும் இணைந்து விட்டால், 'அல்' என்று ஆகிவிடுகிறது. இணைவதற்கு முன்பே அ[...] 'அ' என்றும், 'இல்' என்றும் தனித்தனியாகப் [...]பொருள் கொள்ளலாம். இணைந்தபின், 'அல்' [...]பதற்கு உள்ள பொருளையே கொள்ளவேண்டும். [...]அ' என்பது ஜலவாயு அணுவென்றும், 'இல்' [...]ன்பது பிராணவாயு அணுவென்றும் வைத்துக்கொண்[...]ால், இரண்டும் சேர்கிறபோது 'அல்' என்பதற்கு [...]ர்' என்ற பொருளே ஏற்பட்டுவிடுகிறது.

இதிலிருந்து விளங்குவது என்னவென்றால், ஒரு தடவை சூழ்நிலைமையில் (வினையில்) உண்டாகுகிற ஓசைகளின் சேர்க்கை, வினை இறந்த காலமாகிவிடுகிறபோது, வினையில் எழுந்த கருத்தையும், வினையில் பிறந்த பொருளையும், வினையில் அழிந்த பொருளையும், வினைக்குக் காரணமான தன்மையையும், வினையினால் சுட்டப்பட்ட பொருளையும் குறிக்கின்ற சொற்களாக—பெயர்ச்சொற்களாக—ஆகி விடுகின்றன. 'ஆ'வும் 'ஊ'வும் வினையின் போது, சூழ்நிலைமையின்போது, சமயசந்தர்ப்பத்தின் போது உண்டாகி, 'ஓ' வாக இணைந்துவிட்ட பிறகு, 'ஓ'

என்பது பெயர்ச் சொல்லாக மாறிவிடுகிறது. அந்த 'ஓ' விலேயே, 'ஓ' உண்டானதற்கான காரணமும்—வினையும்—சூழ்நிலைமையும்—அடங்கியிருக்கிறது.

இதுதான் தமிழ்ச் சொற்களின் அடிப்படையான அமைப்பு.

அஆ-இஈ-உஊ-எஏ-ஐ-அஈய்-ஒஓ

இதன்படி, 'அ' என்றால் 'அது', 'அங்கே', 'அப்போது' என்று பொருள். இதில் ஒருவன் அல்லது ஒருத்தி சுட்டிக் காட்டுகிற வினையைப் பார்க்கலாம். அதே சமயத்தில் சுட்டிக் காட்டப்படுகிற பொருளையும், தன்மையையும், நினைவையும், கருத்தையும், சம்பவத்தையும் பார்க்கலாம். சுட்டிக் காட்டப்படுவது, அழகாக இருந்தால், 'அ' என்பதற்கு 'அழகு' என்பது பொருள். பயங்கரமாக இருந்தால், 'பயம்' என்று பொருள். கெடுதலாக இருந்தால் 'கெடுதல்' என்று பொருள். பழமையாக இருந்தால் 'பழமை' என்று பொருள்.

சுட்டிக்காட்டுகிறபோது, சில சமயங்களில், ஒரே நேரத்தில், வெவ்வேறு தூரத்திலுள்ள நான்கு பொருள்களை அல்லது வெவ்வேறு காலத்தில் நடந்த ஒரே தன்மையுடைய நான்கு சம்பவங்களைச் சுட்டிப் பேச நேர்கிறது. அந்த சமயங்களில், 'இ' என்பது அருகே இருப்பதையும், 'உ' என்பது அதையடுத்து இருப்பதையும், 'அ' என்பது அதையும் அடுத்து இருப்பதையும், 'ஆ' என்பது கடைசியாக இருப்பதையும் குறிக்கிறது. இன்று நடந்த சம்பவம் 'இ' என்றும், பத்து நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவம் 'அ' என்றும் குறிப்பிடப்பட்டால், பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் 'ஆ' என்று குறிப்பிடப்படும். 'அங்கே' என்பது ஒரு மைல் தூரத்திலுள்ள இடத்தைக் குறிப்பிட்டால்,

'ஆங்கே' என்பது 1½ மைலில் உள்ள வேறொரு இடத்தைக் குறிப்பிடும். ஒலியின் நீளத்தையும், செய்கைகளையும் பார்த்து, 'அ'வுக்கும் 'ஆ'வுக்குமுள்ள கால வித்தியாசத்தையும், தூரவித்தியாசத்தையும் கேட்கிறவர்கள் உணர்ந்து கொள்வார்கள். 'அ-மரம்' என்றால் அந்த மரம்; 'ஆ-மரம்' என்றால் அதற்கு அடுத்துள்ள மரம். இவ்விதம், 'அ' என்ற ஒலியை குறுக்கியும், நீட்டியும் உச்சரிப்பதன் மூலம் வெவ்வேறு அர்த்தங்களை உண்டாக்குவது போலவே, பிற ஒலிகளுடன் இணைப்பதன் மூலம் எண்ணற்ற அர்த்தங்களை உண்டாக்கலாம். ஒவ்வொரு பொருளுக்கும் 'ம்' என்ற விசேஷ குணம் இருக்கிறது. 'அ-ம்' என்றால், அதற்குள்ள 'ம்' குணம், அதிலுள்ள 'ம்', அப்படி 'ம்' என்றிருப்பது, அங்குள்ள 'ம்', அப்போதிருந்த 'ம்' என்று பல பொருள்கள் கூறலாம். பொதுவாக, 'அம்' என்றால், ஒன்றின் தன்மை, பண்பு, குணம். ஒன்றின் விசேஷ தன்மை அழகே என்றால், 'அம்' என்பது அழகைக் குறிக்கும்.

இதைப்போலவே, 'இ' என்றால் இது, இங்கே, இப்போது, இப்படி, இவ்விதம் என்று பொருள். இங்கு ஒருத்தி அல்லது ஒருவன் சுட்டிக் காட்டுகிற வினையைப் பார்க்கலாம். அதே சமயத்தில் சுட்டிக் காட்டப்படுகிற பொருளையும், கருத்தையும், தன்மையையும் பார்க்கலாம். என் மடியில் ஒரு குழந்தை தவழ்கிறது. அதை நான் 'இ' என்று சுட்டிக் காட்டலாம். அதே சமயம் என் மார்பில் ஒரு பூச்சி வந்து உட்காருகிறது. இதை நான் 'ஈ' என்று நீட்டி உச்சரித்து சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. என்னை நோக்கி இரண்டு மிருகங்கள் ஓடி வருகின்றன. ஒன்று நாலடி தூரத்தில் வந்து விட்டது. இன்னொன்று என்மேல் பாய்ந்து விட்டது. அப்போது என் நண்பர், நாலடி தூரத்திலிருப்பதைத் தடுத்து விரட்டுகிறார். அதே சமயம் நான் அவருடைய உதவியை நாடுகிறேன். அப்போது, என் பேரில் பாய்ந்த மிருகத்தை, 'ஈ' என்று சுட்டிக் காட்ட

வேண்டியிருக்கிறது. 'இ'யாக இல்லாமல், 'ஈ'யாக என் பேரில் தாவி என் உடலைப் பிடித்துவிட்ட மிருகம், பற்களால் என்னைக் கடிக்கிறது. அப்போது அதன் முகம் மிகவும் கடு கடுப்பாக இருக்கிறது. இந்த 'ஈ' என்ற தன்மையில் பகையுணர்ச்சியும், பற்களைக் காட்டும் முகபாவமும் தெரிகின்றது. அந்த மிருகம் தன் வாயினால் என் சதையை 'வ்' என்று கடித்துப் பிடுங்குகிறது. 'ஈ' என்று பல்லைக் காட்டி, 'ஈ'யாக நெருங்கி, 'வ்' என்று கடித்து இழுக்கிறபோது, நான் சாகிறேன். 'அ'வாக இருக்கிற மிருகம், 'இ'யாக ஆகி, என் பேரில் பாய்ந்து 'ஈ' என்ற இடத்தை அடைகிறபோதும், 'வ்' என்று கடிக்கிறபோதும், எனக்கு சாவு உண்டாகுகிறது. ஆகவே, 'ஈ' என்றாலும், 'வ்-ஈ' (வீ) என்றாலும் சாவு, அழிவு, நாசம் என்று பொருள். அருகே 'இ' என்ற நிலையில் இருப்பது, உடலிலேயே உட்கார்ந்து விட்டால், உடலிலேயே பாய்ந்து விட்டால், உடலில் பாய்ந்து அழிக்கும் முகபாவத்தைக் காட்டினால், உடலை அழித்து விட்டால், 'ஈ' என்று குறிப்பிடலாம். "ஈ"யாக உடல்மேல் பாய்ந்து 'வ்' என்று கடித்து அழிக்க ஒரு மிருகம் வருகிறபோது, என்னிடத்தில் வேறு ஒரு வினையும் பிறக்கிறது. நான் ஓடுகிறேன். 'வ்-ஈ' ஏற்படப் போகிறது என்ற எண்ணம், என்னில் ஓட்டத்தை உண்டாக்குகிறது. 'வ்-ஈ' என்பது என் ஓட்டத்தையும் சுட்டும். ஆனால் அழிவுக்கும், தப்பிக்க ஓடுவதற்கும் வித்தியாசம் உண்டு. சம்பவம் நடக்கிறபோது இரண்டுக்கும் வித்தியாசம் இல்லாவிட்டாலும், சம்பவம் நடந்த பிறகு—ஓடி தப்பிய பிறகு—நான் இதைப்பற்றி கூறவேண்டுமானால், அழிவு வந்த விஷயத்தையும், ஓடி தப்பிய விஷயத்தையும் வேறுபடுத்தி சொல்ல வேண்டியிருக்கிகது. இங்கு 'வ்ஈ'-(வீ) என்பதை விளக்குகிறபோது, 'வீ' என்று அழிவையும், 'வீ' என்று என் ஓட்டத்தையும் நீட்டுவதன் மூலமும் குறுக்குவதன் மூலமும் வேறுபடுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, 'வ்-ஈ' (வீ) என்பது 'ஈ'

என்று என் உடம்பில் பாய்ந்து 'வ்' என்று என்னை மிருகம் கடிக்க வந்த தன்மையையும், 'வ்-இ' (வி) என்பது, 'வ்' என்று அதனால் கடிக்கப்பட்டு சாகாமல் 'இ' என்று இங்கு நான் உட்கார்ந்து இருக்கிற தன்மையையும், இதை சாத்திய மாக்கிய என் 'விரைவை'யும் குறிக்கும்.

ஒரு மிருகம் 'அ' என்று சொல்லும்படியாக 'அங்கே'யும், 'ஆ' என்று சொல்லும்படியாக 'ஆங்கே'யும் இருந்தால், அதைக் கொல்ல முடியாது. ஏனெனில் தூரம் அதிகம். 'இ' என்று சொல்லும் படியாக 'அருகே'யும், 'ஈ' என்று சொல்லும்படியாக நம் உடம்பில் படுமளவுக்கு அருகேயும் வந்துவிட்டாலும் அதைக் கொல்ல முடியாது. கல்லாலும், தடியாலும் அதைக் கொல்ல வேண்டுமென்றால், அது 'உ' என்று சுட்டும்படியான இடத்திலேயே இருக்க வேண்டும். ஆகவே, 'உ' என்று சுட்டுகிறபோதும், வினையைச் செய்கிற ஒருவன் அல்லது ஒருத்தியை நாம் பார்க்கிறோம். அதே சமயம், சுட்டப்படுகிறப் பொருள், அடிக்கப் படக் கூடிய—கொல்லப் படக் கூடிய – உணவை தரக்கூடிய – இறச்சியைப் பெற்றிருக்கக் கூடிய—தன்மையில் இருப்பதும் நம் கவனத்திற்கு வருகிறது. ஆகவே, 'உ' என்பது, குறியில் அடிப்படக்கூடிய பொருளைக் குறிக்கிறது. அந்த நிலையிலேயே, அது 'இ' என்ற நிலைக்கு நெருங்கிவிடாத போதும், 'அ' என்ற நிலைக்கு விலகிவிடாதபோதும், நிச்சயமாக அடிபட்டு சாகக்கூடிய 'உ' என்ற நிலையில் இருந்து விட்டால், அதன் உடம்பு உணவாகக் கிடைப்பது நிச்சயம். குறியில் தவறாத 'உ' என்ற நிலை, உணவை அளிக்கிறது. 'உ' என்ற நிலையில் அடிபடுகிற மிருகத்தின் உடம்பில் இரத்தம் கசிகிறது. அதே காயம் நம் உடம்பில் பட்டாலும் இரத்தம் கசிகிறது. அப்போது வலிக்கிறது; எரிகிறது. அந்தச் சமயம், 'ஊ' என்று இரத்தம் கசிகிற இடத்தில் ஊதுகிறோம். ஊத ஊத எரிச்சல் குறைகிறது. இரத்தம் உறைந்து கசிவைத் தடுக்கிறது. 'ஊ' என்ற ஓசை இரத்தத்தை வடியச்

செய்கிற இறைச்சியின்பேரில் படுகிறது. 'உ' என்ற இடத்தில் அடிபட்டு விழுந்த மிருகத்தின் இறைச்சியும் இதே தன்மையில் இரத்தத்தை வடியச் செய்கிறது. ஆகவே, 'ஊ' என்பது இரத்தத்தையுடைய இறைச்சியைச் சுட்டுகிறது. இறைச்சியிலேயே இனிமையான சுவையையுடையது 'ஊ-இன்' (ஊன்)

'எ' என்றால் எது, என்ன, எங்கே, எப்போது, எப்படி, என்று பொருள். வினாவினால் உண்டாகும் வினையின்போது, வினவுகிற ஒருவனும், வினவப்படுகிற இன்னொருவனும் நம் கவனத்திற்கு வருகின்றனர். வினவப்படுகிறவர் சிறிது தூரத்தில் இருந்தால், 'எ' என்பதையே 'ஏ' என்று நீட்டி ஒலிக்க வேண்டியிருக்கிறது. தூரத்தில் இருப்பவன் வேறு எதையோ கவனித்துக் கொண்டிருக்கிறபோது, 'ஏ' என்பது, அவனைக் கூப்பிடும் தன்மையை அடைகிறது. அந்தச் சமயம் அவனை நோக்கி ஒரு மிருகம் ஓடிவந்தால் 'ஏ' என்பது, 'கல்லை யெறி', 'தடியையெறி' என்று பொருள்படுகிறது.

ஓடுகின்ற ஒன்றைப் பார்த்து 'ஓ' என்றால் 'நில்' என்று பொருள். (வண்டிக்காரர்கள் இன்றைக்கும் 'ஓ' என்று சொல்லித்தான் மாட்டை நிறுத்துகிறார்கள்) நிற்கின்ற ஒன்றைப் பார்த்து 'ஓ' என்றால், 'ஓடுக' என்று பொருள். விரைந்து வீசுகின்ற காற்று 'ஓ' என்று அலறுகிறது. 'ஓ' என்ற ஒலி ஓட்டத்தைக் குறிக்கிறது. 'ஓ' என்ற விரைவான ஓட்டம், மெதுவானதாக ஆகிற போதும், நிற்கும் தன்மையை அடைகிறபோதும், 'ஒ' என்று குறுக்கிக் குறிக்கப்படுகிறது.

ஒன்றைப் பார்த்து சந்தேகப்படுகிறபோது, 'ஐ' என்றால் சந்தேகம். அதே சமயம், 'அ-ஈய்' என்றால், 'அழகை அளிக்கிறது' என்று பொருள். 'அ-ஈய்' என்பது,

அவசரத்தில் 'ஐ' என்று வருகிறது. இதைப்போல் இடத்திற்கு ஏற்ப 'ஐ' என்பதற்கு வியப்பு, திகைப்பு, துயரம் முதலிய பொருள்களும் உண்டு.

'க்ஆ' (கா) என்று விடாமல் காக்கைகள் கத்துகின்றன. ஒன்று கத்துகிறபோது பல பறந்து வருகின்றன. 'க்ஆ' என்ற ஒலியைக் கேட்டு பல வருகிறபோது, ஒலியை எழுப்பியதற்குக் காப்பு மிகுதியாகிறது. அவற்றை அடிக்க எத்தனித்தால், அப்போதும் அவை 'க்ஆ' என்று கத்திக்கொண்டே பறக்கின்றன. காப்பான இடத்தில் உட்கார்ந்து கொண்டும் 'க்ஆ' என்று கத்துகின்றன. இதிலிருந்து 'க்ஆ' என்றால் ஒரு இடத்தில் "காப்பாற்று" என்றும், இன்னொரு இடத்தில் "காப்பாற்றும் தன்மை" (கா-பு : காப்பு) என்றும், வேறொரு இடத்தில் "காப்பான இடம்" என்றும், மற்றுமோர் இடத்தில் "காப்பாற்றுகிறவன்(ள்)" என்றும் பொருள்படும்.

இதுபோல இன்னும் பல ஓசைகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஓசைக்கும் பொருள் உண்டாவது, இடத்தையும், சமயத்தையும் பொருத்திருக்கிறது. அந்த ஓசைகளை இனி வேறு ஒரு விதத்தில் கவனிப்போம்.

இந்த ஓசைகள் ஒன்றன் பின் ஒன்றாய் சேருகின்ற தன்மையே நாம் மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம். இதை கவனிப்பதற்கு, அந்தக் கால மனிதர்களின் சூழ்நிலைமைகளுக்கு நாமும் சென்று சமய சந்தர்ப்பங்களில் நாமும் வசித்து, அவர்கள் பேசுவதை கவனிக்க அல்லது அவர்களைப் போல் பேசிப் பார்க்க சிறிது முயற்சிக்கலாம்:—

இப்போது ஒரு அடர்த்தியான காட்டில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

மரங்களை விட்டு அடியோடு தரைக்குக் குடியேறி விடாத அரை மனிதர்களைப் பார்க்கிறோம்.

ஆ-தா-அம், ஆ-வா-அம்

ஓசைகளைக் கொண்டு அவர்கள் கருத்துக்களை வெளியிடுவதை கவனிக்கிறோம்.

அதோ, பாருங்கள்.

ஒரு பெண். குரங்குகளிலிருந்து பரிணமித்தவள். ஒரு மரக்கிளையில் உட்கார்ந்து இருக்கிறாள். முழு கிர்வாணமாய், தலைமயிர் முதுகுப்புறம் தொங்க, முன்புறம் ஸ்தனங்கள் குலுங்கக், கால்களைத் தொங்க விட்டுக் கொண்டு, 'ஆ, ஊ, ஒ' என்று ஏதோ ஓசை யெழுப்பிக் கொண்டு மிகவும் அழகாக உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கு அப்பால் வேறு கிளையில், முகத்தில மீசையும் தாடியும் நீண்டு தொங்க, அவளைப் போலவே ஒரு ஆடவன் வீற்றிருக்கிறான்.

அவன் தன் கையில் ஒரு தென்னங் குருத்தை வைத்திருக்கிறான்.

அவனைப் பார்த்து, 'த்-ஆ!'(தா) என்று அவள் கூறுகிறாள். "குருத்தைத் தருக!" என்று ஒரு பொருள். "இங்கே வருக." என்று இன்னொரு பொருள். வருவது என்றால், கிளையை விட்டுக் கிளை தாவியே வரமுடியும். ஆகவே 'தாவுக' என்றும் ஒரு பொருள்.

அவன் 'நீ-த்ஆ!'(தா) என்கிறான். இதற்கு 'நீ தருக!' என்று அர்த்தமல்ல. 'நீ தாவுக' என்று அர்த்தம்.

அவள், 'ஆ! ஆ!'என்கிறாள். தலையை அதே சமயம் எதிர்மறையில் ஆட்டுகிறாள். இதற்கு 'முடியாது' என்று அர்த்தம்.

இப்படி முடியாது என்று சொல்லி விட்டு, 'நீ-வா! நீ-தா!' என்கிறாள். நீ வருக என்றும், நீ தாவுக என்றும் பொருள். வருவது என்பது தாவுதலையே குறிப்பதனால், 'வா' என்றாலும் பாய்தல், தாவுதல், என்று பொருள். இவ்விதம் இவர்களுக்கிடையே தர்க்கம் நடப்பதை மேலும் கவனமாகப் பார்க்கலாம்.

'நீ, வ்-ஆ!' என்கிறாள் அவள்.

'நீ, த்-ஆ!' என்கிறான் அவன்.

அவள் தன் கிளையை விட்டு அடுத்தக் கிளைக்குப் பாய்கிறாள்.

'அ-தா! அ-வா!' என்று அவன் மகிழ்கிறான். "அழகான தாவுகை" "அழகான பாய்ச்சல்" என்று பொருள்.

மேலும் இன்னொரு கிளையில் தாவி, அவனை அவள் அடைகிறாள். அவளை அவன் அணைத்துப் பிடித்துக் கொள்கிறான். அவள் முகத்துடன் முகத்தை வைத்து முகர்ந்து முத்தமிடுகிறான். தன் கையிலுள்ள குருத்தை அவள் வாயில் திணித்து 'இன்-து!' என்கிறான். இனிய உணவு என்று பொருள். இனியதைப் புசி என்றுமொரு பொருள்.

அவர்கள் இருவரும் ஒரு கிளையில் உட்கார்ந்தபோது, கிளை அழுந்தி, பக்கத்துக் கிளையுடன் உராய்ந்து 'ம்அர்', 'ம்அர்' என்ற ஒலியை எழுப்புகிறது. அவர்கள் அதை கவனித்துக் காலை ஆட்டுகிறார்கள். அது மேலும் மேலும் 'ம்அர்' என்ற ஒலியை எழுப்பிற்று. அதைப் பார்த்து மகிழ்ச்சிப் பொங்குகிறது. 'ம்அர்-அம்' என்று சொல்லி சிரித்துக் கொண்டே ஊஞ்சல் போல் ஆடுகிறார்கள். 'ம்அர் அம்' (மரம்) என்றால் 'ம்அர்' ஒலி யெழுப்பும் தன்மை.

அந்தச் சமயம் பல மரங்களுக்கு அப்பால் ஒரு கிளையில் ஒரு சிறுவன் தாவித்தாவி வருகிறான். அவர்களைப் பார்த்து, ஒரு கிளையில் நின்றபடி, 'ஆய்!' என்று விழிக்கிறான். அவனைத் திரும்பிப் பார்த்து, "இ-தா! இ-வா" என்று அவர்கள் கூறுகிறார்கள். "இங்கே தாவுக! இங்கே பாய்க." என்று பொருள்.

அவன் அவர்களை நோக்கித் தாவி வருகிறான். அவன் தாவும் தனித் தன்மையைப் பார்த்து, 'ம்!' என்கிறாள் அவள். அப்போது அவளுடைய முகத்தில் ஒரு பூரிப்பு வெளிப்படுகிறது. ஆடவன், 'எ?' என்கிறான். அதற்கு அவள், 'அம்!' என்று சொல்லி அந்தச் சிறுவன் தாவுகிற தன்மையைச் சுட்டிக் காட்டுகிறாள்.

அந்தச் சிறுவன் அவர்களின் கிளைக்கு வருகிறான். 'ம்அர்' என்று மரம் ஒலிக்கிறது. அவள் தன் கையிலுள்ள குருத்தை அவனிடம் கொடுக்கிறாள். அவன் அதைக் கடித்துத் தின்று கொண்டே, அவசரமாக, தனக்கு நேர்ந்த அபாயத்தைச் சொல்ல முற்படுகிறான்.

'கம்-தே-கு-தா! கம்-பா-போ! அ! மா-வா! தே-தா! தே-வா!' என்கிறான் சிறுவன்.

(நீர் குடிக்க பூமியில் தாவினேன்! நீர் பரப்புக்குப் போனேன். அங்கே மிருகம் வந்தது! என்னைக் கொள்ளத் தாவியது! புசிக்கப் பாய்ந்தது)

"எ-கம்-பா? அ?" என்று அருகேயுள்ள குளத்தைச் சுட்டி அவள் கேட்கிறாள். (எந்த நீர் பரப்பு? அதுவா?)

'அ-இல்! ஆ-கம்-பா!' என்று சிறுவன் கையை உயர்த்தி நீட்டிச் சொல்கிறான். (அது இல்லை! ஆங்கேயுள்ள நீர் பரப்பு)

மேலும் அவன் அவசா அவசரமாக சம்பாஷணையைத் தொடர்ந்து, "நா-வி-ஓ ! மே தா! மீ-வா' " என்கிறான். (நான் விரைந்து ஓடினேன். மேலே தாவினேன்! உயரப் பாய்ந்தேன்.)

இவ்விதம் தனக்கு நேர்ந்த அபாயத்தை அவசரமாக அந்தச் சிறுவன் வர்ணிக்கிறபோது, வெறும் ஓசைகள் ஒன்றோடொன்று பல விதங்களில் இணைந்தன. அவை சேர்ந்த தன்மையே அவனுடைய கருத்தை மற்றவர்களுக்கு உணர்த்தின. இந்தக் கற்பனைச் சம்பாஷணையை நாம் மேலும் தொடர்ந்தால், எத்தனையோ ஆயிரக்கணக்கான ஓசைச் சேர்க்கைகளை நமக்கு பார்க்க முடியும். இன்னும் கொஞ்சம் தொடருவோம்:—

அந்தச் சிறுவன் திடீரென்று இன்னொரு கிளையில் தாவிச் செல்கிறான். அந்தப் பாய்ச்சல் வெகு அழகாக இருக்கிறது.

"ஆ! தா! அம்! அதாம்" என்கிறாள் அந்தப் பெண். 'அந்தப் பாய்ச்சல் அழகுடையது' என்றும், 'அழகாக தாவும் தன்மை' என்றும், 'அது தாவும் அழகு!' என்றும், 'அங்கே தாவும் தன்மை' என்றும் பொருள்.

அதற்கு அந்த ஆடவன், 'அ! வா! அவா!' என்று பதில் கூறுகிறான். "அழகிய பாய்ச்சல்." என்றும், "அந்தப் பாய்ச்சல்!' என்றும் பொருள்.

சில மரங்களுக்கு அப்பால் சென்று சிறுவன் கிளையில் நின்றபடி திரும்பிப் பார்க்கிறான். தாயைப் பார்த்துச் சிரிக்கிறான். தாய் அவனை, 'இ! வா! இவா!' என்று அழைக்கிறாள். 'இங்கே வருக' என்றும் "இங்கே பாய்க" என்றும், 'இப்படி பாய்க" என்றும், "இப்படி வருக!" என்றும் பொருள்.

அதற்குச் சிறுவன், 'ஆ! ஆ!' என்று எதிர்மறையில் தலையை ஆட்டுகிறான். 'முடியாது! முடியாது!' என்று பொருள். பிறகு, 'நீ! இ! வா! நீயிவா!' என்று தாயைத் தன்பக்கம் அழைக்கிறான்.

இவ்விதம் இருவரும் தர்க்கம் செய்து கொண்டிருக்கிறபோதே, சிறுவன் தலைக்குமேல் கிளையில் ஒரு பாம்பு சீறுகிறது. அதைத் தாயும் அவளுடைய பக்கவனும் பார்த்துவிடுகின்றனர். உடனே 'அரா! மீ! அரா! மீரா!' என்று அவசரமாகக் கத்துகிறார்கள். 'பாம்பு! மேலே பாம்பு' என்று பொருள். அவசரத்தில் 'மீ-அரா' என்பது அவர்களுடைய வாயில் 'மீரா' என்று குறுகி விடுகிறது.

அந்தப் பாம்பைச் சிறுவன் அண்ணார்ந்து பார்க்கிறான். இளமை பயம் அறியாது. அவன் பாம்பை அழகு பார்க்க முற்படுகிறான். சிரித்தபடியே, 'அ! ர்! ஆ'! என்கிறான். 'அழகானது! ர் என்று போவது. ஆ என்று வாயைப் பிளப்பது' என்று பொருள்.

அவனுடைய அசட்டுத் தனத்தைப் பார்த்து பயந்த தாய், 'கு! தா! கூ தா!' என்று கத்துகிறாள். 'பூமியில் தாவுக' என்று பொருள். அவசர அவசியத்தில், 'கு' என்பது 'கூ' என்று நீள்கிறது. இரண்டு ஒலிகளுக்கும் பூமி என்றே பொருள். அவள் அவ்விதம் சப்தமிடுகிற போதே, 'கை! தா! கை! வா.' என்று ஆடவன் கத்துகிறான். 'பக்கத்தில் தாவுக!' என்றும், 'பக்கத்தில் பாய்க!' என்றும் பொருள்.

பாம்பு சீறுகிறது. அவன் பேரில் பாய்ந்து விடும் போலிருக்கிறது. அந்த நிலையில் அவன் திடீரென்று பூமியில் குதிக்கிறான். பிறகு அண்ணார்ந்து பார்க்கிறான்.

இவ்விதம் ஒரு அபாயத்திலிருந்து தப்பியவுடன், தரையில் வேறு ஒரு அபாயம் அவனுக்கு நேருகிறது. அங்கு ஒரு புலி உருமுகிற சப்தம் கேட்கிறது. உடனே தாய் சப்தமிடுகிறாள்,

'மா! வி-மா! ஈ-மா! சா-மா!' என்று கத்துகிறாள் தாய். 'மிருகம்! அழிக்கிற மிருகம்' என்று பொருள். வி, ஈ, சா ஆகிய மூன்று ஓசைகளும் அழிவு, நாசம், சாவு முதலிய பொருளையே குறிக்கின்றன.

'மா! து-மா! துமா!' என்று அந்த ஆடவன் கத்துகிறான். 'மிருகம். உண்கிற மிருகம்.' என்று பொருள். து, தூ என்றால், 'உண்' என்றும், இறைச்சி என்றும், உணவு என்றும் பொருள்.

சிறுவன் சுற்றும் முற்றும் பார்க்கிறான். அங்கே ஒரு புலி 'ஈ' என்று பல்லைக்காட்டி, 'ஊ' என்று உருமுகிறது. 'ஆ' என்று வாயைப் பிளக்கிறது.

சிறுவன் பயந்து விட்டான். அவன் அதைப்பார்த்து என்ன செய்வதென்று புரியாமல் கத்துகிறான்.

'இ! பா! கா! வா! பாகாவா!' என்று அலறுகிறான். இந்தப் பாப்புக்குக் காப்பாற்றுவதற்கு வருக என்று பொருள். 'பாகாவாஅன்!' என்று அவசரத்தில் கூக்குரலிடுகிறான். "பாப்புக்குக் காப்பாற்ற பாய்கிறவனே!" என்று பொருள்.

தாய், "மே! தா! மேதா!" என்று கத்துகிறாள். "மேலே தாவுக" என்று பொருள். சிறுவன் புலியைப் பார்த்தபடியே, "மா! தே! வா! மாதேவா!" என்று அலறுகிறான். "மிருகம் புசிக்கப் பாய்கிறது" என்று பொருள். மேலும், "மா! தா! மாதா!" என்று கூக்குரலிடுகிறான். "மிருகம் தாவுகிறது!" என்று பொருள்.

அந்தச் சமயம், மரத்திலிருந்த ஆடவன், புலியின் பேரில் தாவுகிறான். "சா! சா!" என்று சொல்லிக் கொண்டே தாயும் அதன் பேரில் பாய்கிறாள். "சாகடி" என்று பொருள். சிறுவனும் அதை நோக்கியோடி பாய் கிறான். மூவரும் அதைக் கட்டிப் பிடித்து உருளுகிறார் கள். சிறுவன் ஒரு கல்லைத் தூக்கிப் புலியின் தலையில் அடிக்கிறான். புலி சாகிறது.

இந்தப் போராட்டத்தில் அமைந்த ஓசைச் சேர்க்கை, "பகவான்" என்ற தற்காலச் சொல்லுக்கு ஒத்து இருப் பதைப் பார்க்கலாம். இந்தப் போராட்டத்தில் மற்ற ஓசைகளையும் பல விதங்களாக இணைத்துப் பார்த்தால், புராதன உயர் திணைப் பெயர்ச் சொற்களில் பல தாமாக அமைவதை நமக்கு கவனிக்க முடிகிறது.

இந்தக் கற்பனையை மேலும் தொடருவோம்:—

அந்த மூவரும் மரக்கிளைகளில் தாவியவாறு செல் கிறார்கள். அங்கு ஒரு இடத்தில் அவர்களுடைய கூட்டத் தினர் மரக்கிளைகளில் உட்கார்ந்திருக்கிறார்கள். அம் மூவ ரும் அவ்விடத்தில் போய் குதிக்கிறார்கள். அப்போது அந்தச் சிறுவன், சாதாரணமாகத் தாவி நிற்காமல், ஒரு குட்டிக் கரணம் போட்டு, கிளையின் பேரில் நிற்கிறான். அதைப் பார்த்த ஒரு கிழவி,

"அ! தா! அம்! கா—இல்!" என்கிறாள்.
"அப்படி தாவும் தன்மையில் காப்பு இல்லை" என்று பொருள்.

அதற்கு அந்தச் சிறுவன், "எ, இல்? இ-வா—அம் பார்!" என்று சொல்லிவிட்டு மீண்டும் ஒரு கரணம் போட்டுக் காட்டுகிறான். "ஏன் இல்லை? இந்தப் பாய்ச் சலைப் பார்!" என்று பொருள். இவ்விதம் கரணம் போட்டு நின்றவுடன், "இ—வா—அம், எ?" என்று அக் கிழவியிடம் சிறுவன் கேட்கிறான். "இந்தப் பாய்ச்சலின் தன்மை எப்படி?" என்று பொருள்.

அதற்கு அக்கிழவி, "இ-வா! கா-இல்-அம்!" என்கிருள். "இந்தப் பாய்ச்சல். காப்பு இல்லாத தன்மை யது!" என்று பொருள்.

இவ்விதம் சிறுவனுடன் தர்க்கம் செய்து கொண்டிருந்த கிழவி, தூரத்தில் வேறு ஒரு கிளையில், ஒரு பெண் தாவிச் செல்வதைப் பார்க்கிருள். உடனே அவளைச் சுட்டிக் காட்டி, "ஆ! தா! அள். யா?" என்று கேட்கிருள். "ஆங்கே தாவுகிறவள் யார்?" என்று பொருள். கேள்விக்கு பதிலை எதிர்பார்க்காமலே, சிறுவனைத் தட்டி, அந்தப் பெண்ணைச் சுட்டி, "ஆ! வா! பார்! ஆ-தா-அம்! பார்." என்று கூறுகிருள் கிழவி. "ஆங்கே பாய்வதைப் பார்! ஆங்கே தாவுகிற தன்மையைப் பார்!" என்று பொருள்.

"அ-வா! அ-தா-அம்!" என்று கிழவி திருத்தமாகக் கூறுகிருள். "அந்தப் பாய்ச்சல்! அழகாக தாவும் தன்மையது!" என்று பொருள்.

இந்தக் கற்பனைச் சம்பாஷணையில், ஒசைகளின் வேறு பல சேர்க்கைகளைப் பார்க்கலாம். இதில் 'ஆவா' என்ருல், ஆங்கே, அப்போது, அப்படி பாய்தல் என்றும், வருதல் என்றும், தாவுதல் என்றும் பொருள் உண்டாகுகிறது. 'ஆதாஅம்' என்ருல், ஆங்கே, அப்போது, அப்படி தாவிய தன்மை, பாய்ந்த தன்மை, என்று பொருள் உண்டாகு கிறது.

ஆ-தா-அம் = அன்ருெரு காலத்தில் ஆங்கே (தூரத்தில்) (மாக்கிளையில்) தாவியத் தன்மை. (இதைச் சொல்கிறபோது கை உயர்ந்து விண்ணைக் காட்டும்)

ஆ-வா-அம் என்ருலும் இதே பொருள் தான்.

ஆதாம், ஆவாம் நிலையில் தான் குரங்கு குணத்தைச் சிறுகச் சிறுக இழந்து, முழு மனித நிலையை நம் தமிழர்கள் அடைந்தனர். முழு மனிதர்களுக்கு முந்திய நிலை, ஆதாம்-ஆவாம் நிலை.

ஆதாம்—ஆவாம் நிலையில், அரை மனிதர்களாக மரங்களில் வசித்து, ஓசைகளை உண்டாக்கிக் கருத்துக்களை வெளியிட்டு வந்தபோது, நம் மூதாதையர்கள் காய்கனிகளையும், பூ தளிர்களையும், பருப்புக் கொட்டைகளையும், ஓலைக் குருத்துக்களையும், தெங்கு நொங்குகளையும் மிகவும் அதிகமாகப் புசித்து வந்தார்கள். பெரும்பாலான சமயங்களில் இவையே அவர்களுக்குப் பிரதான ஆகாரம். சிற் சில சமயங்களிலேயே பிற மிருகங்களின் இரத்தத்தைப் பருகவும், இறைச்சியைப் புசிக்கவும் அவர்களுக்கு முடிந்தது.

ஆ-தீ-கா-இல்-அம் †

இவ்விதம் மரங்களில், அன்றொரு காலத்தில் (ஆ) தாவிக் கொண்டு (தா) இருந்து வந்த தன்மையின் (அம்) போது, குமரிக் கண்டத்தில் காட்டுத் தீப் பிடித்துக் கொண்டது. அழகாக (அ) தாவும் (தா) குணமுடைய (அம்) வர்கள், அத்தீயினால் மிக மிகக் கொடூரமாக பாதிக்கப்பட்டனர்.

காட்டுத் தீ மிகவும் பொல்லாதது. அது பல விதங்களில் உண்டாயிற்று.

பூமியின் மேல் பரப்பில் அணைந்தத் தீ, உள் பரப்பில் சதாசர்வ காலமும் இயங்கிக் கொண்டிருக்கிற தென்பதை ஏற்கெனவே பார்த்தோம். இந்தத் தீ எங்கேயாவது

† ஆ-தீ-கா-இல்-அம்: ஆங்கே அப்போது தீயினால் (ஏற்பட்ட) காப்பு இல்லாத தன்மை. ஆ: அங்கே, அப்போது, அன்றொரு சமயம்; தீ: நெருப்பு; கா: காப்பு; இல்: இல்லாத; அம்: தன்மை.

மேல் பரப்பைப் பொத்துக் கொண்டு வெளியே வந்த போது, மேல் பரப்பிலிருந்த காடுகளில தீப் பிடித்துக் கொண்டது. குமரிக் கண்டம் பூமத்திபரேகைப் பிரதேச மாதலால், சூரியன் வருடத்தில் இரண்டு தடவை ஒவ்வொரு இடத்திலும் தலையுச்சியில் காணப்பட்டான். இதனால் சூரிய வெப்பத்தின் மிகுதியை எல்லா இடங் களும் அனுபவித்துக் காய்ந்து உலர்ந்தன. சருகுகளும் விறகுகளும் சிதறிக் கிடந்தன. எரி மலையிலிருந்து சிதறியத் தீ அவற்றில் விழுந்து காட்டுத் தீயை மூட்டிற்று. மேலும், விண்ணில் தீயை வடிவமாகக் கொண்ட கோளங் கள் எத்தனையோ சஞ்சரிப்பதனால், சிதறிபத் தீக் கட்டிக ளும் ஆங்காங்கே விழுந்து தீயை மூட்டின. மூங்கில்களும் காய்ந்த கிளைகளும் காற்றினால் தொடர்ந்து அசைக்கப் பட்டு ஒன்றோடொன்று விடாமல் உராய்ந்து வந்த போது, கர்ஷணத்தினால் கருகிக் காட்டுத் தீயை உண் டாக்கின. மின்னல்களில் உள்ளத் தீயும் பூமியில் பாய்ந்து மாங்களை எரியச் செய்தது.

இவ்வித பல்வேறு காரணங்களில் ஒன்றினால் உண் டான காட்டுத் தீ, சிறிது நேரத்திற்குள் நாலா திசை களிலும் பரவியது. மரங்களையும் செடி கொடிகளையும் எரித்து சாம்பலாக்கியது. கிளைகளிலும், கொம்புகளிலும், தரையிலும் வசித்த எண்ணற்ற பறவைகளையும் மிருகங் களையும், அரை மனிதர்களையும் எரித்துச் சாம்பலாக்கக் கிளைக்குக் கிளை, புதருக்கு புதர், மலைக்கு மலை, கரைக்குக் கரைத் தாவிச் சென்றது. ஓங்கார ஓசை எழுப்பி, 'ஆ', 'ஊ', 'ஓ' என்று அலறியும், ஊதியும், இழித்தும் பாவியத் தீ, எத்தனையோ கோடி உயிரினங்களைச் சாகடித் தது.

பகல் முழுதும், இரவு முழுதும், நாள் கணக்கில் அந்தத் தீ எரிந்தது. இரவு நேரத்தை வெளிச்சமுடை யதாக ஆக்கியது. வெகு தூரத்திற்கு அப்பால் நின்று

பார்த்தவர்களின் கண்ணுக்கும் அதன் வெளிச்சமும், புகை மண்டலமும் தெரிந்தது.

அந்தத் தீயை எதிர்த்து, அணைத்து, அடக்கும் சக்தி எந்த மிருகங்களிடமும் இல்லை. அரை மனிதர்களாகிய நம் மூதாதையர்களுக்கு, அது எவராலும் அடக்க முடியாத, அணைக்க முடியாத; சர்வ வல்லமையுள்ள, மகா சக்தியாக விளங்கிற்று. அதனுள் அகப்பட்டவன் சாம்பலானான். அதை அணுகியவன் தீய்ந்தான். அதைத் தொட்டவன் சுடப்பட்டான். அதன் மர்மத்தை, இயக்கத்தை, போக்கை, உற்பத்தியை, சாவை, மனிதர்களுக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை; உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அப்படிப் பட்ட ஒரு தீ பிடித்துக் கொண்டபோது மரங்களில் வசித்த அந்த அரை மனிதர்கள் என்ன செய்திருப்பார்கள்? தப்பித்துக் கொள்வதற்கு மரங்களுக்கு மரம் தாவியும், தரையில் ஓடியும், குளத்தில் நீந்தியும் பள்ளங்களைத் தாண்டியும், சரிவுகளில் உருண்டும், மேடுகளிலிருந்து குதித்தும்—எத்தனையோ விதங்களில் முயற்சித்து ஓடியிருப்பார்களல்லவா?

எல்லா திசைகளிலும் ஓடியிருக்க மாட்டார்களா? எல்லா திசைகளிலும் ஓடியவர்களில் சிலர், தமிழகத்திற்குள் ஓடி வந்திருப்பர். வேறு சிலர் அரேபியாவிற்கு ஓடியிருப்பர். இன்னும் சிலர் எகிப்திற்குப் போயிருப்பர். மற்றும் சிலர் மலேயாவிற்குள் புகுந்திருப்பர்.

ஓடிப் போய் வசித்த இடங்களிலும் அவர்கள் முன்னைப் போலவே ஓசைகளைக் கொண்டு கருத்துக்களை வெளியிட்டிருப்பர். பழைய நினைவுகளை ஞாபகப்படுத்தி பேசி இருப்பார்கள். அதே சமயம் தம் புதிய சூழ்நிலைமைக்கு ஏற்ப புதிய கருத்துக்களை வெளியிட, புது விதமான ஓசைச் சேர்க்கைகளை (சொற்களை) உண்டாக்கியிருப்பர்.

தே-தீ-கா-இல்-அம் †

இப்படி தீயிலிருந்து அவர்கள் தப்பித்த போதும், தப்பித்தப் பிறகும் பேசிய சொற்களை முன்னைப் போலவே சிறிது கற்பனைச் செய்து பார்க்கலாம்:—

நெருப்புக் கட்டி கீழே விழுகிறது. 'த்' என்று ஒலிக்கிறது. இந்த ஒலியை எழுப்பியவுடன், அது எரிகிறது. எரிகிறபோது அழிக்கிறது. ஆகவே அதை 'த்ஈ' (தீ) என்று தமிழர்கள் குறிப்பிட்டார்கள். 'த்' என்று விழுந்து, 'ஈ' என்று அழிப்பது 'தீ'. விண்ணிலிருந்து விழுகிற நெருப்புக் கட்டி, 'த்' என்று விழும்படி எறியப்படுகிறதனால், 'த்ஏ' (தே) என்று குறிப்பிடப் பட்டது. இந்தத் தீ, எல்லாவற்றையும் புசிப்பதனால், 'தே' என்றால் கொள்ளுதல், புசித்தல், விழுங்குதல் என்னும் பொருள்.

ஒரு இடத்தில் தீ எரிகிறது. அதை மரத்திலிருந்து அரை மனிதர்கள் பார்த்து விடுகின்றனர். எப்படிக் கூச்சலிட்டிருப்பர்?

'தே! தீ! தேதீ!' என்று சுட்டிக்காட்டி அலறியிருப்பர். 'புசிக்கும் தீ' என்றும், 'உட்கொள்ளும் நெருப்பு' என்றும் பொருள்.

அந்தத் தீயில் மனிதர்களுக்குக் காப்பான இடமோ காப்பாற்றிக் கொள்ளும் தன்மையோ உண்டா? இல்லை.

† தே-தீ-கா-இல்-அம் : உட்கொள்ளுகிற தீயினால் காப்பு இல்லாத தன்மை. [தே : உட்கொள்ளுதல்; தீ : நெருப்பு; கா : காப்பு; இல் : இல்லாத; அம் : தன்மை]

காப்பு இல்லாத தன்மை என்று உணர்த்த, 'கா! இல்! அம்! காஇல்அம்!' என்று கூச்சலிட்டிருப்பர்.

'தே-தீ-கா-இல்-அம்' என்றால், உட்கொள்ள வருகிற தீயிடம் காப்பு இல்லாத தன்மை.

ஆகவே, காட்டுத் தீ பரவிய சமயங்களெல்லாம் 'தேதீ காஇல்அம்' என்று அவர்களால் குறிப்பிடப் பட்டது.

'தேதீ காஇல்அம்' போது, எல்லா உயிரினங் களையும் போலவே மனிதர்களும் தப்பித்துக் கொள்ள ஓடினார்கள். ஓடியபோது எவ்விதம் கூச்சலிட்டு இருப் பார்கள்?

'தே! வா! தீ! தே! வா!' என்று அலறியிருப் பார்கள். 'புசிக்கப் பாய்கிறது தீ! விழுங்க வருகிறது!' என்று பொருள்.

'மா! தே! வா!' என்று திரும்பிப் பார்த்து கத்தி யிருப்பார்கள். மிருகங்களைப் 'புசிக்கப் பாய்கிறது!' என்று பொருள்.

'ஊ! மா! தே! வா!' என்று கூக்குரலிட்டு இருப் பார்கள். 'ஊனுள்ள மிருகங்களைப் புசிக்க வருகிறது!' என்று அர்த்தம்.

'மா! கா! தே! வா!' என்று பயந்திருப்பார்கள். 'மிருகங்களின் காப்பிடங்களைப் புசிக்கப் பாய்கிறது' என்று பொருள்.

'தே! வீ! தேவீ!' என்று அலறியிருப்பார்கள். 'புசித்து அழிக்கிறது!' என்று பொருள்.

'தே! வி! தேவி!' என்றும் கத்தியிருப்பர். 'புகைக்க விரைகிறது!' என்று அர்த்தம்.

'வி! தீ! விதீ!' என்று ஓடியிருப்பார்கள். 'விரைகிறது தீ!' என்று பொருள். 'வீ! தீ! வீதீ!' என்றும் சப்தமிட்டு இருப்பார்கள். 'அழிக்கிறது தீ!' என்று அர்த்தம்.

'சா! தீ! சாதீ!' என்று ஓலமிட்டு இருப்பார்கள். 'சாகடிக்கிறது தீ!' என்று அர்த்தம். 'தீ! சா! தீசா!' என்றும் கத்தியிருப்பார்கள். 'தீ சாகடிக்கிறது!' என்று பொருள்.

இன்னும், 'தீ! வா!' (தீ வருகிறது) என்றும் 'தீ! தா!' (தீ தாவுகிறது) என்றும், 'தீ! தே!' (தீ புகைக்கிறது) என்றும், 'தீ! ஓ!' (தீ ஓடுகிறது) என்றும், 'ஓ! தீ!' (ஓடுக!தீ!) என்றும், 'கா! ஓ!' (காப்பாற்றிக் கொள்ள ஓடுக!) என்றும், 'கா! வா!' (காப்பாற்றிக் கொள்க பாய்க!) என்றும் எத்தனையோ விதமான ஓசைச் சேர்க்கைகளை உண்டாக்கி யிருப்பார்கள்.

இவ்விதம் ஒலிச் சேர்க்கைகளை உண்டாக்கிக் கொண்டு ஓடியபோது, தீ நாலா திசைகளிலும் சூழ்ந்து கொண்டது என்று வைத்துக் கொள்வோம். திரும்பிய திசையெல்லாம் தீத் தோன்றுவது அதிசயமல்லவா? அந்தத் தீ சாகடிக்கச் சூழ்ந்து கட்டிய தன்மைதான் 'அ-தீ-சா-யா-அம்' (அதிசயம்)

அந்தத் தீயில் பலர் மடிகிறார்கள். சிலர் தப்பித்துக் கொள்கிறார்கள்.

ஆ-தீ-மு-இல்-அம் †

அவர்கள் அந்தத் தீயைப் பற்றியும், அதில் மடிந்தவர்களைப் பற்றியும், அதிலிருந்து தப்பியவர்களைப் பற்றியும் எப்படியெப்படியெல்லாம் பேசி இருப்பார்கள்? இந்தப் பேச்சில் எத்தகைய ஓசைச் சேர்க்கைகளை (சொற்களை) உண்டாக்கி யிருப்பார்கள்?

'அ-தீ!' என்று சுட்டியிருப்பார்கள். அந்தத் தீ என்று பொருள்.

அந்தத் தீய்க்குப் பத்து வருடங்களுக்கு முன்பு, வேறு இன்னொரு தீ எரிந்தது அப்போது அவர்களுக்கு நினைவிற்கு வருகிறது என்று வைத்துக் கொள்வோம். பல வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட அத்தீயை எப்படி குறிப்பிட்டு இருப்பார்கள்?

'ஆ! தீ!' என்று நீட்டிச் சொல்லி கைகளை உயர்த்திக் காட்டியிருப்பர்.

'அ-தீ' என்பது, அப்போது ஏற்பட்ட தீயையும், 'ஆ-தீ' என்பது பல வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட தீயையும் குறிக்கும்.

'அ-தீ' யைப் போலவே, 'ஆ-தீ' யிலும் காப்பு இல்லாத தன்மையே நிலவிற்று. அதாவது, 'அதீகா இல்அம்' போலவே, 'ஆதீ காஇல்அம்' மும் இருந்தது.

'ஆதீ'யில், 'கா இல் அம்' போது, சிலர் தப்பித்தார்கள்.

---

† ஆ-தீ-மு-இல்-அம்: ஆங்கே அப்போது தீயினால் மூன்றும் இல்லாதுபோன தன்மை.[ஆ: ஆங்கே; அப்போது, அன்றொரு சமயம்; தீ: நெருப்பு: மு: மூன்று (மரக்கிளை, தரை, நீர்) இல்: இல்லாத; அம்: தன்மை.]

'ஆதீ'யிலிருந்து மிருகங்களுடன் தாவியவர்கள் எல்லோரையும், 'ஆதீ-மா-தா' என்று சொல்லலாம் அல்லவா?

'ஆ-தீ'யிலிருந்து தாவித் தப்பித்துப் பிள்ளைப் பெற்றவள், 'ஆ-தீ-தா-ஈய்'.

'ஆ-தீ'யிலிருந்து தாவித் தப்பித்த ஆடவன் 'ஆ-தீ-தா-அன்'.

'ஆ-தீ'யிலிருந்து தப்பித்துக் கொள்ளாமல் இரையானவை எல்லாம், 'ஆ-தீ-இரை'.

'ஆ-தீ'யில், 'கா இல் அம்' போது, மனிதர்களுக்கு என்ன நேர்ந்தது? (1) மரத்தில் வசிக்க முடியவில்லை. (2) தரையில் நிற்கமுடியவில்லை. (3) நீரில் கிடக்க முடியவில்லை. மூன்று விதமான பரப்புகளும் இல்லாத தன்மை ஏற்பட்டது. இதுதான், 'ஆ-தீ-மூ-இல்-அம்'.

'ஆ-தீ'யில், 'கா இல் அம்' போது, 'மூ இல் அம்' நிலவியபோது, மிருகங்களின் பரப்புக்குப் பாய்ந்தது எது? (1) நெருப்பு. (2) மழை.

நெருப்பு பூமியை அழிக்க விரைந்தது. இதனால் அது, 'ஆ-தீ-பா-வீ'.

மழை நெருப்பை அழித்து மிருகங்களைக் காப்பாற்ற வந்தது. இதனால் அது, 'ஆ-தீ-பா-கா-வா-அன்'.

'ஆ-தீ'யில், ஒருத்தி ஒருவனைக் காப்பாற்றுவதற்குப் பாய்கிறாள். அவளை அவன் எப்படி குறிப்பிட்டிருப்பான்? 'கா-தா-அள்' என்று சொல்லிருப்பான். 'காப்பாற்ற தாவியவள்' என்று பொருள். 'கா-தா-அன்' என்றால், ஆடவனைக் குறிக்கும். இல்லாவிட்டால் 'ஆ-தீ-தா-அள்' என்றும், 'ஆ-தீ-தா-அன்' என்றும் சொல்லியிருப்பார்கள்.

அண்-தா-அம் †

'ஆ-தீ'யில் மனிதர்கள் அகப்பட்டுக் கொண்டபோது, ஓட்டமாக ஓடிப்போய், கிளைகளில் தாவிப்போய், அண்மையில் பாதுகாப்பாக இருந்த இடத்திற்குச் சென்றார்கள். இதுதான் 'ஆ-தீ-அண்-தா-அம்' (அந்தத் தீயிலிருந்து அண்மையில் தாவியத் தன்மை)

"அண்-தா-அம்" தான் ஆதீ உண்டாக்கிய முடிவு.

இனி ஒரு தீயிலிருந்து தப்பிய ஒரு கூட்டத்தினர், பாதுகாப்பான இடத்தில் உட்கார்ந்து கொண்டு தொலையில் எரிகிற தீயைப் பார்க்கிறார்கள். அப்போது அக்கூட்டத்திலுள்ள ஒரு கிழவி, தான் சிறுமியாக இருந்தபோது காட்டில் மூண்ட ஒரு தீயைப் பற்றி தன் பேரர் பேத்திகளிடம் கதை சொல்கிறாள் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பேச்சு எப்படி இருக்கும்?

'அ-தீ.' என்கிறாள் கிழவி. அதற்கு அவள் பேத்தி 'எ-தீ? இ-தீ?' என்று கேட்கிறாள். கிழவி இதற்கு, 'அல். அல்! இ-தீ-அல்' என்று அவசரமாகக் கூறிவிட்டு, 'ஆ-தீ! ஆ-தீ!' என்று கைகளை உயர உயர்த்தி வாயை அகலத் திறந்து வெகுகாலத்திற்கு முன்பு எரிந்த தீ என்று உணர்த்துகிறாள்.

பிறகு அந்தத் தீ எரிந்த திசையைச் சுட்டிக் காட்டுகிறாள். அந்தக் காலத்தில் தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் அந்தத் திசையிலிருந்த காட்டில் வசித்ததாகச் சொல்கிறாள். என்னென்ன முறையில் வசித்தார்கள் என்பதையும் கூறுகிறாள். எப்படி?

---

† அண்-தா-அம்: அண்மையில் தாவிய தன்மை. [அண்: அண்மை, சமீபம்; தா: தாவுதல்; அம்: தன்மை]

'ஆ-தீ ! கா இல் அம்! மூ இல் அம்!' என்கிறாள். (அந்தத் தீயில் காப்பு இல்லாத தன்மை! மூன்றுமில்லாத தன்மை)

'ஆ-தா-அம்! ஆ-வா-அம்!' என்கிறாள். (ஆங்கே தாவிய தன்மை! ஆங்கே பாய்ந்த அழகு)

'ஆ-தா-அம்! தீ-பக்!' என்கிறாள். (ஆங்கே தாவிய தன்மையின்போது தீ பக்கென்று பிடித்தது)

'பக்-தீ! தே-தீ!' என்கிறாள். (பக்கென்று பிடித்த தீ, விழுங்குகிற தீ)

'தே-தீ! சீ-வா-யா!' என்கிறாள். (விழுங்கும் தீ, ஒளியாகப் பாய்ந்து கட்டியது)

'ந-சி! ந-தீ.' என்கிறாள். (மிகுந்த ஒளி! மிகுந்த நெருப்பு)

'ஓம்-ந!' என்கிறாள். (ஓம் என்று ஒலித்து மிகுந்தது)

'மா-சி-வா-யா!' என்கிறாள். (மிருகங்கள் ஒளியினால் பாய்ந்து கட்டப்பட்டன)

'மா-தா! சீ-தா!' என்கிறாள். (மிருகங்கள் தாவின! ஒளியும் தாவிற்று!)

'மா-ஓ! சீ-ஓ!' என்கிறாள். (மிருகங்கள் ஓடின! ஒளியும் ஓடிற்று)

'சீ-ஓ! தீ-தா-வா!' என்கிறாள். (ஒளி ஓடியபோது தீ தாவி வந்தது)

'ஆ-தீ! ஊ-இழி-தீ!' என்கிறாள். (அந்தத் தீ, 'ஊ' என்று இழித்தத் தீ)

'ஆ-தீ, தா-ஈ! வா-ஈ!' என்கிறாள். ('அந்தத் தீ தாவி அழித்தது! பாய்ந்து அழித்தது)

'ஆ-தீ, பா-ஈ! கா-ஈ! மா-ஈ.' என்கிறாள். ('அந்தத் தீ பரப்பை அழித்தது! காப்பை அழித்தது! மிருகங்களை அழித்தது)

'ஆ-தா-அம், தா-ஈ' என்கிறாள். (ஆங்கே தாவிய தன்மையைத் தாவி அழித்தது)

'ஆ-வா-அள், ஆ-ஈ!' என்கிறாள். (ஆங்கே பாய்ந்து வந்தவளை, ஆவென்று அழித்தது)

'ஆ-தா-அள், தா-ஈ' என்கிறாள். (ஆங்கே தாவியவளைத் தாவி அழித்தது)

'ஆ-தீ, தே-வா-தீ-தேவா! தேவி-தீ-தேவி!' என்று அதன் கொடூரத்தை அழுத்திச் சொல்லுகிறாள்.

தீ-இர்ஏ-தா-ஊ-கா-அம் †

இந்தக் கற்பனைப் பேச்சில் உண்டாகியிருக்கும் பல்வேறு ஓசைச் சேர்க்கைகளும் (சொற்களும்) தற்காலத்திலும் உலகில் பல பாகங்களிலும் வேறு அர்த்தங்களில் வழக்கிலிருக்கின்றன.

† தீ-இர்ஏ-தா-ஊ-கா-அம்: நெருப்பு 'இர்' என்று எய்துத்தாவ, மரங்களில் தாவி ஊனைக் காப்பாற்றிக்கொண்ட தன்மை.[தீ: நெருப்பு; இர்ஏ: 'இர்' என்று எய்தல்; தா: தாவுதல் ஊ: ஊன்; கா: காப்பாற்றுதல்; அம்: தன்மை]

தீயிடமிருந்து தப்பியவர்கள் தற்காலத் தமிழகத்திலும் வேறு பல வெளிப் பிரதேசங்களிலும் வெவ்வேறு கூட்டங்களாகப் பிரிந்து வசிக்க ஆரம்பித்தனர்

இதுதான் தீ-இர்வ-தா-ஊ-கா-அம். தீ 'இளர்'என்று எய்து தாவியபோது, மரத்தில் தாவி ஊனைக் காப்பாற்றிக் கொண்ட தன்மை (திரேதாயுகம்)

தீ எரிந்தபோது ஊனைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் ஓடிய தன்மைதான், அவர்களை முற்றிலும் தரையிலேயே வசிக்கக் கூடியவர்களாக ஆக்கி விட்டது.

அவர்கள் அடர்த்தியான காடுகளை விட்டு ஓடிய போது, ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டனர். அதுதான் காட்டில் தீ பிடித்துக் கொள்கிறது என்பதும், அந்தத் தீயிலிருந்து தப்புவது மிகவும் சிரமம் என்பதுமாகும். ஆகவே, சுலபமாகத் தீ பிடிக்காத இடமே—தீ பிடித்தாலும் பரவுவதற்கு வசதிகள் இல்லாத இடமே—அவர்களுக்குக் காப்பை அளிக்கக்கூடும்.

அப்படிப் பட்ட இடங்கள் திறந்த புல்வெளிகளும் பாலைவெளிகளுமேயாகும். திறந்த வெளிகளில் மரங்கள் கிடையாது. இதனால் அவர்கள் தீ எரியாத இடங்களில் வசிக்க வேண்டுமென்றால், மரங்களில் வசிக்கும் தன்மையை இழந்து விட வேண்டும். நிமிர்ந்து நடக்கவும், நிமிர்ந்து நின்று போராடவும், நிமிர்ந்து ஓடவும் பழக வேண்டும். அதோடு, இலைகளையும் தளிர்களையும் குருத்துக்களையும் கனி கிழங்குகளையும் மட்டுமே பிரதானமான உணவாக உட்கொள்ளும் பழக்கத்தைவிட்டு விடவேண்டும். திறந்த வெளிகளில் வசித்த மிருகங்களையும் உயிரினங்களையும் புசிக்கும் பழக்கத்தைக் கொள்ளவேண்டும்.

தீ எரியாத இடங்களைத் தேடியபோது, இவ்வித பழக்க வழக்கங்களைக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்ட சமயத்திலேயே, அவர்கள் தப்பி ஓடிய தன்மையும் இவ்விதப் பழக்கங்களை மேற்கொள்ளும் அவசியத்தை அவர்களுக்கு உண்டாக்கிற்று.

அவர்கள் ஓடியபோது என்ன பார்த்தார்கள்?

அடர்த்தியான காடு ஒரு குறிப்பிட்ட இடத்தில் முடிவுற்றது. அதைவிட்டு வெளியே வந்தவுடன், வெகு தூரத்திற்கு மரங்களே இல்லாத இடைவெளியிருந்தது. இன்னொரு காட்டிற்குச் செல்வதென்றால், அந்த இடைவெளியைக் கடந்தாக வேண்டும். இடைவெளியை மரங்களில் தாவிக் கடக்க முடியாது. கால்களையும் கைகளையும் ஊன்றி நடந்தே கடக்கவேண்டும். அப்படி கடந்தபோது, அடுத்தக் காட்டிலும் தீப்பிடித்துக் கொள்ளும் என்ற பயம் உண்டாயிற்று. அடுத்தக் காட்டில் நுழைவதா, அல்லது திறந்த வெளியிலேயே தங்கி விடுவதா என்ற கேள்வி பிறந்தது. அதே சமயம் அவர்கள் விட்டு வந்த காடு முற்றிலும் எரிந்து தணிந்தபோது, எவ்வித மரங்களும் இல்லாத திறந்த வெளியாகிவிட்டது.

ஒரு பக்கம் தீ எரிந்து தணிந்து கிடந்த பூமி (தீ-கு: திக்கு) மறு பக்கம் தீப்பிடித்து இகழக் கூடிய பக்கம் (தீ-சை: திசை)

இவ்விதம் திக்குவுக்கும் திசைக்கும் இடையே அகப்பட்டுக் கொண்டிருந்தபோது, திக்குவில் மரங்கள் எரிந்து விட்டதனால், மழை பெய்தபோது துளிகூட தீ இல்லாது ஒழிந்து விட்டது. 'திகு' தீயினால் இனிப தாக்கப்பட்ட பூமியாக (தீ-இன்-கு: திங்கு) ஆகிவிட்டது. அவ்விடம் திறந்தவெளியாகி தீ அபாயமற்றதாகிவிட்டது. இந்த நிலைமையில், அவர்கள் 'திசை' பக்கம் போக அஞ்சி, 'தீ-இற-இன்-தா-வெள்-ஈ' (திறந்த வெளியில்) வசிப்

படுதே உசிதம் என்று நினைத்தனர். அதாவது, தீ இறந்து விட்டதனால் இனிமையைத் தருகிறதும் அச்சத்தை அழிக்கிறதுமான பூமியில் வசிப்பதென்று நினைத்தனர்.

து-வா-பார்-ஊ-கா-அம் †

'தீ-இற-இன்-தா-வெள்-ஈ' (திறந்த வெளியில்) நீர் நிலைகள் இருந்தன. மழை பெய்ததனால் ஈரமாக இருந்தது. அது பரப்பில் ஈரமுடையதாக (பா-ஈர்: பார்)-ஈரமுடைய பரப்பாக இருந்தது.

இதனால் சிறு மிருகங்களெல்லாம் நீர்ப் பருகவும், அங்கு முளைத்த புல் பூண்டுகளுக்கு இடையே வசிக்கவும் வந்தன. அதாவது, இறச்சியை உடையவை (து) அங்கு வந்தன (வா)

ஆகவே, அந்தத் தீ இற-இன்-தா-வெள் ஈ (திறந்த வெளி), 'துவாபார்' ஆக இருந்தது. அதாவது, உணவு வருவதற்கு ஏற்ற பாதுகாப்பும் ஈரமும் உடைய இடமாக, உணவும் பாய்ந்தோடும் தன்மையும் பாதுகாப்பும் ஈரமும் உடைய இடமாக, அந்தத் திறந்த வெளிகள் இருந்தன.

ஆகவே, 'துவாபாரி'லேயே அவர்கள் ஊனைக் காப்பாற்றிக் கொள்வதென்று நினைத்தனர். அன்று முதல் அவர்களுக்கு "துவாபார் ஊகாஅம்" (துவாபர் யூகம்) ஆரம்பமாயிற்று.

---

† து-வா-பார்-ஊ-கா-அம்: உணவு வருகின்ற ஈரமுடைய பரப்பில் ஊனைக் காப்பாற்றிக்கொண்ட தன்மை. [து: உணவு, இறைச்சி; வா: வருதல், பாய்தல்; பார்: ஈரமுடைய பரப்பு; ஆற்றங்கரை, ஏரிக்கரை, மழை பெய்த பூமி: ஊ: ஊன்; கா; காப்பாற்றுதல்; அம்: தன்மை] நீர் இருக்கின்ற பரப்புக்கு உணவாகப் பயன்படும் மிருகங்கள் வருகின்றன. அதோடு மீன்கள் துள்ளிப்பாய்கின்றன. நண்டு, நத்தை, ஆமைகள் கிடைக்கின்றன.

துவாபாரில்தான் அவர்கள் முற்றிலும் மனிதர்களாக மாறினார்கள். மரப்பழக்கத்தை அடியோடு விட்டுவிட்டு, தரையிலேயே வசிப்பவர்களானார்கள்.

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு பிறந்த குழந்தைகளுக்கு நம் முன்னோர்கள் குரங்குகளைப் போல் வசித்தார்களா என்று அதிசயிக்கும்படியான நிலைமை ஏற்பட்டது.

இவ்வித நிலைமையில், பழைய கால வாழ்க்கையைப் பற்றி கிழவிகள் எவ்விதம் கதைகளைச் சொல்லியிருப்பார்கள்? மீண்டும் கற்பனைச் செய்து பார்க்கலாம்:—

கிழவி கையை உயர்த்துகிறாள். 'ஆ! ஆ!' என்கிறாள். 'அப்போது' என்று பொருள். உயர்த்திய கை வெகு காலத்திற்கு முன்பு என்று தெரிவிக்கின்றது.

'எ? எ?' என்கிறாள் பேத்தி. 'எப்போது' என்று பொருள்.

'ஆ-தீ! கா-இல்-அம்!' என்கிறாள் கிழவி. 'ஆங்கே அப்போது தீ எரிந்து காப்பு இல்லாத தன்மையின் போது' என்று பொருள்,

'ஆ! கா-இல்-அம்!' என்கிறாள் கிழவி. 'ஆங்கே காப்பு இல்லாத தன்மையில்' என்று பொருள்.

'மா-இன்-தண்! ஆ-தா! ஆ-வா!' என்று மரங்களின் உச்சியைச் சுட்டிக் காட்டுகிறாள். 'மிருகங்களில் இனிமையும் தன்மையுமுடையவர்கள் (மாந்தன்), ஆங்கே தாவினான்! ஆங்கே பாய்ந்தான்!' என்று பொருள்.

பிறகு கிழவி தீயைப் பற்றிச் சொல்கிறாள். 'ஆ-கா-இல்-அம்!' (அந்தக் காப்பு இல்லாத தன்மையில்) 'தீ-பக்!' (தீ பக்கென்று பிடித்தது)'

உடனே பேத்தி, 'எ-தீ? (எந்தத் தீ) பா-இரி-தீ? (பாப்பிலே வடிகின்ற தீயா?). சா-இன்-தீ?' (சோர்விலே இனிமை தரும் தீயா?) என்று சூரியனையும் சந்திரனையும் சுட்டிக் காட்டி கேட்கிறாள்.

அதற்கு கிழவி 'அ! அல்! (அது! அல்ல!) ஆ-தீ, தே-தீ! (அந்தத் தீ புசிக்கிற தீ) பா-இரி-தீ-அல். சா-ன்-தீ-அல்! மா-இன்-தீ-அல்! (மிருகங்களுக்கு இனிமை தரும் தீ அல்ல) கா-இன்-தீ-அல்! (காப்பாற்றும் இனிய தீ அல்ல) ந-இன்-தீ-அல்! (மிகுதியாக இனிமை தரும் தீ அல்ல) இன்-தீ-அல். (இனிய தீ அல்ல) ஆ-தீ-வீ-தீ! (அழிக்கிற தீ) வி-தீ! (விரைகிற தீ) சா-தீ! (சாகடிக்கும் தீ) ஈ-தீ! (அழிக்கிற தீ!) தே-வா-தீ! (புசிக்கப் பாய்கிற தீ) வேய்-தா-தீ! (மூங்கிலில் தாவுகிற தீ)......

பு-இர்-அ-ந-அம் †

இதுபோல அந்தத் தீயை இன்னும் எத்தனையோ விதங்களில் ஓசைகளைக் கொண்டே அவள் வர்ணிக்கிறாள். இந்த வர்ணனையில் நமக்கு மிகவும் பழக்கமான பல சொற்கள் உருவாவதை நீங்கள் பார்க்கலாம். உங்கள் கற்பனையை மேலும் செலுத்தினால், உங்களுக்கு நூற்றுக் கணக்கான சொற்களுக்கு அக்காலத்திய பொருள்கள் விளங்கும்.

† பு-இர்-அ-ந-அம்: குணத்தையும், இருக்கையையும், அழகையும் மிகுத்துக் (கூறும்) தன்மை-[பு: பண்பு, குணம்; இர்: இருத்தல்; இருப்பது; அ: அழகு; ந: மிகைப்படுத்துதல்; அம்: தன்மை] உள்ளதை உள்ளபடி சொல்லாமல் மிகைப்படுத்திக் கூறுதல். சீவாவின் குணத்தையும் இருப்பையும் அழகையும் மிகுத்துக்கூறும் தன்மையுடையது சீ-வா-பு-இர்-அ-ந-அம்.

கிழவி இவ்விதம் சொல்லிக் கொண்டு போகிற போது, கடைசியாகப் பேத்தி என்ன கேட்டிருப்பாள்? ‘அந்தத் தீயிலிருந்து தப்பியவர்கள் எங்கே? மரத்தில் தாவும் தன்மை ஏன் இன்று இல்லை?.......’ இவ்விதம் கேட்டிருப்பாள். அவர்களுடைய பாஷையில் ‘ஆ-தா-அள்-எ?’ என்று கேட்டிருப்பாள். ‘ஆ-தா-அம், இ, எ, இல்?’ என்று வினவியிருப்பாள்.

இந்தக் கேள்விகளுக்கு பதில் கூறியதில்தான் முதல் புராணக் கதை உண்டாயிற்று. குரங்குகளின் தன்மையிலிருந்து பரிணமித்து வந்தவனே மனிதன் என்பதை நம்ப முடியாத அளவுக்கு மாறுதல்கள் ஏற்பட்டு விட்ட போது, மற்ற மிருகங்களைப் போலவே மனிதர்களையும் ஏதோ ஒரு சக்தி உண்டாக்கியிருக்கிறது என்ற எண்ணம் உண்டானபோது, மரத்தில் தாவியத் தன்மை அடியோடு மறக்கப் பட்டுவிட்டது. மரத்தில் தாவியத் தன்மையை உணர்த்திய ஓசைச்சேர்க்கைகள் (சொற்கள்) புதிய அர்த்தங்களைப் பெற ஆரம்பித்தன.

எண்ணங்கள் மாறு பட்டதற்கு அடிப்படையான காரணம், யதார்த்த சூழ்நிலைமைகள் அடியோடு மாறி விட்ட தன்மையே என்பதை இங்கு நாம் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

யதார்த்த சூழ்நிலைமையில் என்ன மாறுதல் ஏற்பட்டது? குரங்கு தன்மை அடியோடு மறைந்து மனிதத் தன்மை வளர்ந்தது. இதற்கு ஏற்ப, குரங்குத் தன்மையைக் குறித்தச் சொற்கள், மனிதத் தன்மையைக் குறிக்கும் சொற்களாக ஆயின. ‘ஆ-தா-அள்’ என்பது, ஆங்கே தாவியவள் என்ற அர்த்தத்தை இழந்து, ‘ஆத்தாள்’ என்று குறுகி, அம்மாவைக் குறிக்க ஆரம்பித்தது. ‘ஆ-தா-அம்’ என்பது ஒரு மனிதனைக் குறிக்கும் சொல்லாயிற்று.

இவ்விதம் காலத்திற்குக் காலம் சொற்களுக்கு அர்த்தம் மாறுவதை இந்த நூல் நெடுக கவனித்துச் செல்லலாம்.

இந்த அர்த்த மாறுதல்கள் மிகைபடுத்திக் கூறும் தன்மையினால் அதிகமாயிற்று. குணத்தையும் இருப்பையும் அழகையும் மிகைப்படுத்திக் கூறும் தன்மை (பு-இர்-அ-ந-அம்) ஒவ்வொரு மனிதனிடமும் இருந்தது.

கல்-ஈ-ஊ-கா-அம் †

உணவு வருகின்ற ஈரமுடைய பரப்பில் (துவாபார்) அக்கால மனிதர்கள் எவ்விதம் ஊனைக் காப்பாற்றிக் கொண்டனர்? து-வா-பார்-ஊ-கா-அம் எப்படி இருந்தது?

துவாபார் என்பது பெரிய எரிக்கரைகளையும், ஆற்றங்கரைகளையுமே குறிக்கிறது. நீர் பருக அங்கு தான் மிருகங்கள் வருகின்றன. அங்குதான் சுலபமாகக் கிடைக்கும் உணவுகளாகிய நத்தை, நண்டு, ஆமை முதலியவை இருக்கின்றன.

இவற்றைத் தவிர அங்குதான் ஆற்று வெள்ளமும் உருண்டு விழுகிற அருவிகளும் கற்களை உருட்டி வருகின்றன. அங்குதான் உருட்டி வரப்படும் கற்கள் சிறு சிறு துண்டுகளாக உடைகின்றன. வழ வழப்பாகவும், கூராகவும் தேய்கின்றன. சுலபமாக எடுத்து வீசியெறிவதற்கு ஏற்ற கருவிகளாக இயற்கையில் அமைகின்றன.

† கல்-ஈ-ஊ-கா-அம்: கல்லினால் அழித்து ஊனைக் காப்பாற்றிக் கொண்ட தன்மை. [கல்: கல்; ஈ: அழித்தல்; ஊ: ஊன்; கா, காப்பாற்றுதல்; அம்: தன்மை.]

காட்டில் வசித்தக் காலத்தில் மனிதர்களுக்கு அந்த கையக் கற்கள் இயற்கையில் கிடைக்கவில்லை. காடு முரடான கற்களும், மரக்கிளைகளும், குச்சிகளும்தான் அவர்களுக்குக் காட்டில் கிடைத்தன. துவாபாரில் வழ வழப்பான, மிகவும் வசதியான, கனமான, வலுவான கற்களெல்லாம் கிடைத்தன.

அந்தக் கற்கள், மிருகங்களை எதிர்த்துப் பாதுகாத்துக் கொள்ளவும், இனிய உணவைப் பெறவும் மிகவும் வசதியாக இருந்தன.

அந்தக் கற்களை மிருகங்களுக்கு எடுத்து உபயோகப் படுத்தத் தெரியவில்லை; முடிய வில்லை. மனிதர்களுக்கு எடுத்து உபயோகப் படுத்த முடிந்தது; தெரிந்தது.

அந்தக் கற்களினால் மிருகங்களுக்குக் காப்பு இல்லை. அதனால் அவை "கா-இல" (கல்). அவை மனிதர்களுக்குக் காப்பளித்த இனிமையாதலால் 'கா இன்' (கன்)

அந்தக் கற்களின் உபயோகத்தைத் தெரிந்து கொண்ட மனிதர்கள், அவற்றை தம் இஷ்டப்படி வடிவமுள்ளதாக ஆக்குவதற்கு முயற்சிக்க ஆரம்பித்தனர். இந்த முயற்சியில், சில கற்கள் சுலபமாக உடைந்து விடுவதையும், வேறு சில உடைக்க முடியாதவாறு கடினமாக இருப்பதையும் தெரிந்து கொண்டனர். இதிலிருந்து மிகவும் கடினமான கற்களைத் தேடி பொறுக்க ஆரம்பித்தனர். ஆற்றின் போக்கிலேயே மேலும் கீழும் சென்று கடினமான கற்களைத் தேடினர். இந்த முயற்சியில் எங்கெங்கோ சென்றார்கள். எத்தனையோ தலை முறைகளைக் கழித்தார்கள்.

கற்களை இஷ்டப்படி உபயோகித்து மிருகங்களை அழிப்பதன் மூலம் ஊனைக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை ஆரம்பமானபோது, 'கல்-ஈ-ஊ-கா-அம்' (கலியூ

கம்) ஆரம்பமாயிற்று என்று சொல்லலாம். கலியூகம் என்றால் மிருகங்களுக்குக் காப்பு இல்லாதபடி அழித்து உணவைக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை என்றும், கல்லினால் அழித்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை என்றும் பொருள். கல்லினால் அழிக்கப்படும்போது காப்பு இல்லாத தன்மை 'கல்-ஈ-கா-இல்-அம்' (கலிகாலம்)

கல்ஈஊகாம் ஆரம்பமானவுடன் மனிதர்கள் துவாபாரை—அதாவது, உணவு வருகின்ற இடங்களை விட்டு—உணவு இருக்கின்ற இடங்களைத் தேடி ஓடினார்கள்.

'சூ' என்றால் விரட்டுதல். 'சூ' என்று விரட்டப்படுகிற உணவு 'சூ-து' (சூது). 'வா' என்றால் பாய்தல். பாட்கிற உணவு 'ா-து' (வாது) 'போ' என்றால் போகுதல். போய் அழிக்கப்படுவது 'போ-ஈ' (போய்) வன்மையுடன் சாகடிக்கும் தன்மை, 'வண்-சா-அம்' (வஞ்சம்) வல்லமையுடன் அழிப்பது 'வல்-ஈ' (வலி). விரைந்து சாகடிக்கும் தன்மை 'வி-சா-அம்' (விஷம்)

ஆகவே கலி ஊகாத்தில், சூது, வாது, போய், வஞ்சம், வலி, விஷம் முதலிய தன்மைகளை மனிதர்கள் பெற்றார்கள். அதாவது, மிருகங்களுக்காகக் காத்திருக்கும் பழக்கத்தைவிட்டு, தாமாகச் சென்று, கல்லினால் அடித்துக் கொலை செய்து உணவைக் கொண்டு வருகிறவர்களாக ஆனார்கள். முதல் தரமான வேடர்களாக மாறிவிட்டார்கள். மிருகங்களிடம் இல்லாத தந்திரங்களையும் மிருகங்களை வஞ்சிக்கும் குணத்தையும், மிருகங்களைப் பகைக்கும் சுபாவத்தையும் பெற்றார்கள்.

க்இர்எதாஊகாஅம், தீஇர்எதாஊகாஅம், — இவ்விரண்டு காலத்திலும் அவர்களுக்குப் பிரதான உணவு க்னிர்கள், காய்கனிகள்.

துவாபார்ஊகாஅம்—இதில் நண்டு, நத்தை, ஆமை பிரதான உணவு.

கல்சஊகாஅம்—இதில் மிருகங்களும் மீனும் பிரதான உணவு.

முந்திய "உகாஅம்"களில் மிருகங்களை வஞ்சிக்கவில்லை. கடைசி "ஊகாஅம்" வஞ்சனை மிகுந்ததாயிற்று.

இ-தீ-கா-சா-அம் †

அடுத்தபடியாக, அக்கால மனிதர்கள் உண்டாக்கிய வேறு சில சொற்களையும், அந்தச் சொற்களுக்குக் காரணமான சூழ்நிலைமைகளையும், அச்சொற்களின் பொருள்களையும் சிறிது கவனிப்போம்.

மரங்களில் வசித்தபோதும், பிறகு தரையில் வசிக்க ஆரம்பித்தபோதும், அவர்களின் பார்வையில் பிரதானமாக இருந்த இயற்கைத் தோற்றங்களை இப்போது எடுத்துக் கொள்வோம்.

முதலாவதாக, மீண்டும் தீயையே எடுத்துக் கொள்வோம். உலகம் தோன்றியதே தீயிலிருந்துதான். ஆகவே, அது தோன்றிய காலம் முதல் இன்றுவரை ஏதோ ஒரு விதத்தில் உலகத்தின் மேல்பரப்பிலும் உள்பரப்பிலும் இயங்கிகொண்டே இருக்கிறது.

மூங்கில் புதர்களில் கர்ஷணத்தினால் தீ உண்டாயிற்று. இதுதான் 'வே-தீ' (மூங்கில் தீ). இதுவே 'வேய்-

† இ-தீ-கா-சா-அம்: இங்கு தீ காக்கின்ற சாகடிக்கின்ற தன்மை. [இ: இங்கு: இவ்வுலகில்; தீ: நெருப்பு; கா: காக்கின்ற; சா: சாகடிக்கின்ற; அம்: தன்மை]

தா'. [மூங்கிலில் தாவுவது] மூங்கில்புதரில் அது தாவுகிற தன்மை, 'வேய்-தா-அம்.

இந்தத் தீ என்ன காரணத்தினால் தாவுகிறது? மிருகங்களைச் சாகடிக்கும் பொருட்டு மூங்கில் புதர்களில் தாவுவதாக அவர்கள் கருதினார்கள். இதனால் 'சா-மா-வேய்-தா' என்று இதைக் குறிப்பிட்டனர். சாகடிக்க (சா) மிருகங்களின் (மா) மூங்கில்களில் (வேய்) தாவுவது (தா). இதுவே, 'வேய்-தா-அன்' (வேதன்). இந்தத் தீ, மூங்கில் புதரில் பாய்ந்தவுடன் என்ன செய்கிறது? சுவாலையாகிய நாக்கை நீட்டுகிறது. மிருகங்களை ஓட விடாமல் சூழ்ந்து கட்டுகிறது. ஆகவே, இது 'வேய்-தா-நா-யா-அன்' (வேதநாயன்). ஒரு இடத்தில் மூங்கில் தீ எரிந்தால், அந்தப் பக்கத்தை, 'வேய்-தீ-கை' (வேதிகை) என்று குறிப்பிட்டார்கள்.

தீப் பிடித்து எரிகிறபோது, ஈக்கள் அதன்பேரில் விழுந்து சாகின்றன. ஈக்களைச்சாகடிக்கும் தீ 'ஈ-சா-அன்' (ஈசன்). இந்தத் தீ அழிப்பதில் சோர்வடைவதில்லை. இதனாலும் இது 'ஈ-சா-அன்'. ஈக்கள் அந்தத் தீயில் போய் விழுகிறபோது, 'விர்' என்று பறந்து, நேராகப் போய் விழுந்து மடிகின்றன. இதனால் அது 'ஈ-தி'!. இது போல் நேராகப் போய் தாக்கும் கூரியதடி, 'ஈட்டி' எனப்பட்டது.

மிருகங்களின் காப்பிடங்களைப் புசிக்கப் பாய்ந்த தீ, 'பா-கா-தே-வா'. இறைச்சியையுடைய மிருகங்களைப் புசிக்கப் பாய்ந்த தீ, 'ஊ-மா-தே-வா'. மிகுவதிலும் சூழ்வதிலும் சிறப்புடைய சாவாக அது வருவதினால் அது 'பரி-மே-சா'. அழிப்பதிலும் சுவாலையை நெளியவிட்டு ஆடுவதிலும் அது பாம்பு போல் இருந்ததனால், அது 'அர-அன்' (அரன்)

பூமியில் எரிந்த தீ, 'கூ-தீ' அல்லது 'கு-தீ'. பூமியில் மின்னலாகத் தாவிய தீ, 'கூ-தா-தீ' அல்லது 'கு-தா-தீ' அல்லது கு-தா அல்லது கூ-தா.

மின்னல் பூமியில் தாவித் தகர்த்தது. இடித்தது. இடித்து மின்னியது. ஆகவே அது 'கூ-தா-இடி' (கூத்தாடி). அல்லது 'கூ-தா-அன்' [கூத்தன்].

மின்னல் தீ மட்டுமல்ல; ஒளியுமாகும். தீயாகவும் ஒளியாகவும் தாவுவது, 'தீ-சீ-தா' (தீக்ஷிதா)

ஒளியாகத் தாவுவது 'சீ-தா'. அதுவே 'சீ-வா'. இதையே 'தா-சீ' (தாவுகிற ஒளி) என்றும், 'வா-சீ' (பாய்கிற ஒளி) என்றும், 'கூ-சீ' (பூமி ஒளி) என்றும், 'தா-தீ' (தாவுகிற தீ) என்றும், 'வா-தீ' (பாய்கிற தீ) என்றும் 'சீ-தீ' [ஒளியுடைய தீ] என்றும் சொல்லலாம்.

மழை பெய்கிறபோது மின்னல் தோன்றுகிறது. அப்போது பூமி ஈரமாக இருக்கிறது. பாப்பின (பா) ஈரத்தை (ஈர்) 'பா-ஈர்' என்று சொல்லலாம். இது குறுகுகிறபோது 'பார்' என்று ஆகிறது. இதற்கு ஈரமான பூமி என்று பொருள். பாரில் தாவுகிறத் தீ 'பார்-வா-தீ'

தீ வெண்மையான ஒளி வடிவாகவும், சிகப்பான ஒளி வடிவாகவும் இருக்கிறது. வெண்மையான ஒளிக்கு 'சீ' என்ருல், சிவந்த ஒளிக்கு 'சே' என்று பெயர். சிகப்பு நிறத்தில் ஓடுகிற தீ, 'சே-ஓ-அன்' (சேயோன்) வெண்மை நிறத்தில் பாய்கிற தீ, 'சீ-வா-அன்' (சிவன்)

ஒளியை அலங்காரமாகத் தரித்திருக்கிறது தீ. இதனுல் அது, 'சீ-தை'.

ஒளி இனிமையானது. காப்பாற்றுவது. இதனுல் ஒளியை வடிக்கின்ற தீ "சீ-இன்-கா-அன்" [சிங்கன்] ஒளி இனிமையை தந்து காக்கின்ற தன்மை "சீ-இன்-கா-அம் [சிங்கம்.]

பா-இரி-தீ †

தீயில் உண்டாகுகிற வெளிச்சம் பூமிக்கு சூரியனி லிருந்தும், சந்திரனிலிருந்தும், நக்ஷத்திரங்களிலிருந்தும் வருகின்றது. தீயில் இருக்கிற சூடு, சூரிய வெளிச்சத் திலும் இருக்கிறது. ஆகவே அவை எல்லாம் தீயின் அம்சங்களே.

சூரியனுக்கு என்னென்ன பெயர்களை அத்தன்மை யிலிருந்து வைக்கமுடியும்?

நிலப்பரப்பில் (பா) வடிந்த (இரி) தீயாதலால் அது, 'பா-இரி-தீ'(பரிதி). வெப்பமுடையதீயாதலால் "வெய்-தீ".

அது சூட்டை (சூடு) வடித்த (இரி) வனாதலால், 'சூடு-இரி-அன்'.

அது வெண்மையான தீயை உடையவனாதலால் 'வெண்-தீ-அன்' (வென்றியன்).

அந்தச் சூரியனில் தீயை உண்டாக்குவதற்கு மூங் கில்கள் எரிக்கப் படவில்லை. மேலும் அது ஒரு குறிப் பிட்ட இடத்தில் நிற்காமல், கிழக்கிலிருந்து மேற்கே ஓடு கிறது. ஆகவே, மூங்கில்கள் (வேய்) இல்லாமல் (இல்) ஓடுகிறவன் (ஓ-அன்) என்பதனால், அது 'வேய்-இல்-ஓ-அன்' (வெயிலோன்)

நிலப்பரப்பில் காப்பான தங்குமிடம் எதுவும் அந்தச் சூரியனுக்கு இல்லை. ஆகவே, அது 'பா-கா-இல்-அன்' (பகலன்)

---

† பா-இரி-தீ: நிலப்பரப்பில் வடிகின்ற தீ. [பா: நிலப்பரப்பு; இரி: வடிதல்; தீ: நெருப்பு]

'ஞ் அ' என்று கத்துகிற மிருகம் 'ஞ்அமா'. இந்த மிருகத்தை இல்லாதவாறு [இல்] அழிக்கிறது [ஈ] 'ஞமா இல்ஈ' [ஞமலி]. ஞமலி என்றால் நாய். ஞமா என்றால் பூனை. ஞமாவின் கண்களில் இரவு நேரத்தில் வெளிச்சம் தெரிகிறது. வெளிச்சம் சூரியனின் அம்சம். ஆகவே, சூரியன் ஞமாவின் கண்களில் இருக்கிறது. இதனால் சூரியனுக்கு 'ஞ்அஇரு' [ஞாயிறு] என்று பெயர்.

பகலில் சூரியனை மிகவும் கவனமாகப் பார்த்து வந்தவர்கள், இரவு நேரங்களில், திறந்தவெளிகளிலும், மரக்கிளைகளிலும் உறங்கியபோது, வானத்தை அண்ணாந்து பார்த்து வந்தனர். தூக்கம் வாராதபோதெல்லாம், இரவில் வானத்திலிருந்த சந்திரனும், நக்ஷத்திரங்களும்தான் அவர்களுக்கு பயத்தைப் போக்கி வந்தன. அவை இல்லையென்றால், கொடூரமான காட்டு இருட்டில் வாழ்வது பெருந்துன்பமாக இருக்கும்.

சா-இன்-தீ †

மரங்களிலிருந்த காலத்திலும், தரையில் வசிக்க ஆரம்பித்த பிறகும், வானமண்டலத்தை நாள் விடாமல் இரவில் கவனித்து வந்தவர்கள், எப்படியெப்படி கருத்துக்களை உருவாக்கியிருப்பார்கள் என்று பார்க்கலாம்.

சந்திரன் காட்டுத் தீயைப்போல் எரித்து சாம்பலாக்குவதோ அல்லது சூரியனைப் போல் தகிப்பதோ அல்ல. சந்திரனுடைய ஒளி இரவின் அச்சத்தை நீக்கியது. சோர்வை ஒழித்தது. இனிமையை அளித்தது. மிருகங்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள உதவியது. இருட்டின் கொடூரத்திலிருந்து காப்பாற்றியது. மனி

---

† சா-இன் தீ: சோர்விலே இனிய தீ. [சா: சோர்வு; இன்: இனிமை; தீ: நெருப்பு]

தர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. மிகவும் அழகாக இருந்தது.

ஆகவே, அது 'தி-இன்-கா-அள்' [திங்கள்]—தீயில் இனிமையானது; காப்பாற்றுவது, உள்ளத்தை அள்ளுவது.

இனிமையான தீயை வடிக்கிறவன். ஆகவே, 'இன்-தீ-இரி—அன்' [இந்திரியன்]

சோர்வை நீக்கி இனிமை தருகிற தீ. ஆகவே, 'சா-இன்-தீ—இரி-அன்' [சாந்திரியன்] அல்லது 'சா-இன்—தி' [சாந்தி]

மிருகங்களுக்கு இனிமை தருகிற தீ. ஆதலின், 'மா—இன்—தி' [மாந்தி] மிருகங்களுக்கு இனிய தீயை வடிப்பவன். ஆகவே, 'மா-இன்-தீ—இரி-அன்' [மாந்திரியன்] இந்தத் தன்மை 'மா-இன்-தீ-இரி-அம்".

இரவில் குகையைவிட்டு வெளியே வந்து துணிச்லுடன் நிற்பதற்குத் தூண்டிய அழகு. ஆகவே, அது நில்—அ' [நிலா]

அழகிய நிறத்தையுடைய தீ. ஆகவே அது, 'அ—மை—தி'

'அ-மை-தி'யும், 'சா—இன்—தி'யும் பரவிய இடத்தில் இனிமையும் மகிழ்ச்சியும் காணப்பட்டது.

சோர்விலே இனிமையைத் தருகிறதனால், அது 'சா-இன்-தா' [சாந்தா]

சோர்விலே இனிமையைத் தரும் தீ வடிகின்ற பக்கங்கள் எல்லாம், 'சா-இன்—தி—இரி—கை '[சாந்திரிகை]

சந்திரன் மேகங்கள் இல்லாதபோது பிரகாசிக்கிற சமயத்தில், அதைச்சுற்றியும் பாம்பு போன்ற உருவமுடைய ஒளி கோட்டையைக் கட்டியிருக்கும். அந்தக் கோட்டை மிகவும் இனிமையாக இருக்கும். அது சோர்விலே இனிமை தரும் தீப்பாம்பு. ஆதலால் "சா- இன்-தீ-அரா" [சந்திரா.]

இந்தத் தீ மனிதர்களைக் காப்பாற்றும் இனிய தீயாதலால், 'கா—இன்- தீ' [காந்தி]

இது மிகுதியாக இனிமை தந்த தீயாதலால், 'ந-இன்-தீ' [நந்தி]

அழகும் இனிமையும் உடைய தீயாதலால், இது 'அ—இன்—தீ' (அந்தி); 'பூ-இன்—தீ' (பூந்தி)—மேலான தீயாதலால், 'மே-தீ'; 'மீ-தீ' (மீதீ). நேசமாக இருக்கும் தீயாதலால் 'நே—இர்- தீ'.

அந்த ஒளியில் சோர்வு இல்லை: சாவு இல்லை. ஆகவே' அந்த ஒளி மறைவதற்குள் வேட்டையாடலாம். அல்லது இருப்பிடத்திற்கு விரைந்து சென்று விடலாம். ஆகவே, அது, 'சா-இல்- தீ' (சல்தீ)

சல்தீயில் வேட்டையாடி விரைகிற போதும், சல்தீயில் வேலையை முடிக்க அவசரப்படுகிற போதும், 'சா-இல் தீ—போ!' என்றும், 'சா- இல்—தீ-வா!' என்றும் அவர்கள் பேசியிருப்பார்கள் அல்லவா?

அந்தக் காலத்தில் இரவுகளில் சந்திரனைப்போல் இனிமை தந்தது வேறு எதுவுமே இல்லை என்று சொல்லலாம். சந்திரன் இல்லாதபோது மிருகங்கள் அவர்களிடம் வந்து இகழ்ந்தன. அவர்களுக்கு பேரபாயங்கள் உண்டாயின.

சந்திரன் இல்லாத நேரத்தை "அ-மா-வா-சை" என்றார்கள். அங்கு மிருகம் வந்து இகழ்கிறது என்று பொருள். ['சை' என்றால் இகழ்ச்சி.]

சந்திரன் முழுமதியாகப் பிரகாசித்தபோது "பூ-ஈர்-ந-மீ" [பௌர்ணமி] என்றார்கள். அழகையும் குளிர்ச்சியையும் மிகுக்கும் மேன்மையானது என்று பொருள். பூ-ஈர்-ந-அம் [பூர்ணம்] என்றால், அழகையும் குளிர்ச்சியையும் மிகுக்கும் தன்மை.

ந-சீ-தீ-அர-அ-அம் †

சந்திரனுக்கு அடுத்தபடியாக, சந்திரன் இல்லாத சமயத்தில், நக்ஷத்திரங்கள் அச்சத்தைப் போக்கின. இனிமையைத் தந்தன.

எந்தப் பக்கம் திரும்பினாலும் இருட்டு. பயங்கரமான இருள். ஆனால் வானத்தில் மட்டும் வெளிச்சம். ஆயிரம் பதினாயிரக்கணக்கான தீச் சுடர்கள்! வானத்தையே பார்த்துக்கொண்டு படுத்துக் கிடந்தால், பயம் தோன்றாது.

வானத்தைப் பார்த்துக் கிடக்கும் போது, நக்ஷத்திரங்களிடையே ஏற்படுகிற அசைவுகளும், மாறுதல்களும், திடீர் சம்பவங்களும் நன்கு தெரியும். சில நக்ஷத்திரங்கள் ஒரே இடத்தில் இருந்தன. வேறு சில ஊர்ந்து நகர்ந்து சென்றன. இன்னும் சில ஒளி மங்கி மறைந்து போயின. மற்றும் சில திடீரென்று பிரகாசத்துடன் மின்னின. இன்னும் சில திடீரென்று தாவின. தாவிய போது பாம்பு போல் நெளிந்தன; நீளமான வெண்ணிறக் கோடுகளை உண்டாக்கி விட்டு மறைந்தன. அப்படி

† ந-சீ-தீ-அர-அ-அம்: மிகுதியாகவும் ஒளியாகவும் தீயாகவும் பாம்பாகவும் அழகாகவும் இருக்கும் தன்மை. [ந: மிகுதி; சீ: ஒளி; தீ: நெருப்பு; அர: பாம்பு; அ: அழகு: அம்: தன்மை.]

நெளிந்து வந்த விண்கட்டிகளில் சில பூமியில் விழுந்து ஆழமான பள்ளத்தை உண்டாக்கின. சில சமயம் தீயையும் மூட்டின. வேறு சில வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு இடத்தில் உதயமாகி வெவ்வேறு இடத்தில் மறைந்தன.

ஆகவே, ஒவ்வொரு தன்மையாக எடுத்துக் கொண்டு பார்ப்போம்.

பொதுவாக வானமண்டலத்தைப் பற்றி என்ன நினைக்க வேண்டியிருக்கிறது? கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் இருக்கின்றன. அதாவது, மிகுதி [ந]. எல்லாம் ஒளி [சீ] வடிவாக இருக்கின்றன. எல்லாம் தீயின் [தீ] அம்சமானவை. அதே சமயம் பாம்பு போல் [அர] வடிவமெடுத்துப் பாயும் தன்மையுடையவை. அத்தோடு அழகானவை [அ]. அதாவது, 'ந-சீ-தீ-அர-அ-அம்' [ந: மிகுதி ; சீ : ஒளி ; தீ : நெருப்பு ; அர : பாம்பு ; அ : அழகு ; அம் : தன்மை]

'ந-சீ-தீ-அர-அ-அம்' [நக்ஷத்திரம்] என்பது வானமண்டலத்தின் பொதுத் தன்மையைக் குறிக்கிறது.

மிகுதியின் மூலம் [ந] ஒளியையும் [சீ] நெருப்பையும் [தீ] வடிக்கிற தன்மையை 'ந-சீ-த்-திரி-அம்' [நக்ஷத்திரியம்] என்று சொல்லலாம் அல்லவா?

இரவில் அச்சத்தை [வெள்] அழிப்பதனால் [ஈ] அது 'வெள்-ஈ'. திடீரென்று பாய்வதன் மூலம் அச்சத்தை அளிப்பதனால், அது 'வெள்-ஈய்' [வெள்ளி]

அது மேலே [மீ] இருக்கின்ற இனிமையாதலால், 'மீ-இன்'.

அது திடீரென்று ஒளிக் கோட்டைக் கிழித்துத் தாவுகிற பாம்பு போல் இருப்பதனால், 'தா-அரா' [தாரா]

எந்தப் பக்கத்தில் அது போன்ற ஒளிப்பாம்பு தாவுகிறதோ, அந்தப் பக்கம் 'தா—அரா—கை' [தாரகை]

பாம்புபோல் நெளிகிற ஒளி, 'அரா-சி' [ராசி]

அது தாவுகிற ஒளியாதலால், 'தா—சி'.

பாம்பு ஒளியையும் இனிமையையும் உடைய பரப்பு, 'அரா—இன்—பா' [ரம்பா]

பாய்ந்து நெளியாமல், வான வீதியில் மெதுவாக ஊர்ந்து வருகிற ஒளி 'ஊர்—வா—சி' [ஊர்வசி]

ஊர்ந்து வருகிற ஒளி, திடீரென்று தாவிய ஒளியாக மாறியபோது, அல்லது அவ்விடத்தில் தாவிய ஒளி தென்பட்ட போது, 'ஊர்—வா—சி—தா—சி' [ஊர்வசி தாசி] என்று அக்காலத்தவர்கள் கத்தினார்கள். ஊர்ந்த ஒளி, தாவிய ஒளியாகி விட்டது என்று பொருள்.

நக்ஷத்திரங்கள் சில இடங்களில் எட்டியெட்டியும், வேறு சில இடங்களில் மிக மிக நெருங்கியும் இருக்கின்றன. மிகுந்த கூட்டமாக இருக்கிற பக்கங்களை எப்படி குறிப்பிடுவது? 'மே—ந—கை' என்று குறிப்பிட்டார்கள். மேலே மிகுதியாக இருக்கும் பக்கம் என்று பொருள்.

சில ஒளி வீசிக் கொண்டு இருக்கிற போதே மங்குகின்றன. தீ இல்லாத பொருளைப் போல் அணைந்து விடுகின்றன. தீ இல்லாததனால் அவை ஒட்டம் பிடித்து திடீரென்று தாவி மறைகிற திறத்தைப் பெற்று விடுகின்றன என்று கருதினார்கள். ஆகவே, அவ்விதம் ஓடி தாவிப் போகப் போகிற திறத்தை, 'தி—இல்—ஓ—தா—மை' [திலோத்தமை] என்றார்கள். இந்த நக்ஷத்திரங்கள் மேலே இனிமை இல்லாது ஓடுகின்ற ஒளியாதலால், அவற்

றைப் பார்த்தபோது, மீ! இன்! இல்! ஓ'சி! நீ! [மீன லோசினி] என்று சொல்லிச் சிரித்தார்கள். [மேலே இனிமை இல்லாது ஓடுகின்ற ஒளி நீ]

பாம்பு போல் ஒளிக் கோடு கிழித்துக் கொண்டு தாவியத் தீ, மின்னல் போல் கண்ணைக் கெடுக்கும் தன்மை யுடையது அல்ல. இனிமையான தீயாகவும் பாம்பு வடி வமாகவும் இருந்தது. ஆகவே அதை, 'இன்—தீ—அரா' [இந்திரா] என்றார்கள்.

இன்தீஅரா, பூமிக்கு இனிமையை அளித்தபோது, 'இன்-தீ-அரா-இன்-ஈய்' [இந்திராணீ] என்று சொல்லப் பட்டது.

பாய்கின்ற ஒளிப் பாம்பின் தன்மையே, 'வா-சி-அரா அம்' [வஜ்ஜிரம்]

ஆங்கேயிருந்து [விண்ணிலிருந்து] அழிப்பதற்காக [ஈ] ஈங்கே [பூமிக்கு]தாவுகிற தன்மையே 'ஆ-ஈ-தா-அம்' [ஆயிதம்.]

'வாசீஅராஅம்' என்பது 'ஆஈதாஅம்' ஆக இருக் கிறது.

அல்-பா †

இது வரை நாம் பார்த்தவைத் தீயின் பரப்புகள். தீயின் பரப்பை 'தீ-பா' என்று சொல்லலாம். அல்லது 'சீ-பா' என்றால் ஒளியின் பரப்பு. இதைத் தொடர்ந்து 'அல்-பா'வையும், அதாவது இருட்டின் பரப்பையும் பார்ப்போம்.

† அல்-பா: இருட்டின் பரப்பு.

'தீ-பா', 'சீ-பா' களுக்கு மறுபக்கம் 'அல்-பா'

இருத்துவது இருட்டு.

எங்கு வெளிச்சம் இல்லையோ, அங்கு இருட்டு இருக்கிறது. அது இருக்கிற இடத்தில் அழகு இல்லை. இதனால் அது 'அ-இல்' [அல்]

அது ஒவ்வொரு பொருளின் உள் பரப்பிலும் இருக்கிறது. உடம்பின் மேல் வெளிச்சம் இருக்கிறபோது, உடம்பின் உள்ளே இருட்டு இருக்கிறது. ஆகவே அது 'இர்-உள்' [இருள்]

இருட்டில் எதுவும் தெரிவதில்லை. ஒரு மிருகம் எதிரே நின்று கொண்டு இருக்கும். ஆனால் அதை இல்லை என்று நினைக்கும்படியாக இருட்டு மறைத்து விடும். இருக்கிற மிருகத்தை இல்லாததாக ஆக்கு வதனால் அது, 'மா-இல்' [மால்]. மேலும், மிருகமல்ல என்ற உணர்ச்சியைத் தூண்டுவதனால் அது "மா-அல்" [மால்]. இருக்கிற மிருகத்தை இல்லாததாகத் தோன்றச் செய்கிற தன்மை மனிதனுக்கு மயக்கமாக இருக்கிறது. இவ்விதம் மயக்கத்தை உண்டாக்கும் இருட்டு, தரையி லிருந்து வானம்வரை வியாபித்து, நீண்ட நெடுந்தூரத் திற்கு உயர்ந்து இருக்கிறது. இதனால் அது "நெடு-மால்"

இருட்டில் கண் தெரிவதில்லையாதலால், அரண்டவர் களின் கண்களுக்குப் பேய் உருவங்கள் தென்படு கின்றன. பேய் என்று நினைத்து அரளும்படி மயக்கத்தை அது உண்டாக்குகிறது. இதனால் அது, "பே-உரு-மால்" [பெருமாள்]

இருட்டு காப்போடு வசிக்க முடியாதபடி அச்சத்தை உண்டாக்குகிறது. காப்பைக் கெடுக்கும் தன்மையே அதன் நிறம். இதனால் அது "கா-இரி-மை" [கரிமை]

காப்பைக் கெடுக்கிற நிறத்துடன் மனிதர்களை தன் வசப்படுத்துவதற்கு இருட்டு திடீரென்று பாய்ந்து சூழ்கிறது. இதனால் அது "கா-இரி-மை-தே-வா-அன்" [கரிமை தேவன்]

இருட்டு அழகைக் கெடுக்கிறது. இதனால் அது "அ-இரி" [அரி]

இருட்டு "ஆ" என்று அலறச் செய்யும் நிறத்தை யுடையது. இதனால் அது "ஆ-மை"

இருட்டு மிருகங்களை நடமாட முடியாதபடி கட்டுண்டு கிடக்கச் செய்வதற்காக வெகு விரைவாக வரும் தன்மையுடையது. இதனால் அது "மா-யா-வி" [மாயாவி].

மிருகங்களுக்கு சந்தேகத்தை உண்டாக்குவது இருட்டு. இதனால் அது "மா-ஐ-அன்" [மாயன்.]

ஒரு மிருகம் வந்துகொண்டிருக்கிறபோதே இருட்டு திடீரென்று மிருகிறது. மிதுவதன் மூலம் மிருகத்தின்பேரில் தாவுகிறது. இவ்விதம் மிருகத்தைக் கெடுக்கிறது. தோற்கடிக்கிறது. ஆகவே அது "வா-மா-ந-தா-இரி" [வாமனாதாரி.]

இருட்டு 'க்இர்' என்று தலைச்சுற்றும் வண்ணம் மயக்கத்தை உண்டாக்குகிறது. இவ்விதம் தாவி மிருகத்தை தோற்கடிக்கிறது. ஆகவே அது "க்இர்—சய்—தா—இரி" [கிரிதாரி]

மிருகங்கள் காப்பான இடத்தில் இருக்கிறபோது, இருட்டு விரைந்து சூழ்கிறது. மிருகங்களைக் கட்டுகிறது. மனம் நோகும்படி செய்கிறது. இவ்விதம் செய்யும் இருட்டின் நிறம் எள், யானை ஆகியவற்றின் நிறம். ஆகவே அது, "மா-கா-வி-இசி-ணு" [மகாவிஷ்ணு]

'மா-கா-வி-சு-நா' [மகாவிஷ்ணு] என்றால் மிருகங்களைக் காப்பாற்ற விரையும் மங்கலகரமான கறுப்பு நிழல் என்றும் சொல்லலாம். இது, அது கறுப்பு மேகமாக வரும் தன்மையைக் குறிக்கிறது.

இருட்டு கறுப்பு நிறமுடையது. 'க்இர்' என்று மயக்கம் வரச் செய்வது. இந்த மயக்கத்தில் சோர்வை மிகச் செய்கிறது. சிலசமயம் சாவையும் உண்டாக்குகிறது. ஆகவே அது 'க்இர்-சா-ந-அம்' (கிர்ஷ்ணம்)—க்இர் என்று மயக்கமூட்டிச் சோர்வை மிகுக்கும் தன்மை என்று பொருள்.

இருட்டில் கண்ணுக்கு வேலையில்லையாதலால், மூக்கைக் கொண்டு மோப்பம் பிடித்து, நேரக்கூடிய அபாயங்களிலிருந்து மிருகங்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மிகுதியாக (ந) மோப்பம் (மோ) பிடித்தால், மிகுதியாக (ந) மிருகங்களைக் (மா) காப்பாற்றலாம் அல்லது மிருகங்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளலாம் (கா). ஆகவே அது, "ந-மோ-ந-மா-கா"

இருட்டில் நடக்கிறபோது எதன் பேரிலாவது முட்டிக் கொள்கிறோம். தடுக்கி விழுகிறோம். விழுந்து அலறுகிறபோது எதிரொலி கேட்கிறது. அது மிகவும் பயங்கரமாக இருப்பதோடல்லாமல், நம் நிலையைப் பார்த்து இகழ்ந்து சிரிப்பதாகவும் இருக்கிறது. "ஆ" என்ற அலறலைப் பார்த்து இகழ்ந்து சிரிக்கிறபடியால், அது "ஆ-இழி-அன்" (ஆழியன்).

இத்தகைய பயங்கர இருட்டு, தீயினால் அறுக்கப்படுகிறது. உருவமற்றதாக ஆக்கப்படுகிறது. அது தீயினால் அறுக்கப்படுகிற மயக்கம். இதனால் அது "தீ-அறு-மால்" அல்லது "தீ-அரு-மால்" (திருமால்)

ஒளி தாவுகிற பரப்பிலே இருட்டு தீய்க்கப்படுகிறது. இதனால் அது "சி-தா-பா-தி". இதனாலேயே அது "சி-பா-தி" [சிபதி]. ஒளி தாவ அறுக்கப் படுகிறவனாதலால் "சி-தா-அரு-அன்" [ஸ்ரீதரன்]. சிகப்பு நிற ஒளி உண்டாகிறபோது, அந்த இடத்தில் இல்லாதவாறு இருட்டு பாய்ந்து மறைந்து விடுகிறது. இதனால் அது "சே-இல்-வா-அன்" [சேல்வன்]

கம்-பா-அன் †

இத்தகைய குணங்களையுடைய இருட்டு, கடல், ஏரி, குளம், ஆறு முதலியவற்றின் அடி ஆழத்திலும், படு பாதாளங்களிலும் நிரந்தரமாகக் குடி கொண்டு இருக்கிறது. இதனால் அது "ஆழி-அன்" [ஆழியன்]

நீர் பரப்பில் அது வசிப்பதனால், 'கம்-பா-அன்' (கம்பன்).

படு பாதாளங்களில் வசிக்கிற போதே, இந்த இருட்டு, விண்ணில் சஞ்சரிக்கும் மேகங்களுக்குத் தன்னுடைய நிறத்தைக் கொடுத்து அழகுபடுத்துகிறது. வெண்ணிற மேகங்களை வண்மையுடைய கருமேகங்களாக ஆக்குகிறது. இதனால் அது "கார்-வண்-அன்" [கார் வண்ணன்]

இருட்டு வசிக்க இடமளிக்கிற நீர், தீயினால் பகைக்கப் படுவதனால், இருட்டின் மறு வடிவமே நீர் என்று அக்காலத்தவர்கள் கருதினார்கள்.

---

† கம்-பா-அன் : நீர் பரப்பில் உள்ளவன்—நீருக்கு அடியிலுள்ள இருட்டு. [கம் : நீர் ; பா : பரப்பு ; அன் : ஆண்பால் விகுதி.]

இந்த நீர் காப்பாற்றும் தன்மையுடையதாகையால், "கா-அம்" [கம்]. இது மேலே விண்ணில் வருகிறபோது, "மே-கம்". அது காப்பாற்றும் ஈரத்தையுடையதாகையால், "கா-ஈர்" [கார்]. அது பூமிக்கு வருகிற இனிமையாத லால், "வா-இன்" [வான்]. அது மேலே இருக்கும் இனிமையாதலால் 'மீ-இன்' (மீன்). அது மிருகங்களில் வடிகிறதனுல் 'மா-இரி' (மாரி). அது சாவு இல்லாத தன்மையை உண்டாக்குவதனுல் 'சா-இல்-அம்' (சலம்). பூமியில் ஈரவடிவில் மிருகங்களுக்கு அது இனிமையாக இருப்பதனுல், 'கூ-ஈர்-மா-இன்' (கூர்மன்). மேகங்கள் விண்ணில் மிகுந்து சூரியனை மறைக்கிறபோது வெப்பம் குறைகிறது. வெப்பமாகிய தீ, பூமியிலுள்ளவர்களுக்கு கொடூரமற்றதாகி, இனிய தீயாக மாறிவிடுகிறது. இனிய தன்மையுடன் வடிகின்றது. ஆகவே, சூரிய வெப்பத்தைக் குறைத்து இனிய தீயை வடியச் செய்கிற கறுப்பு மேகங் கள், 'இன்-தீ-இரி-அன்' (இந்திரன்).

நீருடன் வசிக்கிற இருட்டு, ஒளியுள்ள இடங்களில் நிழலாக வசிக்கிறது. மிருகங்களுடன் நிழலாக ஒடுகிற இருட்டு, 'மா-ஒ-அன்' (மாயோன்). மூங்கில் புதர்களில் இனிமையாகவும் பாதுகாப்போடும் ஆடிக்கொண்டே இருக் கிற இருட்டு 'வே-இன்-கா-ஆட-அன்' (வேங்கடன்). மூங் கில் புதரில் ஆடுகிற நிழலிருட்டு சோர்வும் சாவுமின்றி ஆடிக்கொண்டே இருக்கிறது. ஆகவே அது, 'வேய்-இன்-கா-ஆட-சா-இல்-அம்' (வெங்கடாசலம்).

நீர் மலையிலிருந்து அருவியாகக் கொட்டுகிறது. கருங் கற்களையெல்லாம் உருட்டி உடைக்கிறது. தூகள் தூக ளாக்குகிறது. மணலாக மாற்றுகிறது. ஆகவே அது, 'கல்-கு-ஈ' (கல்கி)—கல் பூமியை அழிப்பது என்று பொருள்.

சீ-வா-அம், சை-வா-அம்
வை-ந-வா-அம், வை-சா-ந-வா-அம்†

இவ்வித குணாதிசயங்களையுடைய தீயையும் இருட்டையும் குறிப்பதற்கு இரண்டு பொதுப் பெயர்கள் வேண்டாமா?

தீயின் பிரதான தன்மை ஒளியை மிகுப்பது. ஒளியாகப் பாய்வது. ஒளியாகத் தோன்றுவது. ஒளியாக வருவது. எரிந்து அழிக்கிறபோது எல்லாவற்றையும் துச்சமாக மதித்து இகழ்வது.

ஒளியாக வருகிற தன்மையை யுடையதென்று குறிப்பிடுவதென்றால், 'சீ-வா-அம்' (சிவம்) என்றும், எல்லாவற்றையும் துச்சமாக மதித்து இகழும் தன்மையைக் குறிப்பதென்றால் அதைச் 'சை-வா-அம்' (சைவம்) என்றும் சொல்லலாம். 'சை' என்றால் இகழ்வது. இகழ வரும் தன்மை 'சை-வா-அம்.'

இதைப் போலவே, இருட்டின் பிரதான தன்மை, நீர் வடிவத்தில் காப்பாற்ற வருவதாகும். நீரினால் புல் பூண்டுகள் மிகுகின்றன. உலகம் செழிக்கிறது. ஆகவே, புல்லை மிகுக்க வரும் தன்மையுடையது என்பதனால், இதற்கு 'வை-ந-வா-அம்' (வைணவம்) என்று பெயரிடலாம். அதே சமயம், வெளிச்சமும் வெப்பமும் இல்லாது நீரும் இருட்டும் மிக மிக அதிகமாகப் பெருகி

---

† சீ-வா-அம்: ஒளியாக வரும் தன்மை.

சை-வா-அம்: (காட்டுத் தீயாக) இகழ வரும் தன்மை.

வை-ந-வா-அம்: புல்லை மிகுக்க வரும் தன்மை.

வை-சா-ந-வா-அம்: புல்லுக்குச் சாவை மிகுக்க வரும் தன்மை

[சீ: ஒளி; சை: இகழ்ச்சி; வை: புல்; ந: மிகுத்தல்; வா, வருதல்; சா: சாவு.]

விட்டால், புல் பூண்டுகள் அழுகி செத்து விடுகின்றன. இந்தத் தன்மையைக் குறிப்பிட வேண்டுமென்றால், 'வை-சா-ந-வா-அம்' (வைஷ்ணவம்) என்று சொல்லலாம். புல்லைச் சாகடிக்க மிகுந்து வரும் தன்மை என்று பொருள்.

தீயின் கெட்டப் பண்பிற்குப் பெயர் சைவம்.

தீயின் நல்ல பண்பிற்கு பெயர் சிவம்.

நீரின் கெட்டப் பண்பிற்குப் பெயர் வைஷ்ணவம்.

நீரின் நல்ல பண்பிற்கு பெயர் வைணவம்.

சிவம்—வைணவம்: காப்பாற்றும் தன்மை.

சைவம்-வைஷ்ணவம்: அழிக்கும் தன்மை.

தீ, நீர் ஆகியவற்றின் இந்த இயற்கை குணங்களைத் தமிழர்கள் மரங்களில் அரைமனிதர்களாக வசித்தக் காலத்திலிருந்து கவனித்து அறிந்திருந்தார்கள். தீ, சைவமாக ஆனபோது அஞ்சினார்கள்; அலறினார்கள். தீ, சிவமாக இருந்தபோது மகிழ்ந்தார்கள்; போற்றினார்கள். நீர், வைஷ்ணவமாக இருந்த போது அஞ்சினார்கள்; சபித்தார்கள். நீர், வைணவமாக இருந்த போது மகிழ்ந்தார்கள்; போற்றினார்கள்.

காட்டுத் தீ சைவம். இதைக் கண்டபோது அலறி துடித்து ஓடினார்கள். 'மா-கா-தே-வா! ஊ-மா-தே-வா! நீ-சா! நீ-சா-இரி-கா!' என்று அலறினார்கள். கெஞ்சினார்கள். 'மா-பா-வீ. நீ!' என்று சபித்தார்கள்.

விடாது பெய்யும் அடைமழை வைஷ்ணவம். இதைக் கண்டபோது நடுங்கினார்கள். கடுமையான இருட்டும் வைஷ்ணவம். இதைப் பார்த்தபோதும் பயந்தார்கள். "ஜீ! நீ! வா! சா-இரி-கா! க-இரி-மை-தே-வா!

அ-இரி-மை-தே-வா! மா-கா-வி-இசி-நா! நீ-சா! நீ-சா-இரி-கா! மா-பா-வீ-நீ!" என்று துதித்தார்கள்; கெஞ்சினார்கள்; சபித்தார்கள்.

வெதவெதப்பான சூரிய ஒளியும், சந்திரனொளியும் சிவம். இதைப் பார்த்த போது மகிழ்ந்தார்கள். போற்றினார்கள். பாராட்டினார்கள். 'வா! வா! சீ-வா! சே-வா! கா-மீ! அம்-மே!' என்று வாழ்த்தினார்கள்.

மிதமான மழையும், நிழலிருட்டும் வைணவம். இதைப் பார்த்த போது சந்தோஷப் பட்டார்கள். "மா-ஓ-அன்-நே-வா! கார்-மே-கம்-வா! இன்-தீ-இரி-அன்-நே-வா!" என்று விரும்பி அழைத்தார்கள்.

ந,அர,அன் - சீ,இன்,கா,அன்†

இப்போது ஒரு கேள்வி உண்டாகிறது. உலகம் வாழ்வது தீயினாலா அல்லது நீரினாலா? ஒளியினாலா அல்லது இருட்டினாலா?

இரண்டினாலும்தான்!

ஆகவே, இரண்டினாலும் உலகம் வாழ்கிறது என்பதை எவ்விதம் உணர்த்த முடியும்?

அதை உணர்த்துகிற சொல்தான், 'நர-சிங்கன்'.

இருட்டுக்கு, 'ந-அர-அன்', 'ந-அரா-யா-அன்' என்னும் பெயர்கள் உண்டு. இந்தப் பெயர்கள் எப்படி உண்டாயிற்று என்பதை நாம் பாம்புகளைப் பற்றி ஆராய்கிறபோது வேறு ஒரு இடத்தில் கவனிக்கலாம்.

---

† ந-அர-அன் : மிகுதியாக பாம்புகளை உடையவன் [இருட்டு]

சீ-இன்-கா-அன் : ஒளியினால் இனிமையைக் காப்பாற்றுபவன் [வெளிச்சம்]

ந-அர-அன்-சீ-இன்-கா-அன் : நரசிங்கன்.

'ந-அர-அன்' (நரன்) என்றால் மிகுதியாகப் பாம்புகளை யுடையவன். 'ந-அர-யா-அன்' (நாரயண்) என்றால் மிகுகின்ற பாம்புகளால் கட்டுகிறவன். இதுதான் இருட்டு.

'சி-இன்-கா-அன்' (சிங்கன்) என்றால் ஒளிமூலம் இனிமையைக் காப்பாற்றுபவன் என்று பொருள். இது தான் தீயும் அதிலுள்ள ஒளியும்.

ஒரு தூண் இருக்கிறது. அதன் மேல் பரப்பில் ஒளி இருக்கிறது. அதன் உள் பரப்பில் இருட்டு இருக் கிறது. ஆகவே, தூண் என்பது ஒளியா அல்லது இருட்டா? சிங்கனா அல்லது நாராயணனா? சிவனா அல்லது விஷ்ணுவா?

ஒளியுமல்ல; இருட்டுமல்ல. ஆனால் இரண்டும்!

அது நாராயணனுமல்ல; சிவனுமல்ல. ஆனால் நர-சிங்கன்!

சிங்கன் வெளியே இருந்தால் நரன் உள்ளே இருக் கிறான். சிங்கன் மறைகிறபோது நரன் வெளியே வரு கிறான். சிங்கன் தோன்றுகிறபோது, நரன் உள்ளே அடங்கிவிடுகிறான்.

இதுதான் ஒரு தூணில் நாம் பார்க்கிற காட்சி!

இதுதான் ஒவ்வொரு துரும்புவிலும் நாம் காண் கிற காட்சி.

இதுதான் ஒளியும் இருட்டும் ஒன்றிலொன்று அடங்கியதாக உலகத்தில் இயங்கி வரும் காட்சி!

கு-வல்-அம்†

இவ்விதம் ஓசைகளை ஒன்றன்பின் ஒன்றாக வெளிட்டு, கருத்தை உணர்த்தி, ஓசைச் சேர்க்கைகளை (சொற்களை)

† கு-வல்-அம்: பூமியில் வல்லமையுடன் இருக்கும் தன்மை [கு: பூமி: வல்: வல்லமை; அம்: தன்மை] குவலம்—குலம்.

உண்டாக்கிய ஆதித் தமிழர்கள், தம்முடைய சொந்த வாழ்க்கையையும், தம்மைப் பாதித்த மற்ற மிருகங்களின் வாழ்க்கையையும் பிரதிபலித்து எத்தகைய ஓசைச் சேர்க்கைகளை (சொற்களை) உண்டாக்கினார்கள் என்பதை இப்போது பார்க்கலாம்.

காட்டில் எத்தனையோ விதமான மிருகங்கள் வசித்தன. எல்லாம் ஊனை மிருக்கும் ஊனுக்காக —'ஊ-ந-ஊ'க்காகப் போராடி வந்தன.

இந்தப் போராட்டத்தில், ஊனுடைய வேறு மிருகத்தைத் தாக்குவது 'ஆ'. அந்த வேறு மிருகத்தின் தாக்குதலிலிருந்து தம்மைக் காத்துக்கொள்வது 'ஊ'. 'ஆ'வின் தன்மையையும், 'ஊ'வின் தன்மையையும் உள்ளடக்கியிருந்தது போராட்டம் என்கிற 'ஓ'. இந்த 'ஓ' தன்னுள் அடக்கிக் கொண்ட தனித்தன்மையாகிய 'ம்' என்ன என்று ஆராய்ந்தால், அந்த மனிதர்களின் வாழ்க்கை நமக்கு நன்றாகப் புலப்படும்.

அந்த 'ம்' தான் கு(வ)லம்.

அந்தக் காலத்தில் மனிதனுக்கு மட்டுமல்ல; மற்ற எல்லா மிருகங்களுக்கும் திரும்பிய இடமெல்லாம் அபாயங்கள் காத்துக் கொண்டிருந்தன. எந்தத் தனி மனிதனுக்கும் தனித்துக் காட்டில் வசிக்க முடியவில்லை. தனிமையைச் சாவுக்கு முதல் படி என்று சொல்லலாம். தனிமையில் சிக்குகிறவன் கடித்து இழுத்துச் செல்லப்பட்டான்; புசிக்கப்பட்டான். அதேபோல் தனியாக வந்த மிருகம் கடித்துப் புசிக்கப் பட்டது; அடித்துக் கொல்லப்பட்டது. கூட்டமாக வந்த மிருகங்கள் சுலபமாக மற்ற மிருகங்களைத் தாக்கின. 'ஆ'வின் தன்மை கூட்டமாக இருப்பதாக இருந்தது. அதேபோல், கூட்டமாக வந்த மிருகங்கள் சுலபமாக தம்மைக் காப்பாற்றிக் கொண்டன. 'ஊ'வின் தன்மையும் கூட்டமாக இருப்பதாகவே

இருந்தது. ஆகவே தாக்குவதும், காத்துக் கொள் வதும்—'ஆ'வும் 'ஊ'வும்—கூட்டமாக இருப்பதென்ற தன்மையில் (ஒ) அடங்கியிருந்தது. கூட்டமாக வசிப்ப தென்ற 'ஒ'வில் அடங்கியிருக்கும் தனித்தன்மை (ம்), பூமியில் வல்லமையுடன் வாழ்ந்து வருவதென்பதே யாகும்.

அன்றைய மனித சமுதாயத்தின் ஸ்திதி (ஓம்), தாக் குவது, காப்பது என்ற இரண்டின் தன்மைகளையும் உள் ளடக்கிய கூட்டத்தைக் கொண்டு பூமியில் வல்லமை யுடன் இருந்து வருவதேயாகும்.

பூமியில் வல்லமையுடன் இருக்கும் தன்மைதான் 'கு-வல்-அம்' (குலம்)

பூமியில வல்லமையுடன் இருக்கும் தன்மைக்கு மறு பெயர் கூட்டமாக இருப்பது. இதிலிருந்து அக்காலத் தில் வல்லமையுடையவன் கூட்டத்திலிருப்பவன் என்றும், வல்லமையற்றவன் கூட்டத்தில் இல்லாதவன் என்றும் புரிந்து கொள்ளலாம்.

சா-இன்-ந-அம் †

கூட்டமாக இருந்தபோது 'கு(வ)லம்' இருந்த தென்றால், கு(வ)லம் இருந்ததற்கு எற்ப 'கு-ந-அம்' (குணம்) உண்டாயிற்று. 'குநஅம்' என்றால் பூமியில் மிகுகின்ற தன்மை; கூட்டம் பெருகும் தன்மை.

அதாவது, கூட்டம் மிகுதியாக இருந்த போது வல்லமையுடன் வாழ்ந்தார்கள். வல்லமையுடன் வாழ்ந்த

† சா-இன்-ந-அம் : (சனம்) சோர்விலே இனிமையை மிகுக்கும் தன்மை.

போது, மிருகங்களினால் கொல்லப் படுவது குறைந்தது. சாவு குறைந்த போதே, பிள்ளைக் குட்டிகளும் அதிகமாக ஆயின. அந்தக் குழந்தைகளை நன்கு காப்பாற்றவும் முடிந்தது. இவ்விதம் கூட்டம் பெருகியது. இந்தப் பெருக்கம், மேலும் அதிகமாக வல்லமையை உண்டாக்கியது.

குல(வ)லத்தளவே யாகும் குணஅம்.

'குணஅம்' தான் அக்காலத்தில் பிரதானமான காணஅம்' (கணம்). அதாவது காப்பை மிகுக்கும் தன்மை.

'காணஅம்' மூலமும், 'குணஅம்' மூலமும் 'கு(வ)லம்' வளர்ந்த தன்மைதான் அக்காலத்தில் 'பாணஅம்' (பணம்) அதாவது, பாதுகாப்பை அல்லது காப்பை மிகுக்கும் தன்மை.

'கு(வ)லம்' இல்லை என்றால் 'குணஅம்' இல்லை. 'காணஅம்' இல்லை. 'பாணஅம்' இல்லை.

அதோடு, 'சா-இன்-ந-அம்' இல்லை. 'சா-இன்-ந-தா' இல்லை; 'இன்-ந-அம்' இல்லை; 'தா-ந-அம்' இல்லை.

'சா-இன்-ந-அம்' (சனம்) என்றால், சோர்விலே இனிமையை மிகுக்கும் தன்மை. தனி மனிதனுக்கு அக்காலத்தில் திரும்பிய இடமெல்லாம் அபாயமாக இருந்ததனால், தனிமையில் சாவு ஏற்பட்டது; சோர்வு உண்டாயிற்று; அலுப்பு தட்டிற்று; பீதி உண்டாயிற்று. தனிமையில் சோர்ந்து வாடியவன், மனிதக் கூட்டத்தைக் கண்டவுடன் இனிமையைக் கண்டான். அவனுடைய இன்பம் மிகுந்தது. ஆகவே, கூட்டமாக வாழும் தன்மையே சோர்வில் இனிமையை மிகுக்கும் தன்மையுடையது. சோர்விலே இனிமையை மிகுக்கும் கூட்டமே 'சனம்'. சோர்விலே இனிமையை மிகுத்துத் தருகிறவர்கள் 'சனதா'—(சா-இன்-ந-தா).

"சா-இன்" என்பது "சன்" என்று குறுகி விடுகிறது. வேற்று இனத்தினரின் நாக்கில் "ஜன்" என்று ஒலிக்கிறது. "சன்" என்றாலும் "ஜன்" என்றாலும் "ஜென்" என்றாலும் சோர்விலே இனிமை அளிப்பது என்றே பொருள்.

கூட்டமாகச் சேர்ந்து வசிக்கும் தன்மையே இனிமையை மிகுக்கும் தன்மை. அதுதான் 'இன்-ந-அம்' (இனம்). கூட்டமாகச் சேர்ந்து வசிக்கும் தன்மையே 'கொடுத்தலை' மிகுக்கும் தன்மை; 'வலிமையை' மிகுக்கும் தன்மை; இதுதான் 'தா-ந-அம்' (தனம் அல்லது தானம்) —இங்கு 'தா' என்றால் தருதல்; வலிமை.

ஆகவே, அக்காலத்தில் 'கு(வ)லம்' தான் குநஅம்; காநஅம்; பாநஅம்; சாஇன்நஅம்; சாஇன்நதா; இன்நஅம்; தாநஅம். (குணம்; கணம்; பணம்; சனம்; சனதா; இனம்; தனம்; தானம்).

'கு(வ)லம்' என்ற பொதுத் தன்மையில் அடங்கியிருந்த இந்தப் பல்வேறு தன்மைகளையும் தனித்தனியே இப்போது கவனிக்கலாம்.

கு-ந-அம்†

'குநஅம்' என்று சொல்லப்பட்ட, பூமியில் மிகுகிற தன்மையில், இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று சாவைக் குறைத்துக் கொள்வது மற்றொன்று குழந்தைகளை அதிகமாகப் பெறுவது.

சாவைக் குறைத்துக் கொள்வது, காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மையாகிய 'காநஅம்' என்பதைப் பொறுத்

† கு-ந-அம்: பூமியில் மிகுகிற தன்மை.

திருக்கிறது. 'கணம்' சரியாக இருந்தால் சாவு குறையும்; சாவு உண்டாவதும், உண்டாகாமல் இருப்பதும் 'கணத்' தைப் பொறுத்திருக்கிறது. இந்த அம்சத்தில், 'கணத்' தின் தன்மையைப் பொறுத்தது 'குநஅம்'

குழந்தைகளை அதிகமாகப் பெறுவதென்பது, பெண் பூவின் பண்பையும் (பூ—பு=பூப்பு), ஆணிடம் ஈடு இணையில்லாத இன்பத்தைத் தரும் நீர் (இல்-இன்-கம்) சுரப்பதன் தன்மையையும் பொறுத்திருந்தது. அதாவது, இந்திரிய நீரின் ஓடும் தன்மை—இலிங்கத்தின் 'ஓம்'—அதை நிச்சயித்தது. இந்த விஷயத்தை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விவரமாக கவனிக்கலாம். எனினும், இல்இன்கம் வண்நகாஅம் (இலிங்க வணக்கம்) எந்த அளவுக்கு இருந்ததோ, அந்த அளவுக்கு 'குநஅம்' இருந்தது. அதாவது, ஈடு இணையில்லாது இன்பமளிக்கும் நீர் வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மையின் அளவைப் பொறுத்திருந்தது பூமியில் மிகுகின்ற தன்மை. வண்-ந-கா-அம் என்றால் வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மை.

இல்இன்கம் வண்நகாஅம், காநஅம் ஆகிய இரண்டையும் பொறுத்திருந்தது குநஅம்.

கா-ந-அம்†

காப்பை மிகுக்கும் தன்மையை (காநஅம்) கவனிப்போம்.

இதில் இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று பொதுத் தன்மை. மற்றொன்று விசேஷ தன்மை. பொதுத்தன்மை குலம் முழுவதற்கும் பொதுவானது. விசேஷ தன்மை, குலத்திலிருந்தவர்கள் ஒவ்வொருவரும் அனுஷ்டித்த முறைகளைப் பற்றியது.

† கா-ந-அம்: காப்பை மிகுக்கும் தன்மை.

சேர்ந்து கூட்டமாக வசிப்பதுதான் பொதுத்தன்மை. சேர்ந்து வசிக்கிறபோது ஒவ்வொருவருக்கும் காப்பு மிகுந்து இருந்தது. யானைகள் கூட்டமாக வந்தால், அது 'நாகாநஅம்' (நாகணம்). அதாவது, யானைகள் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை. பாம்புகள் கூட்டமாக வந்தால், அது 'அரா-காநஅம்' (அராகணம்). அதாவது, பாம்புகள் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை. குரங்குகள் கூட்டமாக வந்தால், அது 'அரி-காநஅம்' (அரிகணம்). அதாவது, குரங்குகள் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை. பசுக்கள் கூட்டமாக வந்தால், அது 'ஆ-காநஅம்' (ஆகணம்). அதாவது, பசுக்கள் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை. தேனீக்கள் கூட்டமாக வந்தால், அது 'ஈ-காநஅம்' (ஈகணம்). அதாவது, ஈக்கள் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை.

மிருகங்கள் வருகின்றன. அல்லது செல்கின்றன அவற்றைப் பிடிப்பதற்காக அல்லது உட்கொள்வதற்காகப் பாய்ந்து தாக்குவது, 'தே-வா-காநஅம்'. அதாவது, உட்கொள்ளப் பாய்ந்து காப்பை மிகுக்கும் தன்மை.

மிருகங்களுக்கு இனிமையை அளிப்பதன் மூலம் வலிமையையும் காப்பையும் மிகுத்துக் கொள்ளும் தன்மை 'மா-இன்-ஈய்-தா-காநஅம்' (மனிதகணம்). இங்கு 'தா' என்றால் வலிமை. இதில் முதலில் இனிமையை அளித்து, பிறகு பாய்ந்து காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மையும் அடங்கி இருக்கிறது. அந்த அர்த்தத்தில் 'தா' என்றால் பாய்தல்.

மிருகங்களுக்கு ஆசைகாட்டி, அயரச் செய்து திடீரென்று தாக்கி, அழித்து, தம் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை, 'கா-இன்-தா-இர்-வா-கா-ந-அம்' (காந்தர்வ கணம்). அதாவது, காப்பையும் இனிமை

NADU ARCHIVES

யையும் தருவதாக தோன்றும்படி செய்து, தம்முடன் இருத்தி, பிறகு பாய்ந்து, காப்பை மிகுத்துக் கொள்ளுதல். அல்லது, காப்பையும் இனிமையையும் தந்து கொண்டு இருப்பதற்காக தம்மிடம் வரச் செய்வதன் மூலம் காப்பை மிகுத்துக் கொள்ளுதல்.

அடுத்தபடியாக, 'பூ-தா-காநஅம்'. இதில் பல தன்மைகள் அடங்கி இருக்கின்றன. 'பூ' என்றால் மலர், அழகு, பெண்குறி ஆகிய மூன்று பொருள்கள் உண்டு. மலரையோ, அழகையோ, பெண்குறியையோ அல்லது மூன்றையும் சேர்த்தோ தருவதன் மூலம் காப்பை மிகுத்துக் கொள்வது 'பூ-தா-காநஅம்' (பூத கணம்) இங்கு 'தா' என்பதற்கு தருவது என்று பொருள். இதே அர்த்தத்தில், பெண்குறியிலிருந்து பிள்ளைகளைத் தருவதன் மூலம் காப்பை மிகுக்கும் தன்மையையும் இது குறிக்கும். அதாவது, புதிய ஆசாமிகளை சிருஷ்டித்தல். 'பூ' என்பதற்கு அழகு என்றும், 'தா' என்பதற்கு வலிமை என்றும் பொருள் கொண்டால், அழகையும் வலிமையையும் கொண்டு காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை என்று பொருள். இதுதான் அழகியாகவோ அல்லது அழகனாகவோ இருந்து திடீரென்று ராக்ஷசியாகவோ அல்லது 'பூத'மாகவோ மாறும் தன்மை. 'பூ' என்பதற்கு அழகு என்றும், 'தா' என்பதற்கு கேடு, பகை, வருத்தம் என்றும் பொருள் கொண்டால், அழகைக் கொண்டு கேடு செய்வதையும், பகைப்பதையும், துன்புறுத்துவதையும் இது குறிக்கும்.

இந்த நான்கு தன்மைகளைத் தவிர, உபயோகிக்கும் கருவிகளையும் கையாளும் முறைகளையும் கொண்டு பல தன்மைகள் உண்டாகின்றன.

பல் பிடுங்கப் பட்ட அல்லது பிடுங்கப் படாத பாம்புகளை விடுவதன் மூலமும், கற்களை வீசியெறிவதன் மூலமும் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை 'அர-கன்-காநஅம்' (அரக்கன் கணம்).

கயிறுகளினாலோ அல்லது சூழ்ந்து கொள்கிற ஆட்களினாலோ பகைவர்களை ஓட விடாமல் தடுத்து, கட்டிப் போட்டு, சாகடிப்பதன் மூலமோ அல்லது சோர்வடையச் செய்வதன் மூலமோ தம் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை 'யா-சா-காந அம்' (யக்ஷ கணம்).

பாம்புகளை நெளிய விடுவதன் மூலம் சாவையும் சோர்வையும் உண்டாக்கும் தன்மை 'அரா-சா-சா-அம்' (ராக்ஷசம்). இதன் மூலம் காப்பை மிகுத்துக் கொள்வது 'அரா-சா-சா-காந அம்' (ராக்ஷச கணம்).

நச்சுப் பையைக் கொண்டு சாவையும் சோர்வையும் உண்டாக்கும் தன்மை 'பை-சா-சா-அம்' (பைசாசம்). இதன் மூலம் தம் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை 'பை-சா-சா-காந அம்' (பைசாச கணம்).

தாம் வசிக்கும் இடத்தைச் சுற்றிப் பேய்களை அலைய விடுவதன் மூலம் காப்பை மிகுத்துக்கொள்ளும் தன்மை 'பே-கா-ந-அம்' (பேய் கணம்).

இது போல் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை இன்னும் எத்தனையோ இருந்தன. காப்பை மிகுத்துக் கொள்வதற்காக எப்போதுமே கையில் கல்லை வைத்திருந்த தன்மை 'கன்-காந அம்' (கங்கணம்). காப்பை மிகுப்பதற்காகப் பாய்ந்து ஓடுவது 'வா-காந அம்' (வா கணம்). எதிரியின் காப்பைப் பார்த்து இகழ்வதன் மூலம் தன் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை 'கா-இளி-காந அம்' (காளி கணம்). மோப்பம் பிடித்து இடித்துக் கொல்வதன் மூலம் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை 'மோ-இடி-காந அம்' (மோடி கணம்). ஒருவன் தன்னிடமுள்ள ஈடு இணையில்லாத அழகைக் காப்பாற்றி மிகுத்துக் கொள்ளும் தன்மை 'இல்-அ-கா-ந-அம்' (இலக்கணம்).

ஆகவே, 'காநஅம்' என்பதின் தன்மையைப் பொறுத்திருந்தது 'கு-வல்-அம்'; 'கு-ந-அம்'.

வண்-ந-கா-அம் †

'காநஅம்' சிறப்பான்தாக இருந்த போது, மற்ற 'பாநஅம்' முதலிய தன்மைகளும் சிறப்பானதாக இருந்தனவென்று சொல்லவா வேண்டும்?

'காநஅம்' என்கிற காப்பை மிகுக்கும் தன்மை உண்டாவதற்கு, குலத்தில் இருந்த ஒவ்வொருவருக்கும் 'வண்-ந-கா-அம்' (வணக்கம்) இருக்க வேண்டியிருந்தது.

'வண்நகாஅம்' என்றால் ஒவ்வொருவரும் வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை.

'வண்நகாஅம்' என்ற இந்தத் தன்மை, கூட்டத்தில் ஒருவருக்கொருவர் இடையே நிலவிய பழக்கங்களுக்கும், கருத்துக்களுக்கும், கூட்டம் ஐக்கிய முடையதாக இயங்குவதற்கும் அஸ்திவாரமாக இருந்தது.

இப்போது 'வணக்கங்களை'ப் பார்ப்போம் :—

கூட்டமாகச் சேர்ந்து வசிப்பதுதான் பூமியில் வல்லமையுடன் இருக்கும் தன்மை. (குலம்). இந்தத் தன்மையில் இரண்டு அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. ஒன்று பன்மை; மற்றொன்று ஒருமை. இதை கு(வ)லம் என்ற ஒருமைக்குள் அடங்கிய பன்மை என்று சொல்லலாம்.

---

† வண்-ந-கா-அம்: வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை. [வண்: வண்மை; ந: மிகுத்தல்; கா: காப்பாற்றுதல்; அம்: தன்மை]

பல ஆடவர்கள்; பல பெண்கள்; பல சிறுவர்கள்; பல சிறுமிகள்—இவர்களே, இந்தப் பன்மையை, உள்ளடக்கி யிருப்பதுதான் கு(வ)லம்.

இந்தப் பன்மை ஒரே முறையில், ஒரே போக்கில், ஒரே தன்மையில் இயங்குவதுதான் ஒருமை. இதுதான் 'கு(வ)லம்' என்ற தன்மையை அளிக்கிறது.

பலரைக் கொண்டிருப்பது 'ஆ'. ஒரு திசையில் இயங்குவது 'ஊ'. இந்த இரண்டு தன்மைகளையும் உள்ளடக்கிய இயக்கம் 'ஓ'. இதனால் உண்டாகிற தனித் தன்மை 'ம்'. இந்த நிலை 'ஓம்' நிலை. இதுதான் அன்றைய தமிழர் சமுதாயம் இயங்கிய நிலை.

பன்மையை உண்டாக்கியது யார்? தாய்! ஒருமையை உண்டாக்கியது யார்? அதுவும் தாய் தான்!

'ஓம்' என்பதில் அடங்கிய தன்மைகள் பிரதானமாகத் தாயிடம் இருந்தன. அவள் 'ஓங்கார உரு-பு-இன்-ஈய்' [ரூபினி] அதாவது, ஓங்கார உருவமான பண்புடன் இனிமையை ஈய்பவள்.

தாய் வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையுடையவளாக—வண் ந கா அம் (வணக்கம்) உடையவளாக—இருந்தாள்.

எந்த விநாடியில் கரு தரித்ததோ, அந்த விநாடியிலிருந்து அது தாயின் வயிற்றில் வசித்தது. அதற்குத் தாயின் இரத்தம் வண்மையை மிகுத்துக் காப்பை அளித்தது. கருவின் வண்நகாஅம் தாயின் இரத்தத்தைப் பொறுத்திருந்தது.

எந்த விநாடியில் குழந்தை தாயைவிட்டுப் பிரிந்து பூமிக்கு வந்ததோ, அந்த விநாடியிலிருந்தும் அது தன் 'வண்நகாஅம்' பெருகத் தாயையே சார்ந்திருந்தது. தாயிடமிருந்து 'வண்நகாத்'தைப் பெற்றது.

தாய் சேய்க்கு 'வண்நகாஅம்' ஈய்ந்தாள்.

சேய் தாய்க்கு 'வண்நகாஅம்' ஈயக் கடமைப் பட்டிருந்தது.

தாய் பல பிள்ளைகளுக்கு 'வண்நகாஅம்' ஈய்ந்தாள்.

பல பிள்ளைகளும் தாய்க்கு 'வண்நாகாஅம்' ஈயக் கடமைப் பட்டிருந்தன.

தாய் அளித்த 'வண்நகாஅம்' பன்மை தன்மையுடையது.

சேய்கள் அளித்த 'வண்நகாஅம்' ஒருமைத் தன்மையுடையது.

அவள் பன்மையை உண்டாக்கினாள். அதிலிருந்து ஒருமையைப் பெற்றாள். பன்மையும் ஒருமையும் சேர்ந்து கூட்டத்தை இயக்கியது; பூமியில் வல்லமையுடன் இருக்கும் தன்மையை (குலத்தை) உண்டாக்கியது.

போ-து-ஊ-இடு-அம்-ஆய் †

இதுதான் முதன்மையான வணக்கம். தாய் வணக்கம் அளிக்கிறாள் என்றால், தாய் வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையை உண்டுபண்ணுகிறாள் என்றும், தாய்க்கு வணக்கம் தரப்படுகிறது என்றால், தாய்க்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையைக் குழந்தைகள் உண்டுபண்ணுகிறார்கள் என்றும் அர்த்தம்.

---

† போ-து-ஊ-இடு-அம்-ஆய்: போய் உண்ண உணவைப் பரப்பி இடுகின்ற அழகிய அம்மா. [போ: போதல்; து: உண்ணுதல்; ஊ; ஊன், இறைச்சி, உணவு; இடு: வைத்தல்; அம்: அழகு; ஆய்: அம்மா.]

இந்த 'வணக்கம்' பரஸ்பரமானது; ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்வது

இதில் நான் வேறு, நீ வேறு என்ற எண்ணத்திற்கே இடமில்லை. என்னுடையது, உன்னுடையது என்ற வேறுபாட்டிற்கே அர்த்தமில்லை. என் சொத்து, உன் சொத்து என்ற கருத்துக்கு அஸ்திவாரம் இல்லை.

"என்னால் உண்டாகிற வண்நகாஅும் தாய்க்கு உரியது. தாய் எனக்கு வண்நகாஅும் அளிப்பாள்"—இந்த எண்ணம்தான் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருந்தது. எல்லோரும் தம்மால் முடிந்த அளவுக்குத் தாய்க்கு 'வண்நகாஅும்' அளித்தபோது, மொத்தமாகக் கிடைத்த 'வண்நகா'த்தைத் தாய் எல்லோருக்கும் பங்கிட்டு கொடுத்தாள். எல்லோரும் உண்டாக்குவது தாய்க்கு உரியது. தாய்க்கு உரியது எல்லோருக்கும் உரியது.

தாய் சேய்களின் 'வண்நகா'த்திற்கு உரிய தலைவி. அதே சமயம் சேய்களுக்கும் 'வண்நகாம்' தரக் கடமைப்பட்டவள்.

இதுதான் புராதன தமிழர் சமுதாயத்தின் பொதுத் தன்மை. இதுதான் பொதுவுடைமை சமுதாயம்.

இந்தப் பழக்கத்தின் சொச்சம் மிச்சம்தான் தற்காலத்தில் 'தேவி பூஜை'யாக இருக்கிறது. 'தேவி'யின் முன் உணவுப் பண்டங்களை—அதாவது தேவிக்கு 'வண்நகாஅும்' ஈயக்கூடிய பொருள்களைப் படைப்பது. பிறகு அந்த 'தேவி'யிடம் தமக்கு 'வண்நகாஅும்' தரும்படி—அதாவது, தமக்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையைத் தரும்படி வரம் கேட்பது. தற்காலத்தில் கற்சிலையாக இருக்கிற 'தேவி' வணக்கம் அளிப்பதில்லை. அக்காலத்தில் உயிருடன் இருந்த தாய்,

உணவுப் பொருள்களில் சிலவற்றை எடுத்துக் கொண்டு, தம்மிடம் ஏற்கனவே இருந்த வேறு சில பொருள்களையும் சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுப்பதன் மூலம் வண்ஙகாஅம் தந்தாள். தற்காலத்தில் 'தேவி'யின் பூசாரி, குழந்தைகள் படைக்கிற உணவில் சில பகுதியை எடுத்துக்கொண்டு, 'தேவி' அளிக்கிற வணக்கத்திற்கு அடையாளமாக வேறு ஒரு பொருளை பிறசாதமாக தருகிறார்.

'தேவி' பூஜையே தாய்க்கு பிறசாதம் வழங்க வேறு உணவுப் பொருள்கள் எப்படி கிடைத்தன என்பதை உணர்த்துகிறது.

தாயின் பிள்ளைகளில் சிலர் மிருகங்களை வேட்டையாடி கொண்டு வந்த போது, வேறு சிலர் கனி கிழங்குகளைக் கொண்டு வந்தனர்; மற்றும் சிலர் தேனைக் கொண்டு வந்தனர். பலரும் பலவிதமான பொருள்களைச் சேகரித்துத் தாயிடம் சேர்ப்பித்தனர்.

இதனால் இறைச்சியைக் கொண்டு வந்தவர்கள் தாயிடம் உண்ணச் சென்ற போது, அங்கு இறைச்சியோடு தமக்குக் கனி கிழங்குகளையும் தேனையும் தாய் பரப்பி வைத்து இருப்பதைப் பார்த்தனர். தாம் சேகரித்த சாதத்தோடு தமக்குப் பிறர் சேகரித்த சாதத்தையும் தாய் உண்ணக் கொடுப்பதைக் கண்டனர்.

'சா—தா—அம்' (சாதம்) என்றால் சோர்வில் வலிமை தரும் தன்மையுடையது என்றும், சோர்வைத் தருவது என்றும் இரண்டு அர்த்தங்கள் கூறலாம். உணவு வலிமை தருகிறது; அதே சமயம் புசித்தவுடன் களைப்பையும் உண்டாக்குகிறது.

'ப்இர்—ஈ' (பிரி) என்றால், பிஇர் என்று அழித்தல்; கிழித்தல்; ஒன்றை இரண்டாக்குதல். 'ப்இர்—அர்' என்றால், ப்இர் என்று வேறாகப் போகிறவர்கள். 'ப்இற்—

அ' (பிற) என்றால் ப்இற் என்று வேறாக போயிருக்கும் அது என்று அர்த்தம். வேறு என்று பொருள்.

"ப்இற் அர்—சா தா அம்" (பிறர் சாதம்) என்றால், பிரிந்து சென்ற மற்றவர்கள் கொண்டு வந்த சாதம் என்று பொருள்.

அது தான் ஒருவனுக்கு' மற்றவர்கள் கொண்டு வந்த உணவில் கிடைக்கிற பங்கு.

தாய் ஒவ்வொருவருக்கும் அவரவர் கொண்டு வந்த சாதத்தைத் தவிர, பிறர் கொண்டு வந்த சாதத்தையும் உண்ணத் தந்தாள்.

போய் உண்ண உணவைப் பரப்பி வைத்த அழகிய அம்மாவை, "போ—து—ஊ—இடு—அம்—ஆய்" என்று கூறலாம்.

போய் உண்ணப் படுவது 'போ—து' (பொது)

போய் உண்ணும் நேரமும் 'போ—து (போது)

போகிற போது உணவை இடும் தன்மையுடைய இடம் "போ—து—இடு—அம்" [பொதுயிடம்]

போகிற போது உணவை உண்ணப் பரப்பி வைக்கும் படியான தன்மையைக் கொண்டிருக்கிற ஒரு அழகு—சமுதாய சிறப்பு— "போதுஊஇடுஅம்ஐ" [பொதுவுடமை]

உணவை இடுகிற அழகிய மனிதன் "இடு—ஐ—அன்" [இடையன்]

உணவை இடுகின்ற அழகும் சிறப்புமுடையவள் "இடு—ஐ—சி" [இடைச்சி]

தாயின் தன்மையையுடையவர்கள் "ஆய்—அர்" [ஆயர்]

து-து-ஈய் †

உணவைச் சேகரித்து வந்தவர்கள் என்ன செய்தார்கள்? தம்மிடமே வைத்துக் கொண்டார்களா?

இல்லை! அதைத் தாயிடம் கொடுத்தார்கள். "து! து! ஈய்" என்று சொன்னார்கள். "புசித்துப் புசிக்கத் தருக!" என்று பொருள். "உண்ண உணவைத் தருக!" என்றும் பொருள்.

உணவை ஒரு கோஷ்டியினர் கொண்டு வந்தவுடன், அருகிலிருந்தவர்கள் அவர்களிடம் என்ன சொன்னார்கள்? "தாயிடம் உணவை உண்ணக் கொடுப்பாயாக" என்றார்கள். "து—து—ஈய்!" என்றார்கள்.

உண்ண உணவை ஈய்கிற போது—துதி செய்கிற போது—தாயின் மேன்மையான குணங்களை எடுத்தியம்புவார்கள். தாயை சந்தோஷமடையச் செய்வார்கள்.

எல்லோரும் ஒரே உணவைக் கொடுத்தால் தாய்க்கு சந்தோஷம் ஏற்படாது என்று நினைத்து, பல விதமான உணவையும் கொடுக்க முற்படுவர். பலவிதமான பொருள்களை ஈய்வதுதான் "பல்—ஈய்" [பலி].

பல விதமான பொருள்கள் தமக்கு ஈயப்படுவதை—பலியைப்—பார்த்துத் தாய் சந்தோஷமடைந்து திருப்தியைத் தெரிவிப்பாள்.

ஆகவே, "துதுஈய்"வதிலேயே "பல்ஈய்" வதற்கும் ஒவ்வொருவரும் அக்கறை எடுத்துக் கொண்டனர்.

---

† து-து-ஈய்: புசித்துப் புசிக்கத் தருக; உண்ண உணவு ஈய்க; (து-உண்ணுதல், உணவு; ஈய்: அளித்தல்)

க்ஓ-வி-இல் †

எந்த இடத்தில் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து தாயிடம் கொடுத்துத் தமக்கு உணவு அளிக்கும்படி கேட்டனர்? 'துதுசய்' கிற இடமும், 'பல்சய்' கிற இடமும் எது? தாய்க்கு வண்நகாஅம் சய்கிற இடமும் தாயிடமிருந்து வண்நகாஅம் பெறுகிற இடமும் எது?

அந்த இடம் மிகவும் அமைதியான இடம். சந்தடியும் சலசலப்பும், கலக்கமும் கொந்தளிப்பும், சண்டையும் போராட்டமும் இல்லாத ஒரு இடம். பயமில்லாத, ஆபத்தில்லாத, சங்கடமில்லாத ஒரு இடம். அத்தகைய ஒரு இடத்தில்தான் உணவைப் பறிமாறவும், உண்டு மகிழவும், கூடிக் களிக்கவும் முடியும்.

அந்த இடம்தான் போகிறபோது உணவை இடும் தன்மையுடையது (போ-து-இடு-அம்: பொதுயிடம்)

அந்த இடத்திற்குத்தான் "க்ஓ-வி-இல்" (கோவில்) என்று பெயரிட்டனர்.

'க்ஓ' என்றால் ஒரு ஓசை. வேட்டையாடுகிறபோது, 'க்ஓ' என்று ஓசையெழுப்பி ஆரவாரம் செய்வார்கள். வேட்டையாடுமிடத்தில் "க்ஓ-க்ஓ" (கோ கோ) என்று ஓசையாக இருக்கும். அப்படி கோ கோ என்ற ஓசையற்ற இடம் 'க்ஓ-இல்' (கோயில்.) கோ கோ என்று ஓசையுடன் வேட்டையாடுகிறபோது, ஒவ்வொருவரும் அங்குமிங்கும் விரைந்து கொண்டு இருப்பர். ஒவ்வொருவருடைய வேலையிலும் ஒரு விரைவு காணப்படும். அத்தகைய ஓசையும் விரைவும் இல்லாத இடம் 'க்ஓ-வி-இல்' [கோவில்]

---

† க்ஓ-வி-இல்: க்ஓ (கோ) என்ற ஆரவார ஓசையும் விரைவும் இல்லாத இடம்.

க்ஓ என்ற ஓசையும் விரைவும் இல்லாத அந்த இடத்தில், போய் உண்ணுவதற்கு உணவைப் பரப்பிவைத்தாள் தாய். ஆகவே, அந்த இடம் 'ஊ-இர்' [ஊர்] என்று சொல்லப்பட்டது—உணவு இருக்குமிடம் என்று பொருள்.

ஆல்-அ்-யா-அம் †

அந்த இடத்தில் ஆலமரத்தின் அடியிலுள்ள நிழலும் அழகும் இருந்ததென்றால், அவர்கள் வெகுநேரம் ஓய்வு எடுத்துக்கொண்டனர். இவ்விதம் நிழலிலும் அழகிலும் மனதைப்பறிகொடுத்து அவ்விடத்தில் வெகுநேரம் கட்டுண்டு கிடந்த தன்மையை 'ஆல்-அ-யா-அம்' [ஆலயம்] என்றனர்.

எப்போதுமே அவர்கள் தமக்குப் பொதுயிடமாக 'ஆல்-அ-யா-அம்' [ஆலயம்] உள்ள இடத்தைத் தேடினர். அதாவது, ஆலமரத்தைப்போல் அழகினால் கட்டுப் போடும் தன்மையுடைய இடத்தைத் தேடிப்பிடித்தனர்.

'ஆல்-அ-யா-அம்' [ஆலயம்] உள்ள இடத்தை, போய் உண்ண உணவைப் பரப்பி வைக்கும இடமாக [பொதுயிடமாகக்] கொண்டனர்.

'ஆல்-அ-யா-அம்' உள்ள இடத்தில், தரையில் பசும் புல் முளைத்து உட்காருவதற்கு வசதியாக இருந்ததென்றால், அதில் இளைப்பாறி இருந்தனர். அந்தப் பசும்புல் தரையை 'அ-வை' என்றனர். அழகிய பசும்புல் என்று பொருள்.

---

† ஆல்-அ-யா-அம்; ஆலமரத்தின் அழகினால் (நிழலினால்) கட்டும் தன்மை (ஆல்: ஆலமரம்; அ: அழகு; யா: கட்டுதல்; அம்: தன்மை)

அழகிய பசும்புல்லில் உட்கார்ந்து இனிமையாகப் பேசிக்கொண்டு இருந்தவர்கள், "அ-வை-இன்-ந-அர்" [அவையினர்] என்று சுட்டிக்காட்டப்பட்டனர். அழகிய புல்லில் உட்கார்ந்து இனிமையை மிகுத்துக் கொண்டிருப்பவர்கள் என்று பொருள்.

இனி தாயின் தன்மைகளை கவனிப்போம்.

தாய்-அம் †

தாயின் தன்மையையும் பொறுப்புகளையும் செய்கைகளையும் உணர்த்த உண்டான பெயர்கள் எத்தனையோ ஆயிரம்! கோடானுகோடி பெயர்களை உண்டாக்கினாலும் அவளுடைய தன்மை முழுவதையும் விவரித்துவிட முடியாது! அவளுடைய பண்பாடுகளை ஒவ்வொருவரும் அந்தந்த சமயத்தில் தம் மனதினால் நினைத்து உணர முடியுமேயொழிய, வாயினால் வர்ணித்து முழு தன்மையையும் வெளியிட்டு விட முடியாது! தாய் அத்தனை கௌரவத்திற்கும், பெருமைக்கும், மகத்துவத்திற்கும் உரியவள்!

தாய் குழந்தைகளிடம் எவ்வளவுக்கு எவ்வளவு அன்புடையவளாக இருந்தாளோ, அவ்வளவுக்கவ்வளவு பகைவர்களுக்கு பயங்கரமானவளாக இருந்தாள். அவள் பகைவர்களைப் பொறுத்த வரையில் பயங்கர ரூபிணி! குழந்தைகளைப் பொறுத்தவரையில் சாந்த சொரூபி அவள் ஆங்காரமானவள். அதே சமயத்தில் அன்புடையவள்.

தீ சிவமாகவும் சைவமாகவும் இருந்தது. நீர் வைணவமாகவும் வைஷ்ணவமாகவும் இருந்தது. அப்படி

† தாய்-அம்; தாயின் தன்மை.

இல்லை தாய். தன் குலத்தைப் பொறுத்தவரையில் அவள் எப்போதுமே சிவமாகவும் வைணவமாகவுமே இருந்தாள். பகைக் குலத்தைப் பொறுத்தவரையில் சைவமாகவும் வைஷ்ணவமாகவும் மாறினாள்.

அதாவது, தன் குலத்தைப் பொறுத்தவரையில் அவள், ஒளியாக வந்து காப்பாற்றுவதில் மேன்மையுடையவளாக (சி-வா-கா-மீ), இருட்டை மாய்ப்பவளாக (அல்-ஈ: அல்லி)' வல்லமையை ஈய்பவளாக (வல்-ஈய்: வல்லி), காப்பையும் இனிமையையும் அளிக்கன்ற தீயாக (கா-இன்-தீ: காந்தி), ஈரப் பரப்பிலே குளிரை நீக்கவரும் தீயாக (பார்-வா-தீ). மேலே இருந்து இனிமை தருகிற அழகிய ஒளியாக (மீ-இன்-அ-சி: மீனாக்ஷி), காக்கின்ற தன்மையுடைய அழகிய ஒளியாக (கா-அம்-அ-சி: காமாக்ஷி), அழகும் மேன்மையும் உடையவளாக (அம்-மே), அழகும் பாதுகாப்பும் உடையவளாக (அம்-பா-அள்: அம்பாள்) இருந்தாள்.

அவள் பகைக் குலத்தைப் பொறுத்தவரையில், பகைக்குலத்தின் காப்பைப் பார்த்து இகழ்ந்து சிரிக்கும் அளவுக்குத் துணிவுள்ளவளாக (கா-இளி: காளி), அழித்துக் கெடுக்கிறவளாக (வீ-இரி: வீரி), மோப்பத்தைக் கொண்டே இடித்து அழிப்பவளாக (மோ-இடி: மோடி), கல்லினால் அழிப்பவளாக (கன்-ஈ: கன்னி), அச்சத்தை ஈய்பவளாக (பே-ஈய்: பேய்), ஆங்காரியாக, பயங்கரியாக இருந்தாள். ஊனுள்ள மிருகங்களை பிடித்து அழிப்பவளாக (ஊ-மா-தே-வீ), பகை மிருகங்களின் காப்பிடங்களைக் கைப்பற்றி அழிக்கிறவளாக (மா-கா-தே-வீ), அழிக்கின்ற தீயின் வல்லமையையுடையவளாக (வீ-தீ-வல்-அம்: வீதீவலம்), சாகடிக்கிற தீயாக (சா-தீ), விரைகிற தீயாக (வி-தீ) இருந்தாள்.

சிவகாமி, அல்லி, வல்லி, மீனாக்ஷி, காமாக்ஷீ, அம்பாள் முதலியவையெல்லாம் தாயின் 'சிவம்' என்ற தன்மையிலே பிறந்த சொற்கள். காளி, வீரி, மோடி,

உமாதேவி முதலியவையெல்லாம் தாயின் 'சைவம்' என்ற தன்மையினால் பிறந்த பெயர்கள். இவையே முறையே 'வைணவம்' என்ற தன்மையையும், 'வைஷ்ணவம்' என்ற தன்மையையும் குறிக்கின்றன.

இன்னும் எத்தனையோ பெயர்கள் உண்டு. சில முக்கியமானவற்றை மட்டும் கவனித்துவிட்டு அடுத்த விஷயத்திற்குச் செல்வோம்.

குழந்தைகள் மிருகங்களைக் கண்டு பயந்து 'ஆ!' என்று அலறின. உடனே தாய் ஓடி வந்தாள். அந்த அலறலுக்குக் காரணமானவற்றை அழித்தாள். இதனால் அவள் குழந்தையின் அலறலை அழிப்பவள், 'ஆ-ஈ' (ஆயி). சில குழந்தைகள் 'வ்இர்' என்று கத்துகின்றன. இந்த 'வ்இர்' ஒலியை அழிப்பவள் 'வ்இர்ஈ' (வீரி). குழந்தைகள் தவழ்ந்து கொண்டே தூரச் சென்று அபாயத்திற்குள் அகப் பட்டுக் கொள்ளும். இதைத் தடுக்கக் குழந்தைகளைக் கட்டிப் போடுவாள். கட்டுண்டு கிடக்கும் குழந்தைகளுக்கும் பாலூட்டுவாள். ஆகவே அவள் கட்டி ஈய்பவள், 'யா-ஈய்' (யாய்). அவள் தாவியக் குழந்தைக்கு ஈய்பவள் (தா-ஈய்: தாய்). பகையை, வருத்தத்தை அழிப்பவள் (தா-ஈ: தாயி) வலிமையை அளிப்பவள் (தா-ஈய்: தாய்). பாய்ந்து வந்து தருபவள் [தா-ஈய்: தாய]. அவள் மிருகங்களை அழிப்பவள் [மா-ஈ: மாயி]. மிருகங்களாகிய குழந்தைகளுக்கு ஈய்பவள் [மா-ஈய்: மாய்]. குழந்தைகளை முகர்ந்து முத்தமும் பாலும் தருபவள் [மோ-ஈய்: மோய்] மிருகங்களிலேயே அழகும் பண்புமுடைய மிருகமவள். இதனால் 'அம்-மா'; 'பு-மா'; 'பூ-மா'. மற்ற எல்லோருடைய நிறத்தைக் காட்டிலும் தாயின் நிறமே அழகானது. இதனால் அவள் 'அம்-மை.' அவள் அழகும் கூர்மையும் உடையவள். இதனால் அ-வை (அவ்வை: ஔவை). அவள் மிருகங்களின் பேரில் தாவுகிறவள்.

[மா-தா]. அவள் மிருகங்களைத் தந்தாள் [மா-தா]. அவள் மிருகங்களைப் பகைத்தாள் [மா-தா]. மிருகங்களை வருத்தினாள் [மா-தா]. மிருகங்களின் பேரில் தாவி முறியடித்தாள் [மா-தா-இரி: மாதரி]. மிருகங்களைக் காயப்படுத்தி அவற்றின் அழகைக் கெடுத்தாள். [மா-அ-இரி: மாரி] பூமியில் மிருகங்களைத் தோற்கடித்தாள் [கு-மா-இரி: குமாரி]. மிருகங்களாகிய குழந்தைகளைக் காப்பாற்றும் அழகிய ஆய் [மா-கா-அம்-ஆய்: மகாமாய்]. பகை மிருகங்களின் காப்பைப் பார்த்து இளித்து அந்த மிருகங்களின் பேரில் அவள் பாய்ந்தாள் [கா-இளி-மா-தா: காளிமாதா]. அவள் நச்சுப் பையையுடைய பாம்புகளை அழித்தாள் [பை-அரா-வீ: பைரவி]. கல்லினால் அடித்து இனிமையை ஈய்ந்தாள் [கன்-இன்-ஈய்: கன்னி]. கல்லினால் அழித்துக் காப்பாற்றுகிறவள் [கன்-ஈ-கா: கன்னிகா]. உணவு இருக்கின்ற பக்கங்களை—பால் சுரக்கும் முலைகளை—அவள் உடையவள் [து-இர்-கை: துர்கை]. காப்பாற்றித் தருகிற அம்மா [கா-தா-ஆய்: காத்தாயி]. மிருக உணவைப் புசிக்கும் பாம்பை அடித்து, அதன் குணத்தைச் சாகடித்து, இனிமையை தருகிறவள் [மா-து-அரா-பு-சா-இன்-ஈ: மாதுராபூஷணி]. அழகிய அம்மா [ஐ ஆய்: ஐயை]. பாய்ந்து சாகடித்து இனிமையைத் தருபவள் [தா-சா-இன்-ஈய்: தாக்ஷாயிணி].

இன்னும் எத்தனையோ தன்மைகள்! எத்தனையோ பெயர்கள்!

தாய் வணக்கத்தின் சாராம்சம் இதுதான்:

குழந்தைகளுக்கு வன்மையை மிகுத்துக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையைத் [வன்நகாஅம்] தாய் உண்டு பண்ணினாள். தாய்க்கு வன்மையை மிகுத்துக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையைக் [வன்நகாஅம்] குழந்தைகள் உண்டுபண்ணின.

பு-ந-இர்-சீ-வண்-ந-கா-அம் †

வண்மையை மிகுக்கும் காரியங்கள் எத்தனையோ இருந்தன.

முதலாவதாக, உணவுப் பொருள்களைக் கொண்டு வருவது.

இரண்டாவதாக, உணவுப் பொருள்கள் கிடைக்காத போது, கைவசமிருந்த உணவை எல்லோருக்கும் உயிரைக் காப்பாற்றும் முறையில் வினியோகிப்பது.

மூன்றாவதாக, எல்லோரையும் ஒரே சக்தியாக இயங்கச் செய்வது.

நான்காவதாக, புதிய குழந்தைகள் பிறப்பதற்கு வேண்டியவைதச் செய்வது.

---

† பு-ந-இர்-சீ-வண்-ந-கா-அம்: (புணர்ச்சி வணக்கம்) பண்பு மிகுந்து இருக்கும் சிறப்பினால், வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மை. [பு: பண்பு; ந: மிகுத்தல்; இர்: இருந்தல்; சீ: சிறப்பு] எந்த விநாடியில் ஆண் பெண் ஆகிய இருவருடைய மனதிலும் பண்பு மிகுந்து இருக்கும் சிறப்பு எற்படுகிறதோ—இருவருடைய உணர்ச்சிகளும் மிகுந்து சிறப்புடையவையாக இருக்கின்றனவோ —அந்த விநாடியில் இருவருக்குமிடையே கூடல் எற்படுகிறது. கூடல் என்பது பண்பு மிகுந்து சிறப்புடையதாக இருப்பதற்கு—புணர்ச்சிக்கு—அடையாளமாக இருக்கிறது. புணர்ச்சி என்பது கூடலை உண்டாக்கும் பண்பாக—கூடலுக்கு அடையாளமாக — இருக்கிறது. புணர்ந்து இருக்கிறார்கள் என்றால், அவர்களிடையில் பண்பு மிகுந்து சிறப்புடையதாக இருக்கிறது என்று அர்த்தம். பண்பு மிகுந்து சிறப்புடையதாக இருக்கிறபோது—புணர்ச்சியில்—கருதரிக்கிறது. இது வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையை உண்டாக்குகிறது—அதாவது, கூட்டத்தைப் பெருக்குகிறது.

ஐந்தாவதாக, குழந்தைகளுக்குச் சாவு நேராதபடி பாதுகாப்பது.

ஆறுவதாக, அதிக சாவு ஏற்படாதபடி போராடுவது

ஏழாவதாக, எதைச் செய்தால் வண்மை மிகுமென்று தோன்றுகிறதோ, அதைச் செய்வது.

ஆக மொத்தத்தில் எந்தக் காரியத்தை யார் செய்தாலும், வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையுடையதாக—வணக்கமுடையதாக—இருக்கவேண்டும்.

இதிலிருந்துதான் மற்ற வணக்கங்கள் உண்டாயின.

ஆணும் பெண்ணும் புணருவது வணக்கங்களில் மிக மிக முக்கியானதொன்று. ஆணும் பெண்ணும் புணர்ந்தால்தான் கரு தரிக்கும். கரு தரித்தால்தான் குழந்தை பிறக்கும். குழந்தை பிறந்தால்தான் வண்மை மிகும்; காப்பாற்றிக் கொள்ளும் தன்மை மிகும்.

ஆகவே, தாய்க்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையை [வணக்கம்] உண்டாக்கக் கடமைப்பட்டிருந்த புத்திரர்கள், தாய் வயிற்றில் கரு தரிக்கச் செய்வதன் மூலம் அந்தத் தன்மையை [வணக்கத்தை] உண்டாக்கக் கடமைப் பட்டிருந்தனர். அதேபோல் தம்முடன் பிறந்த அக்காள்கள், தங்கைகள் முதலியவர்களின் வயிற்றில் கருவை உண்டாக்குவதன் மூலம் வண்மையை மிகுக்கக் கடமைப் பட்டிருந்தனர்.

ஆகவே, தாய் தன்னுடன் பிறந்த சகோதரர்களுடன் புணர்ந்தபோதே, தன் குழந்தைகளுடனும் புணர்ந்தாள். ஒவ்வொரு பெண்ணும் தன்னுடன் பிறந்தவர்களுடனும், தன் தாயுடன் பிறந்தவர்களுடனும், தனக்குப் பிறந்த மகன்களுடனும், தம் தமக்கைகளுக்குப் பிறந்த மகன்களுடனும்—குலத்திலிருந்த எல்லா ஆண்களுடனும்—புணர்ந்தனர்.

இந்தப் புணர்ச்சியின் அடிப்படையான கருத்துக் குலம் முழுவதற்கும் வண்மையை மிகுக்கும் தன்மையை உண்டாக்குவதே யொழிய, தனியாக யாரும் தம்முடைய சொந்த இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்வதல்ல. இதனாலேயே கிழவனாக இருந்தவனுடன் மங்கைகள் புணர உடன் பட்டனர். பேரிளம் பெண்களுடன் வயது வந்த இளைஞர்கள் புணர உடன்பட்டனர்.

வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையை [வணக்கம்] உண்டாக்குவது என்ற விஷயம், கிழவனா, இளைஞனா என்ற பிரச்சினையில் இல்லை; கிழவியா குமரியா என்ற பிரச்சினையில் இல்லை. ஆண்குறியும் பெண் குறியும் புணர்வதென்பதிலேயே இருந்தது.

ஆகவே புணர்ச்சி என்பது வண்நகாஅம் (வணக்கம்) ஏற்படுத்துவது.

"வண்நகாஅம்" ஏற்படுத்துவது ஆண்குறியும் (ஆ) அல்ல; பெண்குறியும் (ஊ) அல்ல. இரண்டும் புணர்ந் திருக்கும் தன்மை (ஓ). இந்தப் புணர்ந்திருக்கும் தன் மையில் உண்டாகிற தனித்தன்மை 'ம்'. ஆகவே, "வண்நகாஅம்" உண்டாக்குவது ஆண்குறியும் பெண் குறியும் புணருவதிலிருந்து உண்டாகும் தனித்தன்மை (ஓம்).

இந்த "வணக்க"த்தின் விளைவாகப் பிறந்த குழந்தை களுக்குத் தம்மைப் பெற்ற தாய் யார் என்று தெரியுமே யொழிய, தம் கருவை உண்டாக்கிய ஆடவன் யார் என்று தெரியாது. தாய்க்கே யார் என்று தெரியாது. ஆகவே, எல்லா குழந்தைகளும் எல்லா ஆடவர்களுக்கும் பொதுவாக பிறந்தவை. எல்லா குழந்தைகளுக்கும் எல்லா ஆடவர்களும் தந்தைகள்- இந்தத் தன்மையினால் எல்லா குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எல்லா ஆடவர்களுக்கும் பொது. ஆகவே, மூத்தவர்கள்

எல்லா சிறுவர்களுக்கும் "வண்நகாஅம்" உண்டாக்கினார்கள். சிறுவர்கள் எல்லா மூத்தவர்களுக்கும் "வணக்கம்" செலுத்தினார்கள்.

ஆகவே, மூத்தவர்களுக்கு "வண்நகாஅம்" அளிப்பது சிறுவர்களின் கடமை. சிறுவர்களுக்கு "வண்நகாஅம்" அளிப்பது மூத்தவர்களின் கடமை—(தற்காலத்தில் இது கையெடுத்துக் கும்பிடுவது அல்லது எழுந்து நின்று மரியாதை செலுத்துவது என்ற அளவோடு நிற்கும் சம்பிரதாயமாக இருக்கிறது. அக்காலத்தில், இது உணவுப் பொருள்களைக் கொடுப்பதிலிருந்து காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுப்பதுவரை சகல காரியங்களிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் தன்மையுடையதாக இருந்தது.)

மூ-இன்-ஈய்-வண்நகாஅம் †

மூத்தவர்களுக்கு வண்நகாஅம் அளிப்பதுதான் "மூஇன்ஈய்" (முனீ) வணக்கம்,

கு(வ)லத்தை மிகுத்துத்தருவதிலேயே மூப்படைந்து விடுகிறான் ஒருவன். மூப்படைந்த பிறகும் அவன் குலத்திற்கு இனிமையை ஈய்ந்து கொண்டு இருக்கிறான். அவனுக்கு "ந-தா-மூ-இன்-ஈய்" (நதமுனீ)—மிகுத்து தந்து மூப்படைந்து இனிமையை தருகிறவன். சாதாரணமாக மூப்படைந்து இனிமை தருகிறவர்கள் எல்லோரும் "மூஇன்ஈய்" (முனீ).

† மூ-இன்-ஈய்-வண்நகாஅம்: மூப்பில் இனிமை ஈய்கிறவர்கள் வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மை. (மு: மூப்பு; இன்: இனிமை; ஈய்: அளித்தல்.)

மூப்பில் இனிமையை ஈய்கிறவர்களுக்கு வன்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மையை அளிப்பது முனீ வணக்கம்.

முனீகளுக்கு ஓடியாடி போராட முடியாது. அலைந்து திரிந்து அவதிக்கு ஆளாக முடியாது. இறைச்சியைக் கடித்துப் புசிக்கப் பற்களுக்குப் போதிய வலு இருக்காது. ஆகவே, முனீக்கு வண்நகாஅம் அளிப்பது என்றால், உணவுப் பொருள்களைத் தேடி வந்து கொடுக்கவேண்டும். பல்லுக்கு இதமாக அவற்றை நசுக்கியும் இடித்தும் அரைத்தும் கொடுக்க வேண்டும். தொலையிடங்களுக்குப் போகிறபோது தோளில் தூக்கிச் செல்ல வேண்டும். நடக்கமுடியாமல் தடுமாடுகிறபோது தோள் கொடுத்து அழைத்துச் செல்ல வேண்டும். இதுபோல முனீகளுக்கு சகல துறைகளிலும் உதவி செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு வண்நகாஅம் அளித்ததாகும்.

தாம் இளமையில் மற்றவர்களுக்கு 'வண்நகாஅம்' அளித்ததாலேயே, தமக்கு மற்றவர்கள் தம் தள்ளாத வயதில் 'வண்நகாஅம்' அளிக்கிறார்கள் என்பதை முனீக்கள் உணர்ந்தனர். இதனால் தம் தள்ளாத வயதிலும் தமக்கு முடிந்தவரையில் மற்றவர்களுக்கு 'வண்நகாஅம்' அளிக்க அவர்கள் முயற்சித்தனர்.

அவர்கள் திருப்பி அளித்த வண்நகஅம் எப்படிப்பட்டது? அவர்கள் குலத்திற்கு அந்தத் தள்ளாத வயதில் இனிமையை ஈய்ந்தனர். சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பேசுவதற்குக் கற்றுக்கொடுத்தனர். பேசக் கற்றுக் கொடுத்தவர்கள்தான் "நா-தா-மூஇன்ஈய்" (நாதமுனீ) —நாக்கைத் தந்த முனீகள் என்று பொருள். அவர்கள் குலத்தின் பண்பையும், இனிமையையும் காப்பாற்றினார்கள். இதனால் அவர்கள் "பு-இன்-கா-அர்" (புங்கர்) என்று கருதப்பட்டனர். சோர்ந்த சமயத்தில் இனிமை

யைத் தந்தவர்கள் "சா-இன்-தா-மூஇன்ஈய்" (சாந்தமூனீ) இவ்விதம் அவர்கள் குணத்திற்கு ஏற்ப எத்தனையோ பெயர்கள் உண்டு.

அவர்கள் இளமையில் குலத்திற்கு வண்நகாஅம் அளித்தவர்கள். இதனுல் தமக்கு வண்நகாஅம் அளிக்க இளைஞர்கள் கடமைப்பட்டிருந்ததை வற்புறுத்தியவர்கள். தமக்கு வண்நகாஅம் அளித்தவர்களுக்குத் திருப்பி வண் நகாஅம் அளிக்க தம்மால் முடிந்தவரையில் முயற்சித்த வர்கள்.

"வண்நகாஅம்" அளிப்பதில் ஒன்று பெண்ணுக்குக் கருதரிக்கச் செய்வதென்பதை ஏற்கனவே பார்த்தோம். மூனீக்கு வண்நகாஅம் அளித்தப் பெண்களுக்கு, புணர்ச்சி மூலம் மூனீகள் திருப்பி "வண்நகாஅம்" அளித் தனர். மூனீகள் அளித்த வணக்கத்தினுல் பிறந்த பிள்ளை கள், தாய்க்கு வண்நகாஅம் அளித்தன. தாய்க்கு அளித்த "வண்நகாஅம்"களில் ஒன்று, தாய்க்கு மேலும் பல பிள்ளைகள் பிறக்கும்படி செய்வது. மூனீ மூலம் வண்நகா அம் பெற்ற தாய், சேய் மூலம் வண்நகாஅம் பெற்று மேலும் வண்நகாஅம் உடையவளாஞள்.

கன்-து-அன்-வண்நகாஅம் †

சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு வண்மையை மிகுத் துக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையை அளிப்பது "கன்-து-அன்-வண்நகாஅம்" (கந்தன் வணக்கம்)

† கன்-து-அன்-வண்நகாஅம் : (கந்தன் வணக்கம்) கல்லினுல் நசுக் கப்பட்ட உணவைப் புசிக்கும் குழந்தைகளுக்கு வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மையை உண்டாக்குதல். [கன் : கல்; து : உணவு; அன் : ஆண்பால்]

அந்தக் காலத்தில் காட்டுத்தீயாக இருந்த நெருப்பு 'கை-தீ'யாக ஆகிவிடவில்லை. அதாவது, கையிலே இஷ்டப்படி உபயோகப்படுத்துவதற்கு பயன்படும் தீயாக சிறைப்படுத்தப்படவில்லை. சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு வேகாத இறைச்சியைப் பிடித்து இழுத்துக் கடித்துப் புசிக்க முடியாது. பல்லுக்கு மிருதுவாக இறைச்சியை நசுக்கியும், இடித்தும், அரைத்தும் கொடுக்கவேண்டியிருந்தது. கல்லினால் நசுக்கப்பட்ட, இடிக்கப்பட்ட, அரைக்கப்பட்ட இறைச்சிக்குக் 'கன்-து' (கந்து) என்று பெயர். 'கன்-து'வைப் புசிக்கிறவன் 'கன்-து-அன்' (கந்தன்). கல்லினால் நசுக்கப்பட்ட உணவைப் புசிக்க வருகிறவன் "கன்-து-தே-வா-அன்" (கந்துதேவன்). கன்துவைத் தயாரித்துக் கொடுத்தவர்கள் "கன்-து-தா-அர்". குழந்தைகள் புசிக்க அழுதபோது, 'கன்-து-தா" என்று கேட்டன. கன்துவைத் தருக என்று பொருள்.

'கன்-து' பல்லுக்கு இதமான உணவு. இதனால் அது 'பன்-து' (பந்து) என்றும் சொல்லப்பட்டது. 'கன்து' நன்றாக அரைக்கப்பட்டபோது உருண்டையாக உருட்டப்பட்டது. இதனால் உருட்டப்பட்ட கந்துபோல் இருந்தவை எல்லாம் பந்து என்று சொல்லப்பட்டன.

'கன்-து'வைப் புசித்தக் கந்தர்கள், சிறு குழந்தைகளாதலால், எப்போதுமே சிரித்த முகத்துடன் இருப்பார்கள். குழந்தைகளின் சுபாவம் அது. பெரியவர்கள் சோர்ந்து இருக்கிறபோதும், உற்றவர்கள் மடிந்துவிட்டனரே என்று பிணத்தருகே உட்கார்ந்து வருந்திக்கொண்டு இருக்கிறபோதும் குழந்தைகள் சிரிக்கும். இதனால் அந்தக் குழந்தைகள் "சா-இன்-மூ-கா-அம்" (சண்முகம்) என்று சொல்லப்பட்டனர். சாவிலும் சோர்விலும் இனிய முகத்தையுடையவர்கள் என்று பொருள்.

ஆகவே, குழந்தைகளுக்கு கன்துவைக்கொடுத்து வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையை உண்டாக்குவதுதான் "கன்-து-அன்-வண்நகா அம்" (கந்தன் வணக்கம்)

மூ-இரு-கா-அன்-வண்நகாஅம் †

இளைஞர்களுக்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மையை அளிப்பது "மூ-இரு-கா-அன்-வண்நகாஅம்" (முருகன் வணக்கம்)

அந்தக் காலத்தில் இளைஞர்களின் பொறுப்பு மகத்தானது. சிறுவர்களாக இருந்தபோது தாயிடமிருந்தும், மற்றீ மூத்தவர்களிடமிருந்தும் பெற்ற 'வண்நகாஅம்' முழுவதையும் திருப்பி எல்லோருக்கும் அளிக்கக் கடமைப்பட்டிருந்தனர். அவர்கள் அளித்த 'வண்நகாஅம்' எவ்விதமிருந்ததோ, அதைப் பொறுத்திருந்தது குலத்தின் உயர்வு தாழ்வு என்றுகூட சொல்லலாம். அவர்கள் குலத்திற்கு 'வண்நகாஅம்' அளிப்பதற்கு, முதலாவதாக, குலம் அவர்களுக்கு 'வண்நகாஅம்' அளிக்கவேண்டியிருந்தது. குலம் அவர்களுக்கு 'வண்நகாஅம்' அளித்தபோது, அவர்கள் குலத்திற்கு 'வண்நகாஅம்' அளித்தனர்.

அவர்கள் மூப்படைந்தவர்களைக் காப்பாற்றவேண்டியிருந்தது. இதுதான் அவர்கள் வணக்கத்தில் பிரதான அம்சம். இதனால் அவர்கள் 'மூ-கா' என்று கூப்பிடப்பட்டனர். மூப்படைந்தவர்களைக் காப்பாற்றுகிறவர்கள் என்று பொருள். இதே அர்த்தத்தில் 'மூ-இரு-கா' என்றும், 'ஆறு-மூ-கா' (ஆறுமூகா) என்றும் கூப்பிடப்பட்டனர். மூஇருகா என்றால், மூப்படைந்து இருப்பவர்களைக் காப்பவர்கள் என்றும், ஆறுமூகா என்றால், தணிந்து குளிர்ந்து மூப்படைந்தவர்களைக் காப்பவர்கள் என்றும் பொருள்.

---

† மூ-இரு-கா-அன்-வண்நகாஅம்: [முருகன் வணக்கம்] மூப்படைந்திருப்பவர்களைக் காப்பாற்றுகிறவர்களுக்கு வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மையை அளிப்பது. [மூ: மூப்பு; இரு: இருத்தல்; கா: காப்பாற்றுதல்]

மூத்தவர்களைக் காப்பாற்றுவதோடு, பெண்களின் வயிற்றில் கருவை உண்டாக்கி வளமையை உண்டாக்குவது இளைஞர்கள் அளிக்கவேண்டிய இரண்டாவது வண்நகாஅம். இதனால் அவர்கள் "வள்-ஈய்-கா-இன்-தா-அன்" (வள்ளீ காந்தன்) என்று சொல்லப்பட்டார்கள். வளமையை ஈய்ந்து காப்பையும் இனிமையையும் தருகிறவன் என்று பொருள்.

குலத்தினர் மிகவும் கஷ்டப்பட்டு மனச்சோர்வடைந்துவிட்டபோது, அவர்களுக்கு மேன்மையை உண்டாக்கும் வண்ணம் பாடுபடுவது இளைஞர்கள் அளிக்கவேண்டிய மூன்றுவது வண்நகாஅம். இதனால் அவர்கள் "சா-மீ-ந-தா-அன்" (சாமீநாதன்) என்று கூப்பிடப்பட்டனர். சோர்விலே மேன்மையை மிகுத்துத் தருகிறவன் என்று பொருள்.

இளைஞர்கள் எப்போதுமே வேலும் கையுமாக இருக்கவேண்டியிருந்தது. இதனால் "வேல்-அன்" (வேலன்) என்று கூப்பிடப்பட்டார்கள். அவர்கள் எப்போதுமே கையில் கற்களை வைத்திருக்க வேண்டியிருந்தது; இதனால் "கன்-அன்" (கன்னன்) என்று சொல்லப்பட்டனர். அவர்கள் எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டியிருந்தது. இதனால் "கண்-அன்" (கண்ணன்) என்று கூப்பிடப் பட்டனர். வண்மையுடையவர்களாக இருக்க வேண்டியிருந்தது. இதனால் அவர்கள் "வண்-அன்" (வண்ணன்) என்று விளிக்கப்பட்டனர். வல்லமையுடையவர்களாக இருக்க வேண்டியிருந்ததனால் 'வல்-அன்' (வலன்) என்று கூப்பிடப்பட்டார்கள். அவர்கள் உணவைத் தேடி வந்து அளித்ததனால் 'தூ-தா-அன்' (தூதன்) என்று சொல்லப்பட்டார்கள். மிருகங்களை அற்றுப் போகும்படி ஒழித்ததனால் 'மா-அற-அன்' (மாறன்) என்று குறிப்பிடப்பட்டனர். அழிவை அவர்கள் அழித்தபோது 'வீ-இரி-அன்' (வீரியன்) என்று பாராட்டப் பட்டனர். கல்வின்

வலிமையைப் பெற்றிருந்தவர்கள் 'கன்-தா-அன்' (கந்தன்) என்று குறிப்பிடப்பட்டனர்....இளைஞர்கள் 'வண்நகா அம்' அளித்ததற்கு அறிகுறியாக உண்டான பெயர்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. போகப் போகப் பார்ப்போம்.

இவ்விதம் இளைஞர்கள் குலத்திற்கு 'வண்நகா அம்' அளித்தபோது, குலத்திலிருந்த மற்றவர்கள் இளைஞர்களுக்கு எவ்விதம் 'வண்நகா அம்' அளித்தனர்? இளைஞர்களை வரவேற்றார்கள். "இன்-து-தே-வா!" என்று சொல்லி; இனிய உணவைப் புசிக்க வருக என்று அழைத்தார்கள். என்னுடன் புணர்க என்று சொல்லி அந்த இளைஞர்களுடன் புணர பெண்கள் போட்டியிட்டனர். "அ-இன்-பு-தே-வா!" என்றார்கள். அழகையும் இனிமையையும் பண்பையும் புசிக்க வருக என்று பொருள். அழகு, இன்பம், பண்பு ஆகிய மூன்றையும் தருகிற "மூ-தா-அம்" (முத்தம்) ஈய்ந்தார்கள். இனிமையை ஈய்கின்றவர்களாக (இன்-ஈய்-அர்) ஆனார்கள்.

இதுதான் மூஇருகா, கண்ணன் முதலிய இளைஞர்களுக்குத் திருப்பிக் கிடைத்த 'வண்நகா அம்'!

கா-இன்-ஈய்-வண்நகாஅம் †

இளைஞர்களைப்போல் இளம் பெண்களுக்கு—பத்து வயதைத் தாண்டியவர்களுக்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மையை உண்டுபண்ணுவது தான் 'கன்னி வண்நகா அம்'

† கா-இன்-ஈய்-வண்நகா அம் : [கன்னி வணக்கம்] காப்பையும் இனிமையையும் ஈய்கிற பெண்களுக்கு வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மையை அளித்தல்.

காப்பை அளிப்பது ‘கா-ஈய்’ (காய்). அதைக் கல்லால் அடித்தால் அது கீழே விழுகிறது. கல்லினால் அடிக்கப்படுவது ‘கன்-ஈ’. அடிபட்டக்காய் ‘கன்னி’ விடுகிறது.

அதற்கு பதிலாக காயை மரத்திலேயே விட்டால், அது காப்போடு இனிமையையும் தருகிற இனிய உணவாக ஆகிறது. “கா-இன்-ஈய்-இன்-து” (கனிந்து.)

காப்போடு இனிமையையும் ஈயும் இனிய உணவாக ஆகிறபோது, நிலப்பாரப்பினால் இழுக்கப்படுகிற தன்மையைப் (பா-இழு-அம்: பழம்) பெறுகிறது. பாரப்பினால் இழுக்கப்படுகிற உணவு, தானாகக் கீழே விழுகிறபோது, அடிப்பட்டு நசுங்கி விடுகிறது. ஆகவே, கீழே விழுந்து நசுங்குகிறவை எல்லாம் ‘பா-இழு-து’ (பழுது) ஆகி விடுகின்றன.

ஆகவே, மரத்திலிருக்கிற காய்க்கு ஏற்படுகிற கதி, பூப்படையாத பெண்ணுக்கு ஏற்படக் கூடாது. அவள் கல்லினால் அடிக்கப்பட்டு விழுகிற ‘கன்-ஈ’யாகவோ அல்லது தானாக விழுந்து நசுங்குகிற ‘பா-இழு-து’வாகவோ ஆகக்கூடாது. இதற்கு பதில் காப்பையும் இனிமையையும் ஈய்கிறவளாக (கா-இன்-ஈய்: கன்னி) இருக்க வேண்டும்.

இதற்கு அவளுக்கு மற்றவர்கள் காப்பையும் இனிமையையும் ஈயவேண்டும். அப்போதுதான் அவளுக்கு வண்நகாஅம் உண்டாகும்.

இதற்குக் காயைப் பழுக்க வைப்பதுபோல், பருவத்தை அடையவிருக்கும் பெண்களுக்குக் காப்பையும் இனிமையையும் ஈய்ந்து பருவத்தை அடையச் செய்ய வேண்டும். பருவத்தை அடைந்தவுடன், ‘பழுது’வாக ஆகிவிடாதபடிக்கு, காப்பையும் இனிமையையும் அளிப்பவளாக ஆக்கவேண்டும்.

எல்லா பெண்களும் ஒரே வயதில் பூப்படைவதில்லை. சிலர் முன்னதாக மலர்கிறார்கள். சிலர் காலம் கடந்து மலர்கிறார்கள். மலர்கிற வரைக்கும் அவர்கள் காப்பைமட்டும் அளிப்பவர்களாக இருக்கிறார்கள். மலர்ந்தவுடன் இனிமையையும் அளிப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மலர்வது, வண்மையை மிகுக்கும் தன்மையுடையது. மலர்ந்த பிறகு அவர்கள் பெற்றும் பிள்ளைகள் வண்மையை மிகுத்துக் காப்பை உண்டு பண்ணுகின்றன. ஆகவே அவர்கள் மலர்வதென்பது குலத்தில் முக்கியமான சம்பவங்களில் ஒன்று.

விரைவில் மலரவேண்டுமென்று ஆசைப் பட்டு, மலருவதற்கு முன்பு புணர்ச்சிக்கு அவர்களை இழுத்தால், அவர்களுக்கு வண்நகாஅம் குறைந்துவிடும். அவர்கள் கல்லினால் அடிக்கப்பட்ட காயின் நிலையை அடைவர். ஆகவே மலரவிருக்கும் பெண்களுடன் யாரும் புணராத படி தடுத்து, அப்பெண்களுக்குக் காப்பையும் இனிமையையும் ஈய்ந்து வருவதே அவர்களுக்கு வண்நகாஅம் அளிப்பதாகும். அதாவது, அந்தப் பக்குவத்திலிருக்கும் பெண்கள் தாமாக புணர வந்த போதிலும், மறுத்து விடுவதும், அதே சமயம் அவர்களுக்கு இனிமை உண்டாகும்படி நடந்து கொள்வதும்தான் காப்பையும் இனிமையையும் ஈய்வதாகும். புணர்ச்சியைத் தவிர அவர்கள் விரும்புவதை அளிப்பது வண்நகாஅம் அளிப்பதாகும்.

அவர்கள் மலர்ந்தவுடன் எல்லா இளைஞர்களும் அவர்கள் பேரில் போய் விழுவது, அவர்களைப் 'பழுது' வாக்கிவிடும். அவர்களுக்கு சில நாட்கள்வரை காப்பையும் இனிமையையும் ஈய்ந்து (காய்-இன்-ஈய்), வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மையை (வண்நகாஅம்) அளிக்கவேண்டும்.

இது ஒவ்வொரு குலத்திலும் கோலாகலமான திருவிழா காலமாகும்.

கா-இரி-நாள் †

மலர்ந்த பெண்ணை அலங்கரித்து விடுவது, அவள் மலர்ந்ததனால் குலத்திற்கு மிகவிருக்கிற வன்மையைக் குறித்துப் புகழ்பாடுவது, அவள் அடையவிருக்கும் இன்பங்களைக் குறித்து மகிழ்வது, குறிப்பிட்ட காலம்வரை அவளுடன் ஆடவர்கள் புணராதபடி பார்த்துக்கொள்வது, அவள் உள்ளத்தில் ஆசையையும் ஆர்வத்தையும் தூண்டி விடுவது முதலியவைதான் மற்ற பெண்கள் அவளுக்கு அளிக்கும் வண்நகாஅம். அவளுக்கு விருப்பமான மலர்களையும், உணவுகளையும் கொண்டுவந்து கொடுப்பது, அவளுக்கு வளமை அளிக்க ஆர்வமுள்ளவர்களாகக் காட்டிக்கொள்வது, அவள் மெச்சும்படியாக வீரதீரச் செயல்களைச் செய்வது முதலியவைதான் ஆண்கள் அவளுக்கு அளிக்கும் வண்நகாஅம்.

கடைசியாக அவளுக்கு வன்மையை உண்டாக்கும் தினம், எல்லோருக்கும் திருவிழா நாளாக இருக்கும். அவளுடன் புணர்வதற்கு எல்லா ஆடவரும் போட்டியிடுவர். புணர்வதுதானே வண்நகாஅம் அளிப்பது? ஆனால் அவள் தனக்குப் பிடித்தமானவனையே புணர்ச்சிக்கு அழைத்துக்கொள்ளுவாள். மற்றவர்கள் அவளுடைய மகிழ்ச்சியில் பங்கு கொண்டவர்களாகக் கூடி மகிழ்வர். இதுதான் கன்னி வண்நகாஅம்.

அந்தத் திருவிழாவிற்கு மறுநாள் எப்போதுமே 'காஇரி-நாள்' (கரிநாள்.) அந்தத் திருவிழாவில் கலந்து குதூகலித்துக் கூத்தாடிக் கும்மாளமடித்தப் பிறகு, இயல்பாகவே எல்லோரும் களைப்படைந்தனர். களைப்புடன் உறங்குவர். மறுநாள் முழுதும் அந்தக் களைப்பு நீடிக்கும்.

---

† கா-இரி-நாள்: காப்பைக் கெடுக்கும் நாள்.

அன்றைய தினம் திடீரென்று ஏதாவது அபாயம் நேர்ந்த தென்றால், அதைச் சமாளிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. ஆகவே, அந்த மறுநாளைக் 'காஇரி-நாள்' (கரிநாள்) என்றனர். காப்பைக் கெடுக்கும் நாள் என்று பொருள்.

கட-உள்-வண்நகாஅம் †

இதுவரை வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மைகளைப் பார்த்து வந்தபோது, ஒரு விஷயம் புலப்பட்டிருக்கும். அதாவது, வண்நகாஅம் என்பது ஒருவருக்கொருவர் அளிக்கின்ற உதவி. இந்த உதவியை செத்தவர்களுக்கும் அளிக்கலாமா? செத்தவர்கள் தாம் பெறும் வணக்கத்தை உள்ளவர்களுக்கு அளிப்பார்களா? உள்ளவர்களுக்குத்தானா வண்நகாஅம்? கடந்தவர்களுக்கு வண்நகாஅம் இல்லையா?

காலப்போக்கில் இந்தப் பிரச்னை எழுந்தது. உள்ளவர்களுக்கு அளிப்பது போலவே கடந்தவர்களுக்கும் அளிக்கவேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். உள்ளவர்களைப் போலவே கடந்தவர்களும் திருப்பி வண்நகாஅம் அளிப்பார்கள் என்று நினைத்தனர். ஆகவே, வண்நகாஅம் அளிப்பதென்பது, 'கட-வுள்' என்ற இருசாராருக்கும் உரியது. 'கட-வுள்' என்ற இரு அம்சங்களையும் பொருந்தியது.

கடந்தவர்களுக்கும் உள்ளவர்களுக்கும் சேர்த்து அளிக்கப்படுகிற 'வண்நகாஅம்' தான் கடவுள் வணக்கம்.

தாய்க்குக் குழந்தைகள் "வண்நகாஅம்" அளித்துக் கொண்டு இருக்கின்றனர். திடீரென்று ஒருநாள் அவள்

---

† கட-உள்-வண்நகாஅம் : [கடவுள் வணக்கம்] கடந்தவர்களுக்கும் உள்ளவர்களுக்கும் வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மையை அளிப்பது. [கட : கடந்தது : உள் : உள்ளது]

இறந்து விடுகிறாள். அவள் இடத்திற்கு வேறு தாய் வருகிறாள். இப்புதிய தாய் வணக்கத்திற்கு உரியவளாகிறாள். அத்தனை காலமாக தம் குலத்தினரிடமிருந்து 'வண்நகாஅம்' பெற்றுக்கொண்டிருந்த தாய், செத்தப்பிறகு யாரிடமிருந்து 'வண்நகாஅம்' பெறுவாள்?

தாய் குழந்தைகளுக்கு 'வண்நகாஅம் அளித்துக் கொண்டிருக்கிறாள். திடீரென்று அக் குழந்தைகளில் சில மடிந்து விடுகின்றன. அத்தனை காலமாக தாயிடமிருந்து 'வண்நகாஅம்' பெற்று வந்த குழந்தைகள், செத்தப் பிறகு யாரிடமிருந்து 'வண்நகாஅம்' பெறும்?

செத்தவர்களுக்கு எவ்விதம் வண்நகாஅம் அளிப்பது? அவர்கள் உள்ளவர்களைப்போலவே திருப்பி வண்நகாஅம் அளிக்கும் தன்மையுடையவர்கள்தானா? திருப்பி வண்நகாஅம் அளிப்பார்களா? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? எப்படி இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்?

இந்தக் கேள்விகளுக்கு எவ்விதம் அவர்கள் பதிலைக் கண்டார்கள், எவ்விதம் கடந்தவர்களுக்கும் வண்நகாஅம் அளிக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்கள் என்ற விஷயத்தை வேறு ஒரு இடத்தில் நாம் கவனிப்போம். இப்போது நான் தெரிவித்துக்கொள்வது, உள்ளவர்களைப் போலவே கடந்தவர்களையும் நடத்தவேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள் என்பதே.

'உள்'வண்நகாஅம் என்பதை அவர்கள் 'கட-உள்' வண்நகாஅம் ஆக ஆக்கினார்கள் என்பதே முக்கியம். உள்ளவர்களைப் போலவே கடந்தவர்களும் தம் பங்கிற்கு திருப்பி வண்நகாஅம் அளிக்கக் கடமைப்பட்டவர்கள் என்று நினைத்தனர்.

கடந்தவர்கள் என்போர் யார்?

சா-அம்-போ-மா-கா-தே-வா †

எத்தனையோ தாய்கள் கடந்தவர்கள். அந்தத் தாய்களில் சிலருக்குக் 'காஇளி' என்று பெயர். வேறு சிலருக்கு 'வீஇரி', 'மோஇடி', 'குமாஇரி', 'மகாஅம்ஆயி', 'மாஇரி', 'அல்ச', 'வல்சய்', 'சிவாகாமீ', 'மீஇன்அசி', 'பார்வாதி' 'அம்மே', 'அம்பாள்' என்று பெயர். அதாவது, கடந்தவர்களில் காளிகள் எத்தனையோ பேர்! வீரிகள் எத்தனையோ பேர்! சிவாகாமீகள் எத்தனையோ பேர்!

அதேபோல் செத்துபோன இளைஞர்களில் மூகாகள் எத்தனையோ பேர்! மூஇருகாகள் எத்தனையோபேர்! சாஇன்மூகம்கள் எத்தனையோபேர்! கண்அன்கள் எத்தனையோபேர்!

கடந்தவர்களுக்கு 'வண்நகாஅம்' அளிப்பது என்றால் அத்தனைபேருடைய பெயர்களையும் சொல்லி அழைக்கவேண்டும். அத்தனை பேருக்ும் வண்நகாஅம் அளிக்கவேண்டும்.

ஆகவே, "கட-வுள் வணக்கம்' என்பதில், முதல் பகுதி முழுவதும் கடந்தவர்களின் பெயர்களைச் சொல்லி அழைத்து வண்நகாஅம் பெறும்படி கூறுகிற சடங்காகவும், இரண்டாவது பகுதி முழுவதும், உள்ளவர்கள் உணவுப் பொருள்களைப் புசித்து வண்நகாஅம் பெறுகிற சடங்காகவும் இருக்கின்றது.

அதாவது, அந்தக் காலத்தில், வாழ்ந்தவர்கள் உணவுப் பொருள்களைத் தேடிக் கொண்டுவந்து தாயிடம் கொடுத்துத் தாய்க்கு 'வண்நகாஅம்' உண்டாக்கினர்.

---

† சா-அம்-போ-மா-கா-தே-வா: செத்தத் தன்மையில் போனவர்கள், [மிருகங்களாகிய] மனிதர்களைக் காப்பாற்றும் பொருட்டு உணவைப் புசிக்க வருதல்.

தாய் அந்த உணவுப் பொருள்களை எல்லோருக்கும் பகிர்ந்துகொடுப்பதன்மூலம் உள்ளவர்களுக்கு வண்நகாஅம் அளிப்பதற்கு முன்பு, கடந்தவர்களுக்கு வண்நகாஅம் அளிக்க உணவுப் பொருள்களைப் பரப்பச் செய்தாள். அந்தப்பொருள்களுக்கு முன்பு நின்றுகொண்டு, கடந்தவர்களின் பெயர்களை வரிசையாகச் சொல்லிக் கூப்பிட்டாள். அந்த உணவுப் பொருள்களைப் புசிப்பதன்மூலம் வண்நகாஅம்பெறும்படி கேட்டுக்கொண்டாள். எவ்விதம் அழைத்தாள்?

"ஏ தாயி! காஇளி! ஆயி! மாயி! மகாஆம்ஆயி! வீஇரி! மாஇரி! சிவகாமீ! அம்மே! பார்வாதி! அல்ஈ! வல்ஈய்! மீஇன்அசி! ...." என்று வரிசையாகக் கூப்பிட்டாள். பிறகு "வாநீ! நீ-வா! தே-வி! ஊ-மா-தே-வி! மா-து-தே-வி! கன்-ஈ-தே-வி! ...." என்று உணவுகளின் பெயர்களைச் சொல்லி புசிக்க விரையும்படி அழைத்தாள்.

பிறகு இளைஞர்களை அழைத்தாள் :—

"மூகா! மூஇருகா! சாஇன்மூகா! சாமீநதா! மூஇன்ஈய் புஇன்கா! கண்-அன்! கன்-அன்! வேல் அன்!........" என்று ஒவ்வொருவருடைய பெயரையும் சொல்லி அழைத்தாள். பிறகு, 'வா-வா! நீ-வா! வி-வா! தே-வா! இன்-து-தே-வா! கன்-து-தே-வா! மா-து-தே-வா! ஊ-மா-தே-வா! மா-ஊ-தே-வா!........" என்று வரிசையாக உணவுப் பொருள்களைச் சொல்லி புசிக்க வரும்படி அழைத்தாள்.

"சா-அம்-போ-மா-கா-தே-வா!" என்றால், "செத்துப்போனவர்களே! மிருகங்களைக் காக்கும் பொருட்டு உண்ண வருக!" என்று கூப்பிடுவதாகும்.

இவ்விதம் கடந்தவர்களுக்கு வண்நகாஅம் அளித்தப்பிறகு, உள்ளவர்களுக்கு வண்நகாஅம் அளிக்க ஆரம்பித்தாள். உள்ளவர்களைப் புசிக்கும்படி கூறினாள்.

கட-உள்-ஓம் †

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், உள்ளவர்களிடையே இருந்த பன்மை தாய் என்ற ஒருமைக்குள் அடங்கியதுபோல, கடந்தவர்களிடையே இருந்த பன்மை, ‘காலம்’ என்ற ஒருமைக்குள் அடங்கியது. உள்ளவர்களிடையில் பல தாய்கள் இருந்தது போலவே, செத்தவர்களிடையிலும் பல தாய்கள் இருந்தனர். உள்ளவர்களிடையில் பல இளைஞர்கள் இருந்ததுபோலவே செத்தவர்களிடையிலும் பல இளைஞர்கள் இருந்தனர். உள்ளவர்களிடையே பல முனிகள் இருந்ததுபோலவே செத்தவர்களிடையிலும் பல முனிகள் இருந்தனர். உள்ளவர்களிடையில் இருந்த பன்மை, தாயின் அதிகாரம் என்ற ஒருமைக்குள் அடங்கியது. செத்தவர்களிடையே இருந்த பன்மையை, சந்ததிகள், ஒரே தாயைக் குறிக்கும் பல பெயர்கள் என்று நினைத்தனர். பல தாய்களை ‘வண்நகாஅம்’ பெற அழைத்தபோது கேட்டுக் கொண்டிருந்த சந்ததிகள், அழைக்கப்பட்ட அத்தனை பெயர்களும் ஒரே தாயைக் குறிக்கும் பல பெயர்கள் என்று நினைத்தனர். அதே போல் அழைக்கப் பட்ட அத்தனை இளைஞர்களுடைய பெயர்களும், அத்தனை முனிக்களுடைய பெயர்களும், அத்தனைக் கன்னிகளுடைய பெயர்களும், ஒரே இளைஞனைக் குறிக்கும் பலப் பெயர்களாக, ஒரே முனியைக் குறிக்கும் பலப் பெயர்களாக, ஒரே கன்னியைக் குறிக்கும் பலப் பெயர்களாக நினைக்க ஆரம்பித்தனர். இவ்விதம் செத்துபோன இளைஞர்களின் பன்மையும், தாய்களின் பன்மையும், முனிகளின் பன்மையும், கன்னிகளின் பன்மையும் ஒவ்வொரு ஒருமைக்குள் அடங்கின. அந்த பல்வேறு நபர்களும் பல்வேறு காலங்களில் செய்த காரியங்களைப் பற்றிய கதைகளும் ஒருமைக்குள் அடங்கின.

† கட-உள்-ஓம்: கடந்ததையும் உள்ளதையும் அடக்கிக்கொண்டிருக்கும் ஓம் என்ற ஸ்திதி.

பன்மையை அடக்கியிருக்கிற இந்த ஒருமைதான் கடந்தவர்களின் "ஓம்" என்ற ஸ்திதி. காளி என்றால் தாய், கந்தன் என்றால் சிறுவன், முருகன் என்றால் இளைஞன், கன்னி என்றால் மங்கை, முனீ என்றால் பெரியவன் என்ற கருத்துக்கள்தான் "ஓம்". கடந்தவர்களிலேயே தாய்மைக்குரியவளுக்கு இன்னின்ன பெயர்கள், பிள்ளைமைக்குரியவர்களுக்கு இன்னின்ன பெயர்கள், இளமைக்குரியவர்களுக்கு இன்னின்ன பெயர்கள் என்ற நிலையை "ஓம்" என்ற ஸ்திதி உண்டாக்கிற்று.

தே-வா-தா-வண்நகாஅம் †

இவ்விதம் கடந்தவர்களுக்கும் உள்ளவர்களுக்கும் குலம் வண்நகாஅம் அளித்தும், வண்நகாஅம் பெற்றும் வந்தபோது, அவர்கள் தம்மைச் சுற்றி இயங்கிய இயற்கையிடமிருந்தும 'வண்நகாஅம்' பெற்றனர். ஆகவே அந்த இயற்கைக்கும் 'வண்நகாஅம்' அளிப்பது தம் கடமை என்று நினைக்க முற்பட்டனர்.

அவர்கள் தம்மைச் சுற்றி இருந்த இயற்கையை உயிருடன் இயங்குபவையாக நினைத்தனர். பார்க்கும் சக்தியும், கேட்கும் சக்தியும் முகரும் சக்தியும், உணரும் சக்தியும், சுவைக்கும் சக்தியும், பேசும் சக்தியும், காக்கும் சக்தியும், அழிக்கும் சக்தியும், நடமாடும் சக்தியும், தோன்றும் சக்தியும், மறையும் சக்தியும், மகிழும் சக்தியும், வருந்தும் சக்தியும் தம்மைச் சுற்றியுள்ளவற்றிற்கு

† தே-வா-தா-வண்நகாஅம்: உட்கொள்ள வருகிறவர்களுக்கும் தருகிறவர்களுக்கும் வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையை அளித்தல். [தேவா: உட்கொள்ள வருபவை; தேதா: உட்கொள்ள தருபவை அல்லது உட்கொள்ளும் வலிமையுடையவை]

இருப்பதாக நினைத்தனர். தம்மைச் சுற்றியிருந்த ஒவ்வொரு பொருளும் 'ஊ-ந-ஊ' போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை உணர்ந்தனர். தம்மைச் சூழ்ந்திருந்த ஒவ்வொன்றும் ஒரு சமயம் தமக்கு அபாயமாக இருந்ததையும், வேறு சமயம் தமக்கு உதவியாக அமைந்ததையும் வெகுகாலம் பார்த்தனர். தம்மைச் சுற்றியிருந்த ஒவ்வொன்றும் தத்தமக்கு 'வண்நகாஅம்' பெறுவதற்கு முயற்சிப்பதை உணர்ந்தனர்.

வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை (வண்நகாஅம்), சின்னஞ்சிறிய பூச்சிகளிலிருந்து மிகப் பெரிய யானைவரை எல்லா மிருகங்களுக்கும் வேண்டியிருந்தது. பறவைகளுக்கும் தாவரங்களுக்கும்கூட வேண்டியிருந்தது. தண்ணீருக்கும் இருட்டிற்கும், நிழலிற்கும், மேகத்திற்கும்கூட வேண்டியிருந்தது. காட்டுத் தீய்க்கும், சூரிய வெளிச்சத்திற்கும், சந்திரனொளிக்கும், உஷ்ணத்திற்கும்கூட இத்தன்மை வேண்டியிருந்தது. எல்லாம் 'வண்நகாஅம்' பெற முயற்சித்தன.

அவற்றில் சில மனிதர்களுக்கும் 'வண்நகாஅம்' அளித்துக்கொண்டு இருந்தன. சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலியவை மனிதர்களுக்கு வெளிச்சம் கொடுத்து 'வண்நகாஅம்' அளித்தன. நிழல், தண்ணீர், மழை முதலியவையும் மனிதர்களுக்கு 'வண்நகாஅம்' அளித்தன. மரங்களில் காய்த்துக் குலுங்கிய காய்கனிகளும், தரையில் பதிந்திருந்த கிழங்கு வகைகளும் மனிதர்களுக்கு 'வண்நகாஅம்' அளித்தன. சுலபமாகக் கிடைத்த நண்டு நத்தை ஆமைகளும் மனிதர்களுக்கு வண்நகாஅம் அளித்தன. மனிதர்கள் வைத்தப் பொறிகளில் தாமாக வந்து சிக்கிக் கொண்ட மிருகங்களும் மனிதர்களுக்கு வண்நகாஅம் அளித்தன. மனிதர்களைக் கண்டவுடன் மேலே விழுந்து பிடுங்காமல், தாக்கிக் கொல்லாமல், மிரண்டு ஓட்டம் பிடித்த மிருகங்களும் மனிதர்

களுக்கு வண்நகாஅம் அளித்தன. மனிதர்களை அலட்சியப் படுத்தி தம் வழியே சென்ற வலிமை மிகுந்த மிருகங்களும் மனிதர்களுக்கு வண்நகாஅம் அளித்தன.

மனிதர்களுக்கு வண்நகாஅம் அளிக்காதவை எவை?

காட்டுத் தீ, எரிமலைகள், கொடூரமான சூரிய வெப்பம் முதலியவை மனிதர்களுக்கு வண்நகாஅம் அளிக்கவில்லை. கொடூர காட்டு இருட்டு, கடலின் ஆழத்திலுள்ள இருட்டு, பாதாளத்திலுள்ள இருட்டு, விடாது பெய்யும் அடைமழை, கரைபுரண்டு காடுகளை மூழ்கடிக்கும் வெள்ளம், சுற்றி இழுக்கிற சுழல், சூராவளி முதலியவை மனிதர்களுக்கு வண்நகாஅம் அளிக்கவில்லை. மனிதர்களைக் கண்டவுடன் பாய்ந்து புசிக்க வருகிற மிருகங்கள், விழுங்க வருகிற பாம்புகள், கடித்துக் கொல்கிற சர்ப்பங்கள் முதலியவை மனிதர்களுக்கு வண்நகாஅம் அளிக்கவில்லை. மனிதர்களை விழுங்குகிற பெரிய மீன்கள், முதலைகள் முதலியவைகளும் வண்நகாஅம் அளிக்கவில்லை.

இவ்விதம் அவர்களுடைய சுற்றுப்புறத்தில் இயங்கியவற்றுள்ள அவர்களுக்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மையைச் சில அளித்தன; சில அளிக்கவில்லை.

வண்நகாஅம் அளிப்பவர்களுக்குத் திருப்பி வண்நகாஅம் அளிப்பது அல்லவா அந்த சமுதாயத்தின் தர்மம்? அது பொதுவுடைமை சமுதாயம் அல்லவா? திருப்பி எவ்விதம் வண்நகாஅம் அளிப்பது?

அவர்களுக்கு வண்நகாஅம் அளிக்காதவற்றிற்கு அவர்கள் வண்நகாஅம் அளிக்கலாமா? வண்நகாஅம் அளித்தால் அவை அவர்களையே அழித்துவிடாதா?

இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் எவ்விதம் பதிலைக் கண்டு பிடித்தார்கள் என்று பார்ப்போம்.

கா-ந-வதி-வண்நகாஅம் †

அவர்கள் "வண்நகாஅம்" அளிப்பவை ஒவ்வொன்றும் வல்லமையுடையவையாக இருக்கின்றன என்று கருதினர்கள். வல்லமையுடையவை ஒவ்வொன்றும் வண்நகாஅம் 'அளிப்பதாக எண்ணினர்.

மிருகங்களில் மிகவும் அதிக வலிமையுடையது யானை. அந்த யானைகளிலேயே மிகவும் வலிமையுடையது அவற்றின் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் யானை.

யானையின் வலுவை அது தனியாக இருக்கிறபோது தெளிவாகப் பார்க்கலாம். கற்களால் அடித்து அதைச் சாகடித்து விடமுடியாது. கூச்சல் போட்டு விரட்டிவிட முடியாது. அது அண்டம் அதிர பிளிறிக் கொண்டும், துதிக்கையைத் தூக்கிக் கொண்டும், நான்கு அடிகளை எடுத்து விரைவாக வைத்தால் போதும்! அந்தக் காட்சியே மனிதர்களைச் சாகடிக்கப் போதும்! அது கோபம் கொண்டுவிட்டால் வழியிலுள்ள மரங்களை முறித்துத் தள்ளும். கிளைகளை உடைக்கும். கொடிகளைத் துவைக்கும். துதிக்கையினுல் கிளைகளை முறித்து அடிக்கும். கற்களைத் தூக்கி எறியும். கால்களால் பாறைகளை உருட்டிவிடும். துதிக்கையினுல் கட்டிப் பிடிக்கும். இறுக அணைத்து நொருக்கும். உயரத் தூக்கி எறியும். மிருகங்களுக்குப் பாதுகாப்பாகவுள்ள பரப்புகளையெல்லாம் அழித்துவிடும்.

தனிமையில் இருக்கிறபோது மிருகங்களின் காப்பிடங்களைக் கெடுப்பதனுல் அது 'கா-இரி-மா' (கரிமா).

---

† கா-ந-வதி-வண்நகாஅம்: (கணவதி வணக்கம்) காப்பை மிகுதியாகக் கொண்டு வசிக்கிற யானைக்கு வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மையை அளித்தல்.

கட்டிப்பிடித்துத் தடுப்பதனால் யா-அனை (யானை). அச்சத்தை உண்டாக்குவதோடு, என்ன செய்யுமோ, ஏது செய்யுமோ என்ற ஐயத்தையும் உண்டாக்குவதனால் அது "வெள்-ஐ-யானை" (வெள்ளையானை) மிருகங்களைப் பகைத்து வருகிறபோது அது "மா-தா-யானை" (மதயானை). அது மனிதர்களைப் பிடிப்பதற்காக விரைந்து வருகிறபோது 'தேத்-வா-யானை" (தேவயானை). மலை உச்சியில் கற்களை உருட்டியும், கற்களைத் தூக்கி எறிந்தும் நம்மை சாகடிக்க முயற்சிக்கிறபோது அது, "கன்-ஏ-சா-அன்" (கனேசன்). மற்ற மிருகங்களின் வல்லமையை அது அடக்குகிறபோது 'வல்-அவி' (வல்லவி). உயரமான பக்கங்களை பெற்றிருப்பதனால் அது 'நெடு-கை' (நெடுங்கை). பிற மிருகங்களின் காப்பைப் பார்த்து இகழும்படியான உருவம் உடையதாகையால் அது 'கா-இளி-உரு' (களிறு). மரங்களை அது முறிக்கிறபோது 'ப்இட்' என்று ஒலிக்கிறது. ஆகவே 'ப்இட்' என்று அழிக்கிற அது, 'ப்இட்-ஈ' (பிடி). அது உயரத்தை மிகுதியாக பெற்றிருப்பதனால் 'வார்-ந-அன்' (வாரணன்). துதிக்கையை மிக உயரத்திற்கு நீட்டி தன் உயரத்தை மிகுத்துக் கொள்ளும் தன்மையுடையதாகையால், 'வார்-ந-அம்' (வாரணம்).

தனிமையிலேயே மகத்தான வலிமையைப் பெற்றிருக்கிற யானை கூட்டமாகவே வசிக்கிறது. வலிமையைப் பதினாயிரம் மடங்கு பெருக்கித் தருகிறது அதன் கூட்ட வாழ்க்கை. கூட்டத்தில் ஒவ்வொரு யானையும் வலுவுடையவையாக இருக்கிறபோது, ஒவ்வொன்றிற்கும் மற்றவைக் காப்பை (கா) மிகுத்துக் (ந) கொடுக்கின்றன. செல்கின்றபோதும், நிற்கின்றபோதும், உறங்குகின்றபோதும், புணருகின்றபோதும் ஒவ்வொரு யானையையும் பாதுகாக்கப் பல யானைகள் இருக்கின்றன. இந்தத் தன்மையினால் ஒவ்வொரு யானைக்கும் 'கா-ந-வதி' (கணவதி) என்று பெயர். —காப்பை மிகுத்துக்கொண்டு வதிவது என்று பொருள்.

'கு(வ)லம்' மகோன்னதமாக இருப்பதற்கு யானைகள் சேர்ந்து வசிக்கும் தன்மையைவிட சிறந்த உதாரணம் வேறு எதுவும் இருக்கமுடியாது.

யானை நிற்கிறது. அதன் அருகே அதன் குட்டி நிற்கிறது. குட்டிக்கு ஏதாவது அபாயம் நேரிடுகிறது. உடனே யானை என்ன செய்கிறது? விரைகிறது (வி). நாக்காகிய (நா) துதிக்கையை உயர்த்துகிறது. குட்டியைக் கட்டிக் (யா) கொள்கிறது. காப்பாற்றுகிறது (கா) இதனால் அது "வி-நா-யா-கா-அன்" (விநாயகன்). துதிக்கையினால் (நா) கட்டிக் காப்பாற்றும் தன்மையையுடைய தலைமை யானை, "நா-யா-கா-அன்" (நாயகன்). கு(வ)லத்துடன் வசிக்கிற யானை, "கு(வ)லம்-வதி" (குலவதி).

துதிக்கை என்பது வாஸ்தவத்தில் யானைக்கு மூக்கு. மூக்கினால் அது காப்பாற்றுகிறது. மூக்கினால் காப்பாற்றும் தன்மை மூ-கா-அம் (மூகம்). மூக்கினால் மோப்பம் பிடிக்கிறது. மோப்பத்தினால் காப்பாற்றும் தன்மை 'மோ-கா-அம்' (மோகம்). மோப்பத்தினால் சாகடிக்கும் தன்மை 'மோ-சா-அம்' (மோசம்). மூக்கினால் சாகடிக்கும் தன்மை 'மூ-சா-அம்' (மூசம்). மூக்கினால் இல்லாததாக்கும் தன்மை 'மூ-இல்-அம்' (மூலம்.) காப்பாற்றிக் கொள்ளும் தன்மையையும் அழிக்கின்ற தன்மையையும் பெற்றிருத்தலால் அது 'கா-சா-அம்' (கசம்). காப்பாற்றுதல், அழித்தல் என்ற இரண்டு தன்மைகளையும் உடைய முகத்தைப் பெற்றிருப்பதினால் அது "கா-சா-அம்-மூகம்" (கசமுகம்) —மூகம் என்றால் கண், வாய், மூக்கு ஆகிய மூன்று இடங்களில் மூன்றுவித நிரையுடைய இடம் என்று பொருள். அதுதான் முகம்.

காப்பதில் சோர்வடையாதவன் 'கா-சா-அன்' (கசன்). அழிப்பதில் சோர்வடையாதவன் 'ஈ-சா-அன்' (ஈசன்).

காவற்காடுகளையும் வேலிகளையும் பிளந்து நொறுக்கு வது 'பிள்-இளை' (பிள்ளை).

ஒரு யானையைப் பிடிக்க விரைகிறபோது, அது காவற்காடுகளை உடைத்துக் கொண்டு வெளியேறினால், அது 'தே-வி-பிள்-இளை' (தேவி பிள்ளை). வேறு மிரு கங்களின் பாதுகாப்பான இடங்களைக் கைக் கொள்வ தற்காக வந்து, அந்த மிருகங்களின் காவல்களை உடைக் கிறபோது அது "மா-கா-தே-வா-பிள்-இளை" (மகா தேவா பிள்ளை). சாகடிப்பதில் மேன்பாடு உடையதாக (மதம்பிடித்து) அது மனிதர்களின் காவற்காடுகளை உடைக்கிற போது, 'சா-மீ-பிள்-இளை' (சாமீபிள்ளை). பரப்பையும் பாதுகாப்பையும் அழிப்பதற்காக விரைந்து காவற்காடுகளை அது உடைக்கிறபோது, 'பா-வீ-பிள்-இளை" (பாவிப்பிள்ளை).

இதுபோல அந்தந்த சமயத்தில் யானைச் செய்கிற வேலைக்கு ஏற்ப அதற்கு எத்தனையோ பெயர்கள் உண்டு. இந்தப் பெயர்களிலிருந்து, யானைகள் சில சமயம் மனி தர்களுக்குக் காப்பாற்றும் சக்தியாகவும், வேறு சில சம யம் அழிவு சக்தியாகவும் இருந்தன என்பது புலப்படும்.

யானைகள் கூட்டமாக இருக்கிறபோது மனிதர் களுக்கோ பிற மிருகங்களுக்கோ எவ்வித தீமையும் செய் வதில்லை. தாம் உண்டு, தம் போக்கு உண்டு என்று அவைத் தம் வழியே செல்லும். ஆத்திர மூட்டப்பட் டாலே ஆங்காரத்துடன் தாக்கும்.

புலி, சிங்கம், காடி முதலியவை மனிதர்களைக் கண்ட மாத்திரத்தில் மனிதர்கள்பேரில் பாய்ந்தபோது, யானைகள் மனிதர்களைப் பார்த்தபோதிலும், மனிதர்களை அணுகாமல் தம் வழியே சென்றுகொண்டிருக்கும். மனிதர்களால் தமக்கு அபாயம் என்று நினைத்தாலே ஆத்திரமடையும்.

யானைகளின் வல்லமை அல்லது யானைகளின் நட்பு அல்லது யானைகளின் உதவி மனிதர்களுக்கு இருந்தால், மனிதர்களின் வல்லமைப் பலமடங்கு அதிகமாகுமல்லவா? யானைகளிடமிருந்து வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மையை(வண்நகாஅம்) எப்படி பெறுவது என்று ஆதித் தமிழர்கள் சிந்தித்தார்கள்.

தோ-பு-க்அர்-ந-அம் †

இந்த சிந்தனையினால் யானைகளின் நட்பைப் பெறுவதற்கு முயற்சித்தார்கள். எவ்விதம்?

யானைகளுக்குத் தேங்காய் என்றால் மிகவும் விருப்பம். தேங்காய்களைப் புசிப்பதற்காக அவைத் தென்னந்தோப்புகளுக்கு வரும். தேங்காய்களை அவற்றிற்குப் பறிக்க முடியாது. அவற்றை விட மிகமிக உயரமானவை அக்காலத் தென்னை மரங்கள். மிகவும் சிறிய மரங்களிலிருந்த தேங்காய்களைச் சுலபமாக அவைத் துதிக்கையை நீட்டிப் பறித்தன. அந்த மரங்களில் தேங்காய் இல்லாதபோது, மிகவுயர்ந்த மரங்களிலிருந்து பறிக்க முடியாதபடி தவித்தன. மிக உயர்ந்த மரங்களை முட்டி மோதி, வேரோடு வீழ்த்தித் தேங்காய்களைப் புசிக்க முயன்றன.

யானைகளின் இந்தத் தேவையைத் தெரிந்துகொண்டான் தமிழன். யானை தேங்காய்களைப் புசிப்பதன்மூலம் 'வண்நகாஅம்' பெறுவதற்கு — வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மையைப் பெறுவதற்கு—

---

† தோ-பு-க்அர்-ந-அம்: (தோப்புக் கர்ணம்) தென்னந்தோப்பில் 'க்அர்' என்ற ஒலியை மிகுக்கும் தன்மை—தோ....தோ.... என்று அழைக்கும் பண்புடைய இடம் தோப்பு. மரங்களில் ஏறி இறங்கும் போது உண்டாகும் ஒலி கர்.

முயற்சிப்பதாக நினைத்தான். அந்த 'வண்நகாஅம்' அவற்றிற்குக் கிடைத்தால், அவைத் தமக்கு நட்பாக ஆகி, தமக்கு 'வண்நகாஅம்' அளிக்கும் என்று கருதினான்.

இதை அவன் சிந்தித்துதான் செய்தான் என்று நினைக்கவேண்டாம். மரங்களில் குரக்கு நிலையில் வசித்த காலத்திலிருந்தே, யானைகளுக்குத் தேங்காய்களைப் பறித்துப்போடும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. குரங்குகள் யானைகளுக்குத் தேங்காய்களைப் பறித்துப் போட்டன. யானைகள் குரங்குகளை எதுவும் செய்யாது விட்டன. மூதாதையர்களின் செய்கையையே மனிதனும் தொடர்ந்து செய்தான் என்று கூறலாம்.

யானைகள் தென்னந்தோப்பை அணுகியபோது, மனிதர்கள் தென்னமரத்தில் ஏறிக்கொண்டார்கள். யானைகளுக்குத் தேங்காய்களைப் பறித்துப்போட்டார்கள். அவை மிகவும் விருப்பத்துடனும் நன்றியறிதலுடனும் புசித்தன. நாள்தோறும் இவ்விதம் மனிதர்கள் யானைகளுக்கு 'வண்நகாஅம்' அளித்துவந்தபோது, யானைகள் மனிதர்களுக்கு 'வண்நகாஅம்' அளிக்க ஆரம்பித்தன. மனிதர்களைப் பகையாக நினைப்பதற்கு பதில், நட்பாக நினைக்க முற்பட்டன.

தேங்காய்க்கு மூன்று கண்கள் உண்டு. தேங்காயைக் கல்லில் இடித்து உடைக்கிறோம். அந்தக் காலத்தின் **அபினய பாஷையில்,** கண்களுக்குமேல் நெற்றியில், உள்ளங்கைகளைத் தேங்காய்போல் குவித்து மடக்கிக் கொண்டு, மூன்று தடவைக் குட்டிக்கொண்டால், தேங்காய் என்று பொருள். வலது கையால் இடது காதையும், இடது கையால் வலது காதையும் பிடித்துக்கொண்டால், தென்னை மரத்தை இறுக அணைத்துக்கொள்வதாகப் பொருள். அதே நிலையில் முழங்காலை மடக்கி உட்கார்ந்தால், மரத்திலிருந்து இறங்குவதாகப் பொருள்.

திரும்ப எழுந்தால், மரத்தில் ஏறுவதாகப் பொருள். மீண்டும் உட்கார்ந்தால், மீண்டும் இறங்குவதாகப் பொருள். எத்தனைத் தடவை உட்கார்ந்து எழுகிறமோ, அத்தனை மரங்களில் ஏறி இறங்கி தேங்காய்களைப் பறித்துப் போடுவதாகப் பொருள். எத்தனை அதிக மரங்களில் ஏறி இறங்கி தேங்காய்களைப் பறித்துப் போடுகிறோமோ, அந்த அளவுக்கு யானை 'வண்நகாஅம்' பெறுகிறது. எந்த அளவுக்கு யானை 'வண்நகாஅம்' பெறுகிறதோ, அந்த அளவுக்கு அது மனிதர்களுடன் நட்பாகின்றது. மனிதர்களுக்கு 'வண்நகாஅம்' அளிக்கிறது.

இவ்விதம் மரத்தில் ஏறி இறங்கி யானைக்கு 'வண்நகாஅம்' அளிப்பதற்குத்தான் 'தோப்புக் கர்ணம்' என்று பெயர். தென்னைகள் மிகுந்த இடம் 'தோப்பு'. தேங்காய் தோல்கள் அங்கு மிகுந்து கிடக்குமாதலால், 'தோல்-பு' என்று சொல்லப்பட்டது. தோல் நிறையும் தன்மையுடைய இடம் தோப்பு. அதோடுகூட, காய்களைத் 'தோ ...தோ...' என்று கூப்பிடுவதைப் பார்த்திருப்பீர்கள். நம்மிடம் அழைப்பதற்குத் 'தோ...தோ...' என்று கூப்பிடுவது வழக்கம். இதேபோல் தேங்காய்கள் மலிந்து கிடந்த இடம், யானைகளைத் தம்மிடம் 'தோ...தோ...' என்று கூப்பிடும் தன்மையைப் பெற்றிருந்தது. இதனாலும் அந்த இடங்கள் தோப்பு.

தென்னந்தோப்பில் மரங்களில் ஏறுகிறபோதும் இறங்குகிறபோதும் 'க்அர்' (கர்) 'ச்அர்' (சர்) என்ற ஒலிகள் உண்டாகின்றன. 'க்அர்' என்ற ஒலியை மிகுக்கும் தன்மை 'க்அர்நஅம்' (கர்ணம்). 'ச்அர்' என்ற ஒலியை மிகுக்கும் தன்மை 'ச்அர்நஅம்' (சர்ணம்: சரணம்). 'கர்ணம்'—'சர்ணம்' உண்டாகவேண்டுமானால், மீண்டும் மீண்டும் மரங்களை விட்டு இறங்கிக்கொண்டும் வேறு மரங்களில் ஏறிக்கொண்டும் இருக்கவேண்டும். எத்தனைத் தடவை தோப்புவில் கர்ணம் உண்டாகின்றதோ, அத்தனைத் தடவை தேங்காய்களைப் பறித்துப் போடுகிறார்கள் என்று விளங்கும்.

ஊ-து-காநஅம் : வா-காநஅம் †

இந்தத் தோப்புக் கர்ணம்தான் யானைகளுக்குத் தமிழர்கள் வண்நகாஅம் அளிக்கச் செய்த காரியம். எத்தனைத் தடவைத் தோப்புக் கர்ணம் செய்தார்களோ, அத்தனைத் தடவை யானைகளுக்குத் தேங்காய்கள் கீழே விழுந்தன. தமிழர்களின் தோப்புக் கர்ணங்களினால் யானைகள் மிகுதியாகத் தேங்காய்களைப் பெற்று 'வண்நகாஅம்' அடைந்தன.

இவ்விதம் ஒரு பக்கம் தோப்புக் கர்ணங்களினால் வலிமை மிகுந்த யானைகளின் நட்பைப் பெறுவதற்குத் தமிழர்கள் முயற்சித்தபோது, யானைகள் என்ன செய்தன? அவைக் கூட்டமாக அத் தேங்காய்களைப் புசித்தன. பிறகு தம் வழியில் சென்றன. மனிதர்களை விரட்டாமல் விட்டன. அவ்வளவுதான். அவை வேறு விதத்தில் மனிதர்களுக்கு உதவக்கூடியவையாக இல்லை. அவை உதவினால் அல்லவா மனிதர்களுக்கு வண்நகாஅம் உண்டாகும்?

அவர்கள் அவற்றின் வணக்கத்தைப் பறிப்பதற்கு முயற்சிக்க ஆரம்பித்தார்கள். அவற்றினால் தமக்கு நிச்சயமான உதவிகள் கிடைப்பதற்கு வழிகளை யோசித்தனர். யானைகளைத் தம்முடைய சேவகர்களாக ஆக்கிக்கொள்ள ஆசைப்பட்டார்கள் என்றுகூட கூறலாம்.

வெகு விரைவில் யானைக்கு நிகரான உயிர்களை அவர்கள் கண்டுகொண்டார்கள்! அவை என்ன?

---

† ஊ-து-காநஅம் : வா-காநஅம் : உண்ணப்படக்கூடிய மாமிசத்தைக் கொண்டு காப்பை மிகுத்துக்கொள்ளும் தன்மை, பாய்ந்து காப்பை மிகுத்துக்கொள்ளும் தன்மைக்குச் சமம். [ஊ : உண்ணுதல்; து : மாமிசம் ; வா : பாய்தல்]

ஊதுகணம் : யானை.

வாகணம் ; சுண்டெலி, மூஞ்சூறு.

அவைதான் சுண்டெலிகள்! மூஞ்சூறுகள்! முயல்கள்!

வலிமையும் பருத்த சரீரத்தையும் உடைய யானைகள் சுண்டெலிகளினால் கீழே தள்ளப்பட்டன. உருட்டி விடப்பட்டன. வருத்தப்பட்டன.

அந்தப் பிராணிகளை யானைகளினால் எதுவுமே செய்ய முடியவில்லை!

அவை பூமிக்கு அடியில் வளைகளைப் பறித்து வசிக்கின்றன. முயல்கள் மிகவும் ஆழமாகவும் அகலமாகவும் தூரமாகவும் வளைப் பறிக்கக்கூடியவை. எலிகள் மலை பாதைகளிலெல்லாம் அடியில் வளைகளைப் பறித்து விடக் கூடியவை. மூஞ்சூறுகளும் பெருச்சாளிகளும் அவ்விதமே செய்யும்.

அந்த வளைகளைத் தரையில் நடமாடும் மிருகங்கள் தெரிந்து கொள்ளமுடியாது. யானைகள் கண்டிப்பாக உணர்ந்து கொள்ளமுடியாதிருந்தன. அவை நடந்து சென்றபோது, திடீரென்று அந்த வளைகள் பொத்துக் கொண்டன. மலை பாதைகளில் அவ்விதம் வளைகள் பொத்துக் கொண்டபோது, யானைகள் திடீரென்று சாய்ந்து உருண்டன. வளைகள் வழியே நீர் ஊற்றுகள் உண்டாகி தண்ணீர் ஓடிக் கொண்டிருந்த போது, யானைகள் காலை இழுக்க முடியாதவாறு மாட்டிக் கொண்டன.

இவ்விதம் அபாயத்தை உண்டாக்கிய பிராணிகளை மிதித்துத் துவைப்பதற்கு யானைகள் முயன்றபோது, அவைப் பாய்ந்து ஓடிப்போயின. பாய்வதன் மூலம் தம் காப்பை அவை மிருத்துக் கொண்ட தன்மைதான் "வா-கா-ந-அம்" (வாகணம்)

யானைக்குக் கூட்டமாக இருந்த தன்மை எந்த அளவுக்குக் காப்பை மிருத்துத் தந்ததோ, அந்த அளவுக்கு

இந்தச் சிறு பிராணிகளுக்குப் பாயும் தன்மைக் காப்பை மிகுத்துக் கொடுத்தது. இதிலிருந்து புலப்படுவது என்ன?

யானை காநஅம்=மூஞ்சூறு வாகாநஅம்.

மேலே யானையின் கனம் } = கீழே சுண்டெலியின் கனம்

மகத்தான பருமனைக் கொண்ட யானை காலினால் மிதித்தாலும் சாகக் கூடிய சுண்டெலி, அந்த பருமனைத் தாங்கக் கூடிய—அந்தப் பருமனால் அழிக்க முடியாத—'வாகநஅம்' ஆக இருந்தது. யானையின் கனம் சுண்டெலியின் வாகனத்திற்கு ஈடு!

வார்-ந-அன்-வா-இழி-பா-இடு †

பருமனும் வலிமையும் உடைய யானை, சுண்டெலியால் உருட்டப்பட்டபோது, வாஸ்தவத்திலேயே சிரிப்பூட்டும் ஹாஸ்யப் பிராணியாகி விட்டது! எவ்வளவு வலிமை இருந்தும் சுண்டெலிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியவில்லையே! அதன் பருமன் சுண்டெலியின் வாகனத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லையே!

யானையின் பருமனும் வலிமையும் மனிதர்களுக்கு வேண்டியிருந்தது. அதே சமயம் சுண்டெலியின் வாகனமும் வேண்டியிருந்தது. யானை காரியசித்திக்குத் தேவைப்பட்ட வலிமைக்கு அடையாளமாக இருந்த போதே பருமனினால் உண்டான பலஹீனத்திற்கும்

† வார்-ந-அன்-வா-இழி-பா-இடு: உயரத்தை மிகுதியாக உடையவன் (யானை) வருவதை இகழும்படியாக பரப்பை உண்டாக்கி வைத்தல். [மேலே நடந்து வருகிற யானையைப் பரிகசிக்கும் முறையில் குழி பறித்துவைத்தல்.] வார்: உயரம்; ந: மிகுதி; அன்: ஆண்பால்; வா: வருதல்; இழி: இகழ்தல்; பா: பரப்பு; இடு: வைத்தல்.

அடையாளமாக இருந்தது. சுண்டெலி, பருமன் இல்லாததனல் உண்டான பலத்திற்கு அடையாளமாக விளங்கிற்று.

இந்த விஷயத்தை நன்கு புரிந்துகொண்ட ஆதித் தமிழர்கள், யானைகளிடமிருந்து வண்நகாஅம் பெறுவதற்குத் தம்மைச் சுண்டெலிகளாக மாற்றிக் கொள்ள முற்பட்டனர். சுண்டெலி அவதாரம் எடுத்தார்கள் என்று எண்ண வேண்டாம். சுண்டெலியைக் காட்டிலும் தமக்கு வலிமையுண்டு என்பதை யானைக்கு உணர்த்தி, யானையைத் தமக்கு அடங்கியதாக நடந்துகொள்ளும்படி வற்புறுத்த எத்தனித்தனர். என்ன செய்தார்கள் ?

எலிகளும் மூஞ்சூறுகளும் முயல்களும் செய்த வேலையைத் தமிழர்கள் தம் கைகளைக் கொண்டு சிறிது விஸ்தரித்தனர். யானை தொபுக்கென்று விழுந்து, எழுந்து மீள முடியாதபடிக்குக் குழியைப் பறித்தனர். அதன்மேல் மூங்கில்களையும் தழைகளையும் மண்ணையும் போட்டு, குழி தெரியாதபடி மூடினார்கள். அவ்வழியே வந்த யானையை அதில் விழச் செய்தார்கள்.

விழுந்த யானை அலறிற்று. கதறிற்று. எழ முடியவில்லை. மற்ற எல்லா யானைகளும் எப்படியெப்படியோ அதைக் கரையேற்ற முயன்றன. எதற்கும் முடியவில்லை. எல்லாம் அதை விட்டு விட்டுச் சென்றன.

தன் குலத்தினுல் கைவிடப்பட்ட யானை பசியாலும் தாகத்தாலும் பரிதவித்தது. கதறியது. அழுதது. மனம் சோர்ந்தது. வாழ்வில் நம்பிக்கையை இழந்தது. தன்னுடைய வல்லமையில் நம்பிக்கை இழந்தது. தன் வலிமையினுலும் உடலினுலும் தனக்குத் துளிக்கூட பயனில்லை என்று நினைக்க முற்பட்டது.

அந்த நிலையில் அதனிடம் தென்னந்தோப்பில் வண்நகாஅம் அளித்த மனிதர்கள் சென்றார்கள். மிகவும் பரிதாபப் படுவதுபோல் நடித்தார்கள். தேங்காய்

களைக் கொடுத்தார்கள். தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதைக் காப்பாற்றி விடுவதாக ஓசையெழுப்பித் தெரிவித்தார்கள். அதைக் காப்பாற்றுவதற்கு முயற்சியெடுப்பதுபோல் காட்டிக்கொண்டனர். அது தன் வலிமையில் நம்பிக்கை இழந்த நிலையில் அவர்களுடைய வல்லமையில் நம்பிக்கை வைக்க ஆரம்பித்தது. அவர்கள் கூறுகிறபடியெல்லாம் கேட்பதற்கு ஆயத்தமானது.

அந்த நிலையில் அவர்கள் குழியை மறுபக்கத்தில் மேலும் தோண்டி, யானை ஏறி வருவதற்கு வழி வகுத்தார்கள்.

அக்காலத்தில் மண்ணைத் தோண்டுவதற்கு மண்வெட்டியோ, கடப்பாறையோ கிடையாது. கையாலும் கூறிய கற்களாலும் தடியாலுமே குழியைத் தோண்ட முடியும். தற்காலத்தில் சில மணி நேரங்களில் முடிந்துவிடக்கூடிய வேலை, அக்காலத்தில் முடிவதற்குப் பல நாட்கள் பிடித்தது. குறைந்த பக்ஷம் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குமேல் பிடித்திருக்கும்; அந்த நாட்களில் அவர்கள் அதைக் காப்பாற்றுவதற்காகச் செய்த ஒவ்வொரு சிறு வேலையையும், அள்ளிக் கொட்டிய ஒவ்வொரு பிடி மண்ணையும், கல்லினால் மண்ணின் பேரில் அவர்கள் குத்திய ஒவ்வொரு குத்தையும் அந்த யானை கவனித்துக் கொண்டிருந்தது. அதற்கு அவர்களின் பேரில் அளவுகடந்த நம்பிக்கையும் விசுவாசமும் உண்டாயிற்று.

கடைசியாக அது கரையேறியபோது, அது அந்த மனிதர்களை எதுவும் செய்யவில்லை. தன் குலத்தைத் தேடி ஓடவுமில்லை. தன் வலிமையில் நம்பிக்கை வைத்து நடக்கவுமில்லை. தரையில் ஒவ்வொரு அடியையும் மிகவும் எச்சரிக்கையுடன் எடுத்து வைத்தது. சில இடங்களில் சந்தேகப்பட்டு நின்று விட்டது. மனிதர்கள்

முன்னால் சென்று, 'அபாயமில்லை வா' என்று சொன்ன பிறகே நடந்தது.

இப்போது மனிதர்களுக்கு யானையிடமிருந்து "வண்நகா ஆம்" கிடைத்தது. மனிதர்களிடம் விசுவாசத்துடன் நடந்து கொள்வதன் மூலம் "வண்நகா ஆம்" அளிக்கத் தொடங்கிற்று. அவர்கள் அதற்குத் தேங்காய் பறித்து போடுவதன் மூலம் "வண்நகா ஆம்" அளித்தனர். (பிற்காலத்தில் கரும்பு, நெல் முதலியவற்றை அளிப்பதன் மூலம் வண்நகா ஆம் அளித்தனர். இன்னும் பிற்காலத்தில் கல் யானைக்கு அளிக்கப்பட்ட கொழுக்கட்டைகளில் வெல்ல வடிவில் கரும்பும் மாவு வடிவில் நெல்லும், பயறும், தேங்காய்ப் பூவும் கொடுக்கப் பட்டன).

பிள்-இளை-யா-இர் †

இவ்விதம் மனிதர்களினால் அடக்கப்பட்டு வண்நகா ஆம் அளிக்கப்பட்ட யானைக்குப் "பிள்-இளை-யா-இர்" (பிள்ளையார்) என்று பெயர் வைக்கப்பட்டது. பிள்ளப் படக்கூடிய இளைக்குள் கட்டுண்டு இருப்பது என்று பொருள். பிள்ளையாருக்கு வணக்கம் அளிக்கத் தென்னங்தோப்புவில் 'கர்' என்ற ஒலியை மிருக்கும் பழக்கமும் அதிகமாயிற்று.

இவ்விதம் மிருகங்களில் மிகவும் வலிமை பொருந்திய யானைகளைத் தமிழர்கள் தம்முடைய நண்பர்களாக ஆக்கிக் கொண்டார்கள். இதில் எல்லா குலங்களும் இப்படி செய்தன என்று யாரும் எண்ண

† பிள்-இளை-யா-இர் : பிளக்கப்படக்கூடிய இளைக்குள் கட்டுண்டு இருப்பது (பிள் : பிளத்தல், உடைத்தல் ; இளை : வேலி, தடுப்பு; கட்டுக்காவல் ; யா : கட்டுதல் ; இர் : இருத்தல்)

வேண்டாம். ஏதோ ஒரு சில குலங்கள்தான் செய்தன. எந்தக் குலம் யானையை முதலில், நட்பாகக் கொண்டதோ அந்தக் குலத்தின் வல்லமை மற்ற குலங்களின் வல்லமையைவிட அதிகரித்தது என்றே புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் காரியத்தை அந்தக் குலமும் ஒரே சமயத்தில் சாதித்தது என்றும் நினைக்க வேண்டாம். இதைச் சாதிக்க எத்தனையோ தலைமுறைகள் பிடித்தது. மேலும், இதைச் சாதித்ததனால் மனிதர்களுக்கு யானைகளின் பேரில் இருந்த பயம் நீங்கிவிட்டதாகவும் யாரும் எண்ண வேண்டாம். காட்டில் எத்தனையோ ஆயிரம் யானைகள் இருந்தன. அவையெல்லாம் மனிதர்களுக்கு வணக்கம் அளிக்காதவையாகவே இருந்தன. இன்றும் இருக்கின்றன. அடக்கப்படாத யானைகள் இன்றைக்கும் மனிதர்களுக்கு அபாயகரமானவையே. மேலும், யானை அடக்கப் பட்டதனால் அதன் வலிமையை யாரும் மட்டமாக எண்ணி விடாதீர்கள். அதன் வலிமை அதை விட்டு நீங்கிவிடவில்லை. மனோவலிமைதான் அதற்குக் குன்றிற்றேயொழிய உடல் வலிமை அல்ல. மேலும், சுண்டெலியினால் யானைக் கீழே விழுந்தது என்பதனால் யாரும் சுண்டெலியே பெரியதென்று எண்ண வேண்டாம். பாய்ந்து தப்பிப்பதிலும் வளைப்பறிப்பதிலும் மட்டுமே சுண்டெலிகள் சிறந்தவை. மற்ற விஷயங்களில் சுண்டெலிகள் மட்டமானவையே.

மனிதர்கள் யானைக்குச் சுண்டெலிகளாக இருந்ததோடு, சுண்டெலிகளுக்குப் பாம்புகளாகவும் இருந்தனர். யானைகளால் சுண்டெலிகளை அழிக்க முடியாது. பாம்புகளால் முடியும். பாம்புகளால் முடிவது மனிதர்களுக்கும் முடியும்.

யானையும் சுண்டெலியும் மனிதர்களின் உயர்வைக் காட்டுகின்றன. தோப்புக் கர்ணம் யானைக்கு மனிதன் அளிக்கும் வணக்கம். மூஞ்சூறுவுக்கு உணவளிப்பது, யானையின் வணக்கத்தைப் பறிப்பதற்காக மனிதன் கையாளும் உபாயத்தின் சின்னம்.

மிருகங்களில் நண்பர்களைத் தேடிக் கொள்ளத் தமிழர்கள் முயற்சித்ததற்கு இந்நாள் வரையும் பிள்ளையார் வணக்கம் தமிழ் நாட்டில் இருந்து வருவது போலவே, அநுமான் வணக்கமும் இருந்து வருகிறது. பிள்ளையார் வணக்கம் எப்படி கல் பிள்ளையார் வணக்கமாக மாறிற்று என்பதை வேறொரு இடத்தில் கவனிக்கலாம். இப்போது அநுமான் வணக்கத்தைப் பார்ப்போம்.

அ-நூ-மா-அன்-வண்நகா அம் †

அக்காலத்தில் யானையைப் போல் வலிமையுடையதாக இருந்த மிருகம் கொரில்லா. இதற்குச் சுண்டெலிகளினால் அபாயம் நேரிட வில்லை. இறைச்சியைப் புசிக்கும் மிருகங்களினால் அபாயம் ஏற்பட்டது.

யானையைப் போல கொரில்லாவும் மாமிசம் புசிக்காத மிருகம். இதனால் இந்த மிருகத்திற்கு மனித இறைச்சித் தேவைப் படவில்லை. உணவுக்காக மனிதனை அடித்துக் கொல்லும் அவசியம் யானையைப் போல் இதற்கும் இல்லை. இதற்கு உளுந்து, பயறு, எள்ளு, மூங்கில் குருத்துக்கள், மூங்கிலரிசி முதலியவை மிகவும் விருப்பமான உணவு. (தற்கால பக்தர்கள் வடையைப் படைக்கிறார்கள்).

இவை வால் இல்லாத குரங்குகள். மிகவும் பருமனும் திடமுமான சரீரத்தை இவைப் பெற்றிருந்தன. மரங்களின் அடி கிளைகளிலும் தரையிலும் வசித்தன. இவையும் கூட்டமாகவே வாழ்ந்தன. மனிதனைப் பகைத்த மிருகங்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளும் அவசியம் இவற்றிற்கும் இருந்தன.

---

† அ-நூ-மா-அன்-வண்நகா அம்: அழகிலே கறுப்பு நிறமுடைய மிருகமாக இருப்பவனுக்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றும் தன்மையை அளித்தல். [அ: அழகு; நூ: கறுப்பு; மா: மிருகம்; அன்: ஆண்பால்.]

இவைத் தற்காலத்தில் தமிழ் நாட்டில் இல்லை. மிகவும் அடர்த்தியான காடுகளையுடைய ஆப்பிரிக்காவிலும், ஜாவா முதலிய தீவுகளிலும் காணப்படுகின்றன. குமரிக்கண்டம் மூழ்காதிருந்தபோது அங்கு வசித்தன. குமரிக்கண்டத்திலிருந்தது போலவே காடுகள் தமிழ் நாட்டில் இருந்தபோது, இங்கும் வசித்தன. இவைத் தற்போது இல்லாததற்குக் காரணம், இவை வசிப்பதற்கு ஏற்றக் காடுகள் எல்லாம் தமிழ் நாட்டில் அழிக்கப்பட்டன என்பதே யாகும். அதாவது, இவை அடர்த்தியான காடுகள் என்ற கூண்டை விட்டுத் தம்மை விடுவித்துக் கொள்ள முயற்சிக்காததனால், அத்தகையக் காடுகள் தமிழ் நாட்டில் அழிந்தபோது, ஜீவிக்க முடியாமல் மடிந்து போயின. அத்தகைய காடுகள் இன்றும் இருக்குமேயானால் அவைத் தொடர்ந்து இன்றுவரை இருந்து வந்திருக்கும்.

அவைத் தனிமையிலேயே மிகவும் மூர்க்கமானவையாக இருந்தன. கூட்டமாக வசித்தபோது, யானைகளைப் போலவே, மிகவும் சாதுவாக வாழ்ந்தன. கூட்டமாக இருந்தபோது பிற மிருகங்களைப் பகைக்காமல் போகவிட்டது போலவே, மனிதர்களையும் போகவிட்டன. ஆத்திர மூட்டப்பட்டபோது ஆவேசத்துடன் தாக்கின. தம் கூட்டத்திற்கு அல்லது தம் குட்டிகளுக்கு ஏதாவது அபாயம் நேரும் என்று அவை நினைத்தால், உடனே எந்த மனிதனாலும் எதிர்க்க முடியாத மகத்தான வல்லமையுடன் தாக்கின.

அவற்றின் நட்பு மனிதனுக்குக் கிடைத்தால், மனிதனுக்கு "வண்நகாஅம்" உண்டாகும் அல்லவா? அவற்றிற்கு "வண்நகாஅம்" அளித்தால், அவை மனிதர்களுக்கு வண்நகாஅம் அளிக்குமல்லவா?

அவற்றிற்கு ஆதித் தமிழர்கள் "கொரில்லா" என்று பெயரிடவில்லை. அவற்றின் தன்மைக்கு ஏற்ப

வேறு பல பெயர்களை வைத்தனர். அந்த பெயர்களே அவற்றிற்கு அளித்த வணக்கத்தை நமக்கு உணர்த்துகின்றன.

அவை பல விதங்களிலும் மனிதர்களைப்போலவே இருந்தன. ஆனால் மனிதர்களுக்கு இருந்த அழகு அவற்றிற்கு இல்லை. மனிதர்களின் அழகைக் கெடுக்கும் மிருகம் என்று அதைக் கருதியதனால், 'அ-இரி'(அரி) என்று பெயரிட்டனர். அது அழகில் கறுப்பு நிறமுடைய மிருகம். இதனால் 'அ-நூ-மா-அன்' (அநூமான்) என்றார்கள்.

அவை மனிதர்களைப்போல் இருந்தபோதிலும், அவற்றிற்குப் பேசத் தெரியாது. குராவுவதற்கே முடிந்தது. 'க்உர்' என்று அவை குராவும். இதனால் அவற்றைக் 'க்உர்-அன்' (குரன்) என்றார்கள். 'க்உர்-அன்' வசித்த பூமியை 'க்உர்-அன்-கு' (குரங்கு) என்று சுட்டிக்காட்டிப் பேசினார்கள். இந்தக் 'கு' என்பதுதான் அவை மரங்களில் வசித்தவற்றிற்கு மாறுபட்டு பூமியில் வசித்தவை என்பதை நமக்கு உணர்த்துகின்றது.

அவை ஊனும் தசையும் மிகுந்த வலுவான கைகளைப் பெற்றிருந்தன. இதனால் 'ஊ-கை' என்று சொல்லப்பட்டன.

அவை ஆத்திரமடைந்தபோது, மார்பிலே இரண்டு கைகளாலும் தட்டிப் பேரொலி எழுப்பின. இதனால் 'மார்-ஊதி' (மாருதி) என்று குறிப்பிடப்பட்டன. மார் என்பது, 'மா-ஈர்' என்பதின் குறுக்கம். மிருகத்தின் ஈரமுள்ள இடம் என்று பொருள். மார்பிலே இருக்கும் முலைப்பால்தான், இந்தக் கருத்தை உண்டாக்கியது. 'ஊதி' என்பது 'ஊ-த்-ஈய்' என்பதன் குறுக்கம். ஊ என்ற ஒலியையும் 'த்' என்ற ஒலியையும் அளிப்பது என்று பொருள். ஆத்திரமடைந்தபோது, இது அழிவை உண்டாக்கும் மிருகத்தின் தன்மையைப் பெற்றிருந்தது.

இந்தத் தன்மையே,' 'வீ-மா-அம் (வீமம்). இது 'வீமா' என்று குறிக்கப்பட்டது.

இது மனிதர்களைப்போல் கையில் கிடைத்தக் கழி களையும் கற்களையும் வீசியெறிந்தது. பாய்ந்து ஓடிப் போய் அழிப்பதற்கு பதில், நின்ற இடத்திலிருந்தே எறிந் தும் அழித்தது- இதனால் 'வா-இல்-ச' (வாலி) என்று சொல்லப்பட்டது. —பாய்ச்சல் இல்லாது அழிப்பது என்று பொருள்.

இதன் உடம்பில் அழுக்குப் படிந்து, வெகுதூரத் திற்கு துர்நாற்றம் வீசிற்று. இந்த துர்நாற்றத்தைக் கொண்டே, இது வெகுதூரத்தில் வருகிறபோதே, இதன் வருகையை மனிதர்கள் தெரிந்துகொண்டனர். காற்று 'ஊ' என்று ஒலித்துக்கொண்டு வருகிறதனால், 'வா-ஊ' (வாயு) என்று காற்றுக்குப் பெயர். அப்படி வருகின்ற 'ஊ' என்ற ஒலி, இந்த மிருகத்தின் அழுக்கை (மை) முன்னதாகவே கொண்டுவந்து தருகிறது. முன்னதாகத் தருவது, இனிமையைத் தருவதாக இருக்கிறது. ஏனெ னில், அதன் வருகையை முன்னதாகத் தெரிந்துகொள் வதுதானே இனிமையானது? முன்னதாகத் தெரிந்து கொள்ளாவிட்டால் அபாயமல்லவா ஏற்படும்? ஆகவே, அதை 'வருகின்ற ஊ என்ற ஒலியுடன் தன் அழுக்கை இனிமையாகத் தருகிறவன்' என்று குறிப்பிட்டார்கள். அதனால் 'வா-ஊ-மை-இன்-தா-அன்' (வாயு மைந்தன்) என்ற பெயர் உண்டாயிற்று.

இவைத் தாவியதன் மூலம் தம் காப்பை மிகுத்துக் கொண்டன. இதனால் இவைத் 'தா-கா-ந-அம்' (தகனம்) உடையுவை என்று சொல்லப்பட்டன. இத் தன்மை யினால், தப்பியபோது, தகனம் செய்தன என்று குறிப் பிடப்பட்டன.

இவைப் பாம்புகளைக் கொன்றன. மிருகங்களையும் கொன்றன. ஆனால் அந்த இறைச்சியை உணவாகப்

புசிக்கவில்லை. மற்ற மிருகங்கள் புசிப்பதற்காக அந்த இறைச்சியைப் போட்டுவிட்டன. இவைக் கொன்று போட்ட மிருகங்களேயும் பாம்புகளேயும் மற்ற மிருகங்கள் புசித்தன. இதனால் இவை 'அரா-மா-தூ-தா-அன்' (அராமதூதன்) என்று சொல்லப்பட்டன.—பாம்பை மிருகங்களுக்கு உணவாகத் தருகிறவன் என்று பொருள். இவை வீசியெறிந்த பாம்புகளைக் கருடன்களும் கழுகுகளும் தூக்கிக்கொண்டு பறந்தன.

இத்தனை குணங்களோடு, இவற்றிற்குப் பச்சிலைகளின் தன்மைகளும் தெரிந்திருந்தது. மனிதர்களைப் போலவே, தம் உடம்பில் காயங்கள் ஏற்பட்டபோது, சில செடிகளை முறித்து, அவற்றில் வடிந்த பாலைக் காயங்களில் தடவின. காயத்தில் 'ச்உ' என்று ஊதின. 'ச்உ' (சு) என்று ஊதியபோது சுகமாக இருந்தது. ஆகவே, 'சு' என்றால் சுகம். செடிப்பால் சுகத்தை அளித்தது. 'சு'வை அளித்தச் செடிகள் முளைத்திருந்த இடம் 'சு-கு' (சுக்கு). சுக்குவில் பாலை வடிக்க வருகிறவன் 'சு-கு-இரி-வா-அன்' (சுக்கிரீவன்.) வாயினால் 'ஊ' என்று ஊதி, சுகத்தை அளித்தவன் 'வாய்-ஊ-சு-தா-அன்' (வாயூசுதன்.)

மனிதர்கள் எங்கு தமக்கு வேறு இடத்தில் இல்லாத (இல்) அழகும் (அ) இனிமையும் (இன்) காப்பும் (கா) இருந்ததோ, அங்கேயே வசித்தார்கள். இதனால் தாம் வசித்த இடத்தை 'இல்--அ-இன்-கா' (இலன்கா) என்று சொன்னார்கள். அந்த இடத்தின் அழகை இந்த மிருகங்கள் கெடுத்தபோது, இவற்றை 'இலன்காபுஇரிஅர்' என்றனர். அந்த இடத்தின் அழகைக் கெடுத்துவிட்டு இவைத் தாவித்தம்மைக் காப்பாற்றிக்கொண்ட தன்மையை 'இலன்காபுஇரிதாகாநஅம்' செய்ததாகச் சொன்னார்கள்.

ஆ-இன்-சா-நே-யா †

இத்தகைய குணங்களையுடைய குரங்குகளுக்கு எவ் விதம் வணக்கம் அளிக்கமுடியும்? எவ்விதம் அவற் றின் நட்பைப் பெறமுடியும்?

ஆதித் தமிழர்கள் அவற்றைப் பிடித்து அடக்கித் தம் சேவகர்களாக வைத்துக்கொள்ள முயலவில்லை. இதற்கு பதில் அவற்றின் அன்பைப் பெற எத்தனித்தனர்.

அவைக் காட்டில் வசித்தன. அவர்கள் திறந்த வெளிகளில் வசித்தனர். காட்டில் மூங்கில் குருத்துகளும் மூங்கிலரிசியும் கிடைத்தது. திறந்த வெளியில் உளுந்து, பயறு, எள் முதலியவை எதேச்சையாக விளைந்து கிடந் தன. நடுக்காட்டிற்கு மிருகங்களை விரட்டிச் செல்கிற போது இந்தத் தானியங்களை எடுத்துச் செல்வது உசிதம் என்று கருதினர்.

நடுக்காட்டில் வசித்த இந்த மிருகங்களுக்கு தானியங் களை உணவாக அளித்தால் வணக்கம் பெறுமல்லவா? ஆனால் அவை மனிதர்களைப் பகைக்காவிட்டபோதிலும், தம்மிடம் அண்டவிடவில்லை. இதனால் அவற்றைத் தனிமை யில் இருக்கிறபோதோ, அல்லது உணவு தேடுகிற போதோ அணுகினால் அபாயம் நேரிடும். எதாவது ஒரு குறிப்பிட்ட நோக்கில், அவைத் தொந்தரவு செய்யாத மனோநிலையில் இருக்கிறபோது, அவற்றிற்கு உணவை அளிப்பதுதானே உசிதம்?

ஆகவே அவை, 'ஆ-இன்-சா-நே-யா'வாக இருக்கிற போது அவற்றிற்கு உணவுப் பொருள்களைப் படைத்தனர். அதாவது, தானியங்களை அவற்றினருகே போட்டனர். 'ஆ-இன்-சா-நே-யா' சமயம் என்றால் என்ன?

---

† ஆ-இன்-சா-நே-யா : பெண்ணுடன் இன்பத்தில் சோர்ந்து நேய மாகக் கட்டிக்கொண்டிருத்தல். [ஆ : மிருகங்களில்பெண்; இன் : இன்பம்; சா : சோர்வு; நே : நேசம்; யா : கட்டுதல்.]

'ஆ' என்ருல் விலங்கின் பெண்பால்; பெண் குரங்கு. 'இன்-சா' என்ருல் இன்பத்தில் சோர்தல். 'நே-யா' என்ருல் நேசமாகக் கட்டி அணைத்து இருத்தல். பெண்ணுடன் இன்பமனுபவித்து சோர்ந்து நேசத்துடன் கட்டி அணைத்துக்கொண்டு இருந்த சமயம்தான் அது. அவ்விதம் ஆணும் பெண்ணும் இன்பத்துடன் இருந்தபோது, குட்டிகள் இங்குமங்கும் தாவி ஓடின. கொட்டைகளையும் பருப்புகளையும் பொறுக்கி வாயில் போட்டுக்கொண்டன. அப்போது மனிதர்கள் வீசியெறிந்த தானியங்களைப் பொறுக்கவும் குட்டிகள் ஓடிவந்தன. குட்டிகள் மனிதர்களிடம் விசுவாசமுடையவையாயின. குட்டிகள் அவற்றைப் பொறுக்கித் தின்றுகொண்டு இருப்பதையும், மனிதர்கள் தானியங்களை அவற்றிற்கு அளித்துக்கொண்டு இருப்பதையும் பார்த்தப் பெண்குரங்கு தன் பகை உணர்ச்சியை விட்டது. மனிதர்களை விசுவாசத்துடன் பார்க்க முற்பட்டது.

ஆஞ்சனைப் பெற்ற மகன் ஆஞ்சநேயன் என்ருல், இன்பச் சோர்வை மிகுத்துக் கொண்டு இருப்பவளின் மகன் ஆஞ்சநேயன் என்று பொருள். ('ஆ' என்கிற போது வாய் திறப்பதுபோல் திறக்கும் பெண்குறிக்கும், 'ஆ' என்று பெயர் வைக்கப் பட்டிருந்ததனுலேயே, 'ஆ' என்பது பெண்பாலைக் குறித்தது.) 'ஆ'வில் இன்பத்தையும் சோர்வையும் மிகுதியாக அளிப்பவள் "ஆ-இன்-சா-ந-சய்" (ஆஞ்சனை). அவள் அந்த இன்ப நிலையில் இருந்த போது, அவளை விட்டு விலகி இரைப் பொறுக்கியக் குட்டியே மனிதர்களுடன் நட்பாயிற்று. அந்தக் குட்டி 'ச்இர்' என்று சீறும் தன்மையையும், ஒளியைப்போல் விரையும் தன்மையையும் பெற்றிருந்ததனுல் "ச்இர்-அம்-சீ-வி" (சிரம்சீவி) என்று குறிப்பிடப்பட்டது. அது இளமைப் பருவத்தில் இருந்ததனுல், அதற்கு வாழ் நாட்கள் அதிகமாக இருந்தன. அதாவது, 'ச்இர்அம்சீவி' என்ற குட்டிக் குரங்கு வெகு காலம் வாழக் கூடியதாக இருந்தது. மனிதர்களுடன்

பகைமைப் பாராட்டாது வளர்ந்து பெரிய குரங்காக ஆனபோது, மனிதர்களைத் தவிர பிற மிருகங்களைச் சாகடித்து முறியடிக்கக்கூடியதாக இருந்தது. அந்தநிலையில் அதுவும் "ஆ-இன்-சா-நே-யா-அன்" ஆக ஆயிற்று. குட்டியாக இருந்த காலத்திலிருந்து மனிதர்களிடம் 'வண்நகாஅம்' பெற்று வந்த இந்த ஆஇன்சாநேயாஅன், இப்போது மனிதர்களுக்கு உதவுவதன் மூலம் வண்நகாஅம் அளிக்கக் கூடியதாக இருந்தது.

இதிலிருந்து புலப் படுவது என்ன? யானையைக் குழியில் விழச் செய்து தம் வசப் படுத்துவதுபோல், குரங்கை வசப்படுத்த முடியாது. 'வண்நகாஅம்' அளித்து, மனதை மாற்றி, பகையுணர்ச்சியை ஒழித்துத்தான் நட்பாக ஆக்கிக் கொள்ளமுடியும். அப்போதே அது நமக்கு வண்நகாஅம் அளிக்கும். அன்புக்கு அன்பு; பகைக்குப் பகை.—இது எவ்விதம் கல்லு ஆஞ்சநேய வணக்கமாக ஆயிற்று என்பதை வேறு ஒரு இடத்தில் கவனிப்போம்.

அ-இரி-அரா-வண்நகாஅம் †

வலுமிகுந்த யானையும் கொரில்லாவும் உணவுக்காக மனிதனைக் கொல்லாத போது, பாம்புகளில் சில உணவுக்காகவும், வேறு சில தற்பாதுகாப்புக்காகவும் மனிதர்களைக் கொன்றன. வாஸ்தவத்தில் பார்க்கப் போனால், யானைகளையும், கொரில்லாக்களையும் காட்டிலும் வலு மிகுந்தவையாகவும் கொடுமையானவையாகவும் இருந்தன பாம்புகள். ஏனெனில், யானைகளும் மற்ற மிருகங்களும் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம், கூண்டுகளுக்கெல்லாம், இவைச் செல்லக் கூடியவையாக

† அ-இரி-அரா-வண்நகாஅம்: அழகைக் கெடுக்கும் பாம்பைக் கொண்டு வன்மையை மிகுத்துக்காக்கும் தன்மையைப் பெறுதல்.

இருந்தன. ஆரம்ப காலம்முதல் இவற்றிற்கும் தமிழர்களுக்கும்தான் தமிழ் நாட்டில் யாருக்கு ஆதிக்கம் என்பதுபற்றி கடுமையான போட்டி ஏற்பட்டு வந்தது. இந்த இனத்தை எதிர்த்துத் தமிழர் இனம் நடத்தியப் போராட்டமே மற்ற எல்லா போராட்டங்களையும்விட அக்காலத்தில் மிக மிக முக்கியமானது.

கொடுமையும் வலிமையும் மிக்கப் பாம்புகளுக்கு மனிதர்களால் 'வண்நகாஅம்' அளிக்க முடியும். அதாவது, அவற்றைக் கொல்லாமல் விடுவதுடன், அவற்றிற்கு வேண்டிய உணவுகளை—அவைக் கேட்கின்ற இறைச்சியை (கேள்-து : கேது)— மனிதர்களால் வீசியெறிய முடியும். ஆனால் இவ்விதம் மனிதர்களிடமிருந்து வண்நகாஅம் பெறுகின்ற அந்தப் பாம்புகள், மனிதர்களுக்குத் திருப்பி வண்நகாஅம் அளிக்குமா? அவை அளிக்கா விட்டால், அவற்றிடமிருந்து அதை மனிதர்களுக்குப் பறிக்க முடியுமா? அவற்றை அடக்கி, அவற்றைக் கொண்டு மனிதர்கள் தம் வண்மையைப் மிகுத்துக் காப்பற்றிக் கொள்ள முடியுமா? இதுதான் அக்காலத்தின் கேள்வி.

இந்தக் கேள்விகளுக்கு அக்காலத் தமிழர்கள் கண்டுபிடித்த விடைகளும், அவற்றை யொட்டி உண்டான கதைகளும்தான் தமிழருடைய அக்கால சரித்திரம் முழுவதிலும் காணப் பட்டன. அக்காலத்தவர்களின் அன்றாட பேச்சுகளில் பாம்புகள் அடிபடாத நேரமே இல்லை என்று கூட கூறலாம். குழந்தைகள் கேட்ட கதைகளில் பெரும்பாலானவை பாம்புகளைப் பற்றியே! பாம்புகளை எதிர்த்தபோது அவர்கள் உண்டாக்கிய சொற்களுக்கும், கருத்துக்களுக்கும், பழக்கங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் கணக்கே இல்லை. வாஸ்தவத்தில் பார்க்கப் போனால், பாம்புகளை எதிர்த்து அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளே அவர்களை நாகரீகமுடையவர்களாக ஆக்கிற்று என்றுகூட சொல்லலாம்.

பாம்புகளைப் பற்றிப் பேசிய போது அவர்கள் பறவைகளைப் பற்றிப் பேசினார்கள்; மிருகங்களைப் பற்றிப் பேசினார்கள்; செடிகளைப் பற்றிப் பேசினார்கள்; நக்ஷத்திரங்களைப் பற்றிப் பேசினார்கள்; தீயைப் பற்றிப் பேசினார்கள்; இருட்டைப் பற்றிப் பேசினார்கள். சுற்றுப்புறம் முழுவதையும் பற்றிப் பேசினார்கள். ஏனெனில், பாம்புகள் எல்லா சூழ் நிலைமைகளுடனும், சுற்றுச் சார்புகளுடனும், தட்ப வெட்ப நிலைமைகளுடனும், எல்லா மிருகங்களின் போராட்டங்களுடனும், எல்லாப் பறவைகளின் போராட்டங்களுடனும் சம்பந்தப் பட்டிருந்தன. ஆயிரம் தலைகளையுடைய ஒரு ஜந்து எங்கெங்கு தலையை நீட்டும்? எத்தனையெத்தனை போராட்டங்களை நடத்தும்? எத்தனை மிருகங்களைப் பிடிக்கும்? எத்தனையெத்தனை உயிர்களைக் கடிக்கும்? எத்தனையெத்தனை அபாயங்களை உண்டாக்கும்? அத்தனை அபாயங்களையும் பாம்புகள் உண்டாக்கின!

இதை நன்கு நாம் கவனத்தில் வைத்துக் கொண்டால், நாம் பாம்புகளைத் தொடர்ந்து செல்கிறபோது, நம்மையறியாமல் வானமண்டலத்திற்கும், பாதாளத்திற்கும், நீரின் ஆழத்திற்கும், மரக்கிளைகளுக்கும், பறவைக் கூடுகளுக்கும், புதர்களுக்கும்—எல்லா இடங்களுக்கும்—செல்ல நேரிடுவதை நீங்கள் பார்ப்பீர்கள். செல்கிற இடங்களிலெல்லாம் புதிய புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்வீர்கள்.

பாம்புகள் எத்தனையோ வகைப்படும்! மண்ணுளிப் பாம்பும், பூநாகனும் மிக மிகச் சிறியவை. இவற்றைச் சில சமயங்களில் பூதக்கண்ணாடி வைத்துக்கொண்டு தேடித்தான் பார்க்கவேண்டும்! அவ்வளவு சிறியவை! இவற்றிற்கு நேர் மாறானவை மலைப் பாம்புகள்! ஏதோ மரம் கீழே விழுந்து கிடக்கிறது என்று கவனிக்காமல் செல்ல நேரிடும் என்றால், இவை எவ்வளவு பருமனா

கவும் நீளமாகவும் இருக்கும்! மூச்சை இழுத்து விட்டால் வெகு தூரத்தில் உள்ள சருகுகளும் பறக்குமென்றால், மூச்சை இழுக்கிறபோது வெகுதூரத்தில் பறக்கிற சிறு குருவிகளும் வலுவிழந்து இவற்றின் பக்கம் இழுக்கப்படுகின்றன என்றால், இவற்றின் வாயும் வயிறும் எத்தகைய மிருகங்களை விழுங்கக் கூடியவையாக இருக்கும்! இந்த இரண்டு ரகங்களுக்கும் இடைப்பட்ட ரகங்கள் எத்தனையோ ஆயிரம்! முறிந்து கிடக்கும் குச்சிகளைப் போல் தரையில் கிடக்கக்கூடிய கூழைப்பாம்புகள்! தொங்கியாடும் விழுதுகளைப்போல் காட்சியளிக்கும் பாம்புகள்! பச்சைக் கொடிகளைப் போல் தோன்றும் கண்குத்திப் பாம்புகள்! புல்லோடு புல்லாக, மரத்தோடு மரமாக, கல்லோடு கல்லாக, நிழலோடு நிழலாக, வெண்மையோடு வெண்மையாக, கறுப்போடு கறுப்பாக, சிகப்போடு சிகப்பாக, மஞ்சளோடு மஞ்சளாக, சாம்பலோடு சாம்பலாக, கோடுகளோடு கோடுகளாக, வரிகளோடு வரிகளாக இருக்கிற பாம்புகளுக்குக் கணக்கில்லை!

அவை வளைகளில், நீரில், கிளைகளில், மண்துளியில், மலை இடுக்கில், புதர்களில், புற்றுகளில்—எரிமலையின் உச்சியைத் தவிர எல்லா இடங்களிலும்—வசித்தன. பூவிலும் பழத்திலும்கூட வசித்தன!

அவைக் கடுமையான குளிரில், கொடூரமான வெப்பத்தில், நல்ல வெளிச்சத்தில், கண்தெரியா இருட்டில்—எரிகிற தீயைத் தவிர—மற்றெல்லா தட்ப வெட்பங்களிலும் வசித்தன.

ஒரே இனமல்ல; வெவ்வேறு இனங்கள்! எந்த இனமாக இருந்தால் என்ன? எல்லாம் பாம்பு இனங்கள் தான்.

இனத்திற்குத் தக்கவாறு தன்மைகள் மாறுபட்டிருந்தன. ஆனால் பார்வைக்கு அவை எல்லாம் பாம்புகள் தானே?

இத்தனை விதங்களில் எந்த இனத்திற்கு மனிதன் வணக்கம் அளிப்பது? எவைத் திருப்பி வணக்கம் அளிக்கும்? எவற்றை வணக்கம் அளிக்கக்கூடியவை யாக ஆக்கமுடியும்? வணக்கம் அளிக்காதவற்றை என்ன செய்யலாம்?

நிச்சயமாக வணக்கம் அளிக்காதவற்றை கொல்லவேண்டும். வணக்கம் அளிப்பவற்றை வளர்த்து வணக்கம் அளிக்கவேண்டும்.

அவர்கள் கொன்றார்கள். அதே சமயம் வணக்கம் அளித்தார்கள். வணக்கம் பெற்றவற்றிடமிருந்து தமக்கு வணக்கம் பெற்றார்கள்!

அவற்றில் வணக்கம் பெறத் தகுதியுடையவை எவை? அவைதான் விஷமில்லாதவை! மனிதனைப் புசிக்காதவை!

அவற்றில் கொல்லப்படவேண்டியவை எவை? அவைதான் விஷமுடையவை! மனித இறைச்சியைப் புசிப்பவை!

நீர்ப்பாம்புகள் விஷமில்லாதவை. அவற்றைப் பிடித்து பகைவர்கள் பேரில் எறிந்தபோது, அவற்றை விஷப்பாம்புகள் என்று நினைத்துப் பகைவர்கள் ஓட்டம் பிடித்தனர். இந்தப் பாம்புகள் அவர்களுக்கு வணக்கம் அளிப்பவையாயின.

வளைப்பாம்புகள் விஷமுள்ளவை. இவற்றிடமிருந்து, யானையிடமிருந்து வணக்கத்தைப் பறித்ததுபோல் பறிக்க வேண்டியிருந்தது.

மலைப்பாம்புகள் மனித இறைச்சியைப் புசிப்பவை. இவற்றில் மனிதனால் அடக்கமுடியாத மிகப்பெரியவற்றைக் கொல்லவேண்டியிருந்தது. மனிதனால் தாக்கு

வதற்கு முடியக்கூடியவற்றிடமிருந்து வணக்கத்தைப் பறிக்கவேண்டியிருந்தது.

இந்த மிகப்பெரிய காரியங்களை ஒருபக்கம் சாதிக்க வேண்டியிருந்தபோதே, மறுபக்கம் அந்தப் பாம்புகள் அத்தனையிடமிருந்தும் தம்மை மனிதர்கள் காப்பாற்றிக் கொள்ளவேண்டியுமிருந்தது. காப்பாற்றிக்கொண்ட பிறகு தானே அவற்றை அடக்கமுடியும்?

காப்பாற்றிக்கொண்ட விவரங்களை முதலில் கவனித்துவிட்டு, பிறகு அவற்றை அடக்கிய விவரங்களை நாம் பார்ப்போம்.

அரா-கு-கா-இல்-அம் †

இப்போது அவர்களுடைய கோஷ்டிகளில் சேர்ந்து நாமும் காட்டில் புறப்படுவோம். அவர்களைப்போலவே பாம்புகளைப் பார்க்க முயலுவோம்:—

அதோ பாருங்கள்!

அங்கே ஒரு பாம்பு ஓடுகிறது. அது அழகாக இருக்கிறது. 'இர்' என்று போகிறது, 'ஆ' என்று வாயைப் பிளக்கிறது. ஆகவே அதை 'அ-இர்-ஆ' (அரா) என்று சொல்கிறார்கள்.

அது எங்கே போகிறது? ஒரு புற்றுக்குள்போய் நுழைகிறது. புற்று பாம்பு வசிக்கிற பூமி. ஆகவே, அந்தப் புற்றுக்கு 'அரா-கு'(ராகு) என்று பெயர்.

† அரா-கு-கா-இல்-அம்: பாம்பு பூமியில் காப்பு இல்லாத தன்மை. [அரா: பாம்பு; கு: பூமி; கா: காப்பு; இல்: இல்லாத; அம்: தன்மை.]

அந்தப் புற்றுப் பக்கம் நாம் போகலாமா? கூடாது! ஏனெனில், அங்கு நமக்குக் காப்பு இல்லை. இந்தத் தன்மையை எப்படி சொல்லலாம்? "ஆரா-கு-கா-இல்-அம்" (ராகுகாலம்) என்று சொல்லலாம். பாம்பு பூமியில் காப்பு இல்லாத தன்மை என்று பொருள்.

பாம்பு பூமியில் மனிதர்களுக்கு எப்போதும் காப்பு இல்லை என்று சொல்லலாமா? முடியாது! ஏனெனில், பாம்புகள் புற்றுக்குள் அடங்கி இருக்கிறபோது அந்தப் பக்கம் மனிதர்கள் செல்வதனால் அபாயமில்லை. அவை புற்றுகளை விட்டு வெளியே வந்து இரைத்தேடுகிறபோது தான் மனிதர்களுக்குக் காப்பு இல்லை. ஆகவே, "ஆரா குகா இல் அம்" எப்போது உண்டாகிறது? ஒவ்வொரு பகலிலும் சில குறிப்பிட்ட நேரங்களில் புற்றுகளை விட்டுப் பாம்புகள் வெளியே வருகின்றன. அந்தக் குறிப்பிட்ட நேரங்களில்தான் பகலில் "ஆராகுகாலம்" உண்டாகிறது.

ஆகவே, அந்தக் குறிப்பிட்ட நேரங்களில்—ஆராகு கா இல் அம் நிலவுகிற சமயத்தில்-மனிதர்கள் உணவுத்தேடி சஞ்சரித்தால் அபாயங்கள் ஏற்படும். பாம்புகளினால் விரட்டவோ, கடிக்கவோ, விழுங்கவோபடுவர்.

பொழுது போய்விடுகிறது. எங்கும் இருட்டு சூழ்ந்துவிடுகிறது. கண்களினால் பார்க்க முடிவதில்லை. இந்தச் சமயத்தில், பாம்புகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளும் தன்மை மனிதர்களுக்கு உண்டா? கிடையாது! பாம்புகள் ஓசையைக்கொண்டே வந்துவிடும். செவியையே கண்களாக உடையனவை. மனிதர்களுக்கு இந்தத் தன்மையில்லை. பகலில் பாம்புகளைப் பிடித்தப் பறவைகள் இரவில் உறங்கியதனால், பாம்புகள் துளிக்கூட அபாயமின்றி இரவில் சஞ்சரித்தன. ஆகவே, இரவு நேரத்தை

என்னென்று சொல்வது? "அரா-கா-இல்-அம்" (ராக்காலம்) என்று சொல்லலாம் அல்லவா? பாம்புகளிடம் காப்பு இல்லாத தன்மை என்று பொருள்.

ஆகவே என்ன? பகலில் "அராகுகாஇல்அம்" உண்டானபோது, இரவு முழுவதிலும் 'அராகாஇல்அம்" நிலவியது.

ந-அர-கு †

"அராகுகாஇல்அம்" உண்டான பகல் நேரத்தில், வெளியில் சஞ்சரிக்காமல் மனிதர்கள் தம் இருப்பிடத்திலேயே இருந்துவிட்டார்கள். ஆனால் இரவில் எல்லா இடங்களிலும் "அராகாஇல்அம்" ஏற்பட்டதனால் அவர்கள் தம்மைப் பாதுகாக்கக்கூடிய காப்புகளைத் தேடிக் கொள்ளவேண்டியிருந்தது. இந்தக் காப்புகள்தான் தமிழர்களை நாகரீகமுடையவர்களாக ஆக்கியதென்பதை போகப்போக உணருவீர்கள்.

'அரா-கு' என்றால் பாம்புப்புற்று மட்டுமல்ல. எங்கு பாம்புகள் மிகுந்து இருந்தனவோ, அந்த இடங்களெல்லாம் 'அராகு'தான். என்றாலும், புற்றுக்கும் மற்ற இடங்களுக்கும் வித்தியாசத்தை உணர்த்தவேண்டியது அவசியமல்லவா?

ஒரு இடத்தில் புற்றில் வசிக்காது மரக்கிளைகளில் தொங்குகிற பாம்புகளும், புதர்களிலும் இடுக்குகளிலும் நெளிகிற பாம்புகளும் மிகுந்து இருக்கின்றன. சிறிய பாம்புகளும் பெரிய பாம்புகளும் வசிக்கின்றன. அந்த இடத்திற்கு 'அரா-கு' என்று சொன்னால் மட்டும் பொருந்தாது. அந்த இடம் 'ந—அர—கு—' (நரகு). அதாவது, மிகுதியாக பாம்புகள் உள்ள பூமி.

† ந-அர-கு: மிகுதியாக பாம்புகள் உள்ள பூமி.

மிகுதியாக பாம்புகள் உள்ள பூமிக்கு—'ந-அரகு' விற்குச்—சென்றால் என்ன நேரிடும்? என்ன நேரிடுமோ, அந்தத் தன்மைக்கு "ந-அர-கு-அம்" (நரகம்) என்று பெயர்.

அராகுவில் காஇல்அம்போது, மனிதர்கள் சென்றால் என்னென்ன அபாயங்கள் நேரிடும்? எதையெதை அவர்கள் பார்ப்பார்கள்? நாம் சென்று பார்ப்போம்!

அதோ ஒரு பாம்பு 'ச்அர்' என்று போகிறது. இதைச் "ச்அர்-போ-அம்" (சர்ப்பம்) என்று சொல்லலாம். ஒரு மனிதனை ஒரு பாம்பு கடித்துவிட்டது. உடனே அவனுடைய முகம் கருக்கிறது. அவனுடைய அழகு கெட்டுவிட்டது. இந்தப் பாம்பை 'அ-இரி' (அரி) என்று சொல்லலாம். அழகைக் கெடுப்பது என்று பொருள். இதையே 'அ-இரி-அ-இர்-ஆ' (அரி அரா) என்று கூறலாம். இன்னொரு பாம்பு நாக்கை நீட்டுகிறது. இதன் நாக்கில் மேகத்தின் நிறத்தையுடைய நீர் இருக்கிறது. இந்த நீர்தான் மனிதர்களைக் கொல்கிறது. இந்தப் பாம்பை 'நா-கம்' (நாகம்) என்று சொல்லலாம். நாக்கிலே மேகநிற நீரையுடையது என்று பொருள். இன்னொரு பாம்பு பல்லினால் கடிக்கிறது. கடிக்கப்பட்டவன் அழிகிறான். இதனால் இதைப் 'பன்-ஈ' (பணீ) என்று சொல்லலாம். பல்லினால் அழிப்பது என்று பொருள். இன்னொரு பாம்பு நாக்கை நீட்டுகிறது. நாக்கினால் சிறு பூச்சிகளையும், தவளைகளையும், குருவிகளையும் இழுத்து அழிக்கிறது. இதை 'நா-ஈ' (நாயீ) என்று சொல்லலாம். நாக்கினால் அழிப்பது என்று பொருள்.

இவையெல்லாம் சிறிய பாம்புகள். இவற்றினால் 'நா-சா-அம்' (நாசம்) உண்டாகிறது. நாக்கினால் சாகும் தன்மை என்று பொருள். அராகுகா இல்அம் வாஸ்தவத்தில் இங்கு நாசா அம் ஆக இருக்கிறது.

யா-மா*

இவற்றைவிட பெரிய பாம்புகளும் 'நஅரகு'வில் இருக்கின்றன. இவை என்ன செய்கின்றன? இவைப் பாம்புகளாக இருந்தபோதிலும், பல விஷயங்களில் மிருகங்களாகவே இருக்கின்றன. சிறிய பாம்புகளைப்போல் வளைகளில் நுழைந்து வசிப்பதில்லை. மிருகங்களைப் போல் தரையின் மேல்பரப்பிலும், கிளைகளிலும் வசிக்கின்றன. சிறிய பாம்புகளைப்போல் வெறும் தவளைகளையும் பூச்சிப் பொட்டுகளையும் இவைப் புசிப்பதில்லை. பெரிய மிருகங்களையும் மனிதர்களையும் புசிக்கின்றன. ஆகவே, இவற்றைப் பாம்புகளாகக் கருதுவதைவிட மிருகங்களாகக் கருதுவதே இவற்றின் தனித்தன்மையை உணர்த்தும். மிருகங்கள் என்று சொல்கிறபோது, மிருகங்களிடமில்லாத இவற்றிற்கு மட்டுமுள்ள தன்மையையும் கவனிக்கவேண்டும். மிருகங்கள் பிற மிருகங்களின் உடலை கட்டாது. இந்தப் பாம்புகள் பிற மிருகங்களின் உடலைக்கட்டி நெரித்துவிடும். அதன் பிறகே சிறுகச் சிறுக விழுங்கும். அதோடு மட்டுமல்ல, இவற்றின் தோற்றமும் பார்வையும் மிகவும் பயங்கரமானவை. மிருகங்களைக்கண்ட மாத்திரத்தில் மற்றவையெல்லாம் ஓட்டம் பிடிக்க முடிந்தது. இந்தப் பாம்புகளைக் கண்டபோது, பல மிருகங்களும் பறவைகளும் திகைத்து, பிரமித்து ஓட முடியாதபடி நின்றன. இவற்றின் கண்களைப் பார்த்து மயக்கமடைந்தன. இதனாலேதான், மிகவும் மெதுவாக ஊர்ந்து வரக்கூடிய இந்தப் பாம்புகளுக்குப் பெரிய மிருகங்களையும் உணவாகப் புசிக்க முடிந்தது. ஆகவே, இவற்றின் விசேஷ தன்மைகளை எப்படி உணர்த்துவது? (1) இறைச்சியைப் புசிக்கும் மிருகங்கள் இவை. (2) உடம்பினால் கட்டும் மிருகங்கள் இவை. (3) கண்ணினால் இழுக்கும் மிருகங்கள் இவை. (4) திகைத்து

* யா-மா: உடலால் கட்டும் மிருகம்.

திற்கவைக்கும மிருகங்கள் இவை. (5) மரங்களிலிருந்து கீழே தாவும் மிருகங்கள் இவை. (6) வேரோ, விழுதோ என்று ஐயமுண்டாக்கும் வண்ணம் கிடக்கிற மிருகங்கள் இவை.

இறைச்சியைப் புசிக்கும் மிருகங்களாதலால் இவை 'தா-மா'. இவற்றின் தன்மை 'தா-மா-ம்' (தாமம்) உடம்பினால் கட்டும் மிருகங்களாதலால் இவை 'யா-மா'. இவற்றின் தன்மை 'யா-மா-அம்' (யாமம்) கண்களினால் பார்ப்பதன் மூலம் இவை மிருகங்களைத் திகைக்க வைப்பதனால் 'கண்-அரா' (கண்ணரா) 'கண் அரா' விரைகிற தன்மை 'கண்-அரா-வி'. இது அழிக்கிற தன்மை 'கண்-அரா-வி' இவை மரங்களிலிருந்து தாவுகின்றன. ஆதலால் 'தா-அரா' (தாரா). தாவுவதன் மூலம் மனிதர்களின் இனிமையான வாழ்வை அழிக்கின்றன. இதனால் 'தா-அரா-இன்-ஈ' (தாரணி). இவை மிருகங்களுக்கு ஐயத்தை உண்டாக்குகின்றன. இவ்விதம் அந்த மிருகங்களை விழுங்கி இல்லாது ஒழிக்கின்றன. இந்தத் தன்மைக்கு, "மா-ஐ-மா-இல்-அம்" என்று பெயர். மிருகங்களுக்கு ஐயத்தை உண்டாக்கி மிருகத்தை இல்லாது ஒழிக்கும் தன்மை என்று பொருள்.

ஆகவே, அராகுகா இல் அம் போது காட்டில் நடக்கிற நமக்கு என்ன நேரிடும்? நாம் சென்று கொண்டே இருப்போம். நம் கண்ணுக்கு யாமா இருப்பது தெரியாது. ஆனால் யாமாவின் கண் நம்பேரில் தாவும். உடனே அது நம்பேரில் தாவி நம் இடுப்பைக் கட்டி முறிக்கும். ஒரு விநாடிக்குள் இது நேர்ந்து விடும். இவ்விதம் யாமாவின் கண் தாவுகின்ற தன்மைதான், "யா-மா-கண்-தா-அம்" (யமகண்டம்). இது மனிதர்கள் எதிர்பாராத போது திடீரென்று நிகழ்வது.

ஏ-உரு-மை-வாகாநஅம் †

திடீரென்று இவ்விதம் நிகழ்வதற்கு என்ன காரணம்? ஏன் மனிதர்களினால் இதை உணர்ந்து எச்சரிக்கையாக தப்ப முடியவில்லை?

இதற்கு "யா—மா" வின் "வாகாநஅம்", "மாஜமா இல்அம்" ஆகிய தன்மைகள் தான் காரணம். வாகாநஅம் என்றால் பாய்ந்து காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை. மாஜமா இல்அம் என்றால் அதன் நிறம்.

'வாகாநஅம்' எப்படிப் பட்டது? எய்யப்பட்ட கல் எப்படி குறி தவறாது போய் விழுகிறதோ, அவ்விதம், மரத்தில் சுற்றிக்கொண்டு இருக்கிற அந்தப் பாம்பு கீழே நடக்கிற மிருகங்களின் பேரில் குறி தவறாது விழுகிறது. எறியப்பட்ட குச்சிப்போல் நேராக மனிதன் பேரில் விழுந்து உடம்பைச் சுற்றுகிறது. அதே சமயம், அதன் நிறம் அது வசிக்கும் இடத்தின் நிறத்தைப் பெற்றிருக்கிறது. இதனால் அதை மனிதர்கள் பார்க்க முடியவில்லை. ஆகவே, 'ஏ—உரு' வும் 'மை' யும் அதன் வாகாநஅம். அதாவது, குறியின் பேரில் எய்கின்ற உருவமும் நிறமும் தான் அது பாய்ந்து காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மையாக இருக்கின்றன. 'ஏ—உரு' வும், 'மை' யும் இல்லாவிட்டால், அதற்கு வாகாநஅம் இல்லை. அதாவது எய்யத்தக்க உருவமும் நிறமும் இல்லாவிட்டால், அதற்கும் பாய்ந்து அல்லது வந்து காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மை இல்லை. ஆகவே யாமா வாகாநஅம் ஏ உரு மை.

---

† ஏ-உரு-மை-வாகாநஅம்: எய்யத்தகுந்த உருவத்தினாலும் நிறத்தினாலும் பாய்ந்து வந்து தன் காப்பை மிகுத்துக்கொள்ளும் தன்மை. (ஏ: எய்தல், எறிதல்; மை: நிறம்; வா: பாய்தல்; கா: காப்பு: ந: மிகுதி; அம்: தன்மை.)

ஏ உருமை வரகாநஅும் உடைய யாமா, எத்தகையது? திஸைப்பரப்பில் சாகடிக்கும் தன்மையையுடையது (பாசம்) இது காப்பை அழிக்கும் உருவத்தையுடையது. இது தான் 'கா-ஈ-உரு' (கயிறு) அதாவது, ஏ உருமை வரகாநஅும் உடைய யாமா, பாசாஅும் உடையது; கா ஈ உரு உடையது.

தூ-மா-கேள்-து †

இந்த 'யா-மா', மிருகங்களிலேயே இறைச்சியைப் புசிக்கும் மிருகமாதலால் 'தூ-மா' என்று சொல்லப் பட்டது. இவற்றைத் தவிர சிங்கம் புலி முதலியவையும் "தூ-மா" தான். ஏனெனில் அவையும் இறைச்சியைப் புசிப்பவைதான். என்றாலும், மற்ற தூமாக்களுக்கும் இதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்றவையெல்லாம், பாய்ந்து தமக்கு வேண்டிய உணவைப் புசிக்கும். இவை தம் கண் பார்வையினால் மயக்கி, மிருகத்தை ஓடாதபடி செய்து, மிருகத்தின் மன உறுதியைக் குலைத்து, சாவ தானமாக வந்து புசிக்கும். ஆகவே, தூமாக்களிலேயே, தம் உணவைக் கேட்டு உண்கிற மிருகங்கள் இவை. தம் உணவின் மனதைத் தம் பார்வையில் லயிக்கச் செய்து உண்கிற பாம்புகள். ஆகவே, மற்றவை எல்லாம் வெறும் "தூ-மா" களாக இருக்கின்றபோது, இவை "தூ-மா-கேள்-து" (தூமகேது) ஆக இருக்கின்றன. அதாவது, இறைச்சியையுடைய மிருகங்களைக் கேட்டுப் புசிப்பவை.

ஆனால் அராகு என்ற பாம்புப் புற்றில் வசிக் கின்றவை இவ்விதம் கேட்டுப் புசிக்கும் தன்மையை—பார்வையைப்—பெற்றிருக்கவில்லை. அராகுவிலுள்ள பாம்புகள் விருப்பமாகக் கேட்கின்ற உணவுகள் (கேள்து:

---

† தூ-மா-கேள்-து: இறைச்சியை மிருகத்திடம் கேட்டுப் புசிப்பது. [தூ: இறைச்சி; மா: மிருகம்; கேள்: கேட்பது; து: புசித்தல்]

கேது) எப்போதுமே அராகு இருக்கிற பக்கமாக வர மாட்டா. அவை அராகு எங்கு இருக்கிறதோ, அதற்கு வெகு தூரத்திற்கு அப்பாலே நின்று கொள்ளும். இதனால் அராகுவிலுள்ள பாம்புகள், தம் வயிறு கேட்கின்ற உணவுகளைத் தேடி, அவை இருக்கிற இடத்திற்குச் செல்கின்றன. அவை ஓடினால், அப்பாம்புகள் விரட்டுகின்றன. விரட்டி விரட்டிப் பிடிக்க முயல்கின்றன. அந்த உணவுகள், அப்பாம்புகளின் வால் பக்கமே இருப்பதற்கு முயல்கின்றன.

அராகுவிலுள்ள பாம்புகளுக்கும் கேதுவுக்கும் இப்படி போராட்டம் நடக்கிறபோது, 'தூமா' வந்தால், 'கேது' சக்தியற்று நின்று விடுகிறது. தூமாவின் வாய்க்குள் அகப்பட்டுக் கொள்கிறது. ஆகவே தூமகேது வருகிறபோது நிச்சயமான அழிவு உண்டாகிறது. இதற்குக் காரணம் கண்களினால் இழுக்கும் சக்தியைத் தவிர, நீண்ட வாலினால் மடக்கும் சக்தியும் தூமகேதுவுக்கு இருக்கிறது. வாய் பக்கத்தி லிருந்து தப்பித்து வால் பக்கம் ஒரு மிருகம் ஓடிவிட்டால், வாலால் அடித்து தூமகேது அதை சுருட்டிவிடுகிறது. ஆகவே தூமகேதுவின் லக்ஷணம் முன் பக்கத்தில் காந்த ஒளியையும் பின் பக்கத்தில் நீண்ட வாலையும் பெற்றிருப்பதே என்று புரிந்துகொள்ளலாம்.

க்உள்-ஈய்-கை-கா-இல்-அம் †

'அராகு'வில் உள்ள பாம்புகளும், 'ந அராகு' விலுள்ள யாமர்க்களும் எல்லா சமயங்களிலும் இரை

† க்உள்-ஈய்-கை-காஇல்அம் : 'க்உள்' என்ற ஒலியை ஈய்கின்ற பக்கத்தில் காப்பு இல்லாதத் தன்மை. (க்உள்: குள்; க்உள்உக்உள்உ: குளுக்குளு; க்உள்ஈர்: குளிர்: குள் ஒலியெழுப்பும் ஈரம் அதன் சிறப்பு; க்உள்ஈர்சீ: குளிர்ச்சி. க்உள் என்று ஒலியெழுப்பும் ஈரத்தினால் காப்பு இல்லாத தன்மை; க்உள்ஈர்காஇல்அம்: குளிர்காலம்.)

தேடுவதில்லை என்பதை அப்போதே பார்த்தோம். அவை சில குறிப்பிட்ட நேரத்தில்தான் இரைத் தேடின. எந்தப் பக்கத்தில் இரைத் தேடின?

தவளைகளைப் பிடித்துத் தின்பதற்கு அராகுவிலுள்ள பாம்புகள் விரும்பின. தவளைகள் தான் அவற்றின் வயிறு கேட்கிறபிரதானமான 'கேள்-து'. ஆகவே, அவைத் தவளைகள் வசித்த நீர் நிலைகளுக்கு சென்றன. அங்கு நீர்பருகமற்ற எல்லா மிருகங்களும் வந்தன. ஆகவே, தூமாகேது என்ற யாமா, அந்த வழியில் கண்ணை வைத்துக் கொண்டு தாவுவதற்குக் காத்து இருந்தது. நீர் பருக சென்ற மிருகங்களின் பேரில் கண்ணைத் தாவச் செய்தது.

ஆகவே, நீர் நிலைகளில் பாம்புகளின் அபாயம் மிருகங்களுக்கு ஏற்பட்டது. நீர் நிலைகள் என்பவை என்ன?

மிருகங்கள் நீர்ப் பருகியபோது, 'க்உள்' என்ற ஒலி உண்டாயிற்று. அந்த 'க்உள்' என்ற ஒலியை ஈய்ந்த பக்கங்கள் எல்லாம் 'க்உள்-ஈய்-கை' (குளிகை). ஆகவே, நீர் பருகும் பக்கங்களுக்குக் குளிகை என்று பெயர். அங்கு மிருகங்களுக்குக் காப்பு இல்லாத தன்மைதான், "க்உள்-ஈய்-கை-கா-இல்-அம்" (குளிகை காலம்).

குளிகையில் காஇல்அம் ஏன் உண்டாயிற்று? வழியில் யாமாகண்தாஅம்(யமகண்டம்) ஏற்பட்டதனால்.

ஆகவே, குளிகை காஇல்அம் போது, வழியில் யாமாகண்தாஅம் ஏற்படும்.

எனினும், மிருகங்கள் நீர்ப்பருக நீர் நிலைக்கு வந்த போது, பாம்புகளுக்கு சுலபமாக உணவு கிடைத்ததைப்

போலவே, மனிதர்களுக்கும் சுலபமாக மிருகங்கள் கிடைத்தன. பல இடங்களுக்கும் அலைந்து திரிந்து மிருகங்களை வேட்டையாடுவதற்கு பதில், நீர் பருக வருகிற மிருகங்களைக் குறிப்பிட்ட சில இடங்களில் அடித்துக் கொல்லலாம் அல்லவா? ஆகவே, குளிகையில் பாம்புகளினால் மிருகங்களுக்குக் காப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டது போலவே, மனிதர்களினாலும் ஏற்பட்டது.

அரா-தே-வா †

இந்தப் பாம்புகள் எவ்விதம் தம் வண்மையை மிகுந்துக் காப்பாற்றிக் கொண்டன? அதாவது, எவ்விதம் வண்நகாஅம் பெற்றன?

இவை பூமிக்கு அடியிலிருந்த வளைகளில் வசித்தன. அந்த வளைகள் இருட்டாக இருந்தன. இவை நீருக்கு அடியில் வசித்தன. அங்கும் இருட்டாக இருந்தது. இவை அடர்ந்த காட்டில் கிளைகளுக்கு இடையே வசித்தன. இங்கும் நிழலினால் இருட்டாக இருந்தது. இவை புல் பூண்டுகளுக்கு இடையேயும், புதர்களுக்கு இடையேயும், சருகுகளுக்கு அடியிலும் இருட்டாக இருந்த இடங்களின் வழியாகப் புகுந்து ஓடின. ஆகவே, இருட்டுத்தான் இவற்றிற்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மையை உண்டாக்கியது. இதனாலேயே இருட்டு மிகுந்த இரவு நேரம் முழுவதிலும் இவற்றினால் காப்பு இல்லாத தன்மை மனிதர்களுக்கு ஏற்பட்டது. இருட்டும் நீரும் இவற்றிற்குப் பாதுகாப்பு அளித்தக் காவலர்கள்.

† அரா-தே-வா: பாம்புகளைப் புசிக்க வருவது.

இதற்குமாறாகத் தீயும் ஒளியும் இவற்றிற்குப் பகையாக இருந்தன. காட்டுத் தீ மற்ற மிருகங்களை அழிக்க முயன்றது போலவே இவற்றையும் அழித்தது. சூரிய வெளிச்சம் இவற்றைக் கொல்லுவதற்கு மனிதர்களுக்கும் மற்ற மிருகங்களுக்கும் உதவி செய்தது. வெளிச்சத்தில் மனிதன் எதிரே வந்த பாம்பு அநேகமாக அழிக்கப்பட்டது.

இயற்கையில் தீய்க்கும் நீருக்கும், இருட்டிற்கும் ஒளிக்கும் இருக்கிற பகைமை, இவற்றிற்கு 'வல்நகாஅம்' அளிக்கிறது. இவை எப்போதுமே நீரையும் இருட்டையும் அண்டியே வாழ்கின்றன.

இந்த தன்மையினல் தீய்க்கும் வெளிச்சத்திற்கும், நீருக்கும் இருட்டிற்கும் பல பெயர்கள் உண்டாயின.

புசிக்கின்ற தீயினல். காப்பு இல்லாத தன்மை (தே-தீ-கா-இல்-அம்: தேதிகாலம்) ஏற்பட்டபோது, பாம்புகள் திக்குமுக்காடி ஓடின. பல பாம்புகளைத் தீ புசித்தது. இதனல் தீ 'அரா-தே-வா' என்று சொல்லப் பட்டது. பாம்பைப் புசிக்க வருவது என்று பொருள். தீயின் சுவாலைப் பாம்புபோலவே நெளிந்தது. அந்த சுவாலைப் பாம்பு போலவே அழிக்கும் தன்மையுடையதாக இருந்தது. இதனல், பாம்பை அழிக்கும் பாம்பு என்று தீயின் சுவாலையைக் குறிப்பிட 'அரா-வீ-அரா' (அராவீரா) என்றார்கள். அதையே அழிக்கும் பாம்பின் பரப்பைத் தீய்க்கும் பாம்பு என்று சொல்ல, "வீ-அரா-பா-தீ-அரா" (வீரபதிரா) என்றார்கள். அதையே உருவத்தில் தீயாக இருக்கிற பாம்பு என்று சொல்ல, 'உரு-தீ-அரா' (ருத்திரா) என்றார்கள். பாம்புக்கு அது சாவாக வந்ததனல் அதை 'அரா-சா-அன்' (அரசன்) என்றார்கள். பாம்பைச் சாகடிப்பவன் என்று பொருள். மிகுந்து நெளிகின்ற பாம்பாகச் சாக

டிப்பது என்றும், மிகுந்து நெளிகிற பாம்புகளைச் சாக டிப்பது என்றும் சொல்வதற்கு 'ந-ஆட-அரா-சா' (நடராசா) என்றார்கள். நச்சுப்பையையுடைய பாம் புகளை அழிக்கப் பாய்கிறவன் என்று சொல்ல, 'பை-அரா-வா-அன்' (பைரவன்) என்றார்கள்.

அரா-கா-வா †

இவ்விதம் பாம்புகளை அழிப்பதற்கு முயற்சித்த 'மாகாதேவா', மிகவும் ஆங்காரத்துடன் நஅராகுவில் பரவியபோது, பாம்புகள் என்ன செய்தன? பல மடிந் தன; சில பூமிக்கு அடியிலிருந்த வளைகளில் நுழைந்து அடி பாதாளத்திற்குச் சென்றன. இன்னும் சில அருகே இருந்த குளத்தில் இறங்கி ஆழத்திற்கு ஓடி விட்டன. அந்தப் பாம்புகளைத் தீயினால் அழிக்க முடி யவில்லை. அவை நீரினாலும் இருட்டினாலும் காப்பாற் றப்பட்டன. இதனால் இருட்டை 'அராகாவா' (ராகவா) என்று சொல்லலாம் அல்லவா? பாம்புகளுக்கு காப் பாக வருவது என்று பொருள்.

நீரிலும் இருட்டிலும் தஞ்சம் புகுந்த பாம்புகள், தீ எரிந்து அணைந்து தணிந்த பிறகு, 'தீஇறஇன்தா' வெளிக்கு வந்தன. அங்கு அவை மட்டுமே இருந்தன. அவற்றைப் போலவே வளையிருட்டில் தஞ்சம் புகுந்த எலிகளையும், நீரில் தஞ்சம் புகுந்த தவளைகளையும் பிடித்துப் புசித்தன. வெகுவிரைவில் அந்த இடம் 'நஅராகு'வாக மாறிவிட்டது. இந்நிலையில், 'தீஇற இன்தா' வெளிக்கு தாகம் மேலிட்டதால் தண்ணீர் பருகும் பொருட்டு மற்ற மிருகங்கள் வந்தன. அந்த மிருகங்களையும் பாம்புகள் பிடித்துப் புசித்தன. இவ்

† அரா-கா-வா : பாம்புகளைக் காப்பாற்ற வருவது.

விதம், தீயிடமிருந்து பாம்புகளைக் காப்பாற்றிய தண்ணீர், தொலையிலிருந்த மிருகங்களுக்கு தாகத்தை உண்டாக்கி, நீர் நிலைக்கு வரச் செய்து, பாம்புகளிடம் சிக்கச் செய்தது. இதனால் நீருக்கும் அதன் ஆழத்திலுள்ள இருட்டிற்கும் 'அராகாவா' என்ற பெயர் பொருத்த மல்லவா ?

இருட்டு என்று கூறுகிறபோது அது பல விதமாக இருப்பது நம் கவனத்திற்கு வரும். ஒவ்வொரு வித மான இருட்டிற்கும் ஒவ்வொரு விதமான பெயர் வைக்கலாம்.

பாம்புகளுக்கு வளைதோண்ட தெரியாது. அவை எலிகளும், முயல்களும், பன்றிகளும் தோண்டுகிற வளை களிலேயும், கரையான்கள் துறந்த புற்றுகளிலேயும்தான் வசிக்கின்றன. எலி வளையிலுள்ள இருட்டுக்கும், புற் றிலுள்ள இருட்டிற்கும், பன்றி வளையிலுள்ள இருட் டிற்கும் வித்தியாசங்களை நாம் உணர்ந்து கொள்வது அவசியமல்லவா ?

பாம்புகள் புற்றுகளில் வசிக்கின்றன. எலி வளை களிலும் பன்றி வளைகளிலும் தஞ்சம் புகுகின்றன. ஆகவே வசிக்கும் இடத்திற்கும், தஞ்சமடையும் இடத்திற்கும் வித்தியாசம் என்னவென்று தெரிந்து கொள்வது முக் கியம்.

புற்றுகளில் பாம்புகள் இனிமையாக வசிக்கின்றன. நீரிலும் வசதியாக வாழ்கின்றன. அங்கு உள்ள இருட்டி லேயே குஞ்சு பொறித்து வளர்கின்றன. தம் இனத்தைப் பெருக்குகின்றன. ஆகவே, பாம்புகளை இனிமையாகக் காப்பாற்றி மிகுத்துத்தருவது எந்த இருட்டோ, அதற்கு "அரா-இன்-கா-ந-தா" (அரங்கநதா)என்று பெயர்.

இரைத்தேடுகிற பாம்பு சோர்ந்து விடுகிறது, எதாவது இரையைத் தின்றுவிட்டால், அதிகமாக அசைய முடியாதபடி சீரணிக்கும் வரையில் சோர்ந்து கிடக்கிறது. சோர்ந்து கிடக்க, அது புற்றிலுள்ள இருட்டிடம் செல்கிறது. அங்கு அதை இனிமையாக இருட்டு காப்பாற்றுகிறது. ஆகவே இந்த இருட்டுக்கு 'சா-அரா-இன்-கா, (சாரங்கா) என்று பெயரிடலாம் அல்லவா?

அராவின் பரப்புக்கு இனிமையை ஈய்கின்ற இருட்டு 'அரா-பா-இன்-ஈய்' (அராபாணி). சாவு பூமிக்கு 'சா-கு' என்று பெயர். சாவு பூமியில் பாம்பின் பரப்புக்கு இனிமையை ஈய்கின்ற இருட்டு "சா-கு-அரா-பா-இன்-ஈய்" (சக்கரபாணி)

தா-சா-அ-வா-தா-இர்-அம் †

பாம்பு நம் கண்ணில் படுகிறது. உடனே அதை விரட்டுகிறோம். அது ஓடுகிறது. வழியில் பன்றிகளினால் தோண்டப்பட்ட ஒரு வளை இருக்கிறது. அதன் வாய் 'ஆ' என்று அகல விரிந்து இருக்கிறது. அதில் 'மை' என்ற நிறம் கறுப்பாக இருக்கிறது. அந்த "ஆமை" யில் ஓடி வருகிற பாம்பு இறங்கி மறைந்து விடுகிறது. அதைத் தேடுவதற்குக் கையில் வெளிச்சம் இல்லை. அதில் இறங்க பயமாக இருக்கிறது. இறங்கினால் 'ஆமை' யாக இருக்கும் இருட்டு, ஓடி வந்த பாம்பைக் காப்பாற்றிய (வா-அரா-கா) அந்த இருட்டு, நமக்கு சாவை உண்டாக்கும். தன்னுள் வருகிற (வா) மிருகத்தை (மா) நொந்து (நொ) சாகச் செய்யும் தன்மையை (அம்) உடையது

---

† தா-சா-அ-வா-தா-இர்-அம்: வலிமையுடன் பாய்ந்து சாகடிக்க அருகே வருபவைக்குக் கேடாகவும் பகையாகவும் இருக்கும் தன்மை. [தா: பாய்தல், வலிமை, கேடு, பகை; சா: சாகடித்தல்; அ: அருகே, அவ்விடத்திற்கு; வா: வருதல்; இர்: இருத்தல்.]

அந்த இருட்டு. வாமனொ அம் (வாமனம்) என்ற தன்மையையுடைய அந்த இருட்டு, வாஸ்தவத்தில், 'ஆமை''யாகவும், ''வா அராகா''வாகவும் இருக்கின்றது! பாம்பு நம்மிடமிருந்து தப்பித்துக்கொள்கிறது! நாம் இருட்டின் 'ஆமை' தன்மையையும், 'வா அராகா'' தன்மையையும், எதிர்க்க வகையின்றி திரும்புகிறோம்!

அடடா! கார்மேகத்தில் வருகிற கறுப்பு நிறம் 'மீ-இன்'(மீன்) ஆக இருக்கிறது! (மேலே உள்ள இனிமையாக இருக்கிறது.) ஆகவே அது மா-சு-அம் (மச்சம்); மிருகத்திற்கு சுகமான தன்மை.

வளையிலுள்ள இருட்டு ''வா-அரா-கா-அம்'' (வராகம்) தன்மையையுடையதாக இருக்கிறது! அதுவே பன்-இர்-ஈ! பலவிதமாக இருந்து அழிப்பது!

பன்றிகள் தோண்டுகிற வளைகளில் இருக்கும் அதே இருட்டு 'ஆ-மை'யாக இருக்கிறது! 'ஆமை' உண்மையில் கூ-ஈர்-மா-அம் (கூர்மம்); பூமியில் ஈர மிருகத்தின் தன்மையுடையது. ஈரமாக இருக்கிற மிருகம் குளிரால் ஒடுங்கி கிடக்கிறது. யாராவது அருகே சென்றால் கேடாக மாறுகிறது. அதுபோல் இந்த ஆமை குழியில் ஒடுங்கி கிடக்கிறது. அருகே சென்றால் கேடாக மாறுகிறது. ஈரத்தில் ஒடுங்கி கிடக்கிற மிருகம் திடீரென்று பாய்ந்து கேடு செய்வதுபோல், இந்தக் குழியிருட்டு அருகில் வருபவர்களைக் கீழே விழச் செய்து கேடு செய்வதுதான் ''கூ-ஈர்-மா-வா-தா-இர்-அம்''—பூமியில் ஈர மிருகம் பாய்வதனால் கேடாக இருக்கும் தன்மை.

அதே இருட்டு மிருகங்களை நோகச்செய்யும் ''வா-மா-னொ-அம்''(வாமனம்) தன்மையையுடையதாக இருக்கிறது! இதுதான் பூமியில் பிளவுகளில் உள்ள இருட்டு. கு-விள்-அம் (குள்ளம்) பூமியைப் பிளக்கும் தன்மை.

இத்தகைய இருட்டில் நாம் சென்றால், என்ன நேருகிறது? பாம்புகள் நம்மைச் சூழ்ந்துகொள்ளுகின்றன. நம் உடலைக் கட்டுகின்றன! ஆகவே, இந்த இருட்டை மிகுதியாகப் பாம்புகளை உடையவன் என்று குறிப்பிட 'ந-அர-அன்' (நரன்) என்று சொல்லலாம் அல்லவா? மிகுதியான பாம்புகளால் கட்டுகிறவன் என்று சொல்ல, "ந-அரா-யா-அன்" (நாரயண்) என்று கூறலாம் அல்லவா? மிகுதியாகப் பாம்புகளுக்கு இனிமையை ஈய்கிறவன் என்று கூற, "ந-அரா-இன்-ஈய்" (நாராயிணி) என்று சொல்லலாம் அல்லவா? பாம்புகளை விட்டு மிருகங்களைச் சாகடிப்பதில் மேம்பாடு உடையவன் என்று குறிப்பிட "அரா-மா-சா-மீ" (ராமசாமி) என்று உரைக்கலாமல்லவா? பரப்பிலே பாம்புக்கு சுகமளிப்பது என்று கூற, 'பா-அர-சு" (பாசு) என்று சொல்லலாம் அல்லவா? அழிக்கின்ற பாம்பின் தன்மையையே பெற்றிருப்பதால், பாம்பின்குண முடையவன் என்று கூற, 'அரா-அம்-அன்' (ராமன்)என்று புகலலாம் அல்லவா? ஒருபாம்பு அல்ல; பல பாம்புகளுடைய தன்மையையும் உடையவன் என்று புகல, "பல்-அரா-அம்-அன்" (பலராமன்) என்று சொல்லலாம் அல்லவா? தாவி சாகடிக்கிற பாம்பை வலிமையாக உடையவன் என்று கூற "தா-சா-அரா-தா-அன்" (தசரதன்) என்று கூறலாம் அல்லவா? பாம்பின் வண்மையை உடையவன் என்று கூற "அரா-வண்-அன்" (ராவணன்)என்று சொல்லலாம் அல்லவா? பாம்புக்கு வண்மையை ஈய்பவன் என்று கூற "அரா-வண்-ஈய்-அன்" (அராவணீயன்) என்றுஉரைக்கலாம் அல்லவா? பாம்புக்கு வண்மையை ஈய்ந்து பாதுகாப்பவன் என்று கூற, "அரா-வண்-ஈய்-கா-அன்" (அராவணீகன்) என்றும் சொல்லலாம் அல்லவா? பாம்புக்கு வண்மையை ஈய்ந்து பாதுகாப்பவன் என்று கூற, "அரா-வண்-ஈய்-பா-அன்" (அராவணீபன்) என்று புகலலாம் அல்லவா? பாம்பைக்கொண்டு சாகடிப்பவன் என்று சொல்ல "அரா-சா-அன்" (அரசன்) என்று இயம்பலாம் அல்லவா? பாம்பைக்கொண்டு சோர்வையும் சாவையும்

உண்டாக்குகிறவன் என்று கூற, 'அரா-சா-அன்' (ராஜன்) என்று புகலலாம் அல்லவா?

இவ்விதம் பாம்பைப் பாதுகாக்கும் தன்மையினால் இருட்டுக்கு எத்தனையோ ஆயிரம் பெயர்களை நமக்கு வைக்கமுடியும்

ஆ-ஈ-இர்-அம்-தா-இல்-ஐ-ஈய் †

இருட்டுடன் வசிக்கிற பாம்பை சுலபத்தில் கொன்று விடமுடியாது. குளம், ஏரி, ஆறு, கடல் ஆகியவற்றின் ஆழத்திலும், வளை, புற்று, பள்ளம் முதலியவற்றின் அடியிலும் இருட்டு இருக்கிறது. அந்த இருட்டை விட்டு பாம்பு தண்ணீரின் மேலே அல்லது வளையின் மேலே தலையைத் தூக்கும். ஒரு கல்லை எறிந்தால், உடனே கீழே அமுங்கும். பிறகு எங்கே தலையைத் தூக்கும் என்று நமக்குச் சொல்லமுடியாது. வளைப்பாம்பு பாதாளத்திலேயே ஊர்ந்து வேறு இன்னொரு பக்கத்தில் உள்ள துவாரத்தின் வழியாக வெளியேறும். அந்தத் துவாரம் நாம் நிற்கிற இடத்திலேயே இருக்கக்கூடும். நமக்குத் தெரியாமலேயே அப்பாம்பு நம்மைப் பின்புறமாக வந்து கடித்துவிடும். நீரில் தலையைத் தூக்கிய பாம்பு, நம் கண்ணுக்குப் புலப்படாத இடத்தில் மீண்டும் தலையைக் கிளப்பும். அப்படி வளையிலோ அல்லது நீரிலோ ஒரு பாம்பு அமுங்கிவிட்டால், "அது இங்கே இருக்கிறது!" என்று ஒரு இடத்தை சிலர் சுட்டிக்காட்டுவர். "இல்லை. அங்கே இருக்கிறது!" என்று வேறொரு இடத்தை மற்றவர்கள் காட்டுவர். 'அங்கு' சென்று பார்த்தால் அது

† ஆ-ஈ-இர்-அம்-தா-இல்-ஐ-ஈய்: ஆங்கேயும் ஈங்கேயும் இருக்கும் தன்மையைத் தந்து இல்லாத ஐயத்தை உண்டாக்குவது. (ஆ: ஆங்கே; ஈ: ஈங்கே; இர்: இருத்தல்; அம்: தன்மை; தா: தருதல்; இல்: இல்லாத; ஐ: ஐயம்.)

'இங்கு' இருக்கும். 'இங்கு'தேடினால் அது 'அங்கு' இருக்கும். ஆகவே இந்தப் பாம்புகளைச் சந்தேகத்(ஐ) தலையை உடைய பாம்புகள் என்று கூற, 'ஐ-தலை' பாம்பு என்று சொல்லலாம் அல்லவா? ஐ என்றால் ஐயம். ஐ-தலை பாம்பு என்றால் சந்தேகத்தையுண்டாக்கும்படியான தலையையுடைய பாம்பு என்று பொருள். மேலும் இவற்றை "ஆ-ஈ-இர்-அம்" தலை பாம்புகள் என்றும் கூறலாம். ஆ என்றால் ஆங்கே. ஈ என்றால் ஈங்கே. இர் என்றால் இருத்தல். அம் என்றால் தன்மை. ஆங்கேயும் ஈங்கேயும் இருக்கும் தன்மை "ஆ-ஈ-இர்-அம்"(ஆயிரம்). இந்த இரண்டு பெயர்களும் அவற்றிற்குப் பொருத்தமாக இருப்பதைப் பாம்பு வேட்டையின்போதுதான் பார்க்கமுடியும். இருட்டுடன் வசிக்கிற பாம்பைக் கொல்வதற்கு ஒரு இடத்தில் வளையை வெட்டினால், அது இன்னொரு இடத்தில் வெளியேறும்! வளைக்குள் புகையை விட்டால், பல இடங்களில் புகை வெளியே வரும்! புற்றில் வசிக்கிற பாம்பு நுழைவது ஒரு வழியில்; வெளியேறுவது இன்னொரு வழியில்! சில சமயம் ஒரு துவாரத்தின் வழியே நுழைகிற பாம்பு, தன் வால் அந்த துவாரத்திற்கு வெளியே தொங்குகிறபோதே, இன்னொரு துவாரத்தின் வழியாகத் தலையை மேலே தூக்கும்! பார்ப்பவர்களுக்கு அது ஒரே பாம்புதானா அல்லது இரண்டு பாம்புகளா அல்லது இரண்டு தலைகளையுடைய ஒரே பாம்பா என்ற சந்தேகம் உண்டாகும். அதே புற்றுக்குள் பல குட்டி பாம்புகள் வசித்தால், அவை இரைதேடும்பொருட்டு வெளியே வந்தால், பல துவாரங்களிலும் தலையைத் தூக்கும்! அப்போது அவற்றின் உடல் புற்றுக்குள் மறைந்து கிடக்க தலைகள் மட்டும் வெளியே தெரியும். இதே தோற்றம் அந்தக் குட்டிகள் சூரிய வெப்பத்தை கிரஹிக்கும் பொருட்டு தலைகளை நீட்டிக்கொண்டு இருக்கிறபோதும் தென்படும்! ஒரு உடலும் பல தலைகளுமாகத்தானே அந்தக் காட்சி இருக்கும்? மேலும், இரவில் ஒரு பக்கம் பாம்பு வருவதாக நினைத்து எச்சரிக்கையானால், வேறு ஒரு

பக்கமாக வேறொரு பாம்பு வந்து கடித்துவிடும். இந்தச் சந்தர்ப்பத்தில் பாம்பின் தலை எங்கே இருக்கின்றது, அதற்கு எத்தனைத் தலைகள் இருக்கின்றன என்பது புலப் படாது. ஆகமொத்தத்தில் இருட்டின் பாதுகாப்புடன் இருக்கின்ற, வருகின்ற, வசிக்கின்ற, தாக்குகின்ற பாம்பு கள் எல்லாம் ஐயம் உண்டாக்கும்படியான (ஐ) தலைகளைப் பெற்றிருக்கின்றன. ஆசஇர்அம் தன்மையை உடைய வையாக இருக்கின்றன.

சா-மா-அம் †

துளிக்கூட வெளிச்சமில்லாத இரவுநேரத்தில் இந்தப் பாம்புகளைச் சிறிது பார்க்கலாம். இரவு முழுவதும் ''அரா-கா-இல்-அம்'' ஆக இருந்ததென்பதை ஏற்கனவே பார்த்தோம்.

அரா காலத்தில் ஒவ்வொரு விநாடியிலும் அபாயம் வரக்கூடியதாக இருந்தது. ஒரு சிறிய சலசலப்பு பெரும் பீதியை உண்டாக்கிற்று. அபாயத்தை எதிர்பார்த்து, எதிர்பார்த்து, மனம் சோர்ந்தது. ஒவ்வொரு கரிய உருவமும், ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு சலசலப்பும் சாகடிக்கவரும் மிருகத்தின் தன்மையைப் (சா-மா-அம்: சாமம்: ஜாமம்) பெற்றிருந்தது. அவர்கள் இதனால் சோர்ந்த மிருகங்களின் தன்மையைப் (சா-மா-அம்: சாமம்: ஜாமம்) பெற்றனர். பாம்புகளால் ஏற்பட்ட காப்பு இல் லாத தன்மை (அராகாஇல்அம்) என்பது வாஸ்தவத்தில் ஒவ்வொரு விநாடியிலும் ''சாமாஅம்''களை உண்டாக்கிக் கொண்டு இருந்தது. ''சாமாஅம்''களின் கூட்டுச்சேர்க் கையே ''அராகாஇல்அம்'' ஆக இருந்தது.

† சா-மா-அம்: சாகடிக்கும் மிருகத்தின் தன்மை: சோர்ந்த மிருகத் தின் தன்மை.

எத்தனையோ தடவை "சாமா அம்"கள் உண்டான பிறகு, பொழுது விடிந்தது. சோர்வு நீங்கிற்று. சுகம் உண்டாயிற்று. முதன் முதலில் சுகத்தை பூமியில் வடித்தது எது? ஒரு நட்சத்திரம்! அது பூமியில் தென்பட்டவுடன் சுகம் உண்டாகும் நிலைமைத் தோன்ற ஆரம்பித்தது. ஆகவே, சுகத்தை பூமியில் வடிப்பவன் (சு-கு-இரி-அன் : சுக்கிரன்) என்று அதைச் சொன்னார்கள். அது விரைந்து அழிவை அழித்து அச்சத்தை நீக்கியது. இதனால் அது "வீ-இடி-வெள்-ஈய்" (விடி வெள்ளி). இது உண்டான பிறகு, பாம்புகள் நெளிந்த புல்களின்மேல் காப்பு இறைக்க ஆரம்பித்தது. இதுதான் 'வை-கா-இறை' (வைகறை). பிறகு காப்புடன் அலைகின்ற நேரம் (கா-அலை: காலை) வந்தது.

இன்-தீ-அரா-இல்-ஓ-கா-அம் †

அராகாலத்தில் சாமங்கள் உண்டாகிக்கொண்டு இருந்தபோது மனிதர்கள் என்ன செய்தார்கள்? அச்சத்தை அழித்த 'வெள்-ஈ'களைப் பார்த்துக்கொண்டு இருந்தனர். அப்போது விண்ணில் அவர்கள் பாம்புகளைப் பார்த்தார்கள்! எப்படிப்பட்டவை அவை? ஒளிமயமானவை! இனிய ஒளியாக வடிவமெடுத்தவை! அவற்றை "இன்-தீ-அரா!" (இந்திரா) என்றார்கள்! "வா-சீ-அரா" (வஞ்சிரா) என்றார்கள்! "தா-அரா" (தாரா) என்றார்கள்! அந்தப் பாம்புகளைக் கூர்ந்து நாள்விடாமல் கவனித்தபோது, அவர்களுடைய கண்களுக்கு அங்கேயும் 'அராகு' இருப்பது தெரிந்தது! அங்கு 'து-மா'வைப் பார்த்தார்கள். "கேள்-து"வைக் கண்டார்கள். தரையில் தாங்கள் கண்ட காட்சிகள் அத்தனையையும் விண்ணில்காண முற்பட்டனர். தரையில் தாம் உண்டாக்கிய ஒவ்வொரு பெயரையும்

† இன்-தீ-அரா-இல்-ஓ-கா-அம்: இனியத் தியாகவிருக்கும் பாம்பு, ஈடு இல்லாத ஒட்டத்தினால் காப்பாற்றிக்கொள்ளும் தன்மை.

விண்ணிலுள்ள வெவ்வேறு நக்ஷத்திரங்களுக்கும் மண்டலங்களுக்கும் சூட்ட ஆரம்பித்தனர். இந்த விவரங்களை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நாம் கவனிப்போம். ஆனால் இங்கு நாம் கவனிக்கவேண்டியது, விண்ணில் தென்பட்ட இன்தீஅராக்கள் எல்லாம், தரையில் வசித்த அராக்களைப் போல் மனிதர்களைக் கொல்லக்கூடியவையாக இருக்கவில்லை. அவற்றினால் “கடிக்கப்பட்டு” ஒருவன்கூட சாகவில்லை. அவை மேலே தீயாக இருக்கின்ற பாம்புகள் (மீ-தீ-அரா : மித்திரா). உருவத்தில் தீயாக இருக்கிற பாம்புகள் (உரு-தீ-அரா :ருத்திரா). மேலான பாம்புகள் (மீ-அரா : மீரா).

அந்த விண்ணிலுள்ள பாம்புகளுக்கும் தரையிலுள்ள பாம்புகளுக்கும் அடிப்படையான வித்தியாசம் என்ன? தரையிலுள்ளவை இருட்டுடன் வசிப்பவை. தீயினால் அழிக்கப்படுபவை. விண்ணிலுள்ள பாம்புகள் தீயின் வடிவத்தையே பெற்றிருப்பவை. இருட்டை அறுத்து வெளிச்சத்தை உண்டாக்குபவை. இருட்டுடன் வசிப்பவை மனிதர்களைக் கொல்கின்றன. தீயின் வடிவத்தையுடையவை மனிதனைக் கொல்வதில்லை. ஏன்? அவற்றிற்குக் கொல்லும் சக்தி இல்லையா? உண்டு! மின்னலாக அந்த விண்ணிலுள்ள அராக்கள் நெளிகின்றபோது, சில சமயங்களில் மனிதர்களைக் கொல்கின்றன. அவை விரும்பினால் யானைகளைப்போலவே பூமியை அழிக்க முடியும். ஆனால் அவை அப்படிச் செய்வதில்லை! யானைகளைப் போல் பெரும்பாலான சமயங்களில் மனிதர்களைப் பகைக்காமல் இருக்கின்றன.

இதனால் மனிதர்களுக்கு அபாயம் குறைகிறதல்லவா? மனிதர்கள் அவற்றிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு விசேஷமாக முயற்சிக்கவேண்டியதில்லையல்லவா? இதனால் மனிதர்கள் “வண்நகாஅம்” பெற முடிகிறதல்லவா?

இவ்விதம் நினைத்த அக்காலத் தமிழர்கள் இன்றீ அராக்களுக்கு எவ்விதம் வண்நகாஅம் அளிப்பதென்று சிந்தித்தார்கள்! அவை எதைப் புசிக்குமோ, அதை அவற்றிற்கு அளிக்கவேண்டும். அப்போதுதான் அவை வண்நகாஅம் அடையும்.

அ-மீ-இர்-தா-அம் †

அவை எதைப் புசிக்கின்றன ?

அவர்கள் சிந்தித்தார்கள். ஆனால் அவை புசிக்கும் உணவு இன்னதென்று அவர்களுக்குப் புலப்படவில்லை. எனினும், அவர்கள் அவை "அ-மீ-இர்-தா-அம்" என்ற தன்மையையுடைய உணவைப் புசிப்பதாகத் தீர்மானித்தனர்.

"அமீஇர்தாஅம்" (அமிர்தம்) என்றால், அழகையும் மேன்மையையும் இருக்கையையும் தரும் தன்மை. அல்லது அழகாக மேலே இருந்து தாவும் தன்மை.

தரையிலுள்ள பாம்புகள் புசிக்கிற உணவுக்கு மாறுபட்டது "அமீஇர்தாஅம்". ஏனெனில், தரையிலுள்ள பாம்புகளுக்கு மாறுபட்டவையாக இருக்கின்றன விண்ணிலுள்ள பாம்புகள். தரையிலுள்ள பாம்புகளின் உணவை அவைப் புசித்தால் அப்படி ஆகாயத்தில் அழகான மேன்மையான இருக்கையைப் பெற்றிருக்கமுடியாது. அந்த அமிர்தம் தரையிலுள்ள பாம்புகளுக்கு கிடைத்தால், இவையும் விண்ணிலுள்ள பாம்புகளைப்போல் அழகையும் மேலான இருக்கையையும் பெற்றுவிடக்கூடும் என்றும் நினைத்தனர்.

---

† அ-மீ-இர்-தா-அம் : அழகையும் மேன்மையையும் இருக்கையையும் தரும் தன்மை. [அம்-ஊ-தா-அம்: அழகான ஊனைத் தரும் தன்மை]

அந்த "அமீஇர்தாஅம்" எங்கே இருக்கிறது? அது எப்படி அந்தப் பாம்புகளுக்குக் கிடைத்தது? அதை மனிதர்கள் பெற முடியாதா?—இந்தக் கேள்விகள் அன்றைய சூழ்நிலைமையில் அவர்களுடைய உள்ளக் கிடக்கையை வெளியிட்டது. அவர்கள் மேய்ச்சல்காரர்களாக ஆன பிறகு இதே கேள்விகளுக்குக் கண்டுபிடித்த விடையை வேறு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

அ-சீ-இரி-அரா: அ-சு-இர்-ஈ-அரா †

இப்போது விண்ணிலுள்ள பாம்புகளுக்கும் தரையிலுள்ள பாம்புகளுக்கும் வித்தியாசம் தெரிந்து விட்டது. இந்த வித்தியாசத்தை உணர்த்தத் தனிச்சொற்கள் வேண்டுமல்லவா?

விண்ணிலுள்ளப் பாம்புகள் அழகையும் ஒளியையும் பூமியில் வடிப்பதனால், 'அ-சீ-இரி-அரா' (அசிரியரா) என்று கூறப் பட்டன. இவையே உயர்திணை ஆண்பால் விகுதியுடன் 'அ-சீ-இரி-அர்' (அசிரியர்) என்றும் சொல்லப் பட்டன.

இவற்றிற்கு நேர்மாறாக பூமியிலுள்ள பாம்புகள் மனிதர்களின் அழகையும் சுகத்தையும் இருக்கையையும் அழித்தவையாதலால், 'அ-சு-இர்-ஈ-அரா' (அசுரீயரா) என்று கூறப்பட்டன. அழகையும், சுகத்தையும் உறுத்தியதனால், 'அ-சு-உறு-அரா' (அசூறுரா: அசூரா) என்று கூறப்பட்டன. இவை அழகாகவும், 'ச்உ' என்று சிறுபவையாகவும் இருந்ததனால், 'அ-ச்உ-இர்-அரா' (அசுரரா) என்றும் சொல்லப்பட்டன.

---

† அ-சீ-இரி-அரா: அழகான ஒளியை வடிக்கும் பாம்பு.
அ-சு-இர்-ஈ-அரா: அழகையும் சுகத்தையும் இருக்கையையும் அழிக்கும் பாம்பு.

அசிரியராக்களை மனிதர்கள் எதுவும் செய்வதற்கு முடியாது. அசுராராக்களைக் கொல்லமுடியும்.

அசிரியராக்களுக்கு வணக்கமும் அளிக்க மனிதர் களிடம் அமிர்தம் இல்லை. அசுராராக்களுக்கு வணக்கமும் அளிக்க எலிகளையும் தவளைகளையும் முட்டை களையும் தீனியாகக் கொடுக்க முடியும்.

அசிரியராக்கள் மனிதர்களுக்கு உதவாதபோது, அவற்றைத் தமக்கு உதவக் கூடியவையாக அடக்க மனி தர்களுக்கு இயலாது. அதாவது, அவற்றிடமிருந்து வணக்கத்தைப் பறிக்க முடியாது. இதற்கு மாறாக, அசுராராக்களின் விஷப்பற்களைப் பிடுங்கிவிட்டால் சுல பமாக இவற்றிடமிருந்து வண்மையை மிகுத்துக் காப் பாற்றும் தன்மையை (வணக்கத்தைப்) பறிக்க முடியும்.

ஆகவே என்ன?

விண்ணிலிருந்த அசிரியராக்களைக் 'கடந்தவர்களின்' கோஷ்டியில் சேர்த்தனர்.

தரையிலுள்ள அசுராராக்களை 'உள்ளவர்களின்' கோஷ்டியில் சேர்த்தனர்.

இவ்விதம் பாம்பு வணக்கம் 'கட-வுள்' என்ற இரு விதமான தன்மைகளைப் பெற்றது.

விண்ணிலுள்ள அசிரியராக்களைத் தம்மிடம் உணவு உட்கொண்டு தமக்கு வண்மையை மிகுத்துக் காத்துக் கொள்ளும் தன்மையை உண்டாக்க வர வேண்டு மென்று அழைத்தபோது, 'இன்-தி-அரா! தே-வா! மா-து-தே-வா! இன்-து-தே-வா!............' என்று பலவாறாகக் கூப்பிட்டனர்.

அதன் பிறகு தரையிலுள்ள அசுராக்களுக்கு உணவுகளைக் கொடுத்தனர். பெட்டியில் அடைப்பட்டிருந்த பல் பிடுங்கப்பட்ட பாம்புகளை, "அ-சு-இர்-அரா! தே-வா!" என்று கூப்பிட்டனர். "அழகாகவும் சுகமாகவும் இருக்கிற பாம்பே! புசிக்க வருக!" என்று பொருள். 'அரா-வண்-ந-நே!' என்றனர். பாம்புகளில் வண்மையை மிகுதியாகவுடைய நண்பனே என்று பொருள். இவ்விதம் பலவாறாகத் தம்மிடம் அடக்கப்பட்டிருந்த பாம்புகளைக் கூப்பிட்டு உணவளித்தனர்.

பல் பிடுங்கப்பட்ட அசுராக்கள், மனிதர்களிடமிருந்து வண்நகாஅம் பெற்று வளர்ந்தபோது, அவற்றைப் பகைவர்களின்பேரில் வீசியெறிவதன் மூலம் அவற்றைக் கொண்டு மனிதர்கள் வண்நகாஅம் பெற்றனர்.

அப்படி அசுராக்களைப் பகைவர்கள்பேரில் எறிந்து தம் காப்பை மிகுத்துக் கொண்டவர்கள், 'அ-சு-இர்-அரா-கா-ந-அம்' (அசுராகணம்) உடையவர்களெனக் குறிப்பிடப் பட்டனர். அதையே அவர்களுடைய பகைவர்கள் "அரா-சா-சா-கா-ந-அம்" (ராக்ஷசகணம்) என்றனர்.

இப்போது தரையிலுள்ளப் பாம்புகளை அவர்கள் எவ்விதம் பிடித்தனர், எவ்விதம் பல்லைப் பிடுங்கினர், எவ்விதம் அடக்கினர் என்ற கேள்விகள் பிறக்கின்றன.

"அராசாசாகாநஅம்" ஒரு குலத்திற்கு இருக்க வேண்டுமென்றால், அசுராக்களை அக்குலத்தினருக்குப் பிடிக்கவும், பல்லைப் பிடுங்கவும், உணவளித்து வளர்க்கவும், வளர்த்தவற்றை உபயோகப்படுத்தவும், உபயோகப்பட்டவற்றை மீண்டும் தம்மிடம் அழைத்துக் கொள்ளவும் தெரியவேண்டும்.

அதேசமயம், அராசாசாகாநஅம் உடைய பகைக் குலங்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பியவர்கள், அந்த அசுராராக்களைச் சுலபமாகக் கொல்லுவதற்கு வேண்டிய சாதனங்களைத் தம்மிடம் வைத்திருக்கவேண்டும்.

ஒவ்வொரு குலத்திற்கும் இந்த இரண்டு விஷயங்களும் தெரிந்து இருக்க வேண்டியிருந்தது.

நாம் முதலில் அசுராராக்களைக் கொல்லுவதற்குப் பயன் பட்ட சாதனங்களை கவனித்துவிட்டு, பிறகு அவற்றைப் பிடிப்பதற்குப் பயன் பட்ட சாதனங்களைப் பார்க்கலாம்.

அசுராராக்களுக்கு முதலாவது பகை நெருப்பு. அது இன்னும் மின்னலாகிய 'சிவா'வாவும், 'பார்வாதீ' யாகவும் இருந்ததேயொழிய, —காட்டுத் தீயாகிய 'மாகாதேவா'வாகவும், 'ஊமாதேவீ'யாகவும் இருந்ததேயொழிய—மனிதர்கள் தம் இச்சைப்படி உபயோகப் படுத்துவதற்கு ஏற்ற 'கைதீ'யாக ஆகிவிடவில்லை. அது மட்டும் 'கைதீ'யாக ஆகிவிட்டால், மனிதர்களுக்கு அதிக சிரமம் இருக்காது. கைதீயைக் கொண்டு பாம்புகளை அழித்துவிட முடியும். அந்தக் 'கைதீ' காலம் வரும் வரையில் அவர்கள் வேறு 'அரசா'க்களை—அதாவது, பாம்புகளைச் சாகடிப்பவைகளைத்—தேடிப் பிடித்துப் பயன் படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

அரா-சா-வண்நகாஅம் †

அக்காலத்தில் 'அரசா'க்களாக—அதாவது பாம்புகளைச் சாகடிப்பவையாக—எவை இருந்தன?

† அரா-சா-வண்நகாஅம்: பாம்புகளைச் சாகடிப்பவைக்கு வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மையை அளித்தல்.

முதலாவதாக, சில பறவைகள் 'அரா-சா'க்களாக இருந்தன.

'ப்அற்' என்ற ஒலியை உண்டாக்கும் புல் போன்ற அழகிய சிறகுகளைப்(வை) பெற்றிருந்தவை எல்லாம் 'ப்அற்அவை' (பறவை).

அவற்றில் சில விண்ணிலிருந்து காக்கின்ற உருவமாகத் தாவுகின்றவையாக இருந்தன. அவைதான் 'கா-உரு-தா-அன்' (கருடன்).

அவைப் பாதுகாப்பான பரப்பில் இருந்து கொண்டு உணவை இனிமையாகப் புசித்தன. இதனால் அவை 'பா-இர்-ஊ-இன்-து' (பருந்து).

அவை வெகு உயரத்தில் பறந்தன. அந்த உயரத்தில் சூரியனின் வெப்பம் எவ்வளவு அதிகமாக இருக்கும்? எனினும், அந்த வெப்பத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் பண்பை உள்ளடக்கியவையாக இருந்தன. இதனால் அவை 'வெய்-கா-பு-உள்' (வேகப்புள்).

அவற்றில் சில எங்கு மனிதர்களுக்கு மிகவும் அபாயம் ஏற்பட்டதோ, அந்த பூமியில் வசித்தன. அதாவது, காப்பை இழந்து ஊனாக ஆகக் கூடிய பூமியில் இருந்தன. இதனால் அவை 'கா-இழ-ஊ-கு (கழுகு).

அவற்றில் சில ஊனை மிக மிகக் கொடூரமாக உறுத்துகின்றவையாக இருந்தன. இதனால் அவை 'வல்-ஊ-உறு' (வல்லூறு).

அவை அராக்களைச் சாகடித்தன. அதன் மூலம் அந்தப் பரப்புக்கு சுகத்தை ஈய்ந்தன. இதனால் அவை "அரா-சா-பா-சு-ஈய்" (அரச பக்ஷி)

அவைத் தரையில் தாவின. பாம்புகளை முறியடித்தன. பிறகு சாகடித்தன.

இவ்விதம் தாவி, முறியடித்து, சாகடித்தபோது, மறு பக்கத்தில் மனிதர்களுக்கு இனிமையை மிகுத்தன. தா-இரி-சா-இன்-ந-அம் (தரிசனம்) உடையவையாக இருந்தன.

இந்தத் "தாஇரிசாஇன்நஅம்" என்ற தன்மையினால், மனிதர்களுக்கு வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மையாகிய 'வண்நகாஅம்' உண்டாக உதவக் கூடியவையாக இருந்தன.

அவற்றின்மூலம் மனிதர்களுக்கு எத்தகை 'காநஅம்' உண்டாகக்கூடும்?

அவை மிருகங்களிடம் இல்லாத ஒரு தன்மையைப் பெற்றிருந்தன. அதுதான் 'மாஇல்-அம்' (மயிலம்). அதுதான் விண்ணிலிருந்து வந்து காப்பை மிகுக்கும் தன்மை. அதுதான் "மா-இல்-வா-கா-ந-அம்" (மயில் வாகனம்).

"மாஇல்வாகாநஅம்" அவற்றிற்கு எதனால் உண்டாயிற்று? 'ப்அற்' என்று பறப்பதனால். 'ப்அற்' என்று பறக்கும் தன்மைதான் 'ப்அற்-அம்' (பறம்.)

'ப்அற்-அம்'(பறம்) என்ற தன்மையினால், அவை திடீ ரென்று பூமியில் தாக்கும் மின்னலாகிய 'சீ-வா'வின் தன்மையைப் பெற்றிருந்தன. 'சீ-வா' என்ற மின்னல், குணத்தில் தீயாக வடிந்தவன். அதாவது, சிவா என்பது பு-தீ-இரி-அன். ஆகவே, ப்அற்அம்(பறம்) என்ற தன்மை, மின்னலின் குணமாகிய தீயை வடிக்கும் தன்மை யைப் பெற்றிருந்தது. அதாவது, அந்தப் பறவைகள் 'ப்அற்-அம்-சீ-வா-பு-தீ-இரி-அன்' (பரம்சிவாப்புத்திரன்) தன்மையை உடையவை.

இந்தத் தன்மையினால் அவை மனிதர்களுக்கு அழகையும் இனிமையையும் மிகுக்கும் தன்மையைப் பெற்றிருந்தவையாயின. இதனால் அவை 'அ-இன்-ந-அம் (அன்னம்).

இந்தப் பறவைகளில் ஒன்றுக்கொன்று நிறைய வேறுபாடுகள் இருந்தன. அந்த வேறுபாடுகளுக்கு ஏற்ப, சில மனிதர்களால் மிகவும் நேசிக்கப்பட்டன; சில அவ்வளவாக நேசிக்கப்படவில்லை.

தே-வா-வி-மா-இன்-ந-அம் †

இந்தப் பறவைகளில் கழுகு, கருடன், வல்லூறு, பருந்து ஆகியவைப் பாம்புகளையும் மற்ற மிருகங்களின் ஊனையும் — மனிதர்களுடைய ஊனைக்கூட — புசித்தன. இந்த நான்கில், கழுகு மனிதக் குழந்தைகளையும் ஆட்டுக்குட்டிகளையும், முயல்களையும் உயிரோடு தூக்கிச்சென்று புசித்தது. வல்லூறு பாம்புகளையே வேட்டையாடுவதென்ற கொள்கையற்றது. அது பாம்புகளைக்காட்டிலும் புரு போன்ற பறவைகளை வேட்டையாடுவதில் கவனம் செலுத்தியது. கழுகும், வல்லூறும் எப்போதுமே விண்ணில் பறந்து பூமியைக் கவனிப்பதில்லை. எங்கேயாவது உயரமான இடத்தில் உட்கார்ந்து கவனிக்கும். திடீரென்று பாய்ந்து தம் இரையை லாவிக்கொண்டு பறந்துவிடும். இவற்றிற்கு மாறாக, கருடனும் பருந்தும் பெரும்பாலான நேரத்தில் விண்ணில் பறந்து பூமியை கவனித்துக்கொண்டு இருந்தன. பூமியில் நெளிந்த சின்னஞ்சிறு பாம்புகளையும் மிக உயரத்திலேயே கவனித்துக்கொண்டன. திடீரென்று வந்து தூக்கிச் சென்றன. ஆகவே வல்லூறையும் கழுகையும் காட்டிலும் சிறந்தவை கருடனும் பருந்தும்- கருட

† தே-வா-வி-மா-இன்-ந-அம்: பிடிக்க வருபவை விரைவதனால் மிருகங்களுக்கு இனிமைமிகும் தன்மை. (தேவா: இங்கு பறவைகள்.)

னும் பருந்தும் நம் தலைக்குமேல் வட்டமிட்டுக்கொண்டு இருக்கிறபோது, நாம் தரையில் பாம்புகள் கடித்துவிடுமோ என்று அஞ்சவேண்டியதில்லை. நம் பார்வைக்குத் தெரியாத பாம்பு, அவற்றின் பார்வையில் அகப்பட்டுவிடும். அந்த விநாடியே அப்பாம்புக்கு அபாயம் வந்துவிட்டது என்று கருதலாம்.

கருடனைக்காட்டிலும் சிறந்தது மயில். இது கத்துகிறபோது ஏதோ மிருகம் கத்துவதுபோல் இருக்கும். ஆனால் இது மிருகம் அல்ல. இதனால் இது 'மா-இல்' (மயில்). இது மிருகமாக இல்லாவிட்டபோதிலும், பல விஷயங்களில் மிருகங்களைப்போல இருந்தது. ஒன்றுதான் அதன் குரல். மற்றொன்று அதன் வாசஸ்தலம். அது கருடனைப்போல் மிக உயரமான இடத்தில் கூடுகட்டி வசிக்கவில்லை, மரத்தின் அடிக்கிளைகளிலும், தரையிலும்—மனிதர்கள் வசித்த இடங்களில் சஞ்சரித்தது. மேலும், அது பாம்புகளைக் கொன்றதேயொழிய, பாம்புகளைப் புசிக்கவில்லை. பகையுணர்ச்சியினால் கொன்றுபோட்டது. இதனால் இது கழுகைப்போல் மனிதக் குழந்தைகளைத் தூக்கிச் சென்று புசித்துவிடும் என்ற அபாயம் ஏற்படவில்லை. மேலும், கருடன் மனிதர்களுடன் வசிப்பதற்கு—மனிதர்களால் வளர்க்கப்படுவதற்கு—சுலபமாக இசையவில்லை. மயில் மனிதர்களுடன் சுலபமாக வசிப்பதற்கு உடன்பட்டது. கருடன் மிகவும் கொடிய வெப்பம்மிகுந்த விண்ணில் பறந்துகொண்டு இருப்பதில் சலிப்படையவில்லை. மயில் மனிதர்களைப்போல் வெப்பத்தைக் கண்டு வருந்தியது. மழை மேகங்களைக் கண்டபோது மனிதர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தார்களோ, அதைவிட அதிகமாக மகிழ்ச்சியடைந்து மயில்கள் ஆடின. கருடன் இருட்டின் நிழல் நிறத்தையும், கழுத்தில் மட்டும் ஒளியின் வெண்மை நிறத்தையும் பெற்றிருந்தது. மயில் மனிதர்களின் அழகிய நிறத்தைப் பெற்றிருந்தது. மயில்களைக் கண்ட மாத்திரத்தில் மனிதக் குழந்தைகள் சந்தோஷப்பட்டன.

இப்போது இந்தத் தன்மைகளைப் பாகுபடுத்திப் பார்ப்போம் :—

சூரியனின் வெள்ளை நிறத்தையுடைய கழுகு, தீயின் தன்மையைப் பெற்றிருந்தது. அது தீயைப்போல் பாம்பைக் கொன்றதோடு, மனிதக் குழந்தைகளையும் கொன்றது. ஆகவே, அது காட்டுத் தீ. இதனால் காட்டுத் தீய்க்கு எத்தகைய "வண்நகாஅம்" அளிக்கமுடியுமோ, அதையே அதற்கு மனிதர்கள் அளிக்கமுடியும்.

வல்லூறு இருட்டின் நிறத்தையுடையது. மனிதனுக்கு உதவாத காட்டு இருட்டின் தன்மையே அதன் தன்மை. ஆகவே, காட்டு இருட்டுக்கு என்ன "வண்நகாஅம்" அளிக்கமுடியுமோ, அதையே அதற்கு மனிதர்கள் அளிக்கமுடியும்.

வி-இசி-நூ-வா-கா-ந-அம் †

கருடன் இருட்டின் நிறத்தையும் ஒளியின் நிறத்தையும் பெற்றிருந்தது. இதற்கு ஏற்ப, பாம்புகளிடம் தீயாகவும், மனிதர்களிடம் ஒளியாகவும் நடந்துகொண்டது. கரிய மேகங்களால் வானம் மூடப்பட்டபோது, இது மேகங்களுக்குமேல் அகப்பட்டுக்கொண்டது. மேகங்கள் கரிய நிறமுடையவையாதலால் 'நூ' எனப்பட்டன. அவை விரைந்து சூழ்ந்த தன்மை 'வி-இசி'. இசி என்றால் கட்டுதல்; மனம் நோகச் செய்தல். "வி-இசி-நூ" (விஷ்ணு) என்றால் விரைந்து சூழ்ந்து கொள்கிற கறுப்பு நிறம். வானத்தில் "வி-இசி-நூ"வினால் மூடப்பட்ட

† வி-இசி-நூ-வா-கா-ந-அம்:- விரைந்து கட்டுகின்ற கறுப்பு நிறத்திலிருந்து வருவதனால் காப்பை மிகுக்கும் தன்மை. (விரைந்து கட்டுகிற கறுப்பு நிறம்: கறுப்பு மேகம்).

கருடன்கள், பாய்ந்து வருவதன் மூலம் தம் காப்பை மிகுத்துக் கொள்ளும் தன்மையைப் பெற்றிருந்தன. அதாவது, "வா-கா-ந-அம்" உடையவையாக இருந்தன. ஆகவே, "வி-இசி-நு-வா-கா-ந-அம்" (விஷ்ணு வாகனம்) என்று அவற்றின் தன்மை உணர்த்தப்பட்டது. விரைந்து கட்டுகின்ற கறுப்பு நிறத்திலிருந்து பாய்ந்து காப்பை மிகுத்துக்கொள்ளும் தன்மையுடையவை என்று பொருள். சில சமயம் அந்தக் கரிய மேகங்களைப் பொத்துக்கொண்டு கீழே வந்தன. அப்போது மேகங்களில் உள்ள மழையை அது கீழே பொத்துவிடுவது போலிருந்தது. அந்தத் தன்மை, மேகத்தைப் பொத்துவிடுகிற மின்னலின் தன்மைக்கு ஒத்து இருந்தது. அது தீயினால் அறுக்கப்படுகிற மேகங்களுக்கு இடையே, தீயோடு தீயாக ஊருகின்ற ஒரு தீயாக இருந்தது. தீயினால் அறுக்கப்படுகிற இருட்டு "தீ-அறு-மால்" (திருமால்). தீயினால் அறுக்கப்படுகிற இருட்டில் ஊர்கின்ற தீ, "தீ-அறு-மால் ஊர்-தீ" (திருமால் ஊர்தீ). மழை பூமியைக் காப்பாற்றியது. அது இருந்த இடத்தைப் பொத்துவிட்ட கருடனும் பூமியைக் காப்பாற்றியது. மழை பாம்புகளைக் காப்பாற்றியது. கருடன் பாம்புகளை அழித்தது. பாம்புகள் தண்ணீரில் வசிக்கின்றன; இருட்டில் வசிக்கின்றன. மேகத்தில் தண்ணீரும் இருட்டும் இருக்கிறது. ஆகவே, மேகத்தில் பாம்புகளும் இருக்கும். அந்தப் பாம்புகளைப் பிடிப்பதற்காகவே கருடன் அங்கு செல்கிறது. அந்தப் பாம்புகளைக் கருடன் பிடிக்காவிட்டால், அவை மழையோடு சேர்ந்து பூமியில் விழும். அப்போது பூமிக்கு எத்தகைய அபாயம் ஏற்படும்? மழை பூமியைக் காப்பாற்ற நினைக்கிறதேயொழிய, தன்னிடமுள்ள பாம்புகளை கீழே விழச்செய்து அழிக்க நினைக்கவில்லை. பாம்புகள் கீழே விழுந்து அழிக்காமல் பார்த்துக்கொள்வதற்காகத் தன்னுடைய நிறத்தையுடைய கருடன்களை மேலே அழைத்துக்கொள்கிறது. ஆகவே, கருடன், காக்கின்ற மழையின் தன்மையையுடையது. அது "வைசாநவாஅம்"

அல்ல; "வைநவாஅம்". மழை எப்படி மனிதர்களுடன் வசிக்கவில்லையோ, அதைப்போல் அதுவும் மனிதர்களுடன் வசிக்கவில்லை. மழை இருக்கிற இடத்தை எப்படி இருட்டு அடைகிறதோ, அதேபோல் அதுவும் அவ்விடத்தை அடைகிறது. மழை எப்படி திடீரென்று வந்து மனிதர்களுக்கு இனிமையளிக்கிறதோ, அதேபோல் அதுவும் திடீரென்று வந்து மனிதனைக் கடிக்க வரும் பாம்பைத் தூக்கிச்சென்று இனிமையளிக்கிறது. மழை எவ்விதம் மிகவும் வெப்பமாக இருக்கிற திசையை நோக்கிச் செல்கிறதோ, அதேபோல் அதுவும் எங்கு மிகவும் அதிக பாம்புகள் இருக்கின்றனவோ அந்த திசைக்குச் செல்கின்றது. மழை எவ்விதம் கறுப்பு மேகமாகவும் வெள்ளை மின்னலாகவும் இருந்ததோ, அதேபோல் அதுவும் நிழல் நிற உடலில் வெள்ளை நிறத்தைப் பெற்றிருக்கிறது. ஆகவே, தீஅறுமால்ஊர்தி என்பது "கார்-வண்-அம்" உடையதாக இருக்கிறது. அதன் தாஇரிசாநஅம், மனிதர்களுக்கு வண்நகாஅம் அளிப்பதாக இருக்கிறது. அதற்கு வண்நகாஅம் அளிக்க மனிதர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மு-இரு-கா-வா-கா-ந-அம்†

மயில் தீயாகவும் இல்லை; மழையாகவும் இல்லை! அது குலத்தின் இளைஞனின் தன்மையைப் பெற்றிருந்தது. குலத்திலுள்ள இளைஞர்கள் எந்த சமயத்திலும் குலத்திற்கு உதவவும், குலத்தைக் காப்பாற்றவும் கடமைப்பட்டவர்கள். இளைஞர்கள் குலத்தின் பகைவர்களை அழித்தார்கள். மயில்கள் குலத்தைப் பகைத்தப் பாம்புகளை அழித்தன. இளைஞர்கள் குலத்தினரிடையே ஆடிப்பாடி மகிழ்ச்சியுண்டாக்கினார்கள். மயில்களும் குலத்தின

† மு-இரு-கா-வா-கா-ந-அம்: முந்து இருப்பவர்களைக் காக்கின்றவர்களைப்போல், பாய்ந்துவந்து காப்பை மிகுக்கும் தன்மை.

ரிடையே அழகாக ஆடி மகிழ்ச்சியை யுண்டாக்கின. குலத்தினருக்கு அபாயம் வாராதபடி இளைஞர்கள் காவல் புரிந்தனர். மயில்களும் அபாயம் வாராதபடி காவல் புரிந்தன. இளைஞர்களைப் பார்த்துக் குழந்தைகள் சிரித்தன. மயில்களைப் பார்த்தும் குழந்தைகள் சிரித்து விளையாடின. பகைவர்களை அச்சுறுத்த இளைஞர்கள் பயங்கர கோஷமெழுப்பினர். மயில்களும் பாம்புகளை அச்சுறுத்த பயங்கர கோஷமெழுப்பின. இளைஞர்கள் மரக்கிளைகளில் உட்கார்ந்து காவல் புரிந்தனர். மயில்களும் மரக்கிளையில் உட்கார்ந்து காவல் புரிந்தன. இளைஞர்கள் மரக்கிளையிலிருந்தபடி பகைவர்களின்பேரில் தாவினர். மயில்களும் மரக்கிளையிலிருந்தபடி பாம்புகளின்பேரில் தாவின. இளைஞர்கள் அழகானவர்கள். மயில்களும் அழகானவை. இளைஞர்கள் நல்லவர்கள். மயில்களும் நல்லவை. இளைஞர்கள் பாய்ந்தும் விரைந்துவந்தும் காப்பை மிகுக்கும் தன்மையை (வா-கா-ந-அம்) உடையவர்கள். மயில்களும் வாகாநஅம் உடையவை. "மூஇருகா"விற்கு எத்தகைய "வாகாநஅம்" உண்டோ அத்தகைய "வாகாநஅம்" மயில்களுக்கும் உண்டு. ஆகவே, மயில்கள் "மூஇருகாவாகாநஅம்" உடையவை. இளைஞர்களினால் குலத்திற்கு வண்நகாஅம் உண்டாயிற்று. மயில்களினாலும் வண்நகாஅம் உண்டாயிற்று. ஆகவே, 'மூஇருகா"விற்கு வண்நகாஅம் அளிக்கக் கடமைப்பட்டுள்ளதுபோல், மனிதர்கள் மயில்களுக்கும் வண்நகாஅம் அளிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

மயில்களைக் கொண்டு பாம்புகளைச் சாகடித்தக் குலத்தினர் "மா-இல்-அரா-சா-அர்" (மயில் அரசர்). மயில்களைக்கொண்டு பாம்புகளைவிட வண்மையை மிகுத்துக் கொண்டவன் "மா-இல்-அரா-வண்-ந-அன்" (மயில் அராவணன்) தம்முடைய பாதுகாப்புக்கு மயில்களையும், எதிரிகளைக் கொல்லப் பாம்புகளையும் வைத்திருந்த குலத்தினர், "மா-இல்-அ-சு-இரி-அர்" (மயிலாசுரியர்). மயில்களைக்

கொண்டு மிருகங்களுக்கு இனிமையைத் தந்தவன் "மா-இல்-மா-இன்-அன்" (மயில் மன்னன்).

வார்-அம்-கூ-இல்-ஐ-ஈய் †

இந்தப் பறவைகள் பாம்புகளைக் கொன்றதோடு, வேறு ஒரு விதத்திலும் அக்காலத்தவர்களுக்கு உதவின. அதுதான் எந்த திசையில் என்ன இருக்கிறது என்பதை உணரவைக்கும் தன்மை.

வேடர்களாகிய அக்காலத் தமிழர்களுக்கு, எந்த திசையில் அபாயமிருக்கிறது, எந்த திசையில் அபாய மில்லை என்று தெரிந்துகொள்ளவேண்டியது மிகமிக அவசியமாக இருந்தது. கருடன் இந்த திசையை உணர்த்தியது.

மயில்கள் தாம் இருந்த இடத்திற்கு வந்த பாம்பு களை மட்டுமே கொன்றன: கருடனும் கழுகும் 'அராகு' விற்கே சென்று பாம்புகளைக் கொன்றன. ஆகவே, கருடன் சென்ற திசையில் 'அராகு' இருந்தது. கருடன் வந்த திசையில் 'அராகு' இல்லை. கருடன் பாம்புடன் வந்த திசையில் 'அராகு' இருந்தது. பாம்புடன் சென்ற திசையில் 'அராகு' இல்லை. கருடன் ஒரு திசையிலிருந்து வருகிறபோது, தன் கால்களில் ஒரு பாம்பை பிடித்திருக்க வில்லையென்றால், அந்த திசையில் துணிந்து செல்லலாம். தன் கால்களில் பாம்பைத் தொங்கவிட்டுக்கொண்டு வந் தால், அந்தத் திசையில் 'அராகு' இருக்கிறது என்று தெரிந்துகொண்டு கவனமாகச் செல்லவேண்டும்.

---

† வார்-அம்-கூ-இல்-ஐ-ஈய்: உயர்வான தன்மையுடைய வேட்டை (கூ) இல்லையோ என்ற சந்தேகத்தை ஈய்வது. [கூ: ச்சூ என்று விரட்டிச் செல்லும் தன்மையையுடைய வேட்டை.]

மனிதர்கள் கூட்டமாக இருந்த இடத்தில் 'அராகு' இருக்கவில்லை. 'அராகு' இருந்த இடத்தில் மனிதர்கள் இல்லை. ஆகவே, 'அராகு'வைத் தேடிக்கொண்டு வருகிற கருடன், கூட்டமாக மனிதர்கள் இருப்பதைப்பார்த்து, அங்கு அராகு இல்லை என்று தீர்மானித்து வேறு இடத்திற்குப் போகிறது. அதைப் பார்க்கிற மனிதர்கள், அது வந்த திசையில் 'அராகு' இல்லை என்று தீர்மானித்துக் கொள்கிறார்கள். அது வந்த திசையில் மனிதர்களுக்கு 'வார்-அம்' (வாரம்) உண்டாகிறது. அதாவது உயர்வாக இருக்கும் தன்மை. அது சென்ற திசையில் 'சு-இல்-அம்' (சூலம்) ஏற்படுகிறது. அதாவது, மங்கலம் இல்லாத தன்மை. ஒவ்வொரு தினத்திலும் ஒரு திசையில் 'வார்-அம்'மும், இன்னொரு திசையில் 'சு-இல்-அம்'மும் ஏற்பட்டது.

'சு-இல்-அம்' ஏற்படுகிற திசையில், மனிதர்கள் 'சூ!' என்று மிருகங்களை விரட்டி வேட்டையாட முடியாது. அந்தத் திசையில் சென்றால் 'ஓ.' என்று விரட்டி வேட்டையாடுவது சந்தேகமே, ஆகவே, இந்தத் திசையில் உயர்வான வேட்டை இருக்காது என்ற சந்தேகம் உண்டானதால், அந்தத் திசையை "வார்-அம்-சூ-இல்-ஐ-சய்" (வாரசூலை) என்றனர்.

கருடனின் திசையைப் பார்த்ததனால், 'அராகு' திசை, வார்அம் திசை, சூஇல்அம் திசை முதலியவை அன்றாடம் தெரிந்து வந்தன.

சா-இன்-ஈ-வா-கா-ந-அம் †

வேட்டையைப் பற்றிப் பேசுகிறபோது, கருடனைப் போல் உதவி செய்யாமல், மனிதர்களுக்குத் தீமை செய்த

† சா-இன்-ஈ-வா-கா-ந-அம்: சோர்விலே இனிமையை அழிக்க வருபவை, காப்பை மிகுக்கும் (அல்லது மிகுத்துக்கொள்ளும்) தன்மை.

ஒரு பறவையையும் நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. அது தான் காக்கை.

இந்தக் காக்கை கருடனைப்போல் மிக உயரத்தில் பறக்கவில்லை. மயிலைப்போல் மனிதர்களுடன் வசிக்க வில்லை. இது கருடனைப்போல் பாம்புகளைக் கொன்று புசிக்கவில்லை. மயிலைப்போல்* பாம்புகளைக்கொன்று உண் ணாமல் போடவுமில்லை. இது தனக்கு ஆபத்து வந்த போதும் 'கா! கா!' என்று கத்திற்று ஆபத்து வராத போதும் 'கா! கா!' என்று கத்திற்று. மனிதனுக்கு ஆபத்து வந்தபோதும் 'கா! கா!' என்று கத்திற்று. ஆபத்து வாராதபோதும் 'கா! கா!' என்று கத்திற்று. இது கூட்ட மாக இருந்தபோதும் 'கா! கா!' என்று கத்திற்று. தனி யாக இருந்தபோதும் 'கா! கா!' என்று கத்திற்று. இது இருட்டைப்போல் கறுப்பாக இருந்தது. இருட்டைப் போலவே தந்திரம் மிகுந்ததாக இருந்தது. இதற்கு உறுதியான கொள்கை ஒன்றும் கிடையாது.

இது பாம்புகளைக் கொல்வதில்லை. ஆனால் செத்தப் பாம்பைப் புசித்தது. இது மனிதனைக் கொல்வதில்லை. ஆனால் செத்த மனிதனைப் புசித்தது. ஆகவே மனித னுக்கும் பாம்புக்குமிடையே போராட்டம் என்றால், யார் செத்தாலும் இதற்கு உணவு கிடைக்கும். மனிதனுக்கும் மிருகத்திற்கும் போராட்டம் என்றால், யார் செத்தாலும் இதன் வயிறு நிரம்பும். ஆகவே ஒன்றையொன்று கொன் றுக்கொள்ளக்கூடிய இரண்டிற்கு இடையே சண்டையை மூட்டிவிடுவதனால் இதற்கு நன்மை உண்டு. ஆகவே, இது கண்ணைச் சாய்த்துப் பார்த்துக்கொண்டே இருக் கும். எதை எதனுடன் மோதவிடலாம் என்று கவனிக் கும். அதன்படி நடந்துகொள்ளும்.

மனிதர்கள் சோர்ந்து உட்கார்ந்திருப்பர். சோர்ந்து இனிமையாக உறங்குவர். சோர்விலே உண்டாகும் இனிமை 'சா-இன்' (சன்). இந்த இனிமையை அழிக்க

இவை வரும். 'கா! கா!' என்று தொண்டைக் கிழிய கத்தும். என்னவோ ஏதோ வருகிறது என்று சோர்ந்த மனிதர்கள் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து உட்காருவர். எண் திசையும் பார்ப்பர். அபாயம் வருகிறது என்று கவனமாக இருப்பர். ஆனல் ஒரு அபாயமும் வராது. மீண்டும் சோர்ந்து படுத்து விடுவர். அவை மீண்டும் கத்தும். மீண்டும் எழுந்து பார்த்தால் ஒன்றுமிருக்காது. மீண்டும் படுத்து விடுவர் நன்ருகச் சோர்ந்து இருக்கிறபோது, திடீரென்று ஏதாவது ஒரு அபாயம் வரும். அப்போது இந்தச் சனியன்கள் கத்தாமல் சும்மா வாயைப் பொத்திக்கொண்டு உட்கார்ந்து இருக்கும்! அவற்றிற்கு வேண்டியது செத்த மனிதனின் இறைச்சித்தானே! சோர்வையும் இனிமையையும் இவை அழித்ததனல், 'சா-இன்-ஈ' (சனீ). அதே சமயம் சண்டை மூட்டுவதன்மூலம் சாவை உண்டாக்கித் தம் இனத்திற்கு இனிமையை அளித்ததனலும் இவை 'சா-இன்-ஈய்' (சனீ)—சாகடித்து இனிமையை ஈய்வது. சோர்விலே இனிமையை அழிக்க வருவதன்மூலம் தம் காப்பை இவை மிகுத்துக்கொள்ளும் தன்மைதான், "சா-இன்-ஈ-வா-கா-ந-அம்" (சனீ வாகனம்) என்று சொல்லப்பட்டது.

இந்தச் சனீகள் வேறு என்னென்ன செய்யும்? மனிதன் நடந்து போய்க்கொண்டே இருப்பான். அப்போது அவனுக்குப் பின்னல் ஒரு பாம்பு வரும். அதை இந்தச் சனீ பார்த்து விடும். ஆனல் கருடனைப்போல் உடனே பறந்துவந்து பாம்பைப் பிடிக்காது. 'கா! கா.' என்று கத்தியும் எச்சரிக்காது. சப்தம் போடாமல் பார்த்துக்கொண்டே இருக்கும். பாம்பு கடித்து மனிதன் சாகிறபோது, 'கா! கா!' என்று கத்தித் தன் கூட்டத்தை அழைக்கும். இதைப்போலவே, ஒரு மனிதன் போய்க்கொண்டு இருக்கிறபோது, இது எதிரே உட்கார்ந்து கத்தும். அது ஏன் கத்துகிறது என்று கவனித்தால், இன்

ளொரு கிளேயில் உட்கார்ந்து கத்தும். இதைத் தொடர்ந்து சென்ருல், ஒரு இடத்தில் கூட்டமாக உட்கார்ந்து கத்திக்கொண்டு இருக்கும். அந்த இடத்திற்குச் சென்று அவை ஏன் கத்துகின்றன என்று கவனித்தால், அங்கு ஒரு பாம்போ அல்லது ஒரு புலியோ இருப்பது தெரியும். அந்த இடத்தில் புலிக்கும் மனிதனுக்கும் அல்லது பாம்புக்கும் மனிதனுக்கும் போராட்டம் ஆரம்பித்துவிடும். இவ்விதம் அந்தச் சனி மனிதனை அபாயத்தில் சிக்கவைக்கும். இதை விரட்டினுல் தொலேந்துபோகாது. இதன் கூக்குரலேக் கவனிக்காமலும் மனிதனுக்கு இருக்க முடியாது. இதன் கூக்குரலே எப்போது அலட்சியப் படுத்துகிருேமோ, அப்போது அபாயம் வரும். எப்போது அலட்சியப்படுத்தவில்லேயோ அப்போது அபாயம் வராது. இது மனிதனே ஓயவிடாது; உறங்கவிடாது. ஒய்ந்துவிட்டால், உறங்கிவிட்டால், ஆபத்தை இழுத்துக்கொண்டு வந்துவிடும். ஒரு மிருகத்தை மனிதர்கள் வேட்டையாடிவிட்டால், உடனே இந்தச் சனியன்கள் கத்தும். அந்த மிருகத்தை மனிதர்கள் தமக்கு உணவாக எடுத்துச் செல்கிறபோது, இவை அந்த உணவைச் சுற்றிச் சுற்றிக் கத்திக்கொண்டே வரும். கூட்டமாகச் சேர்ந்து கத்தும். அந்த உணவை அவற்றிற்குக் கொடுக்காமல் மனிதர்கள் தூக்கிச் செல்கிறபோது, கூட்டமாகக் கத்துவதன் மூலம் வழியிலுள்ள மற்ற மிருகங்களேயெல்லாம் இவை உஷாராக்கிவிடும். வழிநெடுக மனிதர்களுக்குப் பல அபாயங்கள் உண்டாகும்படி செய்துவிடும். அப்போது இந்தச் சனிகளே விரட்டினுல் ஓடாது. கொல்லவும் முடியாது. உணவைக் கொடுத்துத் திருப்திபடுத்தவும் முடியாது. இந்தச் சனிகள் ஒழிந்தால்போதும் என்று நினேத்து, வேட்டையாடிய மிருகத்தைத் தூக்கியெறிந்துவிட்டு ஓட வேண்டியிருக்கும். மனிதனேக் கண்டு பயப்படுவதற்கு பதில், மனிதனே ஏமாற்றுவதற்கு எத்தனிக்கும் ஒரே பறவை இதுதான். இது மற்ற மிருகங்களுடன் மிகவும் சுலபமாக சிநேகமாகிவிடும். சிங்கம், புலி, யானே முதலிய

மிருகங்களின் மேல் சாதாரணமாக உட்கார்ந்துகொண்டு "பேன் பார்க்கும்!" அப்போது அந்த மிருகங்களுக்கு எவ்வளவு சுகமாக இருக்கும்! எதிரே யாராவது வந்தால், உடனே சப்தமிட்டு, அந்த மிருகத்தைக் கிளப்பிவிட்டு, சண்டையை மூட்டிவிடும்!

ஆகவே, இந்தச் சனிகளின் தொல்லையைப் பொறுக்க முடியாமல், தாம் வேட்டையாடுகிற உணவில் ஒரு பகுதியை இவற்றிற்குக் கொடுத்துத் தொல்லையை மனிதர்கள் தீர்த்துக்கொள்ளவேண்டியிருந்தது. அப்படி அவற்றிற்கு வீசியெறியப்பட்ட உணவுதான், அவற்றிற்கு அளிக்கப் பட்ட வண்நகாஅம்.

சனிகளுக்கு ஒரு குலத்தினர் தொடர்ந்து வண்நகாஅம் அளித்துவந்தபோது, அவைச் சிறிது விசுவாச முடையவையாயின. தொல்லையளிப்பதைவிட்டு, உண்மையிலேயே அபாயத்தை உணர்த்தக் கத்தக்கூடியவையாயின. அதாவது, சாகிற மிருகத்தின் இறைச்சியில் ஒரு பகுதியை மனிதன் தனக்கு அளிப்பான் என்ற நம்பிக்கையில், மிருகங்களின் வருகையை மனிதனுக்கு உணர்த்த—தனக்கு வண்நகாஅம் அளித்த மனிதனுக்குத் தெரிவிக்கக் கத்தின. அப்போது சோர்விலே உண்டாகும் இனிமையை அழித்து கிலப்பாரப்பிலே மனிதர்களைக் காப்பாற்ற வருகிறவையாகக் கருதப்பட்டன. அப்படி வருகிறவையே, "சா-இன்-ஈ-பா-கா-வா-அன்" (சனி பகவான்) என்று குறிப்பிடப்பட்டன. மனிதனிடம் வண்நாகாஅம் பெற்று ருசி கண்ட காக்கைகளே சனி பகவான்களாக இருந்தன. சனியைத் தொலைத்துத் தலைமுழுகுவதற்காகக் கொடுக்கப்பட்ட வண்நகாஅக், இறுதியில் சனியின் பகையை மாற்றி, அதை அனுகூலம் செய்யும் பறவையாக ஆக்கியது. ஆகவே, ஆரம்பத்தில் தொல்லை விளைவிக்கும் சனிகளுக்கு, தொல்லையைச் சகித்து வண்நகாஅம் அளித்து வந்தால், இறுதியில் அனுகூலங்கள் ஏற்படும் என்று கருதினார்கள்.

சனீகள் பாம்புகளைத்தான் கொல்லவில்லையேயொழிய, விஷப் பூச்சிகளையும் புழுக்களையும் புசிப்பதன்மூலம் மனிதர்களுக்கு உதவக்கூடியவையாக இருந்தன.

மூ-இரு-கா-து-வா-சா-அம் †

ஆனால் இந்த விஷயத்தில் சனீகளைக்காட்டிலும் சிறந்தவையாக இருந்தன கோழிகளும் புறாக்களும். சனீக்கள் மனிதர்களுடன் வசிக்க உடன்படாதபோது, கோழிகளும் சேவல்களும் மயில்களைப்போல் மனிதர்களுடன் வசிக்க உடன்பட்டன.

'க்ஓக்...க்ஓக்' என்று கிரிக்கும் (இழிக்கும்) பறவை, 'க்ஓஇழி' (கோழி). அது 'க்ஓக்' என்று ஓசை எழுப்பி, பூமியில் தென்படுகின்ற பூச்சிப் பொட்டுகளையும், விஷ ஜந்துக்களையும் இழுத்து அழிக்கிறது. இதனாலும் அது 'க்ஓ-இழ்-ஈ' (கோழி).

அது "க்ஓக்அர்ஓக்ஓ" என்று கூவுகிறது. அப்படி 'க்ஓ'என்று கூவுகிறபோது, பொழுது விடிய ஆரம்பிக்கிறது. அதன் கூவலைக் கேட்டவுடன் மிருகங்கள் உறக்கத்தை விடுகின்றன. மனிதர்கள் விழித்துக்கொள்கின்றனர்.

அது காட்டுப் பூனையையும், அந்த இனத்தைச் சேர்ந்த புலி, சிங்கம், சிறுத்தை முதலியவற்றையும் பார்க்கிறபோது 'க்ஓக்...க்ஓக்' என்று அலறிப்புடைத்துக் கொண்டு ஓசை யெழுப்புகின்றது. நாய், ஓநாய், நரி முதலியவற்றைப் பார்க்கிறபோதும் இப்படி கத்துகிறது. கழுகு, வல்லூறு ஆகிய பறவைகளைப் பார்க்கிறபோதும் இப்படி கத்தி உஷார் படுத்துகின்றது.

† மூ-இரு-கா-து-வா-சா-அம் : மூத்து இருப்பவர்களைக் காப்பாற்ற இரையின்பேரில் பாய்ந்து சாகடிக்கும் தன்மையுடையவை.

அது மண்ணைக் கிளறி இரைத்தேடுகிறது. மண்ணில் மறைந்து கிடக்கிற எண்ணற்ற விஷப் பூச்சிகளையும், மண்ணுளிப் பாம்புகளையும் 'க்ஒக்ஒக்' என்று ஓசை யெழுப்பிக்கொண்டே கொத்தி இழுத்து விழுங்குகிறது. தேள், பூரான், அரணா முதலியவற்றையும் இப்படி 'லபக்' என்று விழுங்கி விடுகின்றது.

இது மரங்களின் அடிக்கிளையிலும், தரையிலும் சஞ்சரிக்கிறது. இது சஞ்சரிக்கிற இடங்களில் விஷப் பூச்சிகள் மடிகின்றன.

இக்கோழிகளில் ஆண் கோழிகளின் கழுத்தில் சிகப்பாக சதைத் தொங்குகிறது. சிகப்புக்குச் 'சே' என்று பெயர். இந்த 'சே'யையுடைய கோழிகள், மிகவும் வல்லமையுடையவை. தம் குலத்தைக் காப்பாற்றுவதற்காகப் பிற பறவைகளுடன் போராடக் கூடியவை. அந்தச் சிகப்பு நிற சதைதான் இவற்றிற்கு வல்லமையை அளிக்கின்றது என்று கருதினர். இதனால் இவை 'சே-வல்' என்று சொல்லப்பட்டன.

சேவல்கள் மனிதக் குலத்தின் இளைஞர்களைப்போல் இருந்தன. இளைஞர்கள் எப்படி எல்லா பெண்களுக்கும் பொதுவானவர்களாக இருந்தார்களோ, அதேபோல் சேவல்களும் எல்லாப் பெட்டைகளுக்கும் பொதுவானவை. குலத்தில் பெண்கள் குழந்தைகளை வளர்த்த போது, இளைஞர்கள் பாதுகாப்பவர்களாக இருந்தது போலவே, பெட்டைக் கோழிகள் தம் குஞ்சுகளுக்கு இரையைப் பொறுக்கிக் கொடுத்துக்கொண்டு இருந்த போது, சேவல்கள் அக்குஞ்சுகளுக்குக் காவல் புரிந்தன. பொழுது விடிவதற்குள் சிறுவர்கள் விழித்துக்கொண்டது போல், சேவல்கள் விழித்துக்கொண்டன.

இருட்டில் மனிதனுக்கு வல்லமை இல்லை. பொழுது விடிந்தவுடன் வல்லமை வந்தது. மனிதனுக்கு வல்லமை

வரப்போகிறது என்பதை உணர்த்தியது விடிவதற்கு முன்பு கூவிய சேவல். அதன் கூவல் வெற்றிக்கு, வல்லமைக்கு, பயமின்மைக்கு அடையாளமாக இருந்தது. இருட்டில் ஆயிரம் இளைஞர்கள் பாதுகாப்பாக இருந்தால் எத்தகைய நம்பிக்கையும் தைரியமும் உண்டாகுமோ அத்தகைய நம்பிக்கையையும் தைரியமும் சேவல் கூவிய போது உண்டாயிற்று.

இளைஞர்கள் வெளியே வேட்டைக்குச் சென்றபோது குகையில் மூப்படைந்தவர்கள் இருந்தனர். அவர்களுடன் வசித்த சேவல்களும் கோழிகளும், அந்த மூத்தவர்களுக்கு அபாய எச்சரிக்கை செய்கின்றவையாகவும், பூச்சிகளினால் அவர்களுக்குத் தொந்தரவு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்கின்றவையாகவும் இருந்தன. 'மூ-இரு-கா'களாக விளங்கின. அவைதான் "மூ-இரு-கா-சே-வல்" (முருக சேவல்கள்)

அவை உணவை எப்படி உட்கொண்டன? உணவைப் பார்த்தவுடன் சட்டென்று பாய்ந்து, கொத்திச் சாகடித்து விழுங்குகின்றன. இந்தத் தன்மைதான் "து-வா-சா-அம்" (துவசம்)—உணவில் பாய்ந்து சாகடிக்கும் தன்மை. இது உணவைக் கொத்துகிறபோது, "க்ஒட்" என்று ஒலிக்கிறது. "க்ஒட்" என்று கொத்தி அழிப்பதுதான் "க்ஒட்-ஈ" (கொடி).

மூ-இரு-கா-து-வா-சா-அம் என்றால், மூத்து இருப்பவர்களைக் காப்பாற்ற இரையில் பாய்ந்து சாகடிக்கும் தன்மையுடையது என்று பொருள். மூ-இரு-கா-க்ஒட்-ஈ என்றால், மூத்து இருப்பவர்களைக் காப்பாற்ற 'க்ஒட்' என்று கொத்தி அழிப்பது என்று பொருள்.

சே-வல்-க்ஒட்-ஈ-அன் †

சே-வல்-க்ஒட்-ஈ (சேவல் கொடி) என்றால், சிகப்பின் மூலம் வல்லமையைப் பெற்றிருப்பவை, 'க்ஒட்' என்று தாக்கி அழிப்பது என்று பொருள். இதுவே மனிதர்களுக்கும் மிருகங்களுக்குமிடையே நடக்கிற போராட்டத்தையும் குறிக்கும். சிகப்பு என்றால் இரத்தமும் ஆகும். போராடுகிறபோது நம் உடம்பில் எவ்வளவுக்கு இரத்தம் இருக்கிறதோ, அவ்வளவுக்கு எதிரியின் இரத்தம் சிந்தும். எவ்வளவுக்கு எதிரியின் இரத்தம் சிந்துகிறதோ, அவ்வளவுக்கு நம் உடம்பில் இரத்தத்தினால் உண்டாகும் வல்லமை இருக்கிறது. 'க்ஒட்' என்று எதிரியின் மண்டையில் வலுவாகக் கொட்டினால், அவன் மண்டை பிளந்து இரத்தம் கொட்டுகிறது. 'க்ஒட்' என்ற ஒலி, அவனை அழிப்பதாக இருக்கிறது. அது நமக்கு வெற்றியாக இருக்கிறது. 'சே-வல்' இருக்கிறவன்—அதாது, இரத்தத்தினால் வல்லமையுடன் இருக்கிறவன்—சேவல் கோழி பூச்சிகளை அழிப்பதுபோல், எதிரிகளை அழிப்பவனாக இருக்கிறான். 'சே-வல்'-அதாவது, இரத்த வலிமை-அவனுக்கு 'க்ஒட்' என்று அழிப்பதன் மூலம் வெற்றியடையும் தன்மையை அளிக்கிறது. அதாவது, இளைஞர்களுக்கு உள்ள 'சே-வல்', வாஸ்தவத்தில் 'க்ஒட்-ஈ'யாக (கொடியாக) இருக்கிறது.

சேவல் கோழி 'க்ஒட்' என்று பூச்சிகளை அழிக்கிறபோது, நாம் இன்னொரு காட்சியையும் பார்க்கிறோம். அதாவது, பூச்சிகள் மீண்டும் மீண்டும் மண்ணிலிருந்து வெளியே வந்துகொண்டிருக்கின்றன . ஒரு பூச்சியை 'க்ஒட்'என்று கொத்தி அது அழிக்கிறபோது, இன்னொரு பூச்சியைப்பார்க்கிறது. உடனே அதையும் 'க்ஒட்' என்று

† சே-வல்-க்ஒட்-ஈ-அன் : இரத்த வலிமையினால் கொட்டென்று கொட்டி அழிப்பவன்.

அழிக்கிறது. எத்தனை ஆயிரம் பூச்சிகள் வந்தாலும், சில நிமிஷங்களில் கொத்தி வாயில் போட்டுக்கொள்கிறது.

இதைப் போலவே 'சே-வல்' உடைய இளைஞர்கள்—அதாவது, இரத்தவலிமையுடைய இளைஞர்கள்—எத்தனை பேர் வந்தாலும் 'க்ஒட்','க்ஒட்' என்று கொட்டி, மண்டையிலடித்து, அழிக்கும் தன்மையுடையவர்கள்.

ஆகவே, சேவல் கோழிகளுக்கு உள்ள 'க்ஒட்-ஈ', குலத்தின் இளைஞர்களுக்கும் உண்டு. 'சே-வல்-க்ஒட்-ஈ' (சேவல் கொடி) குல இளைஞர்களின் வல்லமைக்கும் வெற்றிக்கும் அடையாளம்.

மயில்களுக்கு வண்ஙகாஅம் அளிப்பதனால் குலத்திற்கு எத்தகைய வண்ஙகாஅம் பிரதிபலனாக கிடைத்ததோ, அத்தகைய வண்ஙகாஅம் கோழிகளுக்கு வண்ஙகாஅம் அளித்ததனாலும் மனிதர்களுக்குக் கிடைத்தது.

க்ஒட்-ஈ-சீ-இன்-ங-அம் †

கோழிகள் பூச்சிகளை அழித்ததோடு, அபாயங்களை உணர்த்திக் கூக்குரலிட்டதோடு, முட்டைகளை இட்டும் தந்தன, அந்த முட்டைகள் கந்தன்களுக்கு வணக்கமளிக்கப் பயன்பட்டதோடு, பல் பிடுங்கப்பட்டப் பாம்புகளுக்கு வணக்கமளிக்கவும் பயன்பட்டன. கோழி முட்

† க்ஒட்-ஈ-சீ-இன்-ங-அம்: க்ஒட் என்ற ஒலியுடன் முறிகின்றவைகளின் சிறப்பினால் இனிமை மிகும் தன்மை. (அல்லது மேற்படி ஒலியுடன் முறிகின்றவைகளினால் ஒளியின் இனிமை மிகும் தன்மை.) கொடிகள் முறிவதனால் இருண்ட இடத்திற்குள் ஒளி புகுகின்றது. இதனால் வழி துலங்குகின்றது. இதனால் பகைவர்களைத் தொடாமுடிகிறது.

டைகளைப் புசித்த பல் பிடுங்கப்பட்ட பாம்புகள், எதிரிகளை அச்சுறுத்தி ஓட்டம்பிடிக்கச் செய்தன. ஓட்டம் பிடித்தவர்கள், வழியில் செடிகளையும் கொடிகளையும் முறித்துத் தள்ளி ஓடினர். 'ச்எட்' என்ற ஒலியுடன் அழிந்தவை (ஈ) எல்லாம் 'ச்எட்-ஈ' (செடி). 'க்ஒட்' என்ற ஒலியுடன் முறிந்தவை யெல்லாம் 'க்ஒட்-ஈ' (கொடி).

ஓடியவர்களைப் பின்தொடர்ந்தவர்கள், தாவரக்கொடிகள் பாதிபாதியாக முறிந்து தொங்குவதைப் பார்த்துக் கொண்டே சென்றனர். முறிந்து தலைக்குமேல் தொங்கி காற்றில் ஆடிக்கொண்டிருந்த தாவரக் கொடிகள், எதிரிகளின் தோல்விக்கும் அவர்களுடைய வெற்றிக்கும் அறிகுறியாகக் காணப்பட்டன. கீழே துண்டிக்கப்பட்டு உயரத்தில் ஆடிக்கொண்டிருந்த அந்தக் கொடிகள், பகைவர்களை மென்மேலும் தொடர்ந்து சென்று போராடுவதற்கு வழிகாட்டிகளாக விளங்கின. அந்த வழி காட்டிகள், அவர்களுக்கு மென்மேலும் தைரியத்தையும் நம்பிக்கையையும் ஊட்டி வந்தன.

இதிலிருந்து காட்டில் வழியைக் காண்பதற்கும், வெற்றிகரமாகப் போராடுவதற்கும் சில குறிப்பிட்டக் கொடிகளை ஒவ்வொருவரும் அடையாளமாகக்கொள்ள ஆரம்பித்தனர். குறிப்பிட்டக் கொடிகள் இல்லாத சில இக்கட்டான சந்திகளில், பாறைகளில் அதுபோன்ற கொடிகளின் சித்திரங்களைக் கற்களால் வரைந்து வைத்தனர். காலப்போக்கில், ஒவ்வொரு விதமான கருத்தை உணர்த்தும் அடையாளச் சின்னங்களாக ஆயின. 'க்ஒட்' என்ற ஒலியுடன் எதிரியை அழிப்பதற்கு ஒரு அடையாளமாக விளங்கும் ஒவ்வொரு சின்னமும் கொடியாகக் கருதப்பட்டது.

அர-சா-க்ஷட்-ஈ-வண்நகாஅம் †

கொடிகளில் சில, பறவைகளைப்போலவே, பாம்புகளுக்குப் பகையாக விளங்கின. பல பாம்புகளுக்கு நட்பாக விளங்கின.

நட்பான கொடிகளில் பாம்புகள் இஷ்டம்போல் தொங்கியாடின. மறைந்துகொண்டன.

பகையான கொடிகளின் பக்கம் போகவே அஞ்சின. அந்தக் கொடிகளையும் செடிகளையும் பார்த்த மாத்திரத்தில் அல்லது அவற்றின் வாசனையை முகர்ந்த மாத்திரத்தில் சப்தநாடிகளையும் ஒடுக்கிக்கொண்டன.

பாம்புகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள கருடன், மயில்போன்ற பறவைகளை உபயோகப்படுத்தியது போலவே, இந்தச் செடிகளையும், வேர்களையும் உபயோகப்படுத்த முடியும் என்று நம் கற்கால முன்னோர்கள் தெரிந்துகொண்டனர்.

இதிலிருந்து அவர்கள் "நாகரீகமடைய" ஆரம்பித்தார்கள்.

முதலாவதாக ஆபரணங்களை அணிய ஆரம்பித்தனர். இரண்டாவதாக ஆடைகளை உடுத்த முற்பட்டனர். மூன்றாவதாக, உடம்பில் சாயங்களைப் பூசப் பழகினர். நான்காவதாக, இவற்றிலிருந்து புதுவிதமான பண்புகளையும், அழகைப் பற்றிய கருத்துக்களையும் உண்டாக்க ஆரம்பித்தனர். எப்படி?

பாம்புக்குப் பகையாக விளங்கிய அந்தச் செடி கொடிகளைத் தேடிப் பிடுங்கிக்கொண்டு வந்தனர். எப்போதும் அவற்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ள ஆரம்பித்தனர்.

---

† பாம்புகளைச் சாகடிக்கும் கொடிகளுக்கு வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மை.

அர-சா-இல்-அ-ஈய் †

முதலாவதாக, இரவில் தூங்கியபோது மண்ணுளிப் பாம்புகள் காதுகளில் புகுந்துவிடாதபடி தடுக்கக் காதுகளில் ஓட்டைப்போட்டு, அந்தப் பச்சிலைகளையும் கொடித் துண்டுகளையும் வேர்களையும் நிரந்தரமாகச் செருகிக் கொண்டார்கள். காதுகளில் தொங்கிய அந்த இலைகளுக்கு, 'அர-சா-இலை' (அரச இலை) என்று பெயர். பாம்பைச் சாகடிக்கும் இலை என்று பொருள். 'இல்-ஐ' (இலை) என்றால் இணையில்லாத அழகு என்று பொருள். அரசாஇலை என்றால், பாம்புகளைச் சாகடிப்பதோடு இணையில்லாத அழகையும் தருவது என்றும் பொருள். அல்லது பாம்புகளைச் சாகடிக்கும் இணையில்லா அழகு என்று கூறலாம். இதற்கே 'பா-அம்-இடு-அம்' (பாமிடம்) என்ற பெயரும் வைக்கப்பட்டது. பாதுகாப்பையும் அழகையும் இடும் தன்மையுடையது என்று பொருள். இன்னும் பிற்காலத்தில் "பாம்பு-ஆடு-அம்" (பாம்படம்) என்று சொல்லப்பட்டது. பாம்பை ஆடவைக்கும் தன்மையுடையது என்று பொருள். காதுகளில் துவாரமிட்டு அரசா யிலைகளைத் தொங்கவிடவேண்டிய அவசியம், வயது வந்தவர்களைவிட குழந்தைகளுக்கே அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது. குழந்தைகள் பாம்புகளைக் கண்டு பயப்படாமல், அவற்றுடன் விளையாட தவழ்ந்து ஓடின. உறங்கியபோது குழந்தைகளைப் பாம்புகள் சுலபமாக விழுங்கிவிட்டன. ஆகவே, குழந்தைகள் பிறந்தவுடனேயே அவற்றிற்குக் காது குத்தும் பழக்கம் ஏற்பட்டது. காதுக் குத்தியவுடன் ஒவ்வொரு குழந்தையின் காதுகளிலும் அரசாயிலைகள் தொங்கின. (தற்காலத்தில் தங்கயிலைகள் தொங்குகின்றன.)

---

† பாம்புகளைச் சாகடிப்பதோடு இணையில்லா அழகையும் ஈய்வது.

காதுகளை ஓட்டைப்போட்டபோது, இரத்தம் கொட்டிற்று. பொறுக்க முடியாமல் வலித்தது. எனினும், அதை விரும்பிச் செய்தனர். ஏனெனில், காதுகளை ஓட்டைப்போட்ட தன்மையை அவர்கள் 'இர்-அ-ந-அம்' (இரணம்) என்றனர். இருக்கின்ற அழகை மிகுக்கும் தன்மை என்று பொருள். அது மிகவும் வலித்தபோதிலும், அது பண்பில் இனிமையை அளிப்பது என்று கூற, 'பு-இன்' (புண்) என்றனர்.

ஓட்டையிட்ட காதுகளில் ஏற்பட்ட புண்ணை ஆற்றுவதற்கு, ஏதோ சில இலைகளையும் புற்களையும் கசக்கித் தேய்த்தனர். இதை, "இர்-அ-ந-வை-தீ-யா-அம்' (இரணவைத்தியம்) என்றனர். இருக்கின்ற அழகை மிகுக்க, புல்லிலுள்ள தீயைக் கட்டும் தன்மை என்று பொருள். புல்லிலுள்ள தீயைக் கட்டுவதைப்பற்றி (வைத்தியத்தைப் பற்றி) வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விவரமாகப் பார்க்கலாம்.

இரண்டாவதாக, அந்தச் செடிகளில் பூத்த மலர்களைப் பறித்துத் தலையில் சூடிக்கொண்டனர். அந்த மலர்களுக்கு "அர-வி-இன்-தா-அம்" (அரவிந்தம்)என்று பெயரிட்டனர். அரவை அழித்து இனிமையைத்தரும் தன்மையுடையது என்று பொருள். இந்த மலர்கள் மிகவும் அதிகமாகப் பூத்துக்கிடந்த இடத்திற்கு "அரா-மா-அம்" (அராமம்) என்று பெயரிட்டனர். பாம்புகளை மாற்றும் தன்மையுடையது என்று பொருள்.

அரி-கண்-தா-அம் †

மூன்றாவதாக, அந்தக் கொடிகளை வளைத்துக்கட்டி கழுத்தில் தொங்கவிட்டனர். அவை "அர-சா-கொடி"

---

† அரி-கண்-தா-அம்: பாம்புகளின் கண்களைப் பகைத்துக் கேடு செய்யும் தன்மையுடையது.

என்று சொல்லப்பட்டன. பாம்பைச் சாகடிக்கும் கொடி என்று பொருள். (பிற்காலத்தில் இது தங்கத்தினால் செய்து அணிந்துகொள்ளப்பட்டது). இதற்கே வேறு ஒரு பெயரும் உண்டு. அதுதான் "அ-இரி-கண்-தா-அம்" (அரிகண்டம்). அழகைக் கெடுக்கும் பாம்பின் கண்ணுக்குக் கேடு செய்வது என்று பொருள்.

நான்காவதாக அந்தக் கொடிகளையும் வேர்களையும் இடுப்பில் கட்டிக்கொண்டனர். இதற்கு "அர-நாண்" என்று பெயரிட்டனர். பாம்புக் கயிறு என்று பொருள். இதற்கே "அ-ர-நா-க்ஒட்-ஈ" (அரநாக்கொடி) என்றும், "அ-ர-நா-கா-ஈ-உறு" (அரநாக்கயிறு) என்றும் பெயர்கள் வைத்தனர். அரநாக்கொடி என்றால் பாம்பின் நாக்கை 'கொட்'டென்று அழிப்பது என்று பொருள். அரநாக் கயிறு என்றால் பாம்பின் நாக்கையும் காப்பையும் அழித்து உறுத்துவது என்று பொருள்.

பு-இடு-வை †

ஐந்தாவதாக, அந்தத் தழைகளையும் இலைகளையும் இடுப்பைச் சுற்றிக் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டனர். அந்தத் தழைகளைப் பார்த்தபோது, பாம்புகள் நெருப்பை பார்த்ததுபோல் ஓட்டம்பிடித்தன. அதோடு, அந்தத் தழைகள் அத்தனை காலமாக நிர்வாணமாகவே இருந்து பழகிய அவர்களுக்கு ஒரு புதிய அழகையும் கொடுத்தன; ஒரு புது விதமான பண்பையும் அவர்களிடையில் உண்டு பண்ணின. பாம்புக்கு நெருப்பு இலையாக அவை இருந்ததனால், அவற்றை 'சே-இலை' என்றனர். சே என்றால் சிவப்பு நெருப்பு. நெருப்பை அவர்கள் உடம்பில் அணிந்துகொள்ள முடியாது. இந்தத் தழைகள் பாம்பு களைப் பொறுத்த வரையில் நெருப்பாக இருந்தபோது,

† பு-இடு-வை: பண்பை இடுகின்ற புல்.

அவர்களைப் பொறுத்தவரையில் தனியழகையும் குளிர்ச்சியையும் உடையவையாக இருந்தன. இதனால், சிகப்புநெருப்பில் இல்லாதத் தனியழகையுடையது என்று குறிப்பிட, 'சே-இல்-ஐ' (சேலை) என்று சொன்னார்கள். இதையே 'சீ-இல்-ஐ' (சீலை) என்றும் சொன்னார்கள். ஒளியில் இல்லாத அழகுடையது என்றுபொருள். அதோடு, இதைப் 'பு-இடு-வை' (புடவை) என்றும் கூறினர். பண்பை இடும் புல் என்று பொருள். 'வை' என்பது அவர்கள் புற்களிலேயே ஒரு விதமானவற்றை இடுப்பைச் சுற்றி கட்டிக்கொண்டனர் என்பதை உணர்த்துகின்றது. இந்தப் புற்களை அணிந்த போது மர்ம ஸ்தானங்கள் மறைந்ததனால், ஒவ்வொருவரிடமும் ஒரு புதுவிதமான பண்பு உண்டாக ஆரம்பித்தது. அதனாலேயே பண்பையிடும் புல் என்று கூறப்பட்டது. இவையே 'ஊ-இடு-ஐ' (உடை) என்றும் சொல்லப்பட்டன. ஊனின்பேரில் இடப்படும் அழகு என்று பொருள். இவையே, "வா-சீ-தி-இரி-அம்" (வஸ்திரம்) என்றும் கூறப்பட்டன. பாய்ந்து வருகிற ஒளியையும் தீயையும் வடிகட்டும் தன்மையுடையது என்று பொருள். இவற்றையெல்லாம் இடும் தன்மையுடைய இடம் 'இடு-பு' (இடுப்பு). இதுவே 'இடு-ஐ' (இடை). மர்ம ஸ்தானங்களை மறைத்த இந்த இலைகளை 'ஆ-இடு-ஐ' (ஆடை) என்றும் கூறினர். பெண் குறியின்பேரில் இடப்படும் அழகு என்று பொருள். இதை 'மே-கா-இலை' (மேகலை) என்றும் கூறினர். மேலே மேன்மையான காப்பாக இருக்கும் இலை என்று பொருள்.

ஆறாவதாக, கணுக்காலில் அந்தக் கொடிகளையும் வேர்களையும் சுற்றிக் கட்டிக்கொண்டார்கள். இவற்றிற்கு 'அரி-யா-கா-அம்' (அரியகம்) என்று பெயர். பாம்பைக் கட்டிக் காப்பாற்றும் தன்மையுடையது என்று பொருள். இதையே 'கா-பு' (காப்பு) என்றும் சொன்னார்கள். காப்பாற்றும் பண்புடையது என்று பொருள்.

அ-இன்-ஈய் †

இவ்விதம் உடம்பில் பாம்புக்குப் பகையான செடி கொடி வேர்களை அணிந்தபோது, அவை புது அழகையும், இனிமையையும் ஈய்ந்தன. இதனால் எல்லாவற்றையும் பொதுவாக, 'அ-இன்-ஈய்' (அணி) என்றனர். இந்த அணிகள், கல் எப்படி பாம்புகளைக் கொல்லப் பயன்பட்டதோ, அதேபோல் அவர்களுக்குப் பயன்பட்டன. இதனால் "அ-இன்-ஈய்-கல்-அம்" (அணிகலம்) என்றனர். அழகையும் இனிமையையும் ஈய்கின்ற கல்லின் தன்மையுடையவை என்று பொருள்.

இந்த அணிகளைக் கண்டவுடன் பாம்புகள் என்ன செய்தன? வீரியம் இழந்தன சக்தியற்று தலையைக் கீழேபோட்டன. பெண்களைப்போல் வெட்கப்படுபவையாயின. ஆகவே, 'ஆ-பு-அர-ந-அம்' (ஆபரணம்) என்று குறிப்பிட்டனர். பெண் தன்மையைப் பாம்புக்கு மிகுக்கும் தன்மையுடையவை என்று பொருள். ஆ என்றால் மிருகங்களில் பெண்பால்.

இந்தக் செடிகளையும் தழைகளையும் அப்படியே தரித்ததோடு, சிலசமயம் அவற்றின் சாற்றைப் பிழிந்து உடம்பு முழுவதும் பூசிக்கொண்டனர். இதனால் அவர்களுடைய உடம்பின் நிறம் மாறிற்று. இதோடு அவர்கள் அணிந்திருந்த தாவர வகைகளும் அவர்களுடைய உடம்பின் நிறத்தை மாற்றின. ஆகவே, இவற்றை 'ஊ-இடு-அம்-ஐ' (உடமை) என்றும், 'ஊ-இடு-மை' என்றும் கூறினர். ஊஇடுஅம்ஐ என்றால், ஊனின்பேரில் இடப்படும் தன்மையுடைய அழகு என்று பொருள். ஊஇடுமை என்றால் ஊனின் பேரில் இடப்படும் நிறம் என்று பொருள்.

† அ-இன்-ஈய் : அழகையும் இனிமையையும் ஈய்பவை.

அந்தச் செடிகளையும் கொடிகளையும் தாம் உறங்கிய இடத்திற்கு நான்கு பக்கங்களிலும் நட்டு வைத்தனர். நான்கு பக்கங்களிலும் அவை காவல் புரிந்தன. அதற்கு "அர-சா-இன்-சய்" (அரசாணி) என்று பெயரிட்டனர். பாம்பைச் சாகடித்து இனிமையைத் தருவது என்று பொருள். அரசாணியின் அடியில் படுத்து உறங்குவதால் அபாயம் இல்லை என்று கருதினர். ஆண் பெண் புணர்ச்சிக்கு அந்த அரசாணி மேடையே சிறந்த இடம் என்று கருதினர். மெய்மறந்த நிலையில் பாம்பின் வாயில் படாமல் தப்புவதற்கு வேறு வழி யில்லையல்லவா?

அந்த அரசாணி செடிகளைச் சுற்றி பாம்பைப் பகைத்த கொடிகளையும் கட்டினர். அவர்களைச் சுற்றி கோடு கிழித்தாற்போல் அந்தக் கொடிகளைத் தரையிலும் போட்டு வைத்தனர். அப்படி பாம்புகள் நுழையமுடியாத படி போடப்பட்ட பாதுகாப்புக்கு "அர-அண்" (அரண்) என்று பெயரிட்டனர். பாம்புக் கயிறு என்று பொருள். "அர-அன்" என்றால் பாம்பை இல்லாமலாக்குவது என்று பொருள். 'அன்' என்பது இன்மையைக் குறிக்கும்.

அப்படி அரண் எழுப்பிக்கொண்ட பிறகு, அந்த இடத்தில் உயரமான இடத்தில் குழந்தைகள் உறங்குவதற்கு அதே செடிகளின் தழைகளைக்கொண்டு படுக்கைத் தயார் செய்தனர். அந்தப் படுக்கையில் குழந்தைகள் படுத்தவுடன், அதே தழைகளால் குழந்தைகளைப் போர்த்தினார்கள். இந்தப் படுக்கைக்கு அரி-அணை (அரியணை) என்று பெயரிட்டனர். பாம்பைத் தடுப்பது என்று பொருள்.

இத்தனை முறைகளில் பாதுகாப்பைத் தேடிக்கொண்டபோதும், மனிதர்கள் மற்ற மிருகங்களிடமில்லாத தம்மிடம் மட்டும் இருக்க ஒரு விசேஷத் தன்மையையும் உபயோகப்படுத்தினர். அதுதான் நாக்கைப் புரட்டி வெவ்வேறு விதமான ஓசைகளை உண்டாக்கும் தன்மை.

இந்தத் தன்மை மனிதர்களை மற்ற மிருகங்களிடமிருந்து தனியாகப் பிரித்துக் காட்டும் விசேஷத் தன்மைகளில் ஒன்று.

தே-வா-கா-இன்-அம் †

நாக்கைப் புரட்டி வெவ்வேறு விதமான ஓசைகளை மனிதர்கள் உண்டாக்கிச் சொற்களை உருவாக்கி வந்த போது, சில ஓசைகள் காதுக்கு இனிமைதரும் ஓசைகளாக அமைவதை உணர்ந்தனர்.

அதை 'இ-சு-ஐ' (இசை) என்றனர். இவ்வுலகில் சுகத்தை அழகுப்படுத்துவது என்று பொருள். இதை "இ-சா-ஈ" (இசை) என்று கூறினால், இவ்வுலகில் சோர்வை அழிப்பது என்றும், சாவை அழிப்பது என்றும் பொருள்.

அதைக் "கா-இன்-அம்" (கானம்) என்றும் கூறினர். காக்கின்ற இனிய தன்மை என்றும், காப்பாகவும் இனிமையாகவும், அழகாகவும் இருப்பது என்றும் பொருள்.

அதைப் 'பா' என்றும் கூறினர். பாதுகாப்பு என்று பொருள்.

இந்த இனிமையான ஓசைச் சேர்க்கைகளில் சில மிருகங்களின் செவிகளிலும் பாம்புகளின் செவிகளிலும் இனிமையைப் பாய்ச்சின. மிருகங்களும் பாம்புகளும் இவற்றைக் கேட்டு மெய்மறந்து நின்றன. இதனால் இந்த இனிய ஒலிச் சேர்க்கைகளை உண்டாக்குவதில் பழக்கமடைந்தவர்கள், தம்மைச் சீறிக் கடிக்கவந்த பாம்புகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. அப்படி பாம்புகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்வதற்கு

---

† தே-வா-கா-இன்-அம்: பிடிக்க வருபவைகளிடமிருந்து காக்கும் இனிய தன்மையுடையது.

உதவிய இனிய ஓசைச் சேர்க்கைகளுக்கு "அரா-கா-அம்" (ராகம்) என்று பெயரிட்டனர். பாம்புகளிடமிருந்து காப்பாற்றும் தன்மையுடையது என்று பொருள்.

நாக்கைப் புரட்டித் தொண்டையினால் ஓசைச் சேர்க்கைகளை உண்டாக்கியதோடு, சில இசைக் கருவிகளைக் கொண்டு மேலும் அதிக இனிமையான ஓசைகளை உண்டாக்க முடியும் என்றும் தெரிந்துகொண்டனர்.

வே-நூ-கா-இன்-ந-அம் †

நடுவே கூடாக இருக்கும் மூங்கில்களில் துவாரங்களைப்போட்டு ஊதியதனால் இனிய ஓசை உண்டாயிற்று.

வேய் என்றால் மூங்கில். நூ என்றால் கறுப்பு இருட்டு. வேய்-நூ என்றால், மூங்கிலில் உள்ள கறுப்பு இருட்டு. மூங்கிலின் உள் பரப்பில் இருக்கும் இருட்டு. அந்த இருட்டின் வழியே வாய்மூலம் காற்றைச் செலுத்தியபோது இன்னிசைப் பிறந்தது. அந்த இன்னிசைக் காப்பாற்றுவதாகவும் இனிமையானதாகவும் அழகானதாகவும் இருந்தது. ஆகவே அதை "வே-நூ-கா-இன்-அம்" (வேணுகானம்) என்றனர். மூங்கிலில் உள்ள இருட்டு காப்பையும் இனிமையையும் அழகையும் உண்டாக்கும் தன்மை என்று பொருள்.

மூ என்றால் மூச்சு. பாம்பு படமெடுத்து ஆடுகிற போது மூச்சை இழுத்து விடுகிறது. அப்படி மூச்சை இழுத்து விட்டுச் சீறுகிற பாம்பு 'மூ-அரா'. அந்தப் பாம்பை ஆடவிட்டு இளிப்பதற்கு உதவுவது "மூ-அரா-இளி" (முரளி).

† வே-நூ-கா-இன்-ந-அம்: மூங்கிலினுள் உள்ள இருட்டு காப்பாற்றி இனிமையை மிகுக்கும் தன்மை.

வேணுகானம் என்ற இனிய இசை மனிதர்களினால் உண்டாக்கப்பட்டபோதிலும், அக்காலத்தவர்கள் அதை இருட்டுதான் உண்டாக்கியதாகக் கருதினர். ஏனென்றால் அந்த இசையை எல்லா மனிதர்களாலும் உண்டாக்க முடியவில்லை என்பதோடு, இருட்டுடன் சம்பந்தப்பட்ட காற்றே அதற்குக் காரணமாக இருந்தது.

பாம்பிடம் இருட்டும், இருட்டிடம் பாம்பும் மிகவும் விசுவாசமாக இருக்கின்றன. பாம்பின் காவலனாகவும், நண்பனாகவும் இருப்பது இருட்டு. ஆகவே, இருட்டு ஒன்றுக்குதான் பாம்பு கட்டுப்படும் என்றும் விசுவாசத்துடன் அதன் கட்டளைக்குத்தான் அடிபணியும் என்றும் நினைத்தனர்.

மூங்கிலின் உள்பரப்பிலிருந்து உண்டான இனிய ஒலிகளைக்கேட்டு பாம்பு படமெடுத்து ஆடியபோது, அதன் உள் இருக்கும் இருட்டின் ஓசையாக அது இருப்பதனாலேயே பாம்பு ஆடுவதாகக் கருதினர். இதை ஊர்ஜிதம் செய்யும் முறையில், மூங்கில் கருவியிலுள்ள துவாரங்களைத் திறந்து வைத்து வெளிச்சத்தை உள்ளேவிட்டு ஊதியபோது, பாம்பு ஆடவில்லை. அந்த துவாரங்களை ஒவ்வொரு விதத்தில் திறந்தும் மூடியும் வந்தபோது, உள்ளே இருந்த இருட்டு மனிதன் செலுத்தியக் காற்றுக்கு ஏற்றபடி உள்ளே நர்த்தனம் செய்தது. அந்த இருட்டின் நர்த்தனத்திற்கு ஏற்ப உண்டான ஒலி, வெளியே பாம்பை ஆடச் செய்தது. மூங்கிலின் உள்பரப்பில் இனிமையாக இருட்டை ஆடச்செய்து ஊதினால், வெளியே பாம்பை ஆடச் செய்யக்கூடிய இன்னிசை வரும்.

அந்த இன்னிசை இருட்டினால் உண்டாக்கப்படுவதனால், அதனிடம் விசுவாசம் பூண்ட பாம்பு வெளியே ஆடுகிறது.

ஆகவே, பாம்பை ஆடச் செய்வது மனிதனோ, மூங்கிலோ அல்ல. அதனுள் இருக்கிற இருட்டு. இதனால், அந்த இருட்டைக் குறிப்பிட தனிப் பெயர் வேண்டியிருந்தது.

மா-கு-இடு-ஈ †

இனிய இசையை உண்டாக்கிப் பாம்பை ஆடச்செய்கிற அந்த இருட்டு, மனிதன் கைக்கு எப்படி கிடைத்தது? மூங்கிலினால் கிடைத்தது. மூங்கில் எவ்விதம் கிடைத்தது? பூமியினால் கிடைத்தது. பூமிக்கு அது எப்படி கிடைத்தது? பாம்புகள் வசிக்கும் தரையின் உள் பரப்பிலிருந்து அந்த இருட்டை பூமி மேலே இழுத்து மூங்கிலுக்குள் வைத்தது. ஆகவே, மூங்கிலினுள் இருக்கிறதும், இனிய இசைக்குக் காரணமாக இருப்பதுமான இருட்டு, பூமியினால் இழுக்கப்பட்ட இருட்டு. இதனால் அதைக் "கு-இழ்-அல்" (குழல்) என்றனர். கு என்றால் பூமி. இழ் என்றால் இழுத்தல். அல் என்றால் இருட்டு. இதையே பூமியினால் இழக்கப்பட்ட இருட்டு என்றும் கூறினர். அதுதான் "கு-இழ-அல்" (குழல்). மனிதக் கைக்கு வந்தபிறகு, அது பூமியினால் இழக்கப்பட்டது தானே?

பூமி என்கிறபோது, எல்லா பூமியும் இந்த மூங்கிலைக் கொடுத்து விடுவதில்லை. மூங்கில்களிலேயே மிக மிக மொத்தமான வகைகளும், மிகவும் மெல்லிய வகைகளும், உள்ளே கூடாக இருப்பவையும், கூடாக இல்லாதிருப்பவையுமாக பல ரகங்கள் உண்டு. எந்த பூமியில் மிகவும் மெல்லிய—அதே சமயம் உள்ளே கூடான—மூங்கில்கள் வளருகின்றனவோ, அந்த பூமியே மேற்படி இருட்டை

---

† மா-கு-இடு-ஈ: மிருக பூமியில் வைத்து அழிப்பது.

மனிதனுக்குப் பயன்படும் முறையில் இழுத்துத் தரு கிறது. அதாவது, புல்லின் தன்மையையுடைய மூங் கில்கள் முளைக்கும் பூமி. அதில் முளைக்கும் மூங்கில் களில் உண்டாக்கப்படும் கருவிதான், "புல்-அம்-கு-இழ்-அல்" (புல்லாங்குழல்).

சங்கீதத்தின் மூலம் பாம்புகளைக் கட்டுப்படுத்தியவர் கள், இன்னிசையைப் பிறக்கச் செய்த இருட்டிடம் மிக கவும் விசுவாசமுடையவர்களானார்கள். இருட்டுப் பாம்பு களுக்குக் காப்பாக இருந்ததனால், தாமும் அனாவசியமாகப் பாம்புகளுக்குத் தொல்லைகொடுக்கக்கூடாது என்று கரு தினர். அனாவசியமாக பாம்புகளுக்குத் தொல்லைக் கொடுத்தால், இருட்டின் ஆசீர்வாதத்தை இழந்து, இன் னிசை யெழுப்பும் சக்தியை இழக்க நேரிடும் என்று பயந்தனர்.

குழலோடு, வேறு ஒரு இசைக் கருவியையும் கண்டு பிடித்தனர். அதற்கு "மா-கு-இடு-ஈ" (மகுடி) என்று பெயரிட்டனர். மிருக பூமியில் வைத்து அழிப்பது என்று பொருள்.

பாம்புகளின் பூமி 'அரா-கு' (ராகு). மிருகங்களின் பூமி 'மா-கு' (மகு). பாம்புகளின் பூமி பாதாளமாகவும், புற்றுகளாகவும், இருண்ட இடங்களாகவும் இருக்கின்றன. அந்த இருண்ட இடங்களுக்குச் செல்வதற்கு மனிதர் களின் கையில் தீயும் வெளிச்சமும் இல்லை. இதனால் அந்த இருண்ட பூமிகளுக்குச் சென்று பாம்புகளை அழிக்க முடியாது. இதற்கு பதில், மிருகங்கள் வசிக்கிற வெளிச்ச முள்ள பூமிக்குப் பாம்புகளை வரச் செய்யவேண்டும். வெளிச்ச பூமியில் நிறுத்தி அதைக் கண் பார்வையில் அழிக்க வேண்டும். அப்போதுதான் அவற்றைக்கொல்ல முடியும். அப்படி அவற்றை மிருக பூமிக்கு வரச்செய்து அழிப்பதற்கு உதவிய கருவிதான் "மா-கு-இடு-ஈ"

(மகுடி). இதை ஊதியபோது, பாம்புகள் அராகுவை விட்டு மாகுவிற்கு வந்தன. மாகுவிலிருந்த வெளிச்சத்தில் அவற்றை மனிதர்கள் கண்டுகொண்டனர்.

குழலிலும் மகுடியிலும் இருக்கின்ற இருட்டே இனிமையான ஒலி உண்டாவதற்கும், பாம்புகளை ஆடச்செய்வதற்கும் காரணம் என்று எண்ணியவர்கள், உலக இயற்கையைக் குறித்து பேசியபோது, "கோ-வி-இன்-தா-நா-மா-அம்! சா-இன்-கு-ஈர்-தா-ந-அம்! கோ-வி-இன்-தா! கோ-வி-இன்-தா!" என்றனர்.

கோ-வி-இன்-தா-நா-மா-அம் †

குழலில் விரல்களால் துவாரங்களை மூடித்திறக்காமல் வாய்க்காற்றை ஈரமுள்ள நாக்கு பாய்ச்சினால், 'க்ஓ' (கோ) என்ற நீண்ட ஒலி உண்டாகிறது. அந்தக் 'க்ஓ' என்ற ஒலியை நாக்கிலுள்ள ஈரம் விரையச் செய்கிறபோது, குழலிலுள்ள இருட்டு இனிமையான ஒலியை உண்டாக்குகிறது. இப்படி 'கோ' என்ற ஒலியின் விரைவை இனிமை தரும் வண்ணம் நாக்கு மாற்றும் தன்மைதான் "கோ-வி-இன்-தா-நா-மா-அம்". இந்த தன்மை எதனால் உண்டாகிறது? செத்துப்போன (காய்ந்துபோன) ஒரு இனிமையான பூமியில் ஈரம் தாவி மிகுகிற தன்மையினால் உண்டாகிறது. இந்தத் தன்மைதான் "சா-இன்-கு-ஈர்-தா-ந-அம்" அதாவது, உலர்ந்துபோன பூமியில் ஈரத்தை உண்டாக்குவதைப்போல், அதே குணத்தினால், இருட்டு கோ என்ற ஒலியை இனிமைதரும் ஒலியாக நாக்கிலுள்ள ஈரத்தைக் கொண்டு மாற்றுகிறது. வரண்ட பூமியை இனியதாக மாற்றுகிற விஷ்ணு, 'கோ' என்ற ஒலியை இன்னிசையாக்குகிறது. "கோ-வி-இன்-தா! கோ-வி-இன்-

† கோ-வி-இன்-தா-நா-மா-அம்: கோ என்று விரையும் ஒலியில் இனிமையைத் தரும் வண்ணம் நாக்கு மாற்றும் தன்மை.

தா!" என்றால், கோ என்ற ஒலியில் இனிமையைத் தருக! இனிமையைத் தருக! என்று பொருள். ("கோ" என்ற ஒலி உற்றார் உறவினர் மடிகின்றபோது மனிதர்களால் அழுகுரலாக எழுப்பப்படுகிறது. அத்தகைய சந்தர்ப்பத்தில், அவ்விதம் கோஷிப்பதற்கு, அந்த அழுகுரலில் இனிமையைத் தருக என்று கேட்பதாகும்).

கோ என்ற ஒலியை, அது குழலில் எழுந்தாலும், அல்லது அழுகுரலாக எழுந்தாலும், இனிமை தரும் ஒலியாக மாற்றும் தன்மை இருட்டிடமும் சாத்திவிடமும் இருக்கிறதாகக் கருதினார்கள். இனிய ஓசையை உண்டாக்குவது சாக்கில் சாரமாக இருக்கும் விஷ்ணுவே என்று பொருள்.

இதில் இருட்டு, நீர் ஆகியவற்றின் பெருமை வெளிப்பட்டது.

சீவா-சீ-தா-அம்-பா-இர்-அம் †

உடனே நிலையைப் பிரதானமானதாகக் கருதியவர்கள் இந்தக் கூற்றை மறுத்தனர்.

"சிவா-சி-தா-அம்-பா-இர்-அம்! தி-அரு-சி-தா-அம்-பா-அல-அம்!" (சிவசிதம்பரம்! திருச்சிற்றம்பலம்!) என்றனர்.

இதற்கென்ன அர்த்தம்?

குழலுக்குள் இருட்டு இருக்கிறது உண்மைதான். ஆனால் அதேசமயத்தில், குழலுக்குள் காக்குச் செதுக்க

† சீ-வா-சீ-தா-அம்-பா-இர்-அம்: சீவா ஒலியாகத் தாவும் தன்மையினால் பாதுகாப்போடு இருக்கும் தன்மை உண்டாகிறது.

கின்ற காற்றில் தீயும் இருக்கிறது. குழலுக்குள் விரல்களை மூடித் திறப்பதனுல் வெளிச்சமும் புகுகின்றது.

ஒரு பக்கம் வெளிச்சத்தினுலும் மறுபக்கம் தீயையுடைய காற்றினுலும் குழலுக்குள் இருக்கிற இருட்டு நிர்பந்திக்கப்படுவதனுலேயே, அந்த இருட்டு உள்ளுக்குள் நர்த்தனமாடி இனிய ஒலியை உண்டாக்குகிறது என்றும், அதனுலேயே இருட்டிடம் விசுவாசம் பூண்ட பாம்புகள் ஆடுகின்றனவென்றும் இந்தச் சாரார் கருதினர். ஆகவே, இருட்டைக் காட்டிலும் தீதான் முக்கியமானதென்று வாதித்தனர். இதனுல் இசைக்கருவிகளுக்கு "வா-தீ-யா-அம்" (வாத்தியம்) என்று பெயரிட்டனர். பாய்கின்ற தீயினுல் கட்டப்படும் தன்மையுடையது என்று பொருள். கட்டப்படுவது இருட்டு. "கு-இழ்-அல்-வா-தீ-யா-அம்" என்றுல், பூமியிலிருந்து இழுக்கப்பட்ட இருட்டு வாயிலிருந்து பாயும் தீயினுல் கட்டப்படும் தன்மை என்று பொருள்.

இவர்கள் இருட்டு மிகவும் கொடூரமானது என்றும், அதன் கொடூரத்தை மாற்றுவது தீயும் வெளிச்சமுமே என்றும் கூறினர். "சீ-வா-சீ-தா-அம்-பா-இர்-அம்" என்றுல், சிவன் ஒளியாகத் தாவும் தன்மையினுல், பாதுகாப்போடு இருக்கும் தன்மை உண்டாகிறது என்று பொருள். "தீ-அறு-சீ-தா-அம்-பா-அல்-அம்" என்றுல், தீ அறுக்க, ஒளித்தாவ, அழகும் பாதுகாப்புமுடைய இருட்டின் தன்மை உண்டாகிறது என்று பொருள். அதாவது தீயும் ஒளியும் நெருக்குவதால் இருட்டின் கொடுமை குறைந்து, அது அழகானதாகவும் மனிதர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடியதாகவும் ஆகிறது என்று பொருள். "தீ-அறு-சீ-ஈர்-தா-அம்-பா-அல்-அம்" [திருச்சிற்றம்பலம்] என்றுல், தீயினுல் அறுத்து ஒளி ஈரத்தைப் பகைக்கிற தன்மையால் பாதுகாக்கக்கூடிய இருட்டின் தன்மை உண்டாகிறது என்று பொருள்.

சிவனுடைய ஆதிக்கத்திற்கு அடங்குவதனுலேயே விஷ்ணு அழகுடையவனுகிருன். இல்லையேல் பயங்கர மானவனுகிருன்.

அரி-ந-மோ-து-சீ-இன்-தா-அம் †

இதை மறுத்தவர்கள் "அரி-ந-மோ-து-சீ-இன்-தா-அம்" (அரிநமோத்து சிந்தம்) என்றனர். அரி என்ருல் இருட்டு. 'நமோது' என்ருல் மிகமிக அதிகமாவதனுல் மோப்பத்தைக்கொண்டே உண்ணும்படி செய்தல். சீஇன் தாஅம் என்ருல் ஒளியை இனிமை தரும்படியான தன்மை யுடைய தாக்குதல். அதாவது, கண்ணினுல் பார்த்து புசிக்க முடியாமல், மூக்கினுல் முகர்ந்தே புசிக்கவேண்டி யிருக்கிறது என்ருல், எவ்வளவு கடுமையான இருட்டு இருக்கும்? அவ்வளவு கடுமையாக இருட்டு மிகுவதனுல் தான், ஒளியில் உள்ள வெப்பம் குறைந்து, ஒளி இனிமை யைத் தரக்கூடியதாக ஆகிறது என்று பொருள். இருட்டு கடுமையானதாகி நெருக்குவதனுல், ஒளி தன்னிடமுள்ள வெப்பத்தைக் குறைத்துக்கொள்கிறது. அப்படி நெருக்கா விட்டால் ஒளி மிகவும் கொடூரமானதாக இருக்கும். ஆகவே இருட்டுதான் முக்கியமானதென்று வாதித்தனர். இதே காரணத்தினுல் இருட்டிற்கு "நா-இன்-தா-அன்" (நந்தன்) என்ற பெயரைச் சூட்டினர். மிகுவதனுல் இனிமையைத் தருபவன் என்று பொருள். இதனுலேயே "ந-இன்-தா-கா-அம்" (நந்தகம்) என்ற தன்மையை இருட்டின் போரா யுதமாகக் குறிப்பிட்டனர். மிகுவதன் மூலம் இனிமையைத் தந்து காப்பாற்றும் குணமுடையது என்று பொருள்.

---

† அரி-ந-மோ-து-சீ-இன்-தா-அம்: இருட்டு மிக மிக அதிகமாகி மோப் பத்தினுல் உண்ணக்கூடிய நிலையை உண்டாக்குவதனுல், ஒளி இனிமையைத் தரும் தன்மையுடையதாகிறது.

இவ்விதம் 'அரிநமோத்து சிந்தம்' என்ற தன்மையை உணர்த்தியபோது, நாக்கிலுள்ள ஈரத்தினாலேயே நாக்கிற்குச் சொற்களை உண்டாக்க முடிகிறது என்றனர். "அ-இர்-இ-நா-மா-அம்" [அரி நாமம்] என்ற தன்மை—அப்படி இருப்பதை இப்படி நாக்கு மாற்றும் தன்மை—சொற்களை நாக்கு உண்டாக்கும் தன்மை—நாக்கிலுள்ள ஈரம் "அரி-நமோத்து சிந்தம்" என்ற தன்மையைப் பெற்றிருப்பதனாலேயே ஏற்படுகிறது என்று கூறினர். அரிநமோத்து சிந்தம் என்ற தன்மையையுடைய விஷ்ணுதான்—நாக்கிலுள்ள ஈரம்தான்—சொற்களை உண்டாக்குவதற்குக் காரணம் என்று பொருள்.

இந்தத் தர்க்கம், சொற்கள் உண்டாவதற்குக் காரணம் நாக்கிலுள்ள ஈரமா அல்லது உஷ்ணமா? ஈரமுள்ள நாக்கில் சொற்கள் உண்டாகின்றனவா அல்லது வறண்ட நாக்கில் சொற்கள் உண்டாகின்றனவா? சொற்கள் உண்டாவதற்கு நாக்கிலுள்ள விஷ்ணு காரணமா அல்லது சிவன் காரணமா?— என்ற கேள்விகளுக்கு விடைகாணும் தர்க்கமாக மாறிற்று. இதை வேறு ஒரு இடத்தில் இன்னும் விரிவாக கவனிப்போம். இங்கு நாம் கவனிப்பது, பாம்புகளைக் குழலோசையின்போது படமெடுத்து ஆடச் செய்வது எது? தீயா அல்லது நீரா? ஒளியா அல்லது இருட்டா? சிவனா அல்லது விஷ்ணுவா?

இந்தக் கேள்விகளுக்கு விடையைக் காண ஒருபுறம் அக்கால அறிவாளிகள் முயன்றுகொண்டிருந்தபோது, மறுபக்கத்தில் பாம்புகளை யதார்த்தத்தில் ஒழிப்பதற்கு இன்னுமொரு உபாயத்தைக் கையாண்டனர்.

வீ-இர்-அர்-வண்-ந-கா-அம் †

அவர்கள் ஒரு இடத்தைவிட்டு இன்னொரு இடத்திற்குச் சென்றபோது, சில இடங்களில் பாம்புகள் மிக மிக அதிகமாக இருப்பதையும், அங்கு கழுகுகளும் கருடன்களும் அதிகமாக வராமல் இருப்பதையும் பார்க்க நேர்ந்தது. அந்தச் சமயத்தில், கழுகுகளையும் கருடன்களையும் அதிகமாக வரவைத்தால், அப்பாம்புகள் மடியும் என்று நினைத்தனர்.

மயில்கள் அவர்களுடனேயே இருக்கவேண்டியிருந்ததனால், அவற்றை அனுப்பிப் பாம்புகளைக் கொல்ல முடியவில்லை. அப்படி மயில்களை அனுப்பினாலும், நிரந்தரமான பரிகாரம் காணமுடியாது. நிரந்தரமாக அந்த நாகுகளை ஒழிக்க கருடன்களையும் கழுகுகளையும் அவ்விடங்களுக்கு வரச்செய்வதுதான் சரியான வழி.

செத்தப் பிணங்களைக் கழுகுகளும் கருடன்களும் விரும்பி புசித்தன. பிணத்தின் துர்நாற்றத்தை வெகு தூரத்திலேயே அறிந்து, அவை பறந்து வந்தன. ஆகவே, நாகுவில் பிணம் கிடந்தால், அப்பறவைகள் நாகுவிற்கு வரும். அங்குப் பிணத்தைப் புசித்து வண்நகாஅம் பெறுவதோடு, பாம்புகளைப் புசித்தும் வண்நகாஅம் பெறும். பிணம் அப்பறவைகளுக்கு வண்நகாஅம் அளிக்கிறபோது, நாகுவை ஒழிக்க உதவுவதன் மூலம் தன் குலத்தினருக்கும் வண்நகாஅம் அளித்ததாகும். அவர்கள் பிணத்தின் மூலம் அப்பறவைகளுக்கு வண்நகாஅம் அளித்தால், அப்பறவைகள் பாம்புகளைக் கொல்வதன் மூலம் தமக்கு வண்நகாஅம் அளிக்கும் என்று கருதினர்.

---

† வீ-இர்-அர்-வண்நகாஅம்; அழிந்தும் இருப்பவர்களைக்கொண்டு வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மை.

ஆகவே, அவர்கள் தம்மில் யாராவது செத்துவிட்டால், உடனே அப்பிணத்தைத் தூக்கிக்கொண்டு நரகுவிற்குச் சென்றனர்.

நரகுவில் பிணத்தைப் போட்டபோது என்ன நேர்ந்தது ? பிணத்திலிருந்த பீ நாற்றம் நாலா திசைகளிலும் பரவிற்று. உடனே கழுகுகளும் கருடன்களும் வந்தன. பிணத்தைப் புசித்து வணக்கம் பெற்றன. அதே சமயம் அங்கு பாம்புகள் மிகுதியாக வசிப்பதைப் பார்த்தன. உடனே அப்பாம்புகளையும் தாக்கிக் கொல்ல முற்பட்டன. இவ்விதம் பிணத்தைப் புசித்ததற்குக் கைமாருக மனிதர்களுக்கு வணக்கம் உண்டாகும்படி செய்தன. இவ்விதம் உயிர் நீத்தவர்களின் உடல் குலத்திற்கு நன்மையை உண்டாக்கிற்று. இதனல் அந்த உடலுக்கு உரிய மனிதனுக்கு நன்றி செலுத்த அக் குலத்தினர் கடமைப்பட்டவர்களானார்கள்.

இவ்விதம் ஒருவனுடைய உடலிலிருந்து வணக்கம் பெறுவதற்கு அவர்கள் முயற்சித்தபோது, வேறு சில கேள்விகளும் பிறந்தன. முதலாவது கேள்வி; எந்தச் சந்தர்ப்பத்தில் அந்த உடலைத் தூக்கிச் செல்வது என்பதே. நரகுவில் பாம்புகள் மிகுதியாக இருக்குமாதலால், எல்லா நேரங்களிலும் தூக்கிச் செல்ல முடியாது என்பது வெளிப்படை.

அராகுவில் காஇல்அம் இல்லாதபோது, பாம்புகள் வெளியே போயிருக்கிறபோது, பிணத்தைத் தூக்கிச்செல்வதென்று முடிவு செய்தனர். ஆகவே, அராகுவில் காஇல் அம் நீங்கும் வரையில் பிணத்தைத் தூக்கிச் செல்லாமலிருந்தனர்.

ந-அர-கா-அம் : சோ-இர்-கா-அம் †

இரண்டாவதாக, பிணத்தை எந்த நரகுவிற்கு தூக்கிச்செல்வது என்ற கேள்வி எழுந்தது. மனிதனைப் புசிக்கக்கூடிய யாமா இருக்கும் நரகுவிற்கா அல்லது யாமா இல்லாத நரகுவிற்கா?

இந்தக் கேள்வி எதனால் எழுந்தது என்றால், சில சமயம் நரகுவில் அவர்கள் கொண்டுபோய் போட்டுவிட்டு வந்த பிணத்தை, அங்கிருந்த யாமா புசித்து விட்டது. இதனால் என்ன நேர்ந்தது?

பீ நாற்றம் மிகவில்லை. பறவைகள் வரவில்லை. நரகு அழியவில்லை.

அதற்கு பதில் மனிதர்களுக்குக் கொடிய வைரியான யாமா, பிணத்தைப் புசித்து வணக்கம் பெற்றது. மனிதர்களுடைய உடலின் பேரில் அதிகமாக நாட்டம் செலுத்த ஆரம்பித்தது. மனிதர்கள் வசித்த இடங்களை மோப்பம் பிடித்து வர முற்பட்டது. ஒரு பக்கம் நரகு அழியாததோடு, மறுபக்கம் நரகுவை விட்டு, யாமா மனிதர்கள் வசித்த சோஇர்கு (சொர்கு) விற்கே வர ஆரம்பித்தது. (சோஇர்கு என்றால் அரணாக இருக்கும் பூமி). இதனால் மனிதர்களுக்கு கஷ்டங்கள் மிகுந்தன. இதனால் யாமாவின் வயிற்றுக்கு இரையாகி வணக்கம் அளித்த பிணத்தை அவர்கள் 'பா-வீ' என்று சபிக்க நேர்ந்தது. 'பா-வீ' என்றால் பாதுகாப்பை அழிப்பது என்றும், அழிப்பவன் என்றும் பொருள்.

---

† ந-அர-கா-அம் : மிகுதியாகப் பாம்புகளைக் காக்கும் தன்மையுடையது. சோ-இர்-கா-அம் : அரணாக இருந்து காக்கும் தன்மையுடையது.

இதற்கு மாருக, யாமா இல்லாத நரகுவில் போடப்பட்டவுடல் "பு-இன்-ஈய்-அம்" (புண்ணியம்) உடையதாக இருந்தது. குணத்தையும் இனிமையையும் ஈயும் தன்மையுடையது என்று பொருள். அது "ந-அர-பா-தீ" (நரபதி) ஆகவும் இருந்தது. மிகுதியாக பாம்புகள் உள்ளப் பரப்பைத் தீய்க்கும் தீயாக இருந்தது என்று பொருள். மேலும் அது, "ந-அர-பா-இல்-ஈ" (நரபலி) ஆகவும் இருந்தது. மிகுதியாகப் பாம்புகளையுடைய பரப்பை இல்லாது ஒழிப்பது என்று பொருள். அது 'அர-சா-அன்' (அரசன்) ஆகவும் இருந்தது. பாம்புகளைச் சாகடிப்பது என்று பொருள். அது கிடந்த இடத்தில் நிறைய பறவைகள் சஞ்சரித்ததனுலும், பாம்புகளை அப்பறவைகள் வேட்டையாடியதாலும், மனிதர்கள் வசித்த இடங்களுக்குப் பாம்புகள் வராமல் தடுக்கப்பட்டதாலும், அந்த இடம் 'சோ-இர்-கு' (சொர்கு) என்றும் குறிப்பிடப்பட்டது. அரணுக இருக்கும் பூமி என்று பொருள். அந்த இடத்தில் பிணமாக கிடந்த உடல், பறவைகளுக்கு வணக்கமளித்துப் பாம்பு வேட்டையைத் தீவிரப்படுத்திய தன்மையை 'சோ-இர்-கா-அம்" (சொர்க்கம்) என்றனர். அரணுக இருந்து காப்பாற்றும் தன்மை என்று பொருள். ஆகவே, அந்த இடத்தில் கிடந்த உடலுக்குச் சொந்தக்காரனை, "பு-இன்-ஈய்-வா-அன்" (புண்ணியவான்) என்றும் "ந-இன்-பா-அன்" (நண்பன்) என்றும் பலவாருகப் போற்றினர். குணத்தையும் இனிமையையும் ஈய வருபவன் என்றும், மிகுதியாக இனிமையையும் பாதுகாப்பையும் அளிப்பவன் என்றும் பொருள்.

இதற்கு மாருக யாமா உள்ள நரகுவில் போடப்பட்ட உடலுக்குச் சொந்தக்காரனை, "யாமா-தூ-தா-அன்" (யமதூதன்) என்றனர். யமாவுக்கு இறைச்சியைத் தந்தவன் என்றும், யமா உண்ணுவதற்குத் தரப்பட்டவன் என்றும் பொருள். "யாமா-காந அம்" (யமகணம்) என்றும் கூறப்பட்டான். யமாவுக்குக் காப்பை மிகுக்கும்

தன்மையுடையவன் என்று பொருள். யமாவினால் புசிக்கப்பட்ட பிணம், நரகுவை காப்பாற்றியது. இதனால் தம் குலத்தினரிலேயே ஒருவனுடைய உடல், யமாவின் வாய்ப்பட்டு, நரகுவைக் காப்பாற்றப் பயன்பட்டத் தன்மையை, "ந-அர-கா-அம்" (நரகம்) என்றனர். மிகுதியாகப் பாம்புகளைக் காப்பாற்றும் தன்மை என்று பொருள். அப்படி யாமாவுக்கு வணக்கமளித்து, நரகுவைக் காப்பாற்றிய உடல்களுக்கு உரியவர்களை யெல்லாம் 'ந-அர-கா-அர்' (நரகர்) என்றனர். மிகுதியாகப் பாம்புகளைக் காப்பாற்றுபவர்கள் என்று பொருள். அவர்களை 'ந-அர-கு-ஈய்' (நரகி) என்றும் கூறினர். மிகுதியாக பாம்புகளுக்கு பூமியை ஈய்பவர்கள் என்று பொருள்.

யாமா உள்ள நரகிற்கும், யாமா இல்லாத நரகிற்கும் எதனால் இந்த வித்தியாசங்கள் உண்டாயின?

உடல் பயன்பட்ட, பயன்படாத தன்மைகளினால் என்பது எல்லோருக்கும் விளங்கும். இவ்விரண்டு தன்மைகளே, செத்தவனுடைய ஆவியின் தன்மையை நிச்சயித்தன.

வீ-இடு-வி-மோ-சா-ந-அம் †

பயன்பட்ட தன்மை எப்படிப்பட்டது?

'வீ' என்றால் அழிவு, நாசம். அழிந்த உடலையும் குறிக்கும். 'வீ-இடு' (வீடு) என்றால் அழிந்த உடலை இடுதல் என்றும், இடும் இடம் என்றும் பொருள். யாமா இல்லாத இடத்தையே 'வீ-இடு' (வீடு) ஆகக் கொண்டனர். எது 'சோ-இர்-கு' ஆக இருக்குமோ, அதுவே 'வீ-இடு' என்று தீர்மானித்தனர்.

---

† வீ-இடு-வி-மோ-சா-ந-அம்: அழிந்ததை வைப்பதனால் விரையக் கூடிய மோப்பம் சாவை மிகுக்கும் தன்மை,

‘வீ-இடு’ என்று குறிப்பிடப்பட்ட அந்த இடத்தில், என்ன நடந்தது?

‘பீ-ந-அம்’ (பிணம்) அங்கு கிடந்தது. பீநாற்றத்தை மிகுக்கும் தன்மையுடையது பீ-ந-அம். அதை ‘இன்-ஈ-ந-அம்’ (கிணம்) என்றும் கூறினர். இனிமையை அழிக்கும் முறையில் மிகும் தன்மையுடையது என்று பொருள்.

இந்த இடத்தை “பீ-ந-கா-இடு’ (பிணக்காடு) என்றும் கூறினர். பீ நாற்றத்தை மிகுத்துக் காப்பை இடும் தன்மையுடைய இடம் என்று பொருள். பாம்புகள் அழிவதனாலே அங்கு காப்பு இடப்படுகிறது என்பது விளங்கும்

வீடும் பிணக்காடும் அக்காலத்தில் ஒரே இடத்தைக் குறிப்பிட்டது.

பிணத்திற்கு வேறு சில பெயர்களும் உண்டு. அதைப் ‘பா-வீ’ என்று குறிப்பிட்டனர். பாதுகாப்பை அழிப்பது என்று பொருள். ‘பா-பீ’ என்றும் சொன்னார்கள். பரப்பிலுள்ள பீ நாற்றம் என்று பொருள். இது பாம்புகளிடமிருந்து பாதுகாக்கக்கூடிய தன்மையுடையதாகையால், பாதுகாக்கும் பீ நாற்றம் என்றும் பொருள்.

பிணத்திலிருந்து பரவும் இந்தப் பீ நாற்றத்திற்கு, “வி-மோ-ந-அம்” என்றும் பெயர். விரைகிற மோப்பத்தை மிகுக்கும் தன்மையுடையது என்று பொருள். இதுவே, “வி-மோ-சா-ந-அம்” என்றும் சொல்லப்பட்டது. விரைகின்ற மோப்பத்தினால் சாவையும் சோர்வையும் மிகுக்கும் தன்மையுடையது என்று பொருள். “வீ-மோ-ந-அம்” என்றால் அழிவிலிருந்து மோப்பம் மிகும் தன்மை.

வீடு என்றும், சொர்கு என்றும், குறிப்பிடப்பட்ட பிணக்காட்டில், "பா-வீ-வி-மோ-சா-ந-அம்" (பாவி விமோசனம்) ஏற்பட்டது. பரப்பிலுள்ள அழிவிலிருந்து விரைகின்ற மோப்பத்தினுல் சாவும் சோர்வும் மிகும் தன்மை ஏற்பட்டது என்று பொருள். பாம்புகளுக்குச் சாவும் சோர்வும் மிகுந்தது. மனிதர்கள் அவ்விடத்திலிருந்தால், அவர்களுக்கும் இவை உண்டாகும்.

இதிலிருந்து, வீடு என்ற பிணக்காட்டில் உடலைத் தூக்கிச் சென்று வைத்தபோது, "மோ-இடு-சா-அம்" (மோட்சம்) உண்டாகியதாக கருதினார்கள், மோப்பத்தை இட்டு சாகடிக்கும் தன்மையை உண்டாக்கியதாகப் பொருள்.

இதிலிருந்து, யாமா இல்லாத நாகு, வீடு ஆகவும், சொர்கு ஆகவும், பாவிவிமோசனம் ஏற்படுகிற இடமாகவும், மோட்சம் உண்டாக்கும் இடமாகவும் கருதப்பட்டன என்பது புலப்படும்.

இந்த இடத்தில் வேறொன்றும் நிகழ்ந்தது. அழிந்த உடலைப் புசிக்க பறவைகள் வந்தன. அவை "தே-வா" என்று குறிப்பிடப்பட்டன. புசிக்க வருபவை என்று பொருள். புசிக்க வருபவைக்காக உடலை இடுகின்ற இடம் "தே--வா-வீ-இடு" (தேவ வீடு) புசிக்க வருபவை, பாம்புகளைச் சாகடிக்கும் சிறப்பு, "தே-வா-அ ர-சா-ஙி" (தேவ அரசாக்ஷி). பிணத்திலிருந்து மோப்பம் மிகுவதனுல் புசிக்க வருபவை, "வீ-மோ-ந-தே-வா-அர்" (விமான தேவர்) பிணத்தைப் புசிக்கிறபோதே, அங்கு மிகுதியாக உள்ளப் பாம்புகளையும் புசிக்கவருபவை, "ந-அ ர-தே-வா" (நரதேவா) நரதேவா என்பவை, பாம்புகளைச் சாகடிப்பதால், "அ ரா-சா" (ராஜா)

புசிக்க வருபவைகளைத்(தேவர்களைத்)தன்னிடமுள்ள விமோநஅம் (விமானம்)என்ற தன்மையினுல் வரவழைத்து

பாம்புகளைச் சாகடித்தப் பிணமாகப் பயன்பட்டவன் "பா-அர-கு-தீ" (பரகதி) அடைந்ததாகக் குறிப்பிடப் பட்டான். பாஅரகுதீ என்றால், பாதுகாப்போடு பாம்புகள் உள்ள பூமியைத் தீய்க்கும் தீ என்று பொருள். பரகதி அடைந்தான் என்றால், அந்தக் காட்டுத்தீயின் தன்மை யைப் பிணமானவன் அடைந்தான் என்று பொருள் "நஅரகுதீ" (நரகதி) என்றாலும் இதே பொருள்தான்.

இதற்குமாறாக, யாமாவின் நரகுவில் பிணமாகக் கிடந் தவன், "யாமா-தூ-தா-அன்" (யமதூதன்) ஆனான். யமாவிற்கு உண்ணத்தரப்பட்டவன் என்றும், யமாவுக்கு உணவைத் தந்தவன் என்றும் பொருள். யாமா மனிதர்கள் வசித்த இடங்களுக்கு வருவதற்கும், பகைத்து இனிமையை அழிப்பதற்கும் காரணமானான். யாமா வருவதும், பகைத்து இனிமையை அழிப்பதும் தான், "யாமா-வா-தா-இன்-ஈ" (யமவாதனை) என்று குறிப்பிடப்பட்டது. அந்த இடத்தில், பிணமே இல்லாமல் யாமா வாயில் புகுந்துவிட்டதனால், அந்த இடத்தைப் "பா-வீ-இல்-அம்" (பாவீ இல்லம்) என்றனர். பரப்பில் பிணத்தையே இல்லாமல் செய்யும் தன்மையுடைய இடம் என்று பொருள். மேலும் அதைத் "தீ-மை-இல்-அம்" (தீமை இல்லம்) என்றும் கூறினர். தீயின் நிறமே இல்லாத தன்மையுடையது என்று பொருள். தீயின் நிறமென்றால் வெளிச்சம். யமா வசிக்கிற இடத்தில் இருட்டு சூழ்ந் திருக்கும் என்று விளங்கும். அந்த இடத்தில் பிணமாகக் கிடந்து, யமா வாயில் புகுந்தவர்களை "யாமா-தா-இர்-பா-அர்" (யமதர்பார்) என்றும் குறிப்பிட்டனர். யாமாவுக்கு வலிமையாக இருந்து, (நரகுவைப்) பாதுகாப்பவர்கள் என்று பொருள். "யாமாதாஇர்பாஅர்" என்பவர்கள்தான் "யாமாகாநஅம்" என்றும் "யாமாதூதாஅர்" என்றும் குறிப்பிடப்பட்டனர் என்பது விளங்கும். இவர்களுடைய தன்மை "நஅர-பா-பா-அம்" (நரபாபம்) என்றும் சொல் லப்பட்டது. மிகுதியாகப் பாம்புகள் உள்ளப் பரப்பை பாதுகாக்கும் தன்மை என்று பொருள். இத்தன்மையினால்

அந்த இடத்திலுள்ள பாம்புகளிடமிருந்து தமக்கு அபாயம் ஏற்பட்டபோது, அங்கு போடப்பட்ட பிணத்தை "ந-அர-பா-வி" (நரபாவி)என்று சபித்தனர். மிகுதியாகப் பாம்புகளுடைய பரப்பிலிருந்துகொண்டு அழிப்பதுஎன்று பொருள்.

சொர்குவில் தேவர்கள் இருப்பர் என்றால், தொலையில் அரணை இருக்கிறபூமியில் பாம்புகளைவேட்டையாடும் பறவைகள் வட்டமிட்டுக்கொண்டிருக்கும்என்று பொருள்.

சொர்குவில் நல்லவர்கள் இருப்பார்கள் என்றால், தொலையில் அரணை இருக்கும் பூமியில் செத்தப்பிறகும் தம் உடலால் தம் குலத்திற்குச் சேவைச் செய்கிறவர்களின் ஆவிகள் சஞ்சரிக்கும் என்று பொருள்.

சொர்குவில் அராகாஇல்அம் (ராக்காலம்) இல்லை என்றால், அரணை இருக்கும் பூமியில் பாம்புகளினால் ஆபத்து இல்லை என்று பொருள்.

யமாநரகுவில் பாவி இருக்கிறான் என்றால், யமாஉள்ள பாம்பு பூமியில் பாதுகாப்பை அழிப்பது இருக்கிறது என்று பொருள்.

யமா நாகுவில் விமோசனம் இல்லை என்றால், பறவைகளை வரவழைக்கக்கூடிய மோப்பம் இல்லை என்றுபொருள். அங்கு ஒருவனுடைய உடலுக்கு மோட்சம் இல்லை என்றால், அந்த உடலின் மூலம் மோப்பத்தை உண்டாக்கிப் பாம்புகளைச் சாகடிக்கும் தன்மை இல்லை என்று பொருள். அங்கு மோனம் இல்லை என்றால், மோப்பத்தை மிகுக்கும் தன்மையில்லை என்று பொருள்.

ஆகவே குலத்தினருக்குச் செத்தப் பிறகும் நன்மை செய்ய விரும்பியவர்கள் எல்லோரும், தம் உடல்களை யாமா

நரகுவில் போடாமல், சொர்குவில் சேர்ப்பிக்கும்படி விண்ணப்பித்துக்கொண்டனர். சொர்குவில் தேவர்களுடன் தம் ஆவியும் சஞ்சரித்து, தேவர்களைக்கொண்டு, மனிதர்களுக்கு மிகவும் கொடுமை செய்த அசூரர்களைக் கொல்ல தமக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கூறினர். செத்தபிறகு, பிணக்காட்டில், தம்முடைய உடல்களை யமா புசிக்காமல் இருக்கவேண்டுமே என்று கவலைப்பட ஆரம்பித்தனர். யமாபுசித்து விட்டால், தம் குலத்தினர் தம்மை சபிப்பார்களே என்று அஞ்சினர். யமா புசிக்காமல், தம் உடம்பில் விமோகம் ஏற்பட்டு, தேவா அராசாக்களை வரவழைத்து, வீட்டில் விமோசாநஅம் ஏற்பட்டால், தம்மை தம் குலத்தினர் நஅரபாதீ என்று கொண்டாடுவார்களே என்று நினைத்து மகிழ்ந்தனர்.

செத்தப்பிறகு நல்ல பெயர் எடுக்கவேண்டும் என்ற ஆசை, அவர்கள் ஒவ்வொருவரையும் யமாநரகுவை வெறுப்பவர்களாகவும், சொர்குவை இச்சிப்பவர்களாகவும் ஆக்கிற்று.

இதிலிருந்து, குலத்தில் ஒருவனைக் கண்டிக்க நேர்ந்த போது அல்லது தண்டிக்க நேர்ந்தபோது, "உன்னை யமா நரகுவில் போட்டுவிடுவோம்" என்றும், "நீ யமா நரகுவில் கிடக்கும் குலத்துரோகிகளுக்கு ஒப்பானவன்" என்றும், "நீ யமா நரகுவில் கிடந்து சாபத்திற்கு ஆளாகப்போகிருய்" என்றும் பயமுறுத்தும் பழக்கம் சிறுகச்சிறுக வளர்ந்து வலுத்து வந்தது.

இந்த இடத்தில், செத்தவர்களின் உடலினுல் உண்டான கருத்துக்களைப் பார்த்தது போலவே, அவர்களுடைய உயிரினுல் உண்டான கருத்துக்களையும் பார்த்து விடலாம்.

ஆ-வீ †

தம்மைச் சொர்குவில் போடவேண்டும் என்று குலத்தின் தாயிடம் விண்ணப்பித்துக்கொண்டவர்கள், எப்படியெப்படி யெல்லாம் கனவு கண்டனர்? எப்படிப்பட்ட ஆசைகளை வெளியிட்டனர்?

அவர்கள் சொன்னார்கள் :—

எங்களை யமா நரகுவில் போட்டால், எங்கள் உடல் துளியும் பயன்படாது போவதோடு, குலத்திற்கு விரோதமான அசூராக்களுக்குப் பயன்படும். சொர்குவில் போட்டால், உடல் பூரணமாகக் குலத்தினருக்குப் பயன்படும். நாங்கள் "மோ-ந-உரு-வெள்-ஈ-இன்-ந-அர்" (மோனஉரு வெளியினர்) ஆக இருக்கமுடியும் என்றனர். மோப்பத்தை மிகுக்கக்கூடிய உருவத்தினால், அச்சத்தை அழித்து இனிமையை மிகுப்பவர்களாக இருக்கமுடியும் என்று பொருள். நாங்கள் "ஆ-வீ" ஆக இருப்போம் என்றனர். ஆங்கே அழிப்பது ஆவீ. ஆங்கே என்றால் தொலையில்; வசிக்கும் இடத்திற்கு அப்பால். "ஆ-வி" என்றால், ஆங்கே, தொலையில், விரைவது என்று பொருள். இதற்கே ஆ என்று வாயைப் பிளந்து விரைவது என்றும், அழிப்பது என்றும் பொருள். நாங்கள் "ஆ-கா-சா-அம்" (ஆகாசம்) ஆக இருக்க முடியும் என்றனர். ஆங்கே (தொலையில்) குலத்தினரைக் காப்பவர்களாகவும், பகைவர்களைச் சாகடிப்பவர்களாகவும் இருக்கமுடியும் என்று பொருள். ஆங்கே காக்கின்ற, சாகடிக்கின்ற தன்மை "ஆ-கா-சா-அம்". நாங்கள் "பே-ஈ" (பேயி) ஆக இருக்க முடியும் என்றனர். அச்சத்தை அழிப்பது என்று பொருள். மேலும், "பே-ஈய்" (பேய்) ஆகவும் இருக்க

† ஆ-வீ: ஆங்கே அழிந்தது; ஆவென்று அழிப்பது.
ஆ-வி: ஆங்கே விரைவது; ஆவென்று விரைவது.

முடியும் என்றனர். அச்சத்தைப் (பகைவர்களுக்கு) ஈய்வது என்று பொருள். "பை-சா-சு" ஆக இருக்க முடியும் என்றனர். பையையுடைய பாம்புகளைச் சாகடித்து சுகமளிப்பது என்று பொருள். "பி-சா-சு" ஆக இருக்கமுடியும் என்றனர். பீநாற்றத்தினால் சாகடித்து சுகமளிப்பது என்று பொருள். "தே-வா-தா" ஆக இருக்கமுடியும் என்றனர், புசிக்க வருகின்றவற்றைப் பகைப்பது என்று பொருள். "வீ-இர்-அர்" (வீரர்) ஆக இருக்கமுடியும் என்றனர். அழிந்தும் இருப்பவர்கள் என்று பொருள். "தீ-இர்-அர் (தீரர்) ஆக இருக்க முடியும் என்றனர். தீயாக இருப்பவர்கள் என்று பொருள். "சூ-இர்-அர்" (சூரர்) ஆக இருக்க முடியும் என்றனர். ஒட்டமாக இருப்பவர்கள் என்று பொருள்.

ஊ-ஈ[ய்]-இர் †

இவ்விதம் எதனால் நினைத்தனர்?

உடம்பு செத்தப் பிறகும் மாறுதல் அடைவதை அவர்கள் உணர்ந்தனர். அந்த மாறுதலின் விளைவையே பொறுத்திருந்தது, அது குலத்தினருக்குப்பயன்படுகிறதா இல்லையா என்ற கேள்வி.

உடம்பின் இயக்கத்திற்கு (வாழ்வுக்குக்) காரணமாக எது இருக்கின்றதோ, அதுவே உடம்பின் அழிவிற்கும், அதன் பின் உண்டாகிற பலன்களுக்கும் காரணமாக இருக்கிறது என்று கருதினர். இதிலிருந்து, உடம்பு வேறு, அதன் இயக்கத்திற்குக் காரணமாக இருப்பது வேறு என்று தீர்மானித்தனர். எப்படி?

† ஊ-ஈய்-இர்: ஊனை அளிக்க இருப்பது.
ஊ-ஈ-இர்: ஊனை அழிக்க இருப்பது.

ஒருவன் திடீரென்று செத்துவிட்டான். அவனுடைய உடலைத் தம்முடைய உடலுடன் ஒத்திட்டுப்பார்த்தார்கள். உறுப்புகளெல்லாம் சரியாக இருந்தபோதிலும், செத்த உடம்பில் இயக்கம் இல்லை.

இயக்கத்திற்குக் காரணமானது என்ன?

வாழ்ந்தவர்களின் கையைக் குத்திப்பார்த்தபோது, இரத்தம் வடிந்தது. செத்த உடம்பில் இரத்தம் வரவில்லை

இரத்தம்தான் இயக்கத்திற்குக் காரணம்.

இரத்தம் என்பது என்ன?

அது சிகப்பாக இருந்தது. சிகப்பு நிறம் தீயின் நிறம். அது சூடாக இருந்தது. சூடு தீயின் அம்சம். ஆகவே, இரத்தம் என்பது தீ. இதனால் வாழ்வுக்கு முக்கியமானது தீ. தீ என்றால் சிவன்.

இரத்தம் அதே சமயத்தில் ஈரமாக இருந்தது. ஈரம் நீரின் அம்சம். மேலும் அது திரவமாக இருந்தது. திரவமும் நீரின் அம்சம். மேலும் அது குடிப்பதற்கு இனிமையாக இருந்தது. நீரையே குடிக்கமுடியுமாதலால் அது, நீரின் அம்சம். இன்னும் அது ஒருவிதமான நாற்றத்தை உண்டாக்கியது. தீயில் நாற்றமிருக்காதாதலால், இரத்தக் கவுச்சிக்குக் காரணம் நீர்தான். மேலும், உடம்பின் உள் பரப்பில், வெளிச்சம் புகமுடியாத பக்கத்தில், இரத்தம் இருக்கிறது. அதனுடன் வெளிச்சம் வசிக்கவில்லை. இருட்டுதான் வசிக்கிறது. ஆகவே அது இருட்டின் அம்சம். ஆதலின், வாழ்வுக்கு முக்கியமானது நீரும் இருட்டும் தான். விஷ்ணுதான் காரணம்.

இரண்டு விதமான அபிப்பிராயங்கள் உண்டாயின.

ஊனில் இருப்பது "ஊ-இர்" (உயிர்). இந்த வார்த்தையை இரண்டு சாராரும் ஒப்புக்கொண்டனர்.

அந்த உயிர், தீயா அல்லது நீரா? ஒளியா அல்லது இருட்டா? சிவனா அல்லது விஷ்ணுவா?

இருட்டுக்கு முக்கியத்வம் கொடுத்தவர்கள், "ஊ-இர்" என்பது "ஊ-ஈர்" என்றனர். ஊனில் இருப்பது ஊனிலுள்ள ஈரம் என்று பொருள். மேலும், "ஊ-இர்" என்பது "ஊ-இடு-அல்" (உடல்) என்றனர், ஊனில் இருப்பது, ஊனில் வைக்கப்பட்டிருக்கும் இருட்டு என்று பொருள். அதுதான் "இர்-அ-தா-அம்" (இரத்தம்) என்றனர். இருக்கையையும் (வாழ்வையும்) அழகையும் தரும் தன்மையுடையது என்றனர். இதுதான் "சா-இரி இர்-அம்" (சரீரம்) என்றனர். சாவை முறியடித்து இருக்கும் தன்மை என்று பொருள்.

இதை மறுத்து நெருப்புக்கு முக்கியத்வம் கொடுத்தவர்கள், "ஊ-இர்" (உயிர்) என்பது "வி-தீ" என்றனர். ஊனில் இருப்பது விரைவுடைய தீ என்று பொருள். அது தான் "பூ-தீ" என்றனர். பூப்போன்ற மென்மையான தீ என்று பொருள். ஊனில் தீ இருக்கின்ற தன்மையை "ஊ-தீ-இர்-அம்" (உதிரம்) என்றனர். இந்தத்தீ, விண்ணிலுள்ள இந்தீஅராக்களின் உடலில் இருக்கின்ற தீயே யாகும். இந்தீஅராக்களின் உடலில் எந்தத்தீ இருக்கிறதோ, அதேதீதான் பூமியில் உள்ள ஊனிலும் இருக்கின்ற தீ என்று வற்புறுத்த, "கு-இர்-ஊ-தீ" (குருதி) என்று அதற்குப் பெயரிட்டனர். பூமியிலுள்ள ஊனின் தீ என்று பொருள். அந்தத்தீயே, "இர்-அ-தா-அம்" (இரத்தம்) என்றனர். இருக்கையையும் அழகையும் தரும் தன்மையுடையது என்று பொருள். உடம்பு என்பது

வாஸ்தவத்தில் "பூ-தீ-கா-அம்" (பூதீகம்) என்றனர். பூப்போன்ற மென்மையான தீயினால் காப்பாற்றப்படும் தன்மையுடையது என்று பொருள்.

இவ்விதம் ஒருசாரார் ஊனில் காப்பாக இருப்பது நீரே என்றும், மற்றொரு சாரார் தீயே என்றும் வாதித்த போது, இருசாராரும் மென்மேலும் அதிக ஆதாரங்களைக் காட்டிப் பேச முற்பட்டனர்.

வை-கு-இன்-தா-அம் : வை-கு-இன்-தா-அ-வா-சீ †

இடையே அந்த வாக்குவாதத்தைக் கேட்டுக் கொண்டு இருந்தவர்கள், எது உலகத்தை வாழ வைக்கிறதோ, அதுவே ஊனில் இருப்பது என்று கூறினர்.

உடனே எது உலகத்தை வாழ வைக்கிறது என்ற கேள்வி பிறந்தது.

நீர் கட்சியினர், நீரை "வை-கு-இன்-தா-அம்" (வைகுண்டம்) என்றனர். புல்பூமிக்கு இனிமையைத் தரும் தன்மையுடையது என்று பொருள்.

நெருப்புக் கட்சியினர், ஒளியை, "வை-கு-இன்-தா அ-வா-சீ" (வைகுண்டவாசீ) என்றனர். புல்பூமிக்கு இனிமையைத்தருவது ஆங்கு பாய்கின்ற ஒளியே என்று பொருள்.

நீர் கட்சியினர், தீயைக் "கை-இல்-அ-சா-அம்" (கைலாசம்)என்றனர். பக்கங்களே இல்லாதவாறு அழகைச் சாகடிக்கும் தன்மையுடையது என்று பொருள். அதாவது

---

† வை-கு-இன்-தா-அம்: புல் பூமிக்கு இனிமைதரும் தன்மையுடையது.
வை-கு-இன்-தா-அ-வா-சீ: புல் பூமிக்கு இனிமை தருவது அங்கு பாய்கின்ற ஒளி.

காட்டுத் தீ பரவுகிறபோது, அழகுடைய எல்லா பக்கங்களும் சாம்பலாகின்றன. உஷ்ணம் மிகவும் அதிகமாகிற போது, எல்லா பக்கங்களிலுமுள்ள புல் பூண்டுகளெல்லாம் கருகிவிடுகின்றன.

இதற்கு மறுப்புக்கூறிய நெருப்புக் கட்சியினர் இருட்டை, "கை-இல்-அ-யா-அம்" (கைலாயம்) என்றனர். பக்கங்களே இல்லாதவாறு அழகைச் சூழ்ந்து கட்டிப்போடும் தன்மையுடையது என்று பொருள். அதாவது, இருட்டு மிகவும் அதிகமாகி விட்டால், எந்த பக்கத்திலும் எந்த அழகும் தெரிவதில்லை.

ஆகவே, வாழ்வுக்குக் காரணம் "வை-கு-இன்-தா-அம்" என்ற தன்மையையுடைய நீரா அல்லது வைகு அன் தா அவாசீ என்ற தன்மையுடைய ஒளியா? கைஇல் அசா அம் என்ற தன்மையையுடைய தீயா அல்லது கைஇல்அயாஅம் என்ற தன்மையையுடைய இருட்டா?

இருசாரரும் ஒரு முடிவுக்கும் வராமல் வாக்கு வாதத்தை நீடித்தபோது, இடையே இருந்தவர்களில் ஒருசாரர் இதற்கு ஒரு முடிவைக் கண்டனர்

தீ-ஈர்-பு †

உடலில் இருப்பது ஈரமும் நெருப்பும் என்பதில் சந்தேகமில்லை. இரண்டும் இணைந்து இருப்பதாலே தான் உடல் உயிர் வாழ்கின்றது. இரண்டில் எது மிகுந்த போதிலும், எது குறைந்த போதிலும், உடல் அழிகிறது.

தீயும் ஈரமும் இணைந்து இருக்கும் இந்தப் பண்பைத் "தீ-ஈர்-பு" (தீர்ப்பு) என்றனர். இதையே "தீ-ஈர்-கா-அம்" (தீர்க்கம்) என்றனர். தீயும் ஈரமும் காப்பாற்றும் தன்மை

† தீ-ஈர்-பு: தீயும் ஈரமும் (இணைந்திருக்கும்) பண்பு.

என்று பொருள். இதையே, "தீ-இர்-அம்" (திரம்) என்றனர். இரண்டில் எதுவும் மிகுதியாக இல்லாதத் தன்மையை "ந-இல்-அம்" (நலம்) என்றனர்.

தீயும் ஈரமும் இணைந்து சமநிலையில் இருக்காமல் ஒன்றையொன்று அழிக்க முற்பட்டால், உடம்பு அழிகிறது. இவை இரண்டிற்குமிடையே ஏற்படுகிற போராட்டத்தில், தீயின் ஆதிக்கம் அதிகமானதனால் உண்டாகியதை "வீ-யா-தீ" என்றனர். அழிப்பதற்காகக்கட்டுகின்ற தீ என்று பொருள். இந்தத் தன்மை உடம்புக்குத் துன்பத்தை அளித்ததனால், "நோ-ஈய்" (நோய்) என்று இதைக் கூறினர். துன்புறுத்தி அழித்ததனால் "நொ-இடி" (நொடி) என்றும் கூறினர்.

இந்தப் போராட்டத்தில், நீரின் ஆதிக்கம் பெருகியதனால் உண்டாகியதை, "கா-ஈ-சா-அல்" (காய்ச்சல்) என்றனர். காப்பை அழித்து சாகடிக்கும் இருட்டு என்று பொருள். இதனால் உடம்புக்கு ஏற்பட்ட வருத்தத்தை "து-யா-ஈர்-அம்" (துயரம்) என்றனர். ஊனைக்கட்டுகின்ற ஈரத்தின் தன்மை என்று பொருள்.

இதிலிருந்து, எவன் ஒருவன் உடம்பில் தீயையும் நீரையும் சமநிலையில் வைத்து பாதுகாக்கும் சக்தியைப் பெற்றிருந்தானோ, அவனைத், "தீ-ஈர்-பா-அன்" (தீர்ப்பான்) என்றனர். தீயையும் ஈரத்தையும் பாதுகாப்பவன் என்று பொருள்.

அவனை "வை-தீ-யா-அன்" (வைத்தியன்) என்றும் கூறினர். அதாவது, புல்லில் எத்தகைய மென்மையான தீ இருக்குமோ, அத்தகையத் தீயை உடலில் இருக்கும்படி கட்டுகிறவன் என்று பொருள். புல்லில் ஈரம்தான் தெரியும்படி இருக்கும். தீ தெரியும்படி இருக்காது. இரண்டும் இரண்டற கலந்து இருக்கும். இதைப்போல உடம்பில் தீயை இருக்கும்படி செய்கிறவன் வைத்தியன். அதாவது வியாதியை வைதீயாக ஆக்குபவன்.

தீயும் ஈரமும் சேர்ந்து இருப்பதனல் தருகின்ற தன்மையைப் பரிசுத்தமானத் தன்மையாகக் கருதினர். இதுவே, "தீ-ஈர்-தா-அம்"(தீர்த்தம்). இது பனி நீருமல்ல; கொதிநீருமல்ல. குடிப்பதற்கு ஏற்ற நீர்.

இதிலிருந்து தீ ஈரமாகவும் இருக்கும் என்று முடிவு செய்தனர். தீ ஈரமாக வரும் தன்மையைத்தான், "தீ-ஈர் அ-வா-அம்" (திரவம்) என்றனர். தீ ஈரத்தின் அழகோடு வந்து காப்பாற்றும் தன்மை, "தீ-ஈர்-அ-வா-கா-அம்" (திராவகம்)

தீயையும் ஈரத்தையும் ஒன்ருகச் சேர்த்துத் தரு கின்ற சக்தியைத், "தீ-ஈர்-தா-அன்" (தீர்த்தன்) என்றனர்.

தீ மிகுந்தபோது ஈரத்தைக் கொடுத்தும், ஈரம் மிகுந்தபோது தீயைக்கொடுத்தும் இனிமையைக் காப்பாற் றியவர்கள் "தீ-ஈர்.தா-இன்-கா-அர்" (தீர்த்தங்கர்)

தீ மிகுந்தபோது ஈரத்தைப் பயன்படுத்தியும், ஈரம் மிகுந்தபோது தீயைப் பயன்படுத்தியும் குலத்தினரைக் காப்பாற்றி, பகைகளையும் கேடுகளையும் முறியடிக்கக்கூடிய சிறப்புடையவர்களைத், "தீ-ஈர்-கா-தா-இரி-சீ" (தீர்க்க தரிசி) என்றனர்.

தீயும் ஈரமும் இணைத்திருக்கும் தன்மையில் சந்தே கம் கொள்வதைத் "தீ-ஈர்-அம்-ஐ" (திராமை) என்றனர். திராமை, நீரினருக்கும் தீயினருக்குமிடையே வாக்கு வாதத்தை வளர்த்துக்கொண்டே போயிற்று.

அவர்கள் உடலிலிருந்து ஊயிர் நீங்கியபிறகு, உடலி லிருந்த ஈரம் என்ன ஆயிற்று, தீ என்ற ஆயிற்று என்ப தைப் பற்றியும் வாக்குவாதத்தைத் தொடர்ந்தனர்.

மோ-ந-ஊ-இர்-ஊ-அ-வா-அம் †

இந்த வாக்குவாதங்களையும் கவனிப்போம். ஒருவன் செத்தவுடன் அவன் உடலிலுள்ள தீ என்ன வாகிறது?

நெருப்புக்கட்சியினர், இது "ஆ-வி." என்றனர். ஆங்கே விரைந்து விடுகிறது என்று பொருள். ஆங்கே என்றபோது சுற்றுப்புறத்தையும் விண்ணையும் சுட்டிக் காட்டினர். ஊ-இ-ஆர்-வி என்றால் ஊனில் இருப்பது ஆங்கே விரைந்து விடுகிறது என்று பொருள்.

உடனே உடல் என்ன ஆகிறது? அது "பே-ஈய்!" [பேய்]—அச்சத்தை ஈய்கின்றது என்று பொருள்.

இது எதனால்? அதிலுள்ள ஈரத்தினால். நேரம் ஆக ஆக, அதிலுள்ள ஈரத்தினால் "பி-ந-அம்" 'மோ-ந-அம்' முதலிய தன்மைகள் உண்டாகின்றன. இத்தன்மை அங்குள்ளவர்களின் மூக்கில் புகுந்து நோய் நொடிகளை உண்டாக்குகின்றது. அதில் புழுக்களும் நெளிய ஆரம்பிக்கின்றன.

குளிர்ச்சி மிகமிக, ஊன் அழுக அழுக, பயங்கர உருவத்தையும், கொடூர நாற்றத்தையும் உடல் கொண்டது. இறைச்சியிலுள்ள ஈரம் மிகுவதனால் தரும் தன்மை [து-இர்-ந-ஈர்-தா-அம்: துர்நாற்றம்] அதிகமாயிற்று. அழிவை மிகுக்கும் தன்மை [ஈ-ந-அம்: ஈனம்] அதிகமாயிற்று.

ஒரு பக்கம் அழுகிய உடலின் பயங்கர தோற்றம் அச்சத்தை அளித்தது. மறுபக்கம் துர்நாற்றம் எல்லா திசைகளிலும் பரவியது. கடுமையான இருட்டில் உண்

† மோ-ந-ஊ-இர்-ஊ-வா-அம்: மோப்பத்தை மிகுக்கும் ஊனில் இருந்து புசிக்க வரும் தன்மையுடையது.

டாகக்கூடிய பயம் ஒரு பக்கம். கொடூரமான நீண்டகால சகதியில் உண்டாகக்கூடிய நாற்றம் மறுபக்கம். இரண்டும் நீரின் "வைசாநவா அம்" என்ற தன்மையினால் உண்டாயின. இருட்டுக்கு மால் என்று பெயர். பேய் உருவை உண்டாக்கிய மால், "பே-உரு-மால்" [பெருமாள்] இது மோப்பத்தை மிகுக்கும் உருவத்தில்வந்த தன்மை "மோ-ந உரு-வா-அம்" [மோன உருவம்]

பேய் உருவையும் மோனவுருவையும் பார்த்து பயந்து அருகே இருந்தவர்கள் பிணத்தைவிட்டு ஓட்டம் பிடித்தனர். அவர்கள் கூடவே "மோ-ந-உரு-வா-அம்" வந்து கொண்டு இருந்தது. அதாவது, தூர்நாற்றம் அவர்களைத் தொடர்ந்தது. நின்று திரும்பிபார்த்தபோது, குப்பென்று முகத்தில் அடித்தது. மூக்கில் நுழைந்தது. சுவாசப்பையை பாதித்தது. பயம் இருதயத்தை வேகமாக முடுக்கியது. அவர்கள் பேவுருமாலின் மோனவுருவைச் சகிக்க முடியாமல் "ஆ-வீ-ஆ-வி." என்று அலறினர், "ஆங்கே அழிந்துகிடப்பது ஆங்கே யிருந்து விரைகிறது! ஆ வென்று விரைகிறது" என்று பொருள். "மோ-ந-ஊ-இர் ஆ-வி!" என்றனர். மோப்பத்தை மிகுக்கும் ஊனில் இருப்பது ஆங்கே விரைகிறது! "மோ-ந-ஊ-இர்-ஆ-வீ ஊ-ஈர்." என்றனர். மோப்பத்தை மிகுக்கும் ஊனில் இருப்பது, ஆங்கே அழிந்து கிடக்கும் ஊனிலுள்ள ஈரம் என்று பெயர்.

வை-கு-இன்-தா-பா-தா-வீ †

"ஆ-வீ-ஆ-வி" என்பது தூர்நாற்றம். அது செத்தவனின் உடலில் இருந்து கிளம்புகிறது. இதிலிருந்து செத்தவன் "மோ-ந-உரு" கொண்டதாகக் கருதினர்.

† வை-கு-இன்-தா-பா-தா-வி: புல் பூமிக்கு இனிமை தரும் பரப்புக்குத் தாவி விரைதல்.

அந்த வடிவத்தை உணர்த்தியது மோப்பம்; மூக்கு. அதை கண்ணுக்குப் பார்க்க முடியவில்லை. கடுமையான இருட்டில் எதுவும் கண்ணுக்குத் தெரியாது. ஆனால் மோப்பம் தெரியும். ஆகவே, செத்தவனின் ஊனில் இருந்த ஈரம், இருட்டுடன் ஐக்கியமாகி, இருட்டின் தன்மைகளுடன் அவ்விடத்தில் சஞ்சரிக்கிறது என்று தீர்மானித்தனர்.

அழிந்தும் இயங்குகிற மிருகத்தின் தன்மையை அவனுக்கு இருட்டு உண்டாக்குகிறது. இந்தத் தன்மை தான் "வீ-ஓ-மா-அம்" [வியோமம்] இதுவே, செத்த வன் இருட்டினால் காப்பாற்றப்படும் தன்மை; "ஆ-கா-சா அம்" [ஆகாசம்]—ஆங்கே காப்பாற்றப்படும் செத்த வனின் தன்மை.

இதுதான் ஊனில் இருக்கும் ஈரம் வைகுந்தப் பதவியை அடைதல். 'வை-கு-இன்-தா-பா-தா-வி" என்றால், புல் பூமிக்கு இனிமைதரும் பரப்புக்கு தாவி விரைதல்—புல் பூமிக்கு இனிமைதரும் பரப்பு, நீரின் பரப்பு; இருட்டின் பரப்பு

இருட்டுடன் ஐக்கியமாகிற ஊயிர், மோப்பத்தினால் வாழ்கின்றது. மோப்பத்தினால் தன் இருக்கையைக் குலத்தினருக்கு உணர்த்தி, குலத்தினரைக் காக்கவோ அல்லது அழிக்கவோ முயற்சித்தது என்று கருதினர். சில சமயம் அவர்களுக்கு திடீரென்று ஒரு இடத்தில் ஏதாவது அபாயம் நேரிட்டபோது, செத்தவர்களின் ஆவியை அழைத்தனர். அப்போது அங்கு வரும் வாடையைக் கவனித்தனர். அந்த வாடையின் வருகையினால் நன்மை ஏற்பட்டால், அதை"மோ-கா-ந-உ-ரு-வா-அம்" (மோகன உருவம்) என்றனர். மோப்பத்தினால் காப்பை மிகுக்கும் உருவத்தில் வரும் தன்மை என்று பொருள். அந்த வாடையின் வருகையினால் தீங்கு நேர்ந்தால் அதை "மோ-சா-உ-ரு-வா-அம்" [மோச உருவம்] என்றனர். மோப்பத்தினால் சாகடிக்கும் உருவத்தில் வரும் தன்மை என்று பொருள்.

கேடாக முடியக்கூடிய வாடையை "பே-ஈய்" (பேய்) என்றனர். அச்சத்தை ஈய்வது என்று பொருள். "மூ-தேவி" என்றனர். மூக்கைக் கைப்பற்றி அழிப்பது என்று பொருள் 'சை-தா-அன்" [சைத்தான்] என்றனர். இகழ்ச்சியுடன் கேடு செய்பவன், இகழ்ச்சியுடன் தாவுகிறவன், இகழ்ந்து பகைப்பவன் என்று பெருள். "சா-தா-அன்" (சாத்தான்) என்றார்கள். சாகடிக்க தாவுகிறவன், சாகடிக்கப் பகைப்பவன், சாவைத் தருபவன் என்று பொருள்.

ஆகவே, ஊனிலுள்ள ஈரமே, ஒருவனைச் செத்த பிறகும் நல்லவனாகவோ அல்லது கெட்டவனாகவோ வாழ வைக்கிறது. ஈரத்தின் கருணை இருந்தால், ஒருவன் செத்தப் பிறகும், தன் குலத்திற்குப் பயனுடையவனாக இருக்கமுடியும் என்று வாதித்தனர்.

சா-இன்-கு †

இதிலிருந்து, செத்தவனுடைய உடலை, ஈரமும் குளிர்ச்சியும் இருட்டும் மிகுந்து இருக்கிற இடத்தில் சேர்ப்பிக்க வேண்டும் என்றும், அப்போதுதான் ஊனிலுள்ள ஈரம் (ஊஈர்) சீக்கிரமாக இருட்டுடனும் நீருடனும் ஐக்கியமாகி, துர்நாற்றமடையாது, நல்ல வாசனையுடைய மோகன உருவமடைந்து குலத்தினருக்கு உதவக் கூடியதாகும் என்றும் வாதித்தனர்.

இதற்கு ஏற்ப பிணத்தை ஈரமும் இருட்டும் மிகமிக அதிகமாக இருக்கிற பூமியின் உள் பரப்பில் (1) புதைக்க வேண்டும் (2) அல்லது ஆறு, கடல் ஆழத்தில் மூழ்கடிக்க வேண்டும் என்று கூறினர்.

† சா-இன்-கு: சாவிலே இனிய பூமி; (சாவிலே இனிமை தரும் பூமியில் கிடைப்பது)

அப்படி புதைக்கப்பட்ட அல்லது கடலில் மூழ்கடிக்கப்பட்ட உடலில் இருந்த ஈரம், அவ்விடங்களில் நிரந்தரமாக உள்ள இருட்டுடனும் நீருடனும் ஐக்கியமாகி "வை-கு-இன்-தா-பா-தா-வி" அடைக்கிறதாகக் கருதினர்.

அப்படி புதைக்கப்பட்ட அல்லது நீரில் மூழ்கடிக்கப்பட்ட தன்மையை, "மூ-இழு-கு-போ-இடு" (முழுக்குப் போடு) என்று குறிப்பிட்டனர். மூத்தவர்களை (அல்லது மூச்சை) இழுக்கும் பூமிக்குக் கொண்டுபோய் வைத்தல் என்று பொருள். மூச்சை அல்லது மூப்படைந்தவர்களை இழுக்கின்ற பூமிக்கு "மூ-இழு-கு" (முழுக்கு) என்று பெயர்

அந்த நீர்ப்பரப்பை அல்லது இருட்டுப் பரப்பை, "சா-இன்-கு" (சங்கு) என்றனர். சாவில் இனிமைதரும் பூமி என்று பொருள். அந்த பூமிக்கு அடையாளமாகக் கடலின் ஆழத்தில் கிடந்த சில ஜீவன்களின் மேல் ஓடுகளைக் கொண்டனர். அவற்றையும் 'சங்கு' என்று குறிப்பிட்டனர்.

அவற்றை ஊதியபோது, "கோ" என்ற ஓசை எழுந்தது. அந்த ஓசை கடுமையான இருட்டில் இனிமையைத் தந்தது. எப்படி? இருட்டில் ஓசைகளையும் மோப்பத்தையும் கொண்டே வழி தெரிந்து நடக்க வேண்டியிருந்தது. அப்போது முன்னே செல்கிறவன் வெண்சங்கைக் கையில் பிடித்து ஊதியபோது, பின்னே வந்தவர்களுக்குச் சுலபமாக வழி தெரிந்தது. சங்கின் வெண்மை நிறம், முன் சென்றவனை இருட்டிலும் தெளிவாக எடுத்துக்காட்டிற்று. அதோடு, சங்கொலியைக்கேட்டு, வழியிலிருந்த மற்ற மிருகங்களெல்லாம் ஓட்டம் பிடித்தன. இதனால் அபாயம் குறைந்தது. கடுமையான இருட்டில் வழியைக்கண்டு பிடித்துச் செல்வதற்குச் சுலபமாக இருக்கவேண்டும் என்பதற்காகவே, இருட்டும் நீரும் தம்முடைய ஆழப் பரப்பில் சங்குகளை உற்பத்திசெய்திருப்பதாகவும் எண்ணி

னர். 'கோ' என்ற ஒலியை எழுப்புவதும் சங்கின் உள் பரப்பில் இருக்கும் இருட்டே என்றும் கருதினர். சாவில் இனிமைதரும் பூமியில் கிடைக்கும் "சா-இன்-கு" (சங்கு) வாஸ்தவத்தில் "மா-இன்--ஈய்" (மணி) யாக இருந்தது. மிருகங்களுக்கு இனிமையை ஈய்வது என்றுபொருள். அது கோ என்ற ஒலியை இனிமையானதாகத்தரும் தன்மை தான் "கோ-வி-இன்-தா-அம்" என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

இதிலிருந்து அவர்களுக்குச் சங்கின் ஓசை, இருட்டையும் வைகுஇன்தாஅம்பரப்பையும் ஞாபகமூட்டியது. அதுவே, இருட்டு இனிமையைத் தரும் தன்மையை எடுத்துக்காட்டியது.

இதிலிருந்து, இந்த வகுப்பார், கடல் ஓரங்களில் வசித்தபோது பிணத்தைக் கடலில் மூழ்கடித்தனர். கடலோ பெரிய நதியோ இல்லாத பிரதேசங்களில், ஆழமாகக் குழி வெட்டி புதைத்தார்கள்.

சீ-வா-பா-தா-வி †

இதே சமயம், இந்த வாதங்கள் முழுவதையும், நெருப்புக்கு முக்கியத்வம் கொடுத்தவர்கள் மறுத்தார்கள். அதேசமயம், ஆவிகளை ஈரமாக சஞ்சரிக்கும் ஆவிகள் என்றும், தீயாக சஞ்சரிக்கும் ஆவிகள் என்றும் இரண்டு விதமாகப் பிரித்தனர். ஈரத்தினால் சஞ்சரிப்பவற்றைப் "பேய்" என்றும், தீயினால் சஞ்சரிப்பவற்றைச் "சேய்" என்று கூறினர்.

எப்படி?

அந்தக் காலத்தில் தீ இன்னும் காட்டுத்தீயாக இருந்ததேயொழிய, இன்னும் கைதீயாகி விடவில்லை. இதனால் அவர்கள் "பா-இரி-தீ"யை ஆதாரமாகக்கொண்டு பேசினர்,

† சீ-வா-பா-தா-வி:ஒளி வருகின்ற பரப்புக்குத் தாவி விரைதல்.

ஊனில் இருப்பது "ஊ-இர்", அது தீ. அது உடலை விட்டு ஆங்கே விரைந்து விடுகிறது (ஆ-வி!) என்று விண்ணைச் சுட்டிக்காட்டினர்.

அப்போது உயிர் போகிறது.

தீ நீங்கியவுடன், உடலை ஈரம் பூரணமாகக் கைக் கொள்கிறது. அது அந்த உடலை துர்நாற்றமுடைய ஆவி யாக மாற்றிவிடுகிறது. அந்த ஆவி பேயாக சஞ்சரித்துக் குலத்தினருக்குத் தீங்கு செய்கிறது. ஆகவே, ஈரத்தினிட மும் இருட்டிடமும் உடலைச் சமர்ப்பிப்பதனால், செத்த வன் குலப்பகைவனாக ஆவான்.

இதற்கு மாறாக, அந்த உடலிலிருந்து "பே-உரு-மால்" ஆகிய ஈரத்தையும் இருட்டையும் விரட்ட வேண் டும். அதை ஒளியுடையதாகவும், துர்நாற்றமற்றதாகவும் ஆக்கவேண்டும். அதன் தன்மையை ஒளியின் தன்மையாக மாற்றவேண்டும் என்று வாதித்தனர்,

இதற்கு ஏற்ப, உடலைத் திறந்த வெளியில், சூர்ய வெப்பத்தில் போட்டுவிட்டு வந்தனர். வெப்பத்தில் உடல் உலர்ந்த சமயத்திலேயே, அழுகிய ஊனைப் பெரியப்பெரிய கழுகுகளும் கருடன்களும் போட்டியிட்டுப் புசித்தன. அக்காலத்தில் மிகப்பெரிய பறவைகள் நிறைய இருந்த தனால், ஒரே நாளில் ஊன் முழுவதும் மறைந்தது. ஊனு டன் ஈரமும் மறைந்தது. ஈரத்துடன் துர்நாற்றமும் மறைந்தது. துர்நாற்றத்துடன் அபாயமும் மறைந்தது. சில நாட்கள் கழித்துச் சென்று பார்த்தபோது, அங்கு ஒளியின் நிறத்தையுடைய எலும்புக்கூடு மட்டுமே கிடந் தது. அது பயங்கரமாக இருந்தபோதிலும் தீங்கு செய்ய வில்லை. இலேசானதாக இருந்தபோதிலும், வலுவான தாக இருந்தது. அதே சமயம் அந்தப் பிரதேசத்தில் காட்டுத்தீ எரிவதனால் எப்படிப் பாம்புகள் ஒழிந்துவிடுமோ அதே போல் பாம்புகள் ஒழிந்து போயிருந்தன. அந்த

எலும்புகள் நீரில் அமுங்கவில்லை; சடுதியில் உலர்ந்தன. அது கையில் கருவியாகப் பயன்பட்டது; அதே சமயம் செத்தவனின் ஞாபகத்தை அடிக்கடி உண்டாக்கி வந்தது. அது தமக்கும் சாவு வரும் என்பதை உணர்த்தியது. அதே சமயம், செத்தவனைப்போல் தானும் தன் குலத்திற்கு பயன்படவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது.

ஊனிலிருந்து ஆங்கே விரைந்த தீயைப்பற்றி என்ன கூறினர்?

அது, "சீ-வா-பா-தா-வி." என்றனர். ஒளி வரும் பரப்புக்குத் தாவி விரைந்தது என்று பொருள். ஒளி வரும் பரப்புக்குத்தாவும் தன்மையைச், "சீ-வா-பா-தா-அம்" (சிவபதம்) என்றனர்.

ஒளி வரும் பரப்பு என்றால் எது?

அதுதான் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலியவை இருக்கிற பரப்பு. அதுதான் எரிமலை எரிகின்ற பரப்பு. அதுதான் காட்டுத்தீ பரவுகின்ற பரப்பு. அதுதான் "கை-இல்—அ-சா-அம்" என்ற தன்மையையுடைய பரப்பு.

ஒளி வரும் பரப்புக்கு ஊனிலிருந்த தீ தாவி விட்டது என்றால், சூரிய வெளிச்சத்துடன் ஐக்கியமாகி விட்டது என்று பொருள்.

சூரிய வெளிச்சத்துடன் ஊனிலிருந்த தீ ஐக்கியமாகி விட்டால், உடனே ஊனிலுள்ள ஈரத்தை அதே சூரிய வெளிச்சத்தின் தீயிடம் கொடுத்து புசிக்கச் செய்துவிட வேண்டும். இல்லையேல், ஈரம் மிகப்பொல்லாத ஆவியாக அவனை மாற்றிவிடும் என்றனர்.

சூரிய வெப்பத்தில் போடப்படுகிற ஊன், அந்த தீயினால் கொல்லப்பட்டு அவனைப் பரிசுத்தமாக்கி விடுகிறது. அவனைத் தன்னுடன் ஐக்கியமாக்கிக்கொள்கிறது என்றனர்.

சீ-வா-பு-தீ-இரி-அர் †

சூரிய ஒளியில் அவனுடைய தீ ஐக்கியமானவுடன், அவனும் நாள் விடாமல் அந்த ஒளியில் வடிந்துகொண்டிருக்கிறான். அவன் ஆவி, ஒளியின் பகுதியாக இருக்கிறது என்றனர்.

அவ்விதம் ஒளியுடன் ஐக்கியமாகி, ஒளியின் பகுதியாக வடிந்துகொண்டு இருப்பவர்கள் என்று யார் யாரை அவர்கள் கருதினார்களோ, அவர்களையெல்லாம் "சி-வா-பு-தி-இர்-அர்" (சிவப்புத்திரர்) என்றனர். ஒளியாக வரும் பண்பினால் தீயாக இருக்கிறவர்கள் என்று பொருள். அவர்களை "சி-வா-கா-ந-அம்" (சிவகணம்) என்றனர். ஒளியாக வந்து காப்பை மிகுக்கும் தன்மையுடையவர்கள் என்று பொருள். மேலும் அவர்களைச் "சே-ஈய்" (சேய்) என்றனர். சிகப்பு ஒளியை ஈய்பவர்கள் என்று பொருள். இன்னும் இவர்களைப் "பே-ஈ-கா-ந-அம்" (பேயிகணம்) என்றனர். அச்சத்தை அழித்துக் காப்பை மிகுக்கும் தன்மையுடையவர்கள் என்று பொருள். இவர்களை இன்னும் "ந-இன்-தி-கா-ந-அம்" என்றும் கூறினர். மிகுதியாக இனிமையுள்ள தீயாகக் காப்பை மிகுக்கும் தன்மையுடையவர்கள் என்று பொருள். மேலும், "பூ-தா-கா-ந-அம்" என்று சொன்னார்கள். அழகையும் வலிமையையும், காப்பையும் மிகுக்கும் குணமுடையவர்கள் என்று பொருள்.

---

† சீ-வா-பு-தீ-இரி-அர்: ஒளியாக வரும் பண்பினால் தீயாக வடிகிறவர்கள்.

இவ்விதம் சிவபதவி அடைந்த ஆவிகளுக்கு "வண்நகா அம்" அளித்தும் வந்தனர். தமக்கு இன்னல்கள் நேர்ந்தபோது, "மூஇருகா! மூ-இன்-ஈய்-வா! காஇளி...!" என்று அவரவர் பெயரைக் கூப்பிட்டு அழைத்து தமக்கு உதவும்படி கூறினர்.

மா-இன்-தீ-இரி-கா-அம் †

இவர்கள் இருட்டினாலும் நீரினாலும் துர்நாற்றமாக மாற்றப்பட்டவர்களுடைய ஆவிகளை எதிர்க்கத் தம் சிவ புத்திரர்களைக் கூப்பிட்டார்கள். எங்கேயாவது ஒரு இடத்தில், துர்நாற்றத்தினாலும் இருட்டினாலும் பயந்து நடுங்கிய போது, உடனே அந்தக் கெட்ட ஆவிகளை விரட்ட தம் நல்ல ஆவிகளை அழைத்தனர்.

எவ்விதம்?

எங்கேயாவது போகிறபோது இருட்டைப் பார்த்து பயந்தபோது, உடனே அந்த இருட்டை பயமுறுத்தத் தொடங்கினர். "சீ! சீ" என்றார்கள் "ஒளி! ஒளி." என்று பொருள். ஒளி என்ற பெயரைக் கேட்டவுடன் இருட்டு ஓடிவிடும் என்று நினைத்தனர். "சீ! போ!" என்றார்கள். "ஒளி! ஓடிவிடு!" என்று பொருள். அப்படியும் இருட்டு விலகாதபோது, "ந-சீ! ந-சீ!" என்றார்கள். "மிகுகிறது ஒளி!" என்று பொருள். "மா! சீ." என்றார்கள் "மாறிவிடு! ஒளி" என்று பொருள். "ந-மா-சீ-வா-யா!" என்றார்கள். "மிகுகிறது. மாறிவிடு! ஒளி வருகிறது! கட்டிவிடும்." என்று பொருள். "ஓ-அம்!ந!மா!சி! வா-யா!" என்றார்கள். "ஓடுகின்ற தன்மையினால் மிகுகிறது! மாறிவிடு! ஒளி வருகிறது! கட்டிவிடும்!" என்று பொருள். "சீ! -ஓ! சீ-போ! சீ-வா!" என்றார்கள். ஒளி! ஓடிவிடு. ஒளி, போய்விடு! ஒளி! வருகிறது!" இதேபோல் "தீ..தீ." என்

† மா-இன்-தீ-இரி-கா-அம்: மிருகங்களுக்கு இனிய தீயை வடித்துக் காக்கும் தன்மை.

றார்கள். "தீ-யா!" என்றார்கள். தீ கட்டிவிடும் என்று பொருள். "தீ-தா!" என்றார்கள். தீதாவும் என்று பொருள் "தீ-ஈ!" என்றார்கள். தீ அழித்துவிடும் என்று பொருள்.

அப்படியும் இருட்டு விலகாதபோது, தீயையும் ஒளியையும் கூப்பிட்டு இருட்டைவிரட்டும்படி மன்றாடினார்கள். எப்படி கூப்பிட்டார்கள்? "ஓ-அம்." என்றார்கள். இயங்குகிற அழகே என்று பொருள். "இரி-அம்" (ரீம்) என்றார்கள். வடிகின்ற அழகே என்று பொருள். "சி-அம்!" (சிம்) என்றார்கள். ஒளியான அழகே என்று பொருள். 'தீ-அம்,' (தீம்) என்றார்கள். தீயாகிய அழகே என்று பொருள். "யா-அம்!" (யாம்) என்றார்கள். கட்டுன்ற அழகே என்று பொருள். "தா-அம்!" (தாம்) என்றார்கள். தாவுகின்ற அழகே என்று பொருள். "பா-அம்." (பாம்) என்றார்கள். பாதுகாக்கும் அழகே என்று பொருள், "கா-அம்!" (காம்) என்றனர். காக்கின்ற அழகே என்று பொருள்.

ஓம்! ரீம்! சிம்! திம்! யாம்! தாம் பாம்! காம்! சாம்! வாம்! ஈம்! வீம்!......இவ்விதம் தீயைப் பலவாறாகக் கூப்பிட்டு அந்த இருட்டை விரட்டும்படி விண்ணப்பித்துக் கொண்டனர்.

இப்படி தீயை அழைத்தத் தன்மையை "மா-இன்-தீ இரி-அம்" (மாந்திரியம்) என்றனர். மிருகங்களுக்கு இனிமையான தீயை வடிக்கும் தன்மை என்று பொருள். "மா-இன்-தி-இரி-கா-அம்" (மாந்திரிகம்) என்றால், மிருகங்களுக்கு இனிமையான தீயை வடித்துக்காப்பாற்றும் தன்மை என்று பொருள்.

இருட்டைக்கண்டு பயந்து ஓடி வந்தவனிடமிருந்து, அந்த ஆவியை விரட்டுவதற்காகவும் இவ்விதம் வார்த்தைகளை உச்சரித்து ஆர்ப்பாட்டம் செய்து வந்தனர்.

இருட்டுக்கு முக்கியத்வம் கொடுத்தவர்கள் நீரின் ஆழத்தில் கிடந்த சங்குகளை அடையாளமாகக் கொண்டதுபோல், நெருப்புக்கு முக்கியத்வம் கொடுத்த இக்குலத்தினர், நெருப்புக்கும் ஒளிக்கும் அடையாளமாக கறுப்புப் பூனைகளைக் கொண்டனர். தீயின் வலிமையை உணர்த்துவதற்கு அடையாளமாக எலும்புகளைக் கொண்டனர்.

ஞ்அ-மா-இன்-ந-அம் †

பூனைகள் கறுப்பாக இருந்தாலும், வெள்ளையாக இருந்தாலும், இருட்டில் பார்த்துச் செல்லக்கூடியவை. இருட்டில் அவற்றின் கண்கள் ஒளியைப்போல் பிரகாசிக்கும். நன்றாக பழக்கப்பட்ட பூனையின் கழுத்தில் கயிற்றை கட்டி இருட்டில் விட்டால், அதன் "ஞ்அஞ்அ" என்ற ஒலியையும் அதைப் பிணித்திருக்கிற கயிற்றையும் தொடர்ந்து இருட்டில் நமக்கு நடந்து செல்ல முடியும். தற்காலத்தில் 'டார்ச்' விளக்கு செய்கிற ஒருவிதமான உதவியை, அக்காலத்தில் பழக்கப்பட்ட பூனைகள் செய்தன என்று கூறலாம்.

வெள்ளைப் பூனையின் கண்களைவிட கறுப்புப் பூனையின் கண்கள்தான் இரவில் விசேஷமானவை. ஏனெனில் வெள்ளைப்பூனையின் வெண்மை நிறம் அதன் கண் ஒளியை எவ்வளவுக்கு எடுத்துக்காட்டுகிறதோ, அதைவிட கறுப்பு பூனையின் கறுப்பு நிறம் இரவில் அதன் கண் ஒளியைப் பன்மடங்கு அதிகமாக எடுத்துக்காட்டும். வெள்ளைப் பூனையின் உடலும் சிறிதளவு இரவில் தெரியும். கறுப்புப் பூனையின் உடல் சிறிதும் தெரியாமல், ஒளிமட்டுமே தெரியும்.

---

† ஞ்-அமா-இன்-ந-அம்: ஞா என்று ஓசையுண்டாக்கும் மிருகம் இனிமையை மிகுக்கும் தன்மை. ஞ்அஇன்அம்: ஞமாவின் இனிய தன்மை.

பூனையின் கண்ணிலிருந்த அந்த ஒளி, சூரியனிடமிருந்தது. ஆகவே, “ஞ்அ-இர்” (ஞாயிறு) என்று சூரியனைக் குறிப்பிட்டனர். ‘ஞ்அ’ என்ற ஒலியை எழுப்பும் மிருகத்தின் கண்ணில் இருப்பது என்று பொருள். “ஞ்அ-மா” (ஞமா) என்றால் பூனை. பூப்போன்றதாகவும் இனிமையானதாகவும், அழகானதாகவும் இருப்பது “பூ-இன்-ஐ” (பூனை). “ஞ்அ-மா-இல்-ஈ” (ஞமலி) என்றால் ஞமாவை இல்லாமல் அழிப்பது. அது தான் நாய்.

ஞமா இனிமையுடைய தன்மையதாக இருப்பதற்கு “ஞ்அ-இன்-அம்” (ஞானம்) என்றனர். இந்தத் தன்மை அதற்கு எவ்விதம் வந்தது? கண்ணில் ஒளியிருப்பதனால் வந்தது. ஆகவே, இருட்டில் வழிகாட்டும்படியாகக் கண்ணில் ஒளியைப் பெற்றிருப்பதை யெல்லாம் “ஞ்அ-இன்-அம்” (ஞானம்) என்று குறிப்பிட்டனர்.

ஒரு பூனையை நன்றாகப் பழக்கி, எவன் ஒருவன் அதைத் திறமையாக இரவில் பயன்படுத்தி வழிகாட்டி வந்தானோ, அவனை “ஞ்அ-இன்-ஈய்” (ஞானி) என்றனர். பூனைமூலம் இனிமையை ஈய்பவன் என்று பொருள்.

இதிலிருந்து, “மா-இன்-தீ-இரி-கா-அம்” செய்ய கறுப்புப் பூனைகளை உபயோகப்படுத்தும் பழக்கத்தையும் மேற்கொண்டனர். ஒருவன் இருட்டைக் கண்டு பயந்து ஓடிவந்தபோது, அவன் பேரில் தாவிய பகைக்குல ஆவியை விரட்ட, அவன் எதிரே கறுப்புப் பூனையை உட்கார வைத்தனர். அதன் கண்ணிலிருக்கிற தீயும் ஒளியும் அந்த ஆவியின் பேரில் தாவி, அந்த ஆவியை ஒழிக்கப் போவதாக உரக்க உச்சரித்து அந்த ஆவியை பயமுறுத்தினர். பூனையின் கண்களையே பார்த்துக்கொண்டு இருக்கும்படி அவனுக்குக் கட்டளை இட்டனர். அப்போது “மா-இன்-தீ-இரி! மா-இன்-தீ-இரி.” என்றார்கள். “மிருகங்களுக்கு இனிமையான தீ வடிகின்றது, வடிகின்றது

என்று பொருள். அது அந்த ஆவியின் பேரில் வடிய வடிய அந்த ஆவி விலகி ஓடிவிடுவதாகக் கருதினர். பூனையின் கண்ணிலிருந்த ஒளியைச் “சீ! ஓம்! சீ! சிவா! நசீ மசீ! வாயா! ஓம்! ரீம்! சிம்! தீம்!......!” என்று பலவாறாக உரக்கக் கூப்பிட்டு, அவன் பேரில் தாவி, ஆவியை முறியடிக்கும்படி விண்ணப்பித்தனர். இப்படி பூனையை எதிரே வைத்து ஆவியை விரட்ட உச்சரித்தச் சொற்களை, “ஞா—இன்-அம்-மா—இன்-தீ-இர்-அம்” (ஞானமந்திரம்) என்றனர். பூனையின் இனிய தன்மை மிருகத்திற்கு இனிய தீயாக இருக்கும் தன்மை என்று பொருள். இந்தச் சொற்களை உச்சரித்துப் பூனையின் ஒளியை ஆவியின் பேரில்வடித்தவனை, “மா-இன்-தீ-இரி-கா-அன்” (மாந்திரிகன்) என்றனர். மிருகங்களுக்கு இனிமையான தீயை வடித்துக் காப்பாற்றுகிறவன் என்று பொருள்.

இதிலிருந்து பூனையின் கண்ணிலுள்ள ஒளியையும், சூரிய சந்திரர்களிடமுள்ள ஒளியையும் மனிதர்களுக்குப் பயன்தரக்கூடிய முறையில் பூமியில் வடிக்க அக்காலத்திலிருந்தவர்கள் எவ்வளவு தூரம் ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்த ஆர்வம்தான் அவர்களை மென்மேலும் தீயை வெல்லுவதற்கு தூண்டிக்கொண்டு இருந்தது. இறுதியில் அவர்கள் யதார்த்தத்தில் தீயை வென்ற விவரத்தை வேறு இடத்தில் நாம் தெளிவாகப் பார்க்கலாம்.

அதற்கிடையில் இங்கு, தீயையும் ஒளியையும் பூமியில் வடிக்க முயன்றவர்களுக்கு அல்லது வடிப்பதில் வெற்றிப் பெற்றவர்களுக்கு ஏற்பட்ட சில பெயர்களைக் கவனிக்கலாம்.

மிருகங்களுக்கு இனிமையானத் தீயை வடிப்பவன், “மா-இன்-தீ-இரி” (மந்திரி) என்று கூறப்பட்டான். வெளிச்சத்தை வடிப்பவன் “இரி-சி” (ரிசி) என்று சொல்

லப்பட்டான். ஒளியை வடித்துக் கட்டுகிறவன், "சீ-இரி யா-அன்" (சீரியன்) என்று குறிப்பிடப்பட்டான். இதைப் போலவே, ஒளியையும் தீயையும் வடிக்கும் வினைக்குப் பல பெயர்கள் உண்டாயின. தீயை வடித்தல் "தீ-இரி"(தீரி) இனியத் தீயைக் கட்டுதல் "இன்-தீ-யா" (இந்தியா) மேலான அல்லது மேலேயுள்ள தீயை வடித்தல் "மீ-சீ-இரி" (மிசிரி) ஒளியை வடித்துக்கட்டுதல் "சீ-இரி-யா" (சிரியா) அழகிய ஒளியை வடித்துக் கட்டுதல் "அ-சீ-இரி-யா" (அசிரியா) பாதுகாப்பாக இருக்கும் ஒளியைக் கட்டுதல் "பா-இர்-சீ-யா" (பர்சியா) ஒளியை மிகுப்பது "சீ-ந" (சீனு) இந்தப் பெயர்களையெல்லாம், வேறு ஒரு காலத்தை நாம் ஆராய்கிறபோது மீண்டும் கவனத்தில் எடுத்துக் கொள்ளலாம். பூனைக் கண்ணை கொண்டு இருட்டில் நடக்க முயற்சித்தக் காலத்தில் இந்தப் பெயர்களுக்கெல்லாம் மேற்கண்ட பொருள்களைத் தவிர வேறு பொருள்களில்லை.

வா-சீ-யா-அம் †

மேலும் ஆவிகளைத் தொடருவோம்.

இதுவரை கவனித்த விஷயங்களிலிருந்து ஆவிகளை எத்தனை விதமாகப் பிரிக்கலாம்?

தீயை முக்கியமாகக் கருதியவர்கள், (1) சாத்தினிடம் சேர்ப்பிக்கப்பட்ட உடல்களின் ஆவிகளையும் (2) யாமாநரகுவில் போடப்பட்ட உடல்களின் ஆவிகளையும் கெட்ட ஆவிகளாகக் கருதினர். (1) சொர்குவில் போடப்பட்ட உடல்களின் ஆவிகளையும் (2) தீயில் அழிந்த ஆவிகளையும் நல்ல ஆவிகள் என்று நினைத்தனர்.

† வா-சீ-யா- அம்: பாய்கின்ற ஒளியைக் கட்டும் தன்மை.

ஈரத்திற்கு முக்கியத்வம் கொடுத்தவர்கள், (1) துர்நாற்றத்தினுல் கேடு செய்த ஆவிகளையும் (2) ஈரத்தைப் பகைத்த ஒளியின் ஆவிகளையும் கெட்ட ஆவிகளாகக் கருதினர். (1) நல்ல வாசனையுடைய ஆவிகளையும் (2) ஈரத்தினிடமும் இருட்டிடமும் சேர்ப்பிக்கப்பட்ட ஆவிகளையும் நல்ல ஆவிகளாக நினைத்தனர்.

ஆக மொத்தத்தில் இருசாராரும் ஆவிகளை (1) நல்லது (2) கெட்டது என்ற இரண்டு பிரிவாகப் பிரித்தனர்.

கெட்டவையின் பெயர்கள்:— (1) தே-ஊ (தேவூ: பிடித்து உண்ணுவது) (2) பே-ஈய் (பேய்: அச்சத்தை ஈய்வது) (3) பூ-தா-அம் (பூதம்; அழகைப் பகைக்கும் தன்மையுடையது) [4] சை-தா-அன் [சைத்தான்: இகழ்ந்து பகைப்பவன்] [6] சா-தா-அன் [சாத்தான்] சாவைத் தருபவன் [7] பீ-இடு-அ-இரி [பிடாரி: பீநாற்றத்தை இட்டு அழகைக் கெடுப்பது] [8] து-இர்-தே-வா-தா [துர்தேவதா: ஊனில் இருப்பதைப் பிடிக்கப் பாய்ந்து தாவுவது]

நல்லவையின் பெயர்கள்:— [1] சீ-இன் [ஜின்: ஒளியும் இனிமையுமுடையது] [2] பே-ச [பேயீ: அச்சத்தை அழிப்பது] [3] பூ-தா-அம் [அழகையும் வலிமையையும் உடையது; அழகைத்தருவது] [5] சை-தா-அன் [சைத்தான், இகழ்ச்சியைப் பகைப்பவன்] [6] சா-தா-அன் [சாத்தான்: சோர்விலே வலிமைதருபவன்] [7] து-இர்-தே-வா-தா (துர்தேவதா: ஊனில் இருப்பதைப் பிடித்து வந்து தருவது)

ஒரே பெயருக்கு இரண்டு அர்த்தங்கள்! இதற்கு ஏற்ப, ஒரே ஆவியை ஒரு குலத்தினர் நல்லதாகக் கருதிய போது, இன்னொரு குலத்தினர் தீயதாகக் கருதினர்!

கேடு நேர்ந்தபோது, ஒரே ஆவி கெட்டதாகக் கருதப்பட்டது. நன்மை நேர்ந்தபோது, அதே ஆவி நல்லதாகக் கருதப்பட்டது.

இதிலிருந்து ஆவியைக் கட்டுப்படுத்தி, பகைக் குலத்தினர் பேரில் ஏவிவிட முடியும் என்று நினைக்க முற்பட்டனர்.

இதிலும் தீயைப் பிரதானமாகக் கருதியவர்களுக்கும் நீரை முக்கியமாக நினைத்தவர்களுக்கும் இடையே ஒரு பிரிவு உண்டாயிற்று.

ஒளியில் கலந்து ஒளியாக வடிகின்றன என்று தாம் கருதிய ஆவிகளைக் கட்டுப்படுத்த விரும்பியவர்கள், இந்த முயற்சியை, "வா-சீ-யா-அம்" (வசியம்) என்றனர். பாய்கின்ற ஒளியைக் கட்டும் தன்மை என்று பொருள். அந்த ஒளியைக்கொண்டு காப்பாற்றி இருக்கும் தன்மையை "வா-சீ-கா-இர்-அம் (வசீகரம்) என்றனர். அந்த ஒளியில் இருக்கின்ற ஆவியை "வா-சீ-இர்-அன்" (வசீரன்) என்றனர். இவனை, "வீ-இர்-அன்" (வீரன்) என்றனர். அழிந்தும் இருப்பவன் என்று பொருள். "சீ-வா-அன்" (சீவன்) என்று கூறினர். ஒளியில் வருபவன் என்று பொருள். "தீ-இர்-அன்" (தீரன்) என்றும் சொன்னார்கள். தீயில் இருப்பவன் என்று பொருள். "தீ-வா-அன்" (தீவான்) என்றும் புகன்றனர். தீயில் வருபவன் என்று பொருள். வசீகரிக்கப்பட்ட ஒளி ஆவியின் உதவியைக்கொண்டு, மனிதர்களுக்கு உணவாக பயன்படும், மிருகங்களைத் தம்மிடம் ஓடிவரும்படியும், தம் கையில் சுலபமாக சிக்கும்படியும் செய்வதற்கு, "வா-சீ-து-வா-அம்" (வசீத்துவம்) என்றனர்.

மேலும், வசியம் என்பதையே, "தீ-யா-ந-அம் (தியானம்) என்றும் கூறினர். தீயைக் கட்டுப்படுத்தி மிகும் தன்மை என்று பொருள். இதை "ஈ-ஓ-கா-அம்" (யோகம்) என்று கூறினர். அழிந்தும் ஓடுவதைக் (இயங்குவதை) காப்பாற்றும் தன்மை என்று பொருள். "ஈய்-ஓ-கா-அம்" (யோகம்) என்றால் தருவதற்காக இயங்குவதைக் கொண்டு காப்பாற்றிக்கொள்ளும் தன்மை.

பீ-இல்-ஈ-சூ-இன்-யா-அம் †

நீருக்கும் இருட்டுக்கும் முக்கியத்வம் கொடுத்தவர்கள், இருட்டுடன் கலந்த ஆவிகளைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர். இந்த முயற்சியைப், "பீ-இல்-ஈ-சூ-இன்-யா அம்" (பில்லிசூன்யம்) என்றனர். பீ நாற்றம் இல்லாது அழிந்து இயங்குகின்ற இனியவைகளைக் கட்டும் தன்மை என்று பொருள். அதாவது, கெட்ட வாசனை இல்லாமல் இயங்குவதனால் இனிமையை அளிக்கும் குணமுடைய இருண்ட ஆவியைக் கட்டுப் படுத்துதல்

தன் பீயை மண்ணை வாரிப்போட்டு மூடும் பழக்க முடைய மிருகம் பூனை. இதனால் இதற்கு "பீ-இல்-ஈ" (பில்லி) என்று ஒரு பெயர் உண்டு. பீயை இல்லாது அழிப்பது என்று பொருள். இந்த மந்திரத்தில் இருட்டில் பார்க்கும் சக்தியுள்ள "பில்லி"க்கு முக்கிய ஸ்தானம் உண்டு.

பாய்கின்ற இருட்டில், உருவமற்றதாக விரைவதை "வா-அல்-அரு-வி" (வாலருவி) என்றனர். பாய்கின்ற இருட்டில் உருவ மற்றதாக வருபவன் "வா-அல்-அரு-வா அன்" (வாலருவன்). பாய்கின்ற இருட்டில் அழகாகக் காப்பாற்றுபவன் "வா-அல்-அ-கா-அன்" (வாலகன்)

இவ்விதம் இருட்டிலோ அல்லது ஒளியிலோ உள்ள ஆவியை வல்லமையாகக் கொண்டவன் ஒருவன் இருந்தால் அவனை "ஏ-வல்' உடையவன் என்று கூறினர். எய்யக்கூடிய வல்லமையுடையவன் என்று பொருள்.

---

† பீ-இல்-ஈ-சூ-இன்-யா-அம்: பீ நாற்றம் இல்லாது அழிந்து இயங்குகின்ற இனியவைகளைக் கட்டும் தன்மை.

உள்-அம் : பு-இர்-அம் †

இதுவரை ஒளி, இருட்டு ஆவிகள் என்ற இரு பெரும் பிரிவையும், அவை ஒவ்வொன்றிலும் நல்லவை, கெட்டவை என்ற இரண்டு உபபிரிவுகளையும் பார்த்தோமல்லவா? இந்தப் பிரிவுகளிலேயே இன்னும் பலப் பிரிவுகள் உண்டு. அதாவது, மனிதர்களில் எத்தனை விதமான பிரிவுகள் உண்டோ, அந்தனைவிதமான பிரிவுகள் ஆவிகளிடையிலும் உண்டு. முதலாவதாக, (1) பகைக்குல ஆவி (2) சுயக்குல ஆவி என்பது ஒரு பிரிவு. இரண்டாவதாக (1) ஆண் ஆவி (2) பெண் ஆவி என்பது இன்னொரு பிரிவு மூன்றாவதாக, ஆண் ஆவிகளில் (1) கந்தன் ஆவி (2) முருகன் ஆவி (3) முனீ ஆவி என்ற பிரிவுகள். பெண் ஆவிகளில் (1) கன்னி ஆவி (2) கன்னி கழிந்தவளாவி (3(தாய் ஆவி என்ற பிரிவுகள். இந்த உப பிரிவுகளைத் தொடர்ந்து சென்றால், உயிருடன் வாழ்ந்தவர்களிடையே இருந்த அத்தனை பிரிவுகளும், செத்தவர்கள்ளிடையே உண்டாவதையும், அதனால் யதார்த்த உலகத்தைப் போலவே ஒரு சற்பனை உலகம் உண்டாவதையும் பார்க்க முடியும்.

இந்தக் கற்பனை உலகத்தில், யதார்த்த உலகத்தில் அந்தந்த மனிதர்களுக்கு எத்தகைய குணவிசேஷங்களைக் குறிப்பிட்டார்களோ, அதே குண விசேஷங்கள் இருக்கும் என்று நம்பினார்கள். இதன் விளைவாய் பகைக்குல ஆவிகளை "பேய்" என்ற பொதுப் பெயராலும் சுயக்குல ஆவிகளைச் "சேய்" என்ற பொதுப் பெயராலும் குறிப்பிட்டனர். பகைக்குல ஆவிகளைக் கடுமையாக சபித்தபோது, சுயக்குல ஆவிகளை அன்போடு அழைத்தனர்.

† உள்-அம்: உள்ளவற்றின் தன்மை. பு-இர்-அம்: பண்பில் மட்டும் இருப்பவற்றின் தன்மை.

குலத்தின் இளைஞர்கள் எப்போதும் நடமாடிக் கொண்டு இருப்பவர்களாதலால், இளைஞர்களின் ஆவிகளையும் அவ்விதமே எங்கும் நடமாடும் ஆவிகளாகக் கருதினர். தாம் செல்கிற இடங்களுக்கெல்லாம் அவை வரும் என்று நினைத்தனர். பகைவர்களைச் "சென்று" அழிப்பது, அபாயங்களின்போது "வந்து" காப்பதுபோன்ற செயல்களை அவற்றிற்குக் கற்பித்தனர்.

இதற்கு மாறாக, குலத்தின் கிழவர்கள் அதிகமாக நடமாடாமல், எங்கேயாவது மரத்தடியிலோ அல்லது குகையிலோ உட்கார்ந்து பொழுதைக் கழிப்பர். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கியதாகவே இருக்கும் அவர்களுடைய நடமாட்டம். இதற்கேற்ப, 'முனீ'க்களின் நடமாட்டத்தைக் குறிப்பிட்ட ஒரு மரத்தை மையமாகக் கொண்ட எல்லைக்குள் அடக்கினர். அந்த எல்லையை அணுகியபோது மிகவும் கவனமாகவும் மரியாதையுடனும் சென்றனர். அந்தந்த முனீயின் பெயரை ஞாபகப் படுத்திக்கொண்டனர்.

சிறுவர்களினால் — கந்தன்களினால்—தீமை எதுவும் நேராதாகையால், கந்தன் ஆவிகளுக்கு விசேஷமான இடமாக, "க்ஓ-வி-இல்" என்ற அமைதியான இடத்தைக் குறிப்பிட்டனர்.

அதாவது, முனீயை அவனவன் உட்கார்ந்திருந்த மரத்தினருகே நினைத்தபோது, கந்தனைக் கோவிலில் நினைத்தபோது, முருகனை எல்லா யிடங்களிலும் நினைத்துக் கொண்டனர்.

பெண் ஆவிகளில், எல்லா இடங்களிலும் சஞ்சரிக்கும் அந்தஸ்து தாய் ஆவிக்குக் கொடுக்கப்பட்டது. தாய் குலத்தினர்கூட எல்லா யிடங்களுக்கும் தலைவியாகச் சென்ற தன்மைக்கு இது பொருத்தமாக இருந்தது.

மோ-கு-இன்-ஈ †

தாய்மையடையாத பெண்களின் ஆவிகளுக்கும், கன்னி ஆவிகளுக்கும் வேறுவிதமான அந்தஸ்து உண்டாயிற்று. அக்காலத்தில் ஆண்களைவிட பெண்களே குலத்தில் மிகவும் வலிமை யுடையவர்களாக இருந்ததனால், பெண்களின் விருப்பத்திற்கு மாறாக ஆண்கள் நடக்க முடியாதிருந்ததனால், பெண்களைத் தம் வசப்படுத்தவேண்டிய ஒரு நிலைமை ஆடவர்களுக்கு யிருந்ததனால், பெண்ணுக்குப்பெண் கவுரவம் கொடுப்பதைக்காட்டிலும், பெண்ணுக்கு ஆண் கொடுப்பதுதான் சாதாரண பழக்கமாக இருந்தது. இதன் விளைவாய், குலத்தில் வாழ்ந்த பெண்கள், ஆவிகளை நினைத்து அழைக்க நேர்ந்த சமயங்களில், தம் தாயின் ஆவியை நினைத்து அழைத்தார்களேயொழிய, தம்முடன் பிறந்து தமக்குப் போட்டியாக வாழ்ந்த சகோதரிகளின் ஆவிகளை நினைவு கூர்ந்து அழைக்கவில்லை. அந்தச் சகோதரிகளுடன் புணர்ந்து மகிழ்ந்த அல்லது புணர இச்சைப்பட்ட அல்லது வசியப்படுத்த ஆசைப்பட்ட ஆடவர்களே, அவர்கள் செத்தப்பிறகும் அவர்களை நினைந்து வருந்தும் நிலையிலும், அவர்களை ஆவிவடிவத்தில் வசியப்படுத்த ஆர்வமுள்ளவர்களாகவும் இருந்தனர். இதனால் இளம் பெண்களின் ஆவிகளை அழைக்கும் பழக்கம் ஆடவர்களிடையிலேயே அதிகமாயிற்று. அப்படி ஆடவர்கள் இளம் பெண்களின் ஆவிகளை அழைத்தபோது, வாழ்ந்த பெண்களைப் போலவே செத்தப் பெண்களும் தமக்கு இஷ்டப்பட்டவர்களிடம் மட்டுமே வருவார்கள் என்று நினைத்தனர். இதனால் இளம் பெண்களின் ஆவிகளை அழைப்பதென்பது, நடைமுறையில் வசியப்படுத்தும் தன்மையைப் பெற்றது.

† மோ-கு-இன்-ஈ: மோப்பத்தினால்பூமியில் இனிமையை அழிப்பவை.

அதேசமயத்தில், இளம் பெண்கள் ஆடவர்களை மயக்கும் தன்மையைப் பெற்றிருந்தனராதலால், பகைக் குலஇளம் பெண்களின் ஆவிகளுக்குக் கெட்டத் தன்மை கற்பிக்கப்பட்டது. அதாவது, பகைக்குல பெண்களின் ஆவிகள், தம் குல ஆடவர்களை மயக்கி, மோசம் செய்து, சாகடிக்க இழுத்துச் செல்லக்கூடும் என்று நினைக்க முற் பட்டனர். அந்த ஆவிகளை "மோ-கு-இன்-ஈ" (மோகினி) என்றனர். மோப்பத்தினால் பூமியில் இனிமையை அழிப்ப வை என்று பொருள். அதாவது, வாசனையை உண் டாக்குவதன் மூலம் மயக்க மேற்படுத்தி அழிப்பவை என்று பொருள். வாசனையை உண்டாக்கும் தன்மைதான் "மோ-பு" (மோப்பு). அதாவது, வாசனையை முகர்ந்து தொடர்கிறவன், சில சமயம் காப்பாற்றப் பட்டான்; வேறு சில சமயம் அழிக்கப்பட்டான். இதுதான் "கா-மா-அம்" (காமம்). காப்பை மாற்றும் தன்மை. அதாவது, வாசனையைத் தொடர்கிறவன், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையிலிருந்து மாறிவிடுகிறான்.

இ-அம்-மை : மா-இர்-ஊ-மை †

இவ்விதம் ஆவிகள் ஒளியிலும் இருட்டிலும் சஞ்ச ரிக்கிறதாக அக்காலத்தவர்கள் கற்பனைச் செய்த சமயத்தி லேயே, மென்மேலும் அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்று தத்தம் குலத்தைப் பெரிதாக்கவும் முயற்சித்துக் கொண்டு இருந்தனர். எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகக் குழந் தைகள் பிறந்தனவோ, அவ்வளவுக்கவ்வளவு அவர் களுக்கு பூமியில் வல்லமையுடன் இருக்கும் தன்மைப் பெருகிற்று என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

† இ-அம்-மை: இங்குள்ள அழகிய நிறம்.
மா-இர்-ஊ-மை: மாறி இருக்கும் ஊனின் நிறம்.

அப்படி அவர்கள் அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்று குலத்தைப் பெருக்கியபோது, சில சமயம் திடீரென்று எதிர்பாராத அபாயங்களால் குலத்திற்கு பெருத்த நஷ்டமேற்பட்டது. ஒரே சமயத்தில் எண்ணற்றவர்கள் மடிய நேர்ந்தது. இதனால் குலம் வல்லமையை இழந்தது. உடனடியாகக் குழந்தைகளைப் பெற்றுப் பெருக்கவேண்டியிருந்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் குழந்தைகளை ஒரு சில நாட்களில சிருஷ்டித்து வளர்த்துவிட முடியவில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில், குலத்திற்கு வல்லமை யளித்து வந்து செத்துப்போனவர்களை நினைத்து வருந்தவேண்டியிருந்தது.

செத்துப்போனவர்களைப் பற்றி நினைத்தபோது, அவர்களுடைய நிறம்தான் பிரதானமாக கவனத்திற்கு வந்தது. ஒளியுடன் ஐக்கியமானவர்கள் வெண்மை, சிகப்பு முதலிய நிறங்களையுடைவர்களாக இருப்பார்கள் என்றும், இருட்டுடன் ஐக்கிமானவர்கள் கறுப்பு நிறத்தினராக இருப்பார்கள் என்றும் நினைத்தனர். இதிலிருந்து, உயிருடனிருக்கிறவனின் நிறத்தை "இ-அம்-மை" (இம்மை) என்றும், செத்தவர்களின் நிறத்தை "மா-இர்-ஊ-மை" (மறுமை) என்றும் குறிப்பிட்டனர். இஅம்மை என்றால், இங்குள்ள அழகான நிறம் என்று பொருள். மா இர் ஊமை என்றால் மாறியிருக்கும் ஊனின் நிறம். இதிலிருந்து, ஒருவன் இவ்வுலகில் குலத்தினருக்கு காப்பாக இருக்கும் தன்மையை "இ-கா-அம்" (இகம்) என்றும், ஆவி வடிவத்தில் இருட்டின் அல்லது ஒளியின் பரப்புக்குப் பறந்து செல்லும் தன்மையைப் "ப்அர்-அம்" (பரம்) என்றும் கூறினர். 'ப்அர்' என்றால் பறப்பதால் உண்டாகும் ஒலி.

ப்இர்-அம்-மா-அம் †

'ப்இர்' என்றால் அந்த ஒலியுடன் பிரிதல்; வேறாகுதல். 'ஆ' என்றால் பெண்குறி. குழந்தைத் தாயின் பெண்குறியிலிருந்து பிரிந்து வெளியே வருவதைப் "ப்இர்-ஆ-வி" (பிறவி) என்றனர். பிரிந்து ஆவிலிருந்து விரைவது என்று பொருள். பிரிகின்ற அழகிய பண்புதான் "ப்இர்-அ-பு" (பிறப்பு).

பிரிகின்ற அழகில் (தாய்க்கு) அது சாவாகவோ அல்லது சோர்வாகவோ வரும் தன்மையைப் "ப்இர்-அ-சா-வா-அம்" (பிரசவம்) என்றனர். வயிற்றுக்குள் மாறுதலடைந்து இருக்கிற ஊன், பிரிந்து ஆவிலிருந்து விரையும் தன்மைதான் "மா-இர்-ஊ-ப்இர்-ஆ-வி" (மறு பிறவி).

'ஆ' என்றால் ஆங்கே என்றும் ஒரு பொருள் உண்டு. ஆங்கே என்றால் இருட்டின் அல்லது ஒளியின் பரப்பு. இந்த அர்த்தத்தில், "ப்இர்-ஆ-வி" என்றால், பிரிந்து ஆங்கேயிருந்து விரைவது என்று பொருள்.

இருட்டின் அல்லது ஒளியின் பரப்பை விட்டுப் பிரிந்து, தாயின் வயிற்றில் புகுந்து, குழந்தை வெளியே பிரிந்து வருகிறது என்பதுதான் கருத்து.

தாயின் வயிறு இருட்டின் பரப்பாக இருக்கிற போது, தீயின் பரப்பாகவும் இருக்கிறது. வயிற்றில் இருட்டும் உஷ்ணமும் இருக்கின்றன. ஆகவே, நாம் தாயின் வயிற்றிலிருந்து பிரிந்து வரும் தன்மையை மட்டும் இங்கு கவனித்தால் போதும்.

† ப்இர்-அம்-மா-அம்: பிரிகிற (அல்லது பிரிக்கிற) தன்மையினால் மாறுகிற (அல்லது மாற்றுகிற) தன்மையையுடையது.

இருட்டுடனும் நீருடனும் தீயுடனும் ஒளியுடனும் ஐக்கியமாகி சஞ்சரிக்கிற உயிர்களை, அந்தப் பரப்புகளிலிருந்து பிரித்து மனிதனைப் பிறக்கச் செய்வது எது?

பிரிக்கிற அழகிய தன்மைக்கு "ப்இர்-அ-அம்" (பிராம்) என்று பெயர். பிரிக்கிற அழகிய தன்மையை உடையவன், "ப்இர்-அ-அம்-அன்" (பிராமன்). பிரிக்கிற தன்மையினால் ஒன்றை இன்னொன்றாக மாற்றுகிற தன்மையைப் பெற்றிருப்பது எதுவோ, அது, "ப்இர்-அம்-மா-அம்" (பிரம்மம்).

ஒளியையும் தீயையும், நீரையும் இருட்டையும் பிரித்து மனிதனாக மாற்றும் சக்தியைப் பெற்றிருக்கும் "பிரம்மம்" எது? அந்தச் சக்தி நீரிடம் இருக்கிறதா, தீயிடம் இருக்கிறதா? ஒளியிடம் இருக்கிறதா, இருட்டிடம் இருக்கிறதா? சிவனிடம் இருக்கிறதா, விஷ்ணுவிடம் இருக்கிறதா?

"சீ-வா-ப்இர்-அம்-மா-அம்" (சிவ பிரம்மம்) என்று ஒரு சாரரும், "அரி-ப்இர்-அம்-மா-அம்" (அரி பிரம்மம்) என்று இன்னொரு சாராரும் வாதிக்க முற்பட்டனர்.

"சீ-வா-ப்இர்-அம்-மா-அம்" என்றால், ஒளியாக வருவதே பிரிக்கின்ற தன்மையினால் மாற்றுகின்ற தன்மையை யுடையது என்று பொருள்.

"அரி-ப்இர்-அம்-மா-அம்" (அரிபிரம்மம்) என்றால், இருட்டே பிரிக்கின்ற தன்மையினால் மாற்றும் தன்மையுடையது என்று பொருள்.

இவ்விதம் வாதிப்பதற்குப் பிரிக்கும் தன்மையில் உள்ள இரண்டு அம்சங்களே காரணமாக இருந்தன.

கரு எவ்விதம் உண்டாகிறது? குழந்தைகள் எவ்விதம் பிறக்கின்றன?

பிள்ளைகள் வேண்டும் என்றுஎவ்வளவோ விரும்பிய போதிலும், யாருக்கும் பிள்ளைகள் பிறந்துவிடுவதில்லை. அது எந்த மனிதனுடைய விருப்பத்தையும் பொறுத் திருக்கவில்லை.

பிள்ளைகளை ஆண்கள் பெறுவதில்லை. பெண்களே பெற்றனர். ஆனால் பெண் பெண்ணாக இருப்பதனாலேயே பிள்ளைப் பெற்று விடுவதில்லை. பேதைக்கும் பெதும்பை க்கும் கன்னிக்கும் கிழவிக்கும் பிள்ளைப்பெற்க முடிவ தில்லை- ஆகவே பிள்ளை பிறப்பதற்குப் பெண்குறி யல்ல முக்கியம்.

ஆணுடன் புணரக்கூடிய பெண்களே பிள்ளைப் பெற் கின்றனர். ஆனால் ஆணாக இருப்பதனாலேயே ஒருவன் பிள்ளைப் பேற்றை அளித்துவிட முடியாது. வயது வாரத சிறுவர்களும், பழுத்துத் தளர்ந்த வயோதிகர்களும் இப் பேற்றை அளிக்க முடியாது. ஆகவே, ஆண்குறியுமல்ல முக்கியம்.

வேறு எதுதான் முக்கியம் ?

இணையற்ற இன்பத்தைத் தரக்கூடிய ஒருவிதமான நீரைச் சுரக்கக்கூடிய ஆண்குறியும், அந்த நீரை ஏற்றுக் கொள்ளக்கூடிய பக்குவத்திலிருக்கும் பெண்குறியும் புணர்ந்திருக்கும் தன்மைதான் முக்கியம்.

பெண்குறி மொட்டாக இருக்கக்கூடாது; பூ வாக இருக்க வேண்டும். பூவின் பண்புதான் "பூ-பு" (பூப்பு). பூப்படைந்த பூவை வைத்திருப்பவள்தான் "பூ-வை". பூவின் தன்மை மிருதுவான தன்மை. பூவுக்கு அதிக உஷ்ணத்தைத் தாங்கும் சக்தி கிடையாது. உஷ்ணம் மிகுந்தால், அது கருகிவிடும். அதற்கு நீரைத் தாங்கும் சக்தியுண்டு. ஆனால் நீண்டகாலம் நீரில் மூழ்கி னல் அழுகிவிடும். இதைப்போலவே, பெண்குறியும் பூப் போன்றது. மலர்ந்த பூவிற்குள் மஞ்சளாக அல்லது சிகப்பாக மகரந்தப் பொடி இருக்கின்றது. அதற்கு

ஒரு வாசனை உண்டு. அதோடு, விரிந்த இதழ்களுக்கிடையில் பகலில் ஒளி புகுகின்றது. ஒளியுடன் உஷ்ணமும் புகுகின்றது. இதைப்போலவே, பெண்குறியிலிருந்து சிவப்பு நீர் வருகிறது. அதற்கு ஒரு வாசனையும் உண்டு. அதோடு, சிகப்பு நிற நீரில் உஷ்ணம் இருக்கிறது. உஷ்ணமும் சிகப்பு நிறமும் நெருப்பின் அம்சம். திரவநிலையும் வாசனையும் நீரின் அம்சம். இருண்ட தன்மை இருட்டின் அம்சம்.

ஆகவே, பூவில் நீரின் அம்சங்களைப் போலவே, தீயின் அம்சங்களும் இருக்கின்றன.

ஆண்குறியிலிருந்து வெளியே வருகிற நீர், திரவநிலையில் இருக்கிறது. அதோடு, ஒருவிதமான வாசனையையும் பெற்றிருக்கிறது. இவை நீரின் அம்சங்கள். அதே சமயம், அது சுடுகிறது. ஒளியைப்போல் வெண்மையாக இருக்கிறது. மின்னல் வேகத்தில் பாய்கிறது. மின்னல் வேகத்தில் ஒரு விதமான உணர்ச்சியைத் தூண்டிவிட்டு மறைகிறது. அதோடு, உடம்பில் ஒருவிதமான சூடு மிகுகிறபோதே அது சுரக்கிறது. மின்னலைப் போல் அது பெண்குறியினுள் பாய்ந்தவுடன், மேகத்திலிருந்து மழை கொட்டுவதைப்போல், உடம்பு வியர்த்து சில்லென்று குளிர்கிறது. இவை யெல்லாம் தீ, ஒளி, மின்னல் முதலியவற்றின் அம்சங்கள்.

ஆகவே, இந்தத் திரவத்திற்கு இரண்டு சாராரும் இரண்டு விதமான பெயர்களை வைத்தனர். நீரின் அம்சங்களுக்கு முக்கியத்வம் கொடுத்தவர்கள், இதை "இல்-இன்-கம்" (இலிங்கம்) என்றனர். இணையில்லாத இன்ப நீர் என்று பொருள். நெருப்பின் அம்சங்களுக்கு முக்கியத்வம் கொடுத்தவர்கள், இதை "இன்-தி-இரி-அம்" (இந்திரியம்) என்றனர். இனிய தீயை வடிக்கும் தன்மையுடையது என்று பொருள்.

கருவை உண்டாக்குவது, நீரா அல்லது அதிலுள்ள தீயா என்பதே இப்போது உள்ள கேள்வி.

மேகங்கள் நீரைச் சுமந்து வருகின்றன. மழையைக் கொட்டுகின்றன. பூமியில் புல் பூண்டுகள் தழைக்கின்றன. மேகங்கள் இல்லையேல் மழையில்லை; மழையில்லையேல் வாழ்வு இல்லை. இதைப்போலவே, நீர் இல்லையேல், கரு இல்லை என்று ஒரு சாரார் வாதித்தனர்.

மேகங்கள் நீரைக்கொண்டு வருகின்றன. ஆனால் மின்னலாகியத் தீ, அம்மேகங்களைக் கிழித்து விடுகின்றது. அதனாலேயே மழைக் கொட்டுகிறது. இதைப் போலவே, ஒருவிதமான நெருப்பு உடம்பில் நாம்புகளைத் தூண்டி விடுகின்றது. இதனாலேயே காம நீர் சுரகின்றது. பெண் பூவில் பாய்ந்து கருவை உண்டாக்குகிறது. ஆகவே, அந்த மின்னலைப் போன்ற ஒளிமயமான சூடு இல்லையேல், காம நீர் சுரக்காது; கரு உண்டாகாது என்று மற்றொரு சாரார் வாதித்தனர்.

மேகங்களுக்கிடையே மின்னல் பாய்வதன் மூலம் எப்படி இனிய மழை நீர் கொட்டுகிறதோ, அதேபோல் உடம்பில் பாய்கின்ற ஒளியினால் இனிய காம நீர் சுரக்கிறது என்பதை வலியுறுத்த, இந்த நீரைச் "சி-வா-இல்-இன்-கம்" (சிவலிஙகம்) என்றனர். ஒளி பாய்வதனால் இணையில்லாத இன்பமளிக்கும் நீர் என்று பொருள்.

இதை எதிர்கட்சியினருக்கு மறுக்க முடியவில்லை. இதனால் அவர்கள் பெண்குறியில் சுரக்கும் நீரை, விஷ்ணுவின் தூண்டுதலால் சுரக்கும் நீர் என்று கூறினர். அதை, "சுஉர்-ஓ-நீர்-தா-அம்" (சுரோநிதம்) என்றனர். சுர் என்று ஓடுகின்ற நீர் தரும் தன்மை என்று

பொருள். அதாவது, இந்திரிய நீர் 'சுர்' என்று பாய்வதனால் பெண்குறியில் அந்த நீர் உண்டாகிறது என்று கூறினர்.

இதையும் எதிர் கட்சியினர் மறுத்தனர். இதை அவர்கள் "சீ-தீ-இரி-சு- ஊ-ஈர்-இன்-ந-அம்" (ஸ்த்ரீ சூர்ணம்) என்றனர். ஒளியிலுள்ள மென்மையான தீ வடிவதனால், சுகமாக ஊனில் ஈரம் இனிமையை மிகுக்கும் தன்மை என்று பொருள். அதாவது, ஆண்குறியிலிருந்து பாய்கிற நீரில் வெதவெதப்பான தீ இருக்கிறது. ஒளியிலுள்ளது போன்ற வெப்பம். அதனால்தான், பெண்குறியில் நீர் இனிமையை மிகுக்கிறது என்று அர்த்தம்.

இவ்விதம் இரண்டுவிதமான நீரிலுமுள்ள உஷ்ணத்தைக் காட்டி, நீரின் முக்கியத்வத்தை எதிர் கட்சியினர் மறுத்தபோது, பெண்குறியினுள் வசிப்பது இருட்டே என்று நீரின் கட்சியினர் கூற முற்பட்டனர். இருட்டில்தான் கரு உண்டாகி, வளர்கிறது என்றனர். இதையும் எதிர்கட்சியினர் மறுத்தனர். அந்த இருட்டில் ஒளியிலுள்ள வெதவெதப்பான உஷ்ணம் இருக்கிறது என்று கூறினர். இதனால் பெண்குறிக்கு இரண்டுவிதமான பெயர்கள் உண்டாயின. நீரின் கட்சியினர் அதை "அல்-கு-இல்" (அல்குல்) என்றனர். அல் என்றால் இருட்டு. குஇல் என்றால், தரையில் இல்லாதது. தரையில் இல்லாத ஒருவிதமான இருட்டு அதனுள் இருக்கிறது என்று பொருள். தரையில் இல்லாத இருட்டு என்றால் என்ன? தரையிலுள்ள இருட்டு ஒளியினால் மாய்க்கப்படுகிறது. வயிற்றுக்குள் உள்ள இருட்டு மாய்க்கப்படுவதில்லை. இதை எதிர்கட்சியினர் மறுத்து, பெண் குறியை "அ-இல்- கு-இல்" என்று திரித்தனர். அழகு இல்லாத பூமியில் இல்லாதது என்று பொருள். அது இல்லாத பூமி அழகற்ற பூமி என்பது அவர்கள்

கருத்து. அதே சமயம், அதைச் "ஷி-தி" (சிதி) என்று குறிப்பிட்டனர். ஒளியிலுள்ள வெதவெதப்பான தீ இருக்கு மிடம் என்று பொருள்.

இந்த வாக்கு வாதத்தை நன்கு கவனித்தவர்களில் சிலர், கரு உண்டாவதற்கு நீர், தீ ஆகிய இரண்டுமே வேண்டும் என்று அபிப்பிராயப் பட்டனர். இரண்டுமே "பிரம்மம்" என்றனர்.

ஆண்குறியிலிருந்து நீரும் பிரிகிறது; உஷ்ணமும் பிரிகின்றது. இரண்டுமே பெண்குறியில் மாறுதலை உண் டாக்குகின்றன. பிரிகிற தன்மையினால் மாற்றுகிற தன் மை (பிரம்மம்) இரண்டிற்குமே உண்டு.

ஒவ்வொன்றும் தத்தமக்குள்ள காக்கின்ற சக்தியா யாலும் ஒன்றைப் பிரித்து இன்னொன்றாக மாற்றுகிறது. அழிக்கின்ற சக்தியினாலும் ஒன்றைப்பிரித்து இன்னொன் றாக மாற்றுகிறது. நீரின் ஒரு அம்சம் அழிக்கிறபோது, மறு அம்சம் அந்த அழிவிலேயே ஒன்றை சிருஷ்டிப்ப தாக இருக்கிறது. இதேபோல், தீயின் ஒரு அம்சம் அழிக்கிறபோது, அந்த அழிவிலேயே அதன் மறு அம் சம் வேறொன்றை சிருஷ்டிக்கிறது. அதோடு மட்டுமில் லாமல், நீர் அழிக்க, தீ சிருஷ்டிக்கிறது; தீ அழிக்க நீர் சிருஷ்டிக்கிறது. தீயும் நீரும் இணைந்து இருக்கிற போது, சிருஷ்டியானது வளர்கிறது. இரண்டும் ஒன் றை விட்டு ஒன்று பிரிகிறபோது, சிருஷ்டியானது அழி ந்து வேறொன்றாக மாறுகிறது. ஆகவேதான், பிரிக்கிற அல்லது பிரிகிற தன்மையினால் மாற்றுகிற அல்லது மாறுகிற தன்மை (பிரம்மம்) இரண்டிற்குமே உண்டு.

இந்தத் தன்மையைச் சுலபமாகப் புரிந்துகொள்வ தற்கு, ஒரே தலையில் நான்கு முகங்களையுடைய ஒரு மனிதனையே கற்பனைச் செய்து பார்க்கவேண்டும்.

ஒரே தலையில் ஒருவனுக்கு நான்கு முகங்கள் இருக்குமானால், அவன் எப்படி இயங்குவான்?

நான்கு திசைகளிலும் நான்குவிதமான காட்சிகளைப் பார்ப்பான். ஒவ்வொரு திசையிலும் நடக்க முயலுவான். நான்கு விதமான கருத்துகளையும் செயல்படுத்த எத்தனிப்பான். ஆனால் ஒரே சமயத்தில் அவனுக்கு நான்கு திசைகளிலும் செல்ல முடியாது; நான்கு விதமான கருத்துக்களையும் செயல்படுத்த முடியாது. நான்கில் எது முக்கியமோ, அதை மட்டுமே அவனுக்குச் செய்யமுடியும். நான்கு திசைகளில் எதை நோக்கி நடக்க வேண்டியது அத்தியாவசியமோ, அதை நோக்கியே நடப்பான்: அச்சமயத்தில், மற்ற மூன்று விதமான கருத்துகளும் வலு விழக்கின்றன. மூன்று திசைகளும் ஒதுக்கப்படுகின்றன. அதாவது, நான்கு முகங்களில், ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமானவை; ஒவ்வொன்றும் எதிர் எதிர் திசையில் இழுப்பவை; ஒவ்வொன்றும் முரண்பட்ட கருத்துக்களை உண்டாக்குபவை. இப்படிப்பட்ட முரண்பாடுளுக்கிடைய அவன் வாழ்கின்றான். இத்தனை முரண்பாடுகளும் ஒரே உடலில் வெவ்வேறு அங்கங்களாக இருக்கின்றன.

இதேபோல்தான் நீரும் தீயும், ஒளியும், இருளும் இயங்குகின்றன! ஒன்றிலொன்று அடங்கியதாக இருக்கின்றபோதே, ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும் இருக்கின்றன! ஒவ்வொன்றும் தனித்தனி முகத்தைப் (குணத்தை) பெற்றிருக்கிறபோதே, ஒன்றைவிட்டு ஒன்று பிரிய முடியாதவாறு பிணைந்திருக்கின்றன. அதே சமயம், ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் இயங்குவதாகவும், ஒன்றின் இயக்கத்தை இன்னொன்று மாற்றுவதாகவும் இருக்கின்றன. இதனால்தான் பொருள்கள், உயிர்கள், உடல்கள் முதலியவை யெல்லாம் உண்டாகின்றன; அழிகின்றன; மாறுகின்றன!

ந-அ-இர்-அ-தா-அம் †

சுருக்கமாகக் கூறுவதென்றால், பிரிகிற அல்லது பிரிக்கிற தன்மையினால் ஒன்றையொன்று மாற்றுகிற தன்மையில்—பிரம்மம் என்ற தன்மையில் — (1) நீரின் அழிக்கும் சக்தி ஒரு முகமாகவும் (2) நீரின் காக்கும் சக்தி அதற்கு எதிர்முகமாகவும் (3) தீயின் அழிக்கும் சக்தி இன்னொரு முகமாகவும் (4) தீயின் காக்கும் சக்தி அதற்கு எதிர்முகமாகவும் அமைந்திருக்கிற நிலையினால், நான்கு சக்திகளும் இணைந்து இயங்குகிற நிலை உண்டாகிறது. அப்படி நான்கும் இணைந்து இயங்குகிற நிலையில், உயிர்கள் உண்டாகி வளர்கின்றன. ஒரு முகத்தினால் அழிக்கப்படுவது, இன்னொரு முகத்தினால் வேறொன்றாக சிருஷ்டிக்கப்படுகிறது. அழிப்புத் தொழிலுடனேயே சிருஷ்டிப்புத் தொழிலும் நடந்து வருகிறது.

அழிப்பது பிரம்மத்தில் அடங்கியிருக்கும் (1) கைஇல்அசாஅம் (2) கைஇல்அயாஅம் என்ற தன்மைகள். சிருஷ்டிப்பது பிரம்மத்தில் அடங்கியிருககும் (1) வைகுஇன்தாஅம் (2) வைகுஇன்தாவாசீ என்ற தன்மைகள். அழிப்பது பிரம்மத்தில் அடங்கியிருக்கும் (1) வைசாநவாஅம் (2) சைவாஅம் என்ற தன்மைகள். சிருஷ்டிப்பது பிரம்மத்தில் அடங்கியிருக்கும் (1) வைஇன்நவாஅம் (2) சிவாஅம் என்ற தன்மைகள். இதிலிருந்து பிரம்மம் என்ற தன்மை நீர், தீ ஆகிய இரண்டிற்கும் பொதுவானது என்று சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். அது விஷ்ணுவுக்கும் அடங்கியது; சிவனுக்கும் கட்டுப்பட்டது. அதன் மூலம் சிவனுடைய தொழிலும் நடக்கிறது; விஷ்ணுவினுடைய தொழிலும் நடக்கிறது.

---

† ந-அ-இர்-அ-தா-அம்: மிருக்கிற அழகினால் வாழ்வுக்கு அழகைத் தரும் தன்மை.

நான்குவிதமான முரண்பாடுகளுடன் இயங்குகிற பிரம்மம் என்ற தன்மை, ஒன்றையொன்றை மாற்றுவதற்கு வேண்டிய சக்தியைத் தன்னிடமே கொண்டிருக்கிறது என்பது வெளிப்படை. தீயின் கொடூரத்தை அடக்குவதற்கு, அது நீரின் கொடூரத்தை ஏவிவிடுகிறது. நீரின் கொடூரத்தை அடக்கத் தீயின் கொடூரத்தை ஏவிவிடுகிறது. ஒன்றைக் காட்டிலும் இன்னொன்றை மிகச் செய்வதன் மூலம், இனிமையை உண்டாக்குகிறது. இந்தத் தன்மைக்குதான், "ந-அ-இர் அ-தா-அம்" (நாரதம்) என்றுபெயர். மிகுக்கின்ற அழகினால் வாழ்வுக்கு அழகைத் தரும் தன்மை என்று பொருள். அதாவது, முரண்பட்ட இரண்டிற்கு இடையே, முரண்பாடுகளை மிகுப்பதன் மூலம், இனிமையை இறுதியில் உண்டாக்குவது. இதையே "கா-இல்-அ கா-ப்இர்-ஈ-யா" (கலகப் பிரியா) என்றும் கூறினர். காப்பு இல்லாததை அழகாகக் காப்பது; பிரிந்து அழிவதைக் கட்டுவது என்று பொருள். தீயின் மிகுதியினால் காப்பு இல்லாததை, நீரின் மிகுதியினால் காப்பது; தீயைவிட்டுப் பிரிகிற நீரை அல்லது நீரை விட்டுப் பிரிகிற தீயைப் பிரியவிடாமல் இணைப்பது. இவ்விதம் இனிமையை உண்டாக்குவது.

ஆகவே, பிரம்மம் என்ற தன்மையை உணர்ந்தவர்கள், தம் வண்மையை மிகுத்துக் காப்பாற்றிக் கொள்வதற்கு (வணக்கம் பெறுவதற்கு) என்ன செய்யவேண்டும்?

பிரம்மம் என்பது ஒரு கருத்தே யொழிய, நீரையும் தீயையும் போன்ற ஒரு யதார்த்தம் அல்ல. நீரையோ தீயையோ பார்ப்பதுபோல் இதைப்பார்க்க முடியாது; தொடமுடியாது. மனத்தளவில் புரிந்துகொள்ளவே முடியும். வாயளவில் விளக்கவே முடியும்.

இதற்குத் தனியான ஒரு வடிவம் கிடையாது. நீரும் தீயும், ஒளியும் இருட்டும், ஒவ்வொரு பொருளும், ஒன்றோடொன்று இணைந்து, உள்ளுக்குள் இருக்கும் முரண்பாடுகளைக்கொண்டு ஒன்றை யொன்று மாற்றி இயங்கி

வரும் காட்சியே இதன் வடிவம். இந்த வடிவத்திற்கு, மனிதர்கள் உணவுப் பொருள்களைக் கொடுப்பதன் மூலமோ அல்லது உதவிகளைச் செய்வதன் மூலமோ வண்மையை மிகுத்துக் காக்கும் தன்மையை (வணக்கத்தை) அளித்து, குரங்கு, பாம்பு, யானை, தாய், சேய், முனி முதலியவர்களிடமிருந்து திருப்பி வணக்கம் பெற்றதுபோல பெறமுடியாது.

ஆகவே, "பிரம்மம்" என்ற தன்மைக்குத் தனியான வணக்கம் ஏற்படவில்லை. அதற்கு உணவுகளை அளிப்பது என்ற பழக்கமோ அல்லது அதை உதவிக்கு அழைப்பது என்ற பழக்கமோ ஏற்படவில்லை. அதாவது, வணக்கமளித்து வணக்கம் பெறுவது என்ற ஒரு எண்ணம் உண்டாகவில்லை.

கு-அம்-பு-இடு †

எனினும், பிரம்மம் என்ற தன்மையை உணர்ந்து கொள்வதனால், ஒருவன் அதன் இயக்கத்திற்கு ஏற்ப தன் இயக்கத்தை அமைத்துக் கொள்வானேயானால், சுவைமாக தன் வண்மையை மிகுத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். அதாவது, இயற்கை இயங்குகிறபடியே தானும் இயங்குவது!

இயற்கையோடு இணைந்து வாழ்க!

அப்போது நீ, நீருக்கு வணக்கமளிக்கிறாய்; நெருப்புக்கு வணக்கம் அளிக்கிறாய்; இரண்டிடமிருந்தும் வணக்கம் பெறுவாய். அப்படி நீ பெறுகிற வணக்கம், பிரம்மத்தினிடமிருந்து பெறக்கூடிய வணக்கத்திற்குச் சமம்.

† கு-அம்-பு-இடு: பூமியின் தன்மையெ அழகாக இடுவது.

இயற்கை இயங்குவதற்கு ஏற்ப ஒருவன் தன் அன்றாட காரியங்களைச் செய்வதைத்தான், "பா-இழு-கா-அம்" (பழக்கம்) என்றும்; "வா-இழ-கா-அம்" (வழக்கம்) என்றும் கூறினர்.

பா இழுகா அம் (பழக்கம்) என்றால், பாதுகாப்பை இழுத்துக் காத்துக்கொள்ளும் தன்மை.

வா இழகா அம் (வழக்கம்) என்றால் வருவதை இழந்து காத்துக்கொள்ளும் தன்மை.

பழக்கத்தினால் நீ உன்னை எது பாதுகாக்குமோ, அதை இழுதது உன்னைப் பாதுகாக்கும்படி செய்ய முடியும்.

வழக்கத்தினால் உனக்கு எது அபாயமாக வருமோ அதை இழந்து உன்னைக் காத்துக்கொள்ளலாம்.

அத்தியாவசித்தினால் உண்டான வணக்கங்களே, அந்தப் பழக்கங்களும் வழக்கங்களும்.

இன்னின்ன வணக்கங்கள், இன்னின்ன பாதுகாப்புகளை உண்டாக்கும்; இன்னின்ன அபாயங்களைத் தவிர்க்கும் என்ற கருத்தே அது.

இந்த வணக்கங்களை, பிரம்மம் என்ற தன்மையினால் மனிதனே இயற்கையாக உண்டக்கியிருந்தான். பிரம்மம் என்ற தன்மையே மனிதனுக்கு இனனின்ன காரியங்களைத் தொடர்ந்து செய்தால், இன்னின்ன பாதுகாப்புகளைப் பெறுவாய் என்று உணர்த்தியிருந்தது.

ஆகவே, அன்றைய நிலையில் அவர்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் தம் வண்மையை மிகுத்துக் கொள்வதற்காகவும் நடைமுறையில் அனுஷ்டித்த ஒவ்வொருவிதமான இயற்கைப் பழக்கங்களும வழக்கங்களும் பிரம்மத்தினிடமிருந்து வணக்கம் பெற கையாண்டவையாகவே இருந்தன.

இதிலிருந்து, "பிரம்மம்" என்ற தன்மைக்கு மனிதன் தனியாக வணக்கம் அளிக்கவில்லை; ஆனால் அதன் முரண்பட்ட பகுதிகளுக்குத் தனித்தனியாக வணக்கமளித்து வணக்கப் பெற்றான் என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

நீருக்கு வணக்கமளித்தான்; நெருப்புக்கு வணக்கமளித்தான். இருட்டிற்கு வணக்கமளித்தான்; ஒளிக்கு வணக்கமளித்தான். இவ்விதம் பிரம்மத்திற்கு வணக்கமளித்தான். நீரிடமிருந்து வணக்கம் பெற்றான். நெருப்பிடமிருந்து வணக்கம் பெற்றான். இவ்விதம் பிரம்மத்தினிடமிருந்து வணக்கம் பெற்றான்.

இதுதான் பிரம்ம வணக்கம்.

நீருக்கு எப்படி வணக்கமளித்தான்?

நெருப்புக்கு எப்படி வணக்கம் அளித்தான்?

அவற்றிற்கு வணக்கமளிப்பது என்றால், அவற்றிற்கு எதன்பேரில் விருப்பமோ, அதைக் கொடுக்க வேண்டும்.

இரண்டும் "கு-அம்-பு-இடு" (கும்பிடு) என்ற தன்மையையே மிகவும் விரும்புகின்றன.

அப்படி யென்றால் என்ன ?

பூமியின் தன்மையில் அழகை வைப்பது என்று பொருள்.

பூமியின் தன்மை (கு-அம்: கும்) என்றால், உலகம் இயங்குகிற தன்மை. அதில் அழகை வைப்பது என்றால், சமநிலையில் இரண்டும் இயங்கி எல்லாவற்றையும் ஒழுங்காக இருக்கும்படி செய்வது.

இதைத்தான் இரண்டும் மிகவும் அதிகமாக விரும்பு கின்றன.

இதை மனிதன் அவற்றிற்கு அளிப்பனேயாஞல் அவை ஒன்றையொன்று மிஞ்சுவதன் மூலம் உலகத்தை அழிக்க முயலா. இதை அளிக்காவிட்டால், அவை இர ண்டும் அழிவு வேலையில் விருப்பம் கொண்டு அழிக்க ஆரம்பித்துவிடும்.

"கும்பிடு" என்ற தன்மையை எப்படி அவற்றிற்கு மனிதர்கள் அளிக்க முடியும்? இயற்கைக்கு விரோதமாக சொல்லாமலிருப்பதன் மூலம்! இயற்கையோடு இணை ந்து வாழ்வதன் மூலம்!

"கும்பிடு" தான் வணக்கங்களில் பிரதானமான தென்று கருதினர்.

இதிலிருந்து, ஒவ்வொரு சமயத்திலும் நீரிடமும் நெருப்பிடமும் அவர்கள் தாம் இயற்கைக்கு விரோத மாகச் சொல்லமாட்டார்கள் என்றும், இயற்கையோடு இணைந்து வாழ்வார்கள் என்றும் உத்திரவாதம் கொடுக்க முற்பட்டனர். இப்படி உத்திரவாதம் அளிப்பதற்கு, அக்கால அபினய பாஷையில் ஒரு அடையாளத்தை உண்டு பண்ணினர்.

அந்த அபினய அடையாளம்தான் இரண்டு கைகளை யும் குவித்து கும்பிடுதல்.

இரண்டு கைகளிலும் மொத்தம் நான்கு பக்கங்கள் இருக்கின்றன. உள்ளங்கை பக்கங்கள் இரண்டு. புறங் கைப் பக்கங்கள் இரண்டு.

இரண்டு பக்கங்களும் நீரின் இரண்டு குணங்களுக் கும், தீயின் இரண்டு குணங்களுக்கும் அடையாளம்

நான்கு பக்கங்களும் எதிர் எதிர் திசையில் இருந்தபோதிலும், ஒரே உடலின் உறுப்புகள். பிரம்மம் என்ற தன்மைக்கு அடையாளமாக அவை இருக்கின்றன.

உள்ளங்கை பக்கங்களை இணைத்துக் கைகளைக் குவிக்கிறபோது, பூமியின் தன்மை அழகாக இடப்படுகிறது. "கும்பிடு" என்ற தன்மை உணர்த்தப்படுகிறது. அதுவே நீருக்கும் நெருப்புக்கும் "நாங்கள் இயற்கையோடு இணைந்து வாழ்வோம்; பூமியின் தன்மையில் அழகு உண்டாகும்படி வாழ்வோம்" என்று உத்திரவாத மளிப்பதாகும்.

ஆங்காரத்துடன் பரவியக் காட்டுத்தீயையும், பயங்கரமான மின்னலையும், சகிக்க முடியாத அடை மழையையும், காட்டாற்று வெள்ளத்தையும் கண்டபோது கையெடுத்துக் கும்பிட்ட மனிதன், இந்த உத்திரவாதத்தையே அக்கும்பிடு மூலம் அந்த ஆங்கார இயற்கையிடம் தெரிவித்துக் கொண்டான்.

அவை விரும்புகிற கும்பிட்டை தினசரி அவற்றிற்கு அளித்துவந்தால், அவை வணக்கம் பெற்று, பிரதிபலனைத் தமக்கு வணக்கம் அளிக்கும் என்று கருதினர்.

இதிலிருந்து தினசரி தீயின் அம்சங்களாகிய சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், மின்னல், காட்டுத்தீ முதலியவற்றையும், நீரின் அம்சங்களாகிய ஆறு, குளம், ஏரி, கடல், மேகம், மழை, இருட்டு முதலியவற்றையும் கையெடுத்துக் கும்பிடும் பழக்கம் உண்டாயிற்று.

இந்தக் கும்பிடு பழக்கத்திலிருந்து "பள்-அம்-வண்-ந-கா-அம்" (பள்ளம் வணக்கம்) என்ற ஒரு பழக்கம் உண்டாயிற்று.

பிளந்து இருப்பது பள்; பிளந்திருக்கும் தன்மை பள் அம். பூமியில் பலவிதமான பள்ளங்கள் இருக்கின்றன.

அந்தப் பள்ளங்களுக்கு வண்மையை மிகுப்பது மூலம், தம் காப்பை மிகுத்துக் கொள்வதுதான் பள்ளம் வணக்கம்.

பள்ளங்களுக்கு எப்படி வண்மையை மிகுப்பது?

மழை பெய்கிறபோது, அவற்றில் நீர் சேருகிறது. அந்த நீர் வேறு வழியாக வடிந்து வீணாகாமல், அங்கேயே தேங்கி நிற்கும்படி செய்வதுதான் பள்ளம் வணக்கம்.

இந்த வணக்கம் நீரற்ற பிரதேசத்திலேயே மிகவும் அத்தியாவசியமாக இருந்தது. கருங்கல் பூமியில் பள்ளம் வணக்கம்தான் நிலத்தினருக்கு முக்கியமானது. இதுதான் பிற்காலத்தில் திருக்குளத் திருப்பணியாயிற்று.

சீ-ஈர்-பா-அம் †

இப்படி தீயின் அம்சங்களையும் நீரின் அம்சங்களையும் கையெடுத்துக் கும்பிடுவதில், அவர்களுக்குப் போதிய அளவு மனதிருப்தி ஏற்படவில்லை. தீயின் அம்சங்களுக்குக் காரணமான ஒரு மூல சக்தியும், நீரின் அம்சங்களுக்குக் காரணமான ஒரு மூல சக்தியும் இருப்பதாக நினைத்தனர். அந்த மூல சக்திகளையே நேரில் நிறுத்தி, கையெடுத்துக் கும்பிட்டு, தம் உள்ளக் கருத்தை உணர்த்த விரும்பினர்.

ஆனால், அவர்கள் விரும்பியது போல் அம்மூலங்களுக்குத் தனி வடிவங்கள் இல்லை. பல வடிவங்களில் அவை ஒவ்வொன்றும் தென்பட்டனவே யொழிய, எல்லா அம்சங்களையும் கொண்ட ஒரே வடிவாக தென்படவில்லை.

ஆகவே, அவற்றின் தன்மைகளை யெல்லாம் அடக்கி, ஒரே வடிவமுடையதாகக் கண்ணெதிரே தோன்றும்படி செய்ய என்ன செய்வதென்று சிந்தித்தனர்.

† சீ-ஈர்-பா-அம்: ஒளியும் நீரும் பாதுகாக்கும் தன்மை.

இந்தச் சிந்தனை அவர்களைக் கலைஞர்களாகவும், சிற்பிகளாகவும் மாற்ற வித்திட்டது.

நீர், நெருப்பு, இருட்டு, ஒளி ஆகியவற்றின் தன்மைகளை எதிரே இருக்கும் வண்ணம் அவர்கள் அமைத்த வடிவங்கள் தான் சிலைகளும், சித்திரங்களும்.

இப்போது ஒவ்வொரு விதமான தன்மைக்கும் அவர்கள் சிருஷ்டித்த ஒவ்வொரு விதமான வடிவங்களை வரிசையாகப் பார்ப்போம் :—

முதலாவதாக, இயற்கை ஆணுகவும் பெண்ணுகவும் இருக்கிறது. ஆண்பெண் புணர்ச்சியினுல் உயிரினங்கள் உண்டாகின்றன. புணர்ச்சியில் உஷ்ணமும் குளிர்ச்சியும் ஒன்றிலொன்று அடங்கியிருக்கின்றன. ஆகவே, புணர்ந்திருக்கும் தன்மையை எதிரே வைப்பதனுல், நீர் நெருப்பு ஆகிய இரண்டையும் எதிரே வைப்பதற்குச் சமமாகும். இந்தப் புணர்ச்சியே மழைக்கும் மின்னலுக்கும் அடையாளம்.

இந்தக் கருத்தை உணர்த்த, ஆண்குறி போன்ற ஒரு நீளக் கல்லையும், பெண்குறி போன்ற ஒரு குழிந்தக் கல்லையும், புணர்ந்திருக்கும் நிலையில் அமைத்தனர்.

இதற்கு, "சீ-வா-இல்-இன்-கம்" (சிவலிங்கம்) என்று பெயரிட்டனர். ஒளி பாய்வதனுல் இணையில்லாத இனிய நீர் சுரக்கும் தன்மை என்று பொருள்.

மின்னல் பாய்கிறது. அதனுல் மேகம் இனிய நீரை வடிக்கிறது. அந்த நீர் பூமியில் பாய்கிறது. பூமி வளமை யடைகிறது.

உடம்பில் ஒருவிதமான உஷ்ணம் மிகுகிறது. அதனால் "இல்இன்கம்" பாய்கிறது. அது பெண் பூவில் வளமையை உண்டாக்குகிறது.

இதுதான் உயிர்கள் உற்பத்தியாகும் தன்மை.

ஆகவே, சிவலிங்கம் என்ற கல் வடிவம், முரண்பட்ட இரண்டின் புணர்ச்சியில் புதுமை உண்டாவதற்கு அடையாளம். ஆணுக்கும் பெண்ணுக்கும் அடையாளம். பூமிக்கும் ஆகாயத்திற்கும் அடையாளம். மின்னலுக்கும் மேகத்திற்கும் அடையாளம். மழைக்கும் பூமியிலுள்ள பள்ளத்திற்கும் அடையாளம்.

இந்தக் கல் வடிவத்தைச் "ஶீ-ஈர்-பாஅம்" (சிற்பம்) என்றனர். ஒளியும் ஈரமும் பாதுகாக்கும் தன்மை என்று பொருள்.

ஒளியும் ஈரமும் பாதுகாக்கும் தன்மைக்கு அந்த வடிவம் அடையாளமாக இருந்தது. இதையே கையெடுத்துக் கும்பிட்டு உள்ளக் கருத்தை உணர்த்த ஏற்ற சாதனம் என்று கொண்டனர்.

கல்-அ †

புணர்ச்சி நிலையைக் கல்லில் வடித்து உற்பத்திக்கு அடையாளமாகக் கொண்ட பிறகு, தீ, நீர் ஆகியவற்றின் தன்மைகளை உணர்த்தக்கூடிய படங்களைக் கற்களில் வரைந்தனர்.

படம் வரைவது ஒரு கலை.

† கல்-அ: கல்லை அழகாக்குதல்.

முதல் முதலாகத் தமிழர்கள் வரைந்த படம் பாம்பின் படம்தான். பாறையில் சுண்ணாம்புக் கல்லினால் சில கோடுகளைக் கிழித்தபோது, பாம்புச் சித்திரம் உண்டாயிற்று.

அதன் பிறகு அவர்கள் யானை, குரங்கு, மயில், கோழி, புலி, சிங்கம் முதலியவற்றின் வடிவங்களைப் பாறைகளில் வரைய முற்பட்டனர்.

இந்தச் சித்திரங்களை "பா-இடு-அம்" (படம்) என்றனர். பாதுகாப்பை இடும் தன்மை யுடையவை என்று பொருள். இச்சித்திரங்களை வரையும் தன்மையை "ஒ-வி-யா-அம்" (ஓவியம்) என்றனர். ஓடி விரைகின்றவற்றைக் கட்டும் தன்மை என்று பொருள். மேலும், இவற்றைக் "கல்-அ" (கலா), "கல்-ஐ" (கலை) "கன்-அ" (கனு), என்றும் பலவாறாகக் குறிப்பிட்டனர். "கல்-அ", 'கல்-ஐ,' 'கன்-அ' ஆகிய மூன்றிற்கும் கல்லிலுள்ள அழகு என்றே பொருள். கல்லில் எது விரைகின்றதோ, அதைக் "கல்-வி" என்றனர். படங்களில் எந்தப்படம், ஒளியும் தீயும் இருக்கின்ற தன்மையை உணர்த்தியதோ, அதை "சீ-தீ-இர்-அம்" (சித்திரம்) என்றனர். எந்த படம்,இருட்டும் ஈரமும் இருக்கின்ற தன்மையை உணர்த்தியதோ, அதை "அல்-அ-இன்-கா-இர்-அம்" (அலங்காரம்) என்றனர். இருட்டு அழகையும் இனிமையையும் காப்பாற்றும் வண்ணம் இருக்கும் தன்மை என்று பொருள்.

இப்பொழுது ஒவ்வொன்றையும் தனித்தனியே கவனிப்போம் :—

மூ-இர்-தீ †

முதலில் தீயின் தன்மையை எவ்விதம் கல்லில் வடிவமாக வரைந்தனர் என்பதைப் பார்ப்போம்.

பாம்பையோ, யானையையோ போல் நெருப்புக்குத் தனியான குறிப்பிட்ட ஒரே வடிவம் இல்லை. இதற்கு குணங்களே பல உண்டு.

இந்த குணங்களை எப்படி வெளியிடுவது என்பதே கேள்வி.

அக்காலத்தில் அவர்கள் தீயைக் காட்டுத் தீயாகவும் எரிமலைத் தீயாகவுமே கண்டிருந்தனர். காட்டும் தீ எப்பொழுதாவது சில சமயங்களில்தான் தென்பட்டது. எரிமலையில் உள்ள தீ எப்போதுமே தென்பட்டது. ஆகவே, தீ நிரந்தரமாக வசிக்குமிடம் மலையுச்சி என்று தீர்மானித்தனர். ஆகவே, கல்லில் ஒரு மலைத் தொடரை வரைந்தனர். அந்த மலைத் தொடருக்கே "கை-இல்-ஆ-சா-இன்-கு-இரி" (கைலாசங்கிரி) என்று பெயரிட்டனர். பக்கங்களே இல்லாதவாறு ஆங்கேயிருந்து சாகடிக்க இனிய பூமியில் வடிவது என்று பொருள். எரிமலையிலிருந்து தீயும் தீப்பிழம்பும் நாலா திசைகளிலும் பரவி இனிய பூமிகளையெல்லாம் அழித்து விடுவதை இது உணர்த்துகின்றது.

எரிமலையின் உச்சியில் தீ எரிவதனுல், எப்போதும் ஒளி இருக்கும். ஒளி வெண்மையானது. இதை உணர்த்த அந்த மலைத் தொடரை வெண்மை நிற முடையதாக வரைந்தனர். அந்த ஒளி மிருகங்களுக்குப் பாதுகாப்பை

† மூ-இர்-தீ: (அழிக்கும் தன்மை, காக்கும் தன்மை, இரண்டுமில்லாத நிலை ஆகிய) மூன்று தன்மைகளுடன் இருக்கும் தீ.

யும் இனிமையையும் ஈயக்கூடியது. ஆகையால், அந்த வெண்மை நிறத்தைப் "பா-இன்-ஈய்" (பனீ) என்றனர்.

இவ்விதம் தீயின் இருப்பிடத்தை வரையறுத்தப் பிறகு, தீயின் தன்மைகளைத் தீட்டத் தொடங்கினர்.

தீயில் இரண்டு விதம் உண்டு. ஒன்று ஒளியாக வருவது (சீ-வா). மற்றொன்று பாதுகாப்பாக இருக்கும்படியான சாரத்தில் வருகிற தீ (பா-ஈர்-வா-தீ: பார்வதீ). ஒன்று தூய நெருப்பு; இன்னொன்று நீரில் இருக்கும் சூடு. பாதுகாப்பாக இருக்க வருகிற தீ "பா-இர்-வா-தீ".

சீவாவை ஆணாகவும், பார்வதீயைப் பெண்ணாகவும் அந்த மலைக்கு முன்னே வரைந்தனர். சீவா இருப்பதனால்தான், பார்வதீ இருக்கிறது. பார்வதீ இருப்பதனால்தான், சீவா உயிர்களைப் படைக்கும் சக்தியாக இருக்கிறது. உயிர்களுக்குக் காரணமானது பார்வதீ. பார்வதீக்குக் காரணமானது சிவா. சிவாவுக்குக் காரணமானது விண்ணைத் தொடும் வண்ணம் சுடர் விட்டு எரியும் எரிமலை. அந்த எரி மலைக்கு எது ஆரம்பம், எது முடிவு என்று மனிதனுக்குத் தெரியாது. ஆகவே, சிவாவுக்குக் காரணம் கிடையாது என்று தீர்மானித்தனர்.

இவ்விதம் சீவாவுக்கும் பார்வதீக்கும் ஒரு நெருங்கிய உறவைக் கற்பித்ததோடு, பார்வதீக்கும் நீருக்குமிடையேயும் ஒரு நெருங்கிய உறவைக் கற்பித்தனர். பார்வதீயில் ஈரம் இருக்கிறது. அது ஈரத்துடன் கலந்து வருகின்றது. ஆகவே, அதை நீரின்—விஷ்ணுவின் - சகோதரியாகத் தீர்மானித்தனர்.

இவ்விதம், வெவ்வேறு குணங்களையுடைய நீரும் தீயும், பார்வதீ மூலம் ஒன்றோடொன்று சம்பந்த முடையவையாக இருக்கின்றன.

பிறகு நெருப்பின் மற்ற அம்சங்களை ஆண் வடிவத்தில் வரையத் தொடங்கினர்.

அது ஒளியாக இருக்கிறது. மங்குகிற ஒளியாகவும் பிரகாசிக்கிற ஒளியாகவும் இருக்கிறது. ஆகவே, சிவாவின் சடையில் பிறைச் சந்திரனை வரைந்தனர். பிரிகின்ற அழகுடையது "ப்இர்-ஐ" (பிறை). அது இரவிலிருந்து இருட்டைப் பிரிக்கின்ற தன்மையையும் உடையது. இது ஒளியின் ஒளிர்கிற தன்மைக்கும் மங்குகிற தன்மைக்கும் அடையாளம். ஆரம்பத்தில் சுடர்விட்டு எரிகிற ஒளி, பிறகு மங்கி மறையும் என்பதற்கும் அடையாளம்.

தீ புகையை வெளியிடும் தன்மையையுடையது. புகை மூச்சுவிட முடியாதபடி திக்குமுக்காடச் செய்யும். இதனால் சாவு உண்டாகும். காற்று ஓட்டம் இல்லாத ஒரு குறுகலான இடத்திலேயே புகைக்கு இத்தன்மை ஏற்படுகிறது. இத்தன்மையை உணர்த்தச் சிவாவின் தலை ரோமங்களை ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு மிக மிக நெருக்கமாக இருக்கும் சடைமுடியாக வரைந்தனர். அந்தச் சடைமுடி போன்ற மிகவும் நெருக்கமான ஒரு இடத்தில் தீயினாலும், வெப்பத்தினாலும் சாவு உண்டாகும். ஆகவே, அதைச் "சா-இடு-ஐ-மூ-இடி" (சடை முடி) என்றனர். சாவை இடுமோ என்ற சந்தேகத்திலேயே மூச்சை அழிப்பது என்று பொருள் "சா-இடு-ஆ-மூ-இடி" (சடாமுடி) என்றால், சாவை இட ஆங்கே மூச்சை அழிப்பது என்று பொருள்.

தீ எல்லாவற்றையும் சாம்பலாக்கிவிடும். இதை உணர்த்த நெற்றியில் சாம்பலைப்பூசினர். இதற்கு "வி-பூ-தீ" என்று பெயரிட்டனர். அழிந்த அழகிய தீ என்று பொருள். இதைத் "தீ-அறு-இன்-ஈய்-இர்" (திருநீர்)என்றும் கூறினர். தீயினால் அறுக்கப்படுகிறவை இனிமையை

அளித்துக்கொண்டு இருக்கின்றன என்று பொருள்.

தீ சில சமயங்களில் மட்டுமே காட்டுத் தியாகப்பாவி எல்லாவற்றையும் சாம்பலாக்குகிறது. கோபம் ஏற்படக் கூடிய சமயத்தில் மட்டுமே அது அவ்விதம் செய்யும். இதை உணர்த்த நெற்றியின் நடுவில், கோபத்தில்மட்டும் திறக்கக்கூடிய ஒரு கண்ணைத்தீட்டினார்கள். இதுதான் அதன் "சைவாஅம்" என்ற தன்மைக்கு முக்கிய அடையாளம். மற்ற இரண்டு கண்களும் "சீவாஅம்" என்ற தன்மைக்கு அடையாளங்கள்.

மனிதனுடைய காது வழியே ஒலிகள் நுழைகின்றன. ஒலிகளில் சில இன்னிசையுடையவை. இன்னிசை மனிதனைப் பரவசமடையச் செய்கிறது. இன்னிசைக்குக் காரணமானது என்ன? வாயிலுள்ள நீரா, தீயா? இந்தக் கேள்வியால் எழுந்த வாக்குவாதத்தை முன்பே கவனித்திருக்கிறோம். வாயிலுள்ள தீ தான் காரணம் என்று கருதியவர்கள், சிவாவின் காதுகளில் குண்டல மணிகளை வரைந்தனர். "சா-இரி-கா-மா-பா-தா-நீ" என்ற ஏழுவிதமான இனிய ஓசைகளும் வாயிலுள்ள தீயினாலேயே உண்டாக்கப்படுகின்றன என்பதற்கு அந்த குண்டல மணிகள் அடையாளம். "கு-இன்-தா-அல்-அம்-மா-இன்-சய்" (குண்டலமணி) என்றால், பூமிக்கு இனிமை தரும் இருட்டின் தன்மையைக்கொண்டு மிருகங்களுக்கு இனிமையைத் தருவது என்று பொருள். அதாவது, விஷ்ணுவைக் கொண்டு இனிமையை உண்டாக்குவது. வாயிலுள்ள சுரத்தை, இனிமை உண்டாகும்படி கட்டளை இடுவது.

தீ காடுகளில் பரவுகிறபோது, "சடசட" 'படபட' என்ற ஒலிகளை உண்டாக்கிறது. இந்த ஒலிகள் காட்டுத் தீயின் இருக்கையையும் வருகையையும் உணர்த்துகின்

றன. அக்காலத்தில் காட்டுத் தீ பரவிய பக்கங்களை "ஊ-இடு-கை" (உடுக்கை) என்று குறிப்பிட்டனர். உண்ண வைத்திருக்கும் பக்கம் என்று பொருள். மாகா தேவாவுக்கு அந்தப்பக்கங்க ளெல்லாம் ஊ இடுகை. உ இடுகையில் எழும் ஒலிகள் "சடசட", "படபட" என்பவை. ஊ இடுகையில் ஒலிகள் எழுந்தால், தீ பரவுகிறது, தீ உண்ணுகிறது என்று அர்த்தம். இந்தத் தன்மையை உணர்த்தச் சிவாவின் ஒரு கையில், சடசட, படபட வென்று ஓசை எழுப்பக்கூடிய ஒரு தோல் கருவியை வரைந்தனர். அதையே ஊ இடுகை என்றனர்.

ஊ இடுகையில் காற்று அடிக்கும் திசையைத்தவிர மற்ற திசைகளில் தீ பரவுகிறது. எந்தத் திசையில் ஓடினாலும் தீ சூழ்ந்து கொள்கிறது. வடக்கிலிருந்து காற்று அடித்தால், வடதிசையிலோ, கீழ்திசையிலோ ஓட முடியாதபடி தீ தடுக்கிறது. தெற்கு திசையிலேயே ஓட முடியும். தெற்கிலிருந்து காற்று அடித்தால், வடதிசையிலேயே ஓட முடியும். இப்படி தீ சூழ்வதனால் ஏற்படுகிற நிலையை, "தீ-இர்-ஈ-சூ—இல்-அம்" (திரிசூலம்) என்றனர். தீ இருந்து அழிப்பதனால் ஓட்டம் இல்லாத தன்மை என்று பொருள். இதை உணர்த்த, தீ பரவக் கூடிய மூன்று திசைகளுக்கு அடையாளமாக மூன்று முனைகளைக் கொண்ட ஒரு கருவியை இன்னொரு கையில் வரைந்தனர். (தீ கைதீயாக ஆனபிறகு, இதே கருவி "எ-தீ-இரி"க்கு அடையாளமாயிற்று. எறியப்படுகிற தீ அழிக்கும் தன்மையே எ-தீ-இரி உலோகக் காலத்தினர் இதை இரும்பு சூலமாக்கினார்கள்).

தீயிலே வெந்து சாம்பலான விலங்குகளின் எலும்புகள் மிகவும் வலிமையுடையவை. கல்லைப்போல் கனமாக இருக்காது. ஆனால் கல்லைவிட வலுவாக இருக்கும். அந்த எலும்புகளைக் கூராகத் தீட்டி, அபூர்வமான ஆயுதங்களாக அவர்கள் உபயோகப்படுத்தினர். தீயினாலே அத்தகைய கூறிய ஆயுதம் கிடைக்கிறது என்ற கருத்தை

உணர்த்த, சிவாவின் இன்னொரு கையில் மான் கொழுவைத் நீட்டினர். கொழு என்றால், கூரிய கருவி. மா-இன்-கொழு என்றால், மிருகங்களுக்கு இனிமையான கூரிய கருவி என்று பொருள். கூரிய கருவி, மின்னலைப் போன்றது. மின்னல் மெல்லியது; கூர்மையானது; பாய்ந்து தாக்குவது. மின்னலுக்கு "வா-சி-இர்-அம்" (வஜ்ஜிரம்) என்று ஒரு பெயரும் உண்டும். பாய்கின்ற ஒளியாக இருக்கும் தன்மை என்று பொருள். மின்னலைப் போல், மெல்லிய, கூர்மையான, பாய்ந்து தாக்கக்கூடிய கருவியை உண்டாக்குவது தீ. அது இல்லையேல் கூரிய கருவிகளையே உண்டாக்க முடியாது. ஆகவே, மான் கொழுவை மின்னல் போன்றதாக வரைந்தனர்.

தீ குளிரை விரட்டுகிறது. தீ மட்டும் மனிதனுடைய கையில் இருக்குமானால் அதைக்கொண்டு குளிரை விரட்டலாம். பகைவர்களை விரட்டலாம். கருவிகளை உண்டாக்கலாம். அரிய பெரிய காரியங்களைச் செய்யலாம். கை-தீ (கையிலுள்ள தீ) வாஸ்தவத்தில் "நே-இர்-பு" (நெருப்பு). அதாவது, நேசமாக இருக்கும் பண்புடையது. இதை உணர்த்த சிவாவின் இன்னொரு கையில் நெருப்புச் சட்டியை வரைந்தனர்.

தீயைக் கண்டு புலி, சிங்கம், வேங்கை முதலிய கொடிய மிருகங்களெல்லாம் பயந்து ஓடுகின்றன. தீயைச் சாமார்த்தியமாக எறிந்து வேட்டையாடினால், அந்தக் கொடிய மிருகங்களின் தோல்களையே மனிதன் ஆடையாக அணிய முடியும். இதை உணர்த்தப் புலியின் தோலைச் சிவாவின் ஆடையாக வரைந்தனர்.

தீயைப்போல் சாவை உண்டாக்கக்கூடிய பாம்பு தீயின் உஷ்ணத்தில் வாழவில்லை யென்றால், கொடிய விஷத்தைப் பெறமுடியாது. இருட்டின் அரவணைப்பில் அது வாழ்ந்த போதிலும், தீயின் உஷ்ணத்தினால்தான் விஷமுடையதாகிறது. இருட்டிலும் நீரிலும் அது "ஆ-ஈ-இர்-அம்" தலைகளையுடையதாக இருந்தபோதிலும், தீயின் ஒளியில் ஒரே தலையுடையதாகவே இருக்கிறது அது மற்ற உயிரினங்களை யெல்லாம் சாகடித்த போதிலும், தீயைத் தீண்டி சாகடிக்க முடியாது. அது தீயின் உஷ்ணத்தில் வாழ்கிறது. ஆனால் தீயை அதற்கு அழிக்க முடியாது. தீயின் எதிரே பல தலைகளைக் காட்டி அதற்கு ஏமாற்ற முடியாது. தீ மிகவும் அதிகமானால் அது அழியும். தீ மிகவும் குறைந்து விட்டால் அது விஷத்தை இழக்கும், தீ சம நிலையில் இருக்கிறபோதே, அது விஷமுடையதாக இருக்கிறது. இந்தக் கருத்தை உணர்த்தச் சிவாவின் கழுத்தில் — உச்சியிலுமல்லாமல் பாதத்திலுமல்லாமல் — ஒரே தலையையுடைய பாம்பை வரைந்தனர்.

அந்தப் பாம்பின் கொடிய விஷத்தைத் தீயினால் நீக்கிவிடமுடியும். மனிதனை எந்த விஷஜந்து கடித்தாலும், உடனே கடிவாயில் தீயை வைத்துப் பொசுக்கினால், விஷம் தலைக்கு ஏறாது. மனிதனைக் காப்பாற்றிவிட முடியும். இதை உணர்த்தத் தொண்டையில் விஷத்தை வரைந்தனர்.

இத்தகைய குணங்களையுடைய தீய்க்கு, நீரினால் சாவு உண்டாகிறது. மழை பெய்தால் காட்டுத்தீ அணைந்து விடும். தண்ணீரைக் கொட்டினால் நெருப்பு மடிந்து விடும். இதை உணர்த்தச் சிவாவின் தலையில் நீரை வரைந்

தனர். தலைக்குமேல் மழை பெய்வதுபோல் சில கோடு களைக் கிழித்தோ, அல்லது தலையிலேயே நீர் ஊற்றை வைத்தோ இத்தன்மை உணர்த்தப் பட்டது.

சிவாவின் தலையில் வரையப்பட்ட நீர் ஊற்றுக்குக் "கம்-கை" (கம்கை) என்றும், "கா-இன்-கை" (கங்கை) என்றும் "கம்-கா" (கங்கா) என்றும் பெயரிட்டனர். கம்கை என்றால் நீர் பக்கம். காஇன்கை என்றால் காக் கின்ற இனிய பக்கம். கம்கா என்றால் நீர்காப்பு. அந்தத் தண்ணீர் இல்லையேல், சிவாவின் உடம்பில் வரையப்பட்ட தன்மைகள் எதுவுமிருக்காது. இத்தன்மைகளை யெல் லாம் உண்டாக்குவது, விண்ணிலிருந்து கொட்டும் தண் ணீர்தான் என்பது விஷ்ணு கட்சியினர் வாதம். தண்ணீர் மேகங்களிலிருந்து கொட்டுகிறது. மேகங்களில் மின்னல் வசிக்கிறது. இவ்விதம், தீ தன்னிடமே, தன் தலையிலே யே, நீரை வைத்திருக்கிறது என்பது சிவா கட்சியினர் வாதம்.

இதுதான் "சி-தி-இர்-அம்" (சித்திரம்) ஒளியும் தீயும் இருக்கும் தன்மை. இதுதான் "சி-வா-பா-இடு-அம்" (சிவப்படம்). ஒளியாக வருவது பாதுகாப்பை இடும் தன்மை. இந்தத் தன்மைகளைக் கல்லில் அழகாகத் தீட்டுவதுதான் "கல்-அ", "கல்-ஐ", 'கன்-அ'.

இந்தத் தன்மைகளைக் கல்லில் அழகாகத் தீட்டிய பிறகு, நாள் தோறும் பார்த்து, சிந்தித்தபோது, இரவில் உறக்கத்திலும் அதுபோன்ற ஒரு தோற்றம் தோன்ற ஆரம்பித்தது. அத்தோற்றம் மூளையின் சிருஷ்டி. அது வும் "கன்-அ" என்று கூறப்பட்டது. கல்லிலுள்ள அழகிய வடிவத்தை உறக்கத்தில் காணுவது கனு.

இப்போது இருட்டு, நீர் ஆகியவற்றின் தன்மைகளை எப்படி கல்லில் வரைந்தனர் என்பதைப் பார்ப்போம்:—

மூ-இர்-கம் †

இருட்டு சாஸ்வதமாக எங்கு குடிகொண்டிருக்கிறது? மனிதனுக்குப் பாதுகாப்பு இல்லாத கடலின் அடி ஆழத்தில் அது நிரந்தரமாக வசிக்கிறது. இதை உணர்த்தக் கடலின் ஆழத்தைப் படமாக வரைந்தனர். அதற்குப் "பா-இல்-கடு-அல்" (பால்கடல்) என்று பெயரிட்டனர். பாதுகாப்பே இல்லாத கடுமையான இருட்டு என்று பொருள்.

மேலும் அது பூமியிலுள்ள ஆழ் பள்ளங்களிலும் வளைகளிலும் பொந்துகளிலும் வசிக்கிறது. அவற்றில் அதனுடன் வசிப்பது பாம்பு. இது அதற்கும், அது இதற்கும், பாதுகாப்பாக இருக்கின்றன. அதனுடன் வசிக்கிற பாம்பு, ஒளியிலுள்ள பாம்பைப்போல் ஒரு தலையுடையது அல்ல. "ஐ-தலை" உடையது. ஆங்கே தீயின் சிவந்த தன்மையினல் சாகடிக்கப்படுவது இங்கே இருட்டுக்குப் பாதுகாப்பை வைக்கிற பக்கமாக அமைந்திருக்கிறது. "ஆ-தீ-சே-சா-அன்-பா-இடு-கை" (ஆதிசேஷன் படுக்கை) என்றால் இதுதான் பொருள். ஆங்கே தீயின் சிவந்த தன்மையினல் சாகடிக்கப்படுபவன் "ஆ-தீ-சே-சா அன்" (ஆதிசேஷன்). பாதுகாப்பை அல்லது பரப்பை இடுகிற பக்கம் "பா-இடு-கை" (படுக்கை). இந்த கருத்தை உணர்த்த, கடலின் ஆழத்தில் ஐதலைகளையுடைய ஒரு பாம்பின் படுக்கையை வரைந்தனர்.

இருட்டிற்கும் தீயைப்போலவே இரண்டு தன்மைகள் உண்டு. ஒன்று "வி-இசி-நு" (விஷ்ணு) என்ற தன்மை. மற்றொன்று "இல்-அ-கு-அம்-ஈய்" (இலக்குமி) என்ற தன்மை. விரைந்து கட்டுகிற கடுமையான இருட்டு விஷ்ணு. இணையில்லாத அழகை பூமியின் தன்மைக்கு ஈய்வது இலக்குமி. ஒன்று தூய தீயைப்போல் தூய

† மூ-இர்-கம்: மூன்று தன்மைகளையும் உடைய நீர்.

இருட்டு; தூய நீர். இன்னொன்று பார்வதியைப் போல், ஒளியுடன் கலந்த இருட்டு; தீயுடன் கலந்த நீர். "இல்-அ-கு-அம்-ஈய்" (இலக்குமி) என்ற தன்மையை, "இல்-அ-சீ-மீ" (இலக்ஷ்மி) என்று சிவன் கட்சினர் கூறினர். இணையில்லா அழகுடைய ஒளியினால் மேன்மையடைவது என்று பொருள். இந்த இரண்டு தன்மைகளையும் உணர்த்த, கடுமையான இருட்டைக் கறுப்பு நிறமுடைய ஆடவனாகவும், நிழலிருட்டை அழகுடைய பெண்ணாகவும் அந்தப் படுக்கையில் வரைந்தனர்

கடலுக்குள் இருட்டு இருக்கிறது. கடலுக்கு மேல் வெளிச்சமிருக்கிறது. இருட்டின் இரண்டு தன்மைகளினாலும், ஒளியின் இரண்டு தன்மைகளினாலும் உண்டாகும் தனித் தன்மை "பிர்-அம்-மா-அம்" (பிரம்மம்). விஷ்ணுவின் தன்மைக்கும், சிவாவின் தன்மைக்கும் உட்பட்டது. இதை உணர்த்த இருட்டின் வயிற்றிலிருந்து கிளப்புகிற ஒரு தாமரைக் கொடியின் நுனியில், சூரிய ஒளியினால் மலர்ந்திருக்கிற ஒரு தாமரைப் பூவில், நான்கு விதமான தன்மைகளினால் ஒருமித்து இயங்குவதன் மூலம் சிருஷ்டிக்குக் காரணமாக இருக்கிற 'பிரம்மம்' என்ற தன்மையை நான்கு முகங்களுடைய ஒரு மனிதனாக வரைந்தனர். கொடி இருட்டிலும், நீரிலும் இருக்கிறது. பூ ஒளியிலும் வெப்பத்திலும் இருககிறது. இதைப்பற்றி சிவன் கட்சியினருக்கும், விஷ்ணு கட்சினருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தை வேறு ஒரு இடத்தில் விவரமாக கவனிப்போம்.

இப்போது இருட்டின் - கறுப்பு ஆடவனின் - உடலமைப்பைப் பார்ப்போம்.

இருட்டு நீர் வடிவத்தில் மழையாகக் கொட்டுகிறது. மழை கம்பிகளைப்போல் உருண்டையாக இருக்கிறது. அது ஆற்றிலும் வெள்ளத்திலும் சுழலாகச் சுழல்கின்றது. சுழலில் அகப்படுகிற உயிர், ஆழத்திலுள்ள கடுமையான

இருட்டினால் சாகடிக்கப்படுகிறது. இருட்டு திடீரென எல்லா திசைகளிலும் சூழ்கின்றது. சூழ்கிற தன்மையும், சக்கர வடிவமானது. இதை உணர்த்த இருட்டின் ஒரு கையில் சுழலக்கூடிய சக்கர வட்டமான ஒரு கருவியை வரைந்தனர். இந்தக் கருவியை "சா-கா-இர் அம்" (சக்கரம்) என்றனர். சாவாகவும் காப்பாகவும் இருக்கும் தன்மையுடையது என்று பொருள். சுழல்களிலேயே காக்கின்ற சுழல்களும், அழிக்கின்ற சுழல்களும் உண்டு. கடல் அலைகளில் ஆண் அலைகள் அழிப்பவை; பெண் அலைகள் காப்பவை. அலைகளும் ஒருவிதமான சுழல்கள்தான். "சா-கா-இர்-அ-ஆ-ஈ-தா-அம்" (சக்கராயிதம்) என்றால், சாவாகவும் காப்பாகவும் இருக்கிற அழகினால், ஆங்கேயும் ஈங்கேயும் தாவும் தன்மையுடையது என்று பொருள். இது பிரதானமாகக் கடல் அலைகளையே குறிக்கும்.

ஒரு பக்கத்தில் அது அலைகளாலும் சுழல்களாலும் மனிதர்களைச் சாகடித்த போதிலும், இன்னொரு பக்கத்தில், சாவில் இனிமைத் தரக்கூடிய பூமியில் (சா-இன்-கு சங்கு) அவனைச் சேர்ப்பிக்கிறது. அந்த பூமியைச் சுட்ட, அங்கு கிடைக்கிற சங்கை அடையாளமாக மறு கையில் வரைந்தனர். அந்தச் சங்கு, வாழ்பவர்களுக்குச் சாவில் இனிமை தரக்கூடிய பூமிக்குச் செல்ல வழி காட்டியாக இருப்பது போலவே, கடுமையான இருட்டில் வழி தெரிந்து செல்வதற்கும் பிரயோஜனகரமாக இருக்கிறது. இருட்டில் கண் தெரியாதபோது, சங்கை ஊதினால், ஒரு பேரொலி உண்டாகும். அந்த ஒலி வழியிலுள்ள மிருகங்களை விரட்டும். அதே சமயம் மனிதனுக்கு தைரியத்தை யூட்டும். முன்னே செல்பவன் சங்கை யூதி நடக்கிறபோது, பின் வருபவர்கள் அவ்வோசையைப் பின்பற்றி சுலபமாக நடக்க முடியும். அது வெண்ணிறமாக இருப்பதனால், பின் வருகிறவர்களுக்கு இருட்டிலேயே அந்த வெண்மை ஒரு குறிபாக இருக்கும். அதோடு, "க்ஓ" என்ற ஒலியில் இனிமையைத் தரும் தன்மையுடையது இருட்டே என்று விஷ்ணு கட்சியினர்

வாக்குவாதம் புரிந்ததை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். இந்தக் கருத்திற்கும் அந்தச் சங்கு அடையாளம்

இருட்டில மறைந்திருப்பவர்களுக்கு வெளிச்சத்திலுள்ளவர்கள் தெரிவார்கள். ஆனால் வெளிச்சத்திலுள்ளவர்களுக்கு இருட்டிலுள்ளவர்கள் தெரியமாட்டார்கள். இதனால் இருட்டு, மறைந்து காத்துக் கொள்ளவும், மறைந்து தாக்கவும் உதவுகின்றது. இந்தக் கருத்தை உணர்த்த தண்டோடு கூடிய ஒரு மலர்ந்த தாமரைப்பூவை இன்னொரு கையில் வரைந்தனர். மலர்ந்த தாமரை வெளிச்சத்தில் இருக்கிறது. அதன் தண்டு இருட்டிலிருக்கிறது. இருட்டில் மறைந்துகொண்டு வெளிச்சத்தில் நடப்பதைப் பார்க்கிறது. மேலும், இதே அடையாளம், நீரின்றி ஜீவராசிகள் வாழ முடியாது என்பதையும் உணர்த்துகிறது நீரற்ற குளத்தில் தாமரைப் பூ எப்படி கருகிச் சருகாகிறதோ, அதேபோல் நீரில்லா உலகில் மனிதர்களும் தீயினால் கருகிச் சருகாவார்கள்.

இன்னொரு கையில் கருங்கல் கதையைத் தீட்டினார்கள். "கா-தா-ஈய்" என்றால் காப்பையும் வலிமையையும் ஈய்வது. "கா-தா-ஈ" என்றால் காப்பைக் கெடுத்து அழிப்பது. கருங்கல் கதையினால் அடிக்கப்படுகிறவன் பிரக்கினை இழந்து விழுகிறதைப் போலவே, கடுமையான இருட்டில் அகப்பட்டுக் கொள்கிறவனும் நிலை தடுமாறித் தவிக்கிறான். கருவிகளிலேயே மிகவும் வலுவான கதையைப் போன்றது இருட்டு. மாறுகின்ற தன்மையையும், மாற்றுகின்ற தன்மையும் உடைய இருட்டு "மா-அல்" (மால்) இது நீராக மாறி இருக்கிறது. மொட்டுகளைப் பூக்களாக மாற்றுகிறது. நீர் இல்லையேல் எந்தச் செடியும் பூக்காது. எல்லாவிதமான பூக்களிலும் அழகையும் வாசனையையும் தந்துகொண்டு இருப்பது "மால்" என்ற நீரே. ஆகவே, பூத்து விரிந்தவற்றை "மால்-அ-இர்" (மலர்) என்றனர். மாலினால் அழகாக இருப்பவை என்று பொருள். ஆகவே வடிவத்தின் முன்னே எல்லாவிதமான வர்ண மலர்களையும் வரைந்தனர்.

நீர் அதிகமாவதினால் உண்டாகும் நோய்களைத் தீர்க்க துளசிச் செடியின் சாறு மருந்தாக அமைந்திருக்கிறது. துளசிச் சாறு, காப்பாற்றும் பெண் தன்மையுடையது. நோய்க்கு மருந்தாக உண்ணப்படுவது; உண்ணப்படுபவள் "து-அள்" (துள்) உண்ணப்படக்கூடிய பெண் தன்மையினால் அழகும் சிறப்பும் உடையது "து-அள்-அ-சி" (துளசி). துளசியாக இருந்துகொண்டு மால் அழகை ஈயும் தன்மை "துளசி-மால்-அ-ஈய்" (துளசி மாலை). நீர் இலக்குமியாக இருப்பதை விட, முக்கியம் அது துளசியாக இருப்பதுவேயாகும். நோயினின்றும் காப்பது துளசி தானே? ஆகவே, துளசி மாலையை மார்பில் மாலையாக வரைந்தனர்.

இத்தகைய குணங்களையுடைய இருட்டிற்கு எதனால் சாவு? சிகப்பு நிற தீயினாலும், அதிலிருந்து பாவும் வெண்ணிற ஒளியினாலும்! இந்தத் தன்மையை உணர்த்த அதன் நெற்றியின் நடுவில், ஒரு சிகப்புக் கோட்டையும், இரு பக்கங்களிலும் இரண்டு வெள்ளைக் கோடுகளையும் வரைந்தனர்.

சிகப்பு கோடு நெருப்பு. வெள்ளைக்கோடு வெளிச்சம்.

இந்தக் கோடுகளுக்குப் பல பெயர்கள் உண்டு.

இது "ந-அ-மா-அம்" (நாமம்) என்று பொதுவாகக் கூறப்பட்டது. மிகும் அழகால் மாற்றும் தன்மையுடையது என்று பொருள் "அரி-ந-அ-மா-அம்" (அரிநாமம்) என்றால், இருட்டை விட மிகுந்து அழகாக மாற்றும் தன்மையுடையது என்றுபொருள். 'தி-அறு-மால்-பா-தா-அம்' (திருமால் பாதம்) என்றால், தீயினால் அறுக்கப் படுகிற இருட்டு பாதுகாப்பைத் தரும் தன்மை என்று பொருள். தீ-அறு-மால்-சி-இன்-ந-அம்" (திருமால் சின்னம்) என்றால், தீயினால் அறுக்கப்படும் இருட்டு, ஒளியினால் இனிமையை மிகுக்கும் தன்மை என்று பொருள். "சீ-தீ-இர்-ஈ-சு-இர்-இன்-ந-அம்" (ஸ்திரீ சுர்ணம்) என்றால், ஒளியும் தீயும் இருந்து அழிக்க, சுகமுடையதாக இருந்து இனிமையைமிகுக்கும் தன்மை என்று பொருள்.

இதுதான் "அல்-அ-இன்-கா-இர்-பா-இடு-அம்" (அலங்கார் படம்)--இருட்டு அழகையும் இனிமையையும் காப்பாற்றும் வண்ணம் இருப்பதனல் பாதுகாப்பை இடும் தன்மை.

இந்தக் "கல்-அ" (கலா) வைப் பார்த்துப் பழகிய கண்களில், இரவில் உறக்கத்திலும் இதைப்போன்ற தோற்றம உண்டாயிற்று. இப்படி உண்டான மூளையின் சிருட்டி, "கன்-அ" (கனு) என்று கூறப்பட்டது.

ஓ-வி-யா-அம் †

தீ, நீர், இருட்டு, ஒளி ஆகியவற்றின் மேற்கண்ட குணச் சித்திரங்களோடு, மிருகங்களின் உருவங்களையும், பறவைகளின் வடிவங்களையும் பாறைகளில வரைந்தனர். எதற்காக?

அந்த மிருகங்களைக் கட்டி, தம் வசப்படுத்துவதற்காக. சிவன், விஷ்ணு சித்திரங்களுக்கு எதிரே உட்கார்ந்து "கும்பீடு" அளிப்பதன் மூலம் தமக்கு அவற்றிடமிருந்து வண்நகாஅம் பெறமுடியும் என்று நினைத்ததைப் போலவே, மிருகங்களின் வடிவங்களுக்கு முன்பு உட்கார்ந்து, அவற்றிற்கு வண்நகஅம் அளித்தால், அவையும் தமக்குத் திருப்பி வண்நகாஅம் அளிக்கும் என்று நினைத்தனர். அதாவது, அவை எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் தம் கையில் சுலபமாக சிக்கிக் கொள்ளும் என்றும் இவ்விதம் தமக்கு வண்நகாஅம் உண்டாகும் என்றும் நினைத்தனர்.

இப்படி மிருகங்களையும் பறவைகளையும் தம் வசப்படுத்த அவற்றின் படங்களைப் பயன் படுத்தியதனுல், இப்படங்களை "ஓ-வி-யா-அம்" (ஓவியம்) என்றனர். ஓடி

---

† ஓ-வி-யா-அம் : ஓடி விரைகின்றவற்றைக் கட்டும் தன்மை.

106366

விரைகின்றவற்றைக் கட்டும் தன்மையுடையது என்று பொருள்.

ஓடி விரைகின்றவற்றைக் கட்டும் தன்மையைக் கல்லில் தெரியும் அழகாக வரைவதுதான் "ஒ-வி-யா-அம்-கல்-ஐ" (ஓவியக்கலை).

இப்படி ஓடி விரைகின்றவற்றையெல்லாம் படங்களாகக் கல்லில் வரைந்த போது, எது என்ன, எதற்கு என்ன பொருள் என்று தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் பிற்காலத்தவர்களுக்கு ஏற்பட்டது. கல்லில் விரைகின்றவற்றை அர்த்தப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

கல்லில் விரைகின்றவைதான் "கல்-வி"; 'கன்-வி'

காலப் போக்கில் "கல்-வி", தெரிந்தவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு விஷயமாயிற்று. "கல்-வி"யைத் தெரிந்து கொண்டவன், மூதாதையர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொண்டவனானான். உலகத்தைப் புரிந்து கொண்டவனானான்.

தா-மீ-இழ் †

கல்லில் விரைகின்றவை (கல்-வி) தீ எப்படி இருக்கிறது, நீர் எப்படி இருக்கிறது, பாம்பின் தன்மை என்ன, மிருகங்களின் தன்மை என்ன, பறவைகளின் தன்மை என்ன என்ற பல்வேறு விஷயங்களை உணர்த்தக்கூடியவை. கல்லில் விரைகின்ற பல்வேறு வடிவங்களைப் பார்த்த போது, விஷயம் புரியாதவர்களுக்கு மூளைக் குழம்பிற்று. அவற்றை பல்வேறு பிரிவுகளாகப் பிரித்துப் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

(1) சில படங்கள் தீயிடமிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக வரையப் பட்டிருந்தன. இந்தப் படங்

† தா-மீ-இழ்: வலிமையையும் மேன்மையையும் இழுப்பது.

களைத் "தீ-இன்-தா-மீ-இழ்" (தீந்தமிழ்) என்றனர். தீயிட மிருந்து இனிமையையும் வலிமையையும் மேன்மையையும் இழுக்கும் தன்மையுடையவை என்று பொருள். "சே-இன்-தா-மீ-இழ்" (செந்தமிழ்) என்றாலும் இதே பொருள் தான்.

(2) ஈரத்தினிடமிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக வரையப்பட்டிருந்த படங்களை "ஈர்-இன்-தா-மீ-இழ்" (ஈர்ந்தமிழ்) என்றனர். ஈரத்தினிடமிருந்து இனிமையும் வலிமையும் மேன்மையையும் இழுக்கும் தன்மையுடையவை என்று பொருள். இதையே "தண்-தா-மீ-இழ்" (தண்டமிழ்) என்றும் கூறினர்.

(3) ஓடி விரைகின்றவற்றை-மிருகங்களையும் பறவைகளையும்-சித்தரிக்கும் படங்களை "ஓ-வி-யா-அம்" (ஓவியம்) என்றனர்.

(4) இம் மூன்றுக்கும் வேறுபட்டு, சந்தர்ப்ப சூழ்நிலைமைகளைத் தொடராக வர்ணித்து, கதையாகக் கூறும் படங்களைக் "கா-வி-அம்" (காவியம்) என்றனர். காக்க விரைகின்றவற்றின் தன்மையை உணர்த்துபவை என்று பொருள்.

இவ்விதம் பாறைகளில் படங்களை வரைந்து கருத்துக்களை வெளியிட்டபோது, புதியப் புதிய பிரச்னைகளை நாள் தோறும் சிந்தித்து வடிவங்களைக் கற்பனைச் செய்ய முற்பட்டனர்.

இல்-அ-கா-ந-அம்[1] இல்-அ-கு-ஈய்-அம்[2]

அவர்கள் புதிய கருத்துக்களை படங்களாக வரைய வேண்டியிருந்த போதே, ஏற்கனவே வரையப்

1 இல்-அ-கா-ந-அம்: இணையில்லாத அழகைக் காப்பாற்றி மிகுக்கும் தன்மை.

2 இல்-அ-கு-ஈய்-அம்: இல்லாத அழகை பூமிக்கு அளிக்கும் தன்மை.

பட்ட பழைய படங்களில் பல மறைந்து அழிவதைப் பார்த்தனர். பழைய படங்களை மறையாமல் மென்மேலும் பாதுகாப்பதோடு, அழகுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதே சமயம் புதிய கருத்துக்களை வெளியிட புதிய படங்களை வரைய வேண்டியுமிருந்தது.

இதிலிருந்து படம் வரைகிறவர்களுக்கு இரண்டு விதமான வேலைகள் உண்டாயின. (1) பழைய படங்களை மென்மேலும் அழகுபடுத்துவது. (2) புதிய படங்களை வரைவது.

பழைய படங்களைப் பாதுகாத்து மென்மேலும் அழகு படுத்தும் வேலையை, "இல்-அ-கா-ந-அம்" (இலக்கணம்) என்றனர். இணையில்லாத அழகைக் காப்பாற்றி மிகுக்கும் தன்மை என்று பொருள்.

புதிய படங்களை வரைவதென்ற வேலையை, 'இல்-அ-கு-ஈய்-அம்' (இலக்கியம்) என்றனர் இல்லாத அழகை பூமிக்கு அளிக்கும் தன்மை என்று பொருள். பாறையின் பேரில் கல்லினால் படம் வரைந்த போது, "க்அர்" என்ற ஒலி உண்டாயிற்று. இந்த ஒலியை உண்டாக்குபவன் "க்அர்-தா" (கர்த்தா) என்று கூறப்பட்டன. "கா-இர்-தா" (கர்த்தா) என்றால் காப்பாக இருப்பவற்றைத் தருபவன். பழைய படங்களை அழகுபடுத்துவதில் 'கர்' என்ற ஒலியை உண்டாக்கியவன், "இல்-அ-கா-ந-க்அர்-தா" இலக்கண கர்த்தா) புதிய படங்களை வரைவதில் 'கர்' என்ற ஒலியை உண்டாக்கியவன் "இல்-அ-கு-ஈய்-அ-க்அர்-தா" (இலக்கியக் கர்த்தா) இந்தப் படங்களில் வெளியிட்ட கருத்துக்களை, வாய்ச்சொல் மூலமும் அபிநயம் மூலமும் வெளியிடவும் முற்பட்டனர். ஓய்வு நேரத்தில் இதுவே பிரதான பொழுது போக்காக அமைந்தது

வாய்ச் சொல், நாக்கிலிருந்து உண்டாகிறது. "நா" என்றால் நாக்கு; சொல்; பேச்சு.

நா-அடு-கா-அம் †

வாய்ச் சொற்கள் மூலம் அழிவு சக்தியையும் காக்கும் சக்தியையும் சித்தரித்துக் காட்டினர்.

(1) காக்கும் சக்தியை உணர்த்தும் முறையில் பேசுவதை, "நா-இடு-கா-அம்" (நாடகம்) என்றனர். சொற்களை வைத்துக் காக்கும் தன்மை என்று பொருள். "நா-அடு-கா-அம்" (நாடகம்) என்றால், சொற்களை அடுக்கிக் காக்கும் தன்மை என்று பொருள்.

(2) அழிக்கும் சக்தியை உணர்த்தும் முறையில் பேசுவதை "நா-இடு-ஈ-அம்" (நாட்டியம்) என்றனர். சொற்களை வைத்து அழிக்கும் தன்மை என்று பொருள்.

அழிக்கும் சக்தியும் காக்கும் சக்தியும் ஒன்றையொன்று எதிர்த்து அபிநயங்கள் மூலமும் பேச்சு மூலமும் வாதம் புரிவதே இது.

இதில் மிகுதியை அடுத்து மிகும் தன்மையைச் சித்தரிப்பதற்கு, "ந-அடு-ந-அம்" (நடனம்) என்று பெயர். மிகுதியை அடுத்து மிகும் தன்மை என்று பொருள்.

சாகடிக்கும் தீயைச் சித்தரிப்பதை, "சா-தீ-இர்" (சதிர்) என்றனர். சாகடிக்கும் தீயாக இருப்பது என்று பொருள்.

தாவுவதன் மூலம் இனிமையைத் தரவரும் தன்மையைச்சித்தரிப்பதைத், "தா-இன்-தா-வா-அம்" (தாண்டவம்) என்றனர்.

மிகுதியானசுரம் மேலும் கெடுக்க மிகும் தன்மையைச் சித்தரிப்பதை "ந-ஈர்-தா-ந-அம்" (நர்த்தனம்) என்றனர்.

† நா-அடு-கா-அம்: சொற்களை அடுக்கிக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மை.

தீயோ அல்லது நீரோ, இருட்டோ அல்லது ஒளியோ, மிகுந்து அதிகமாகும் அழகினால் மனிதர்களைக் காக்கும் தன்மையைச் சித்தரிப்பதை, "ந-அ-அடு-கா-அம்" (நாடகம்) என்று பொதுவாகக் கூறினர்.

இவ்விதம் ஆட்டத்தாலும், பேச்சினாலும் காப்பாற்றிக் கொள்ள வலிமையையும் மேன்மையையும் தெய்வங்களிடமிருந்து இழுப்பதை "நா-அடு-கா-தா-மீ-இழ்" நாடகத்தமிழ்) என்றனர். சொற்களை அடுக்கிக் காப்பையும் வலிமையையும் மேன்மையையும்இழுக்கும் தன்மை யுடையது என்று பொருள்.

இதில் அழிவு சக்தியாக பங்கெடுத்துக் கொண்டவர்களை "அம்-சா-அம்" (அம்சம்) என்றும், காக்கும் சக்தியாகப் பங்கெடுத்துக் கொண்டவர்களை "அங்-கா-அம்" (அங்கம்) என்றும் கூறினர். முறையே அழகைச் சாகடிக்கும் தன்மையை வெளியிடுவோர் என்றும், அழகைக் காக்கும் தன்மையை வெளியிடுவோர் என்றும் பொருள்.

வாய்ச் சொற்கள் மூலம் கருத்துக்களை வெளியிடுவதென்று வந்தவுடன், இயற்கையின் பல்வேறு தன்மைகளையும் உணர்த்தக் கூடிய சொற்களையும் வாக்கியங்களையும் புதிது புதிதாக உண்டாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. புதியச் சொற்களை அமைப்பதென்பது சுலபமான காரியமல்ல. மிகவும் தேர்ந்த அறிஞர்களுக்கே இது முடியும்.

ந-யா-ந-அர் †

ஆகவே, சொற்களை உண்டாக்கிக் கொடுக்கும் திறமையுடையவர்கள் மிகவும் கௌரவிக்கப்படக்கூடிய முக்கியஸ்தர்களாக ஆனார்கள்.

---

† நா-யா-ந-அர்: சொற்களைக் கட்டி மிகுப்பவர்கள்.

இவர்கள் "நா-யா-ந-அர்" (நாயனர்) என்று கூறப்பட்டனர். சொற்களைக் கட்டி மிகுப்பவர்கள் என்று பொருள். புதியப் புதிய சொற்களை உண்டாக்கி அர்த்தத்தை விளக்குவதுதான் இவர்களுடைய பிரதான வேலை.

இப்போது, வணக்கம் அளிப்பது என்பதில், ஒரு அடிப்படையான மாறுதல் உண்டாகியிருப்பது சுலபமாக புலப்படும். இதுவரை மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் உணவுப் பொருள்களைக் கொடுப்பது, உதவிகளைச் செய்வது, உறுதுணையாக போற்றி வளர்ப்பது முதலிய செய்கைகளையல்லவா வணக்கங்களாகக் கருதினர்? இப்போது, இயற்கையின் தன்மைகளை உணர்த்தும் படங்களுக்கு வணக்கம் அளிப்பதற்கு, அத்தகையவைத் தேவைப்படவில்லை. வாய்மொழியாகத் துதிப்பதும், போற்றுவதும், உத்திரவாதமளிப்பதும் வேண்டிக் கொள்வதும் தான் பிரதான அம்சமாக இருந்தது. ஆகவே, வாய்மொழியாக அளிக்கப்படும் வணக்கம், மிகவும் இனிமையுடையதாக இருக்க வேண்டும் என்று கருதினர்கள்.

இனிமையுடைய வாய் மொழிதான் இசை.

ஆகவே இயற்கையின் தன்மைகளுக்கு அளிக்கப்பட்ட வண்நகாஅம் பிரதானமாக இசை வடிவத்தைப் பெற்றது.

கா-இர்-நா-அடு-கா-அம் †

குலத்தினர் அத்தனைபேரும் ஒன்ருகச் சேர்ந்து நின்று ஓரே குரலில் இனிமையாகச் சொற்களை அடுக்கி இயற்கையின் வெவ்வேறு தன்மைகளுக்கும் வண்நகாஅம் அளிக்கும் பழக்கம் உண்டாயிற்று.

---

† கா-இர்-நா-அடு-கா-அம்: காப்பாக இருக்கும் சொற்களை அடுக்கிக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை.

இதைக் "கா-இர்-நா-அடு-கா-அம்" (கர்நாடகம்) என்றனர். காப்பாக இருக்கும் சொற்களை அடுக்கிக் காப்பாற்றிக் கொள்ளும் தன்மை என்று பொருள். காப்பாக இருக்கும் சொற்கள் (கர்நா) எவை?

இவைதான் "சா-இரி-கா-மா-பா-தா-நீ" என்ற ஏழு சொற்கள்.

இவற்றை நூற்றுக் கணக்கான விதங்களில் அடுக்கியும், மடக்கியும், நீட்டியும், நெளித்தும், குறுக்கியும், உயர்த்தியும், தாழ்த்தியும், நிறுத்தியும் உச்சரிப்பதன் மூலம், வெவ்வேறு சமய சந்தர்ப்ப சூழ்நிலைமைகளை உணர்த்தக் கூடிய முறையில் வெவ்வேறு அர்த்தங்களை உண்டாக்க முடிந்தது. எனினும், எப்படி மடக்கி மடக்கிக் கூறினாலும், காப்பாற்று என்று கெஞ்சக்கூடிய பிரதான அர்த்தம் மாறாமலிருந்தது. உதாரணமாக கவனியுங்கள்:-

சா-இரி-கா-மா-பா-தா-நீ.

இது ஒரு வடிவம். இதை நீட்டியும் உச்சரிக்கலாம்; குறுக்கியும் உச்சரிக்கலாம். நெளித்தும் பாடலாம். ஒவ்வொரு விதமாக பாடுகிறபோது ஒவ்வொரு விதமாக பேசுவதாக இருக்கும். (1) சாவை முறிபடித்துக் காப்பாற்றிக் கொள்ள மிருகத்திற்குப் பாதுகாப்பைத் தருக நீ! (2) சாவாக இருந்து அழிப்பதைக் காக்க மிருகத்தின் பாப்பைப் பகைக்கிறாய் நீ! (3) சாவாக வருவதனின்று காப்பாற்ற மாறுபட்ட பாதுகாப்பைத் தருக நீ! (4) சாவை முறியடித்துக் காப்பாற்றிக் கொள்கிற மிருகத்தின் பாதுகாப்பைக் கெடு நீ! (5) சாவை முறியடித்துக் காக்க மிருகங்களின் பாப்புக்குத் தாவுக நீ..............

நீ-தா-பா-மா-கா-இரி-சா!

(1) நீ கெடுக்கிற பாப்பு மிருகங்களின் காப்பைக் கெடுத்துச் சாகடிக்கின்றது. (2) நீ வலுவாக்கிற பாப்பு, மிருகங்களின் காப்பிடத்தில் வடிந்து சாகடிக்கிறது. (3) நீ

பகைக்கிற பாதுகாப்பு மிருகங்களின் காத்துக்கொள்ளும் சக்தியினல் முறியடிக்கப்பட்டு சாகிறது................

மா-பா-தா-நீ-சா-இரி-கா!
இரி-கா-மா-பா-தா-நீ-சா!
நீ-சா-சா! இரி-இரி-இரி! நீ-சா-இரி-கா!
பா-மா-கா-நீ-தா-சா-இரி-கா!

இதுபோல அந்தச் சொற்களைப் பலவிதமாக அடுக்குவதில் பலவிதமான தொனிகளும் ஏற்றத் தாழ்வுகளும் பொருள்களும் உண்டாயின. ஒவ்வொரு விதமான அடுக்குக்கும் வெவ்வேறு பெயர்களையும் உச்சரிப்பின் கால அளவையும் அவர்கள் போகப் போக நிச்சயித்தனர். சுரம், பண், பாட்டு என்ற மூன்று பெரும் பிரிவுகளையும், சுரத்தில் 12 உப பிரிவுகளையும், அந்த உப பிரிவில் மேலும் 16 உள்பிரிவுகளையும், அந்த உள்பிரிவுகளில் மேலும் 24 நுட்பப் பிரிவுகளையும் அவர்கள் வகுத்த விவரங்களை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நாம் விவரமாகக் காணலாம். இதைப் போலவே பண் என்பதில் நான்கு பெரும் பிரிவுகளையும், ஒவ்வொரு பிரிவிலும் முறையே 7, 6, 5, 4 உப பிரிவுகளையும் பிரித்தனர்.

படங்களை வரைவதில் "இல் அகாந அம்", "இல் அகுசுப் அப்" என்ற இரண்டு பிரிவுகள் உண்டானது போலவே இந்தக் "கர்நா" என்ற சொற்களை வித விதமாக அடுக்குவதிலும் இவ்விரண்டு பிரிவுகள் உண்டாயின. ஏற்கனவே வகுக்கப்பட்டவற்றைப் பாதுகாப்பது ஒரு பிரிவு. இல்லாததைப் புதிதாக உண்டாக்குவது மற்றொரு பிரிவு.

பாட்டுகள் மூலம் இனிமையை மிகுத்தவர்களைப் பொதுவாகப் "பா-இன்-ந-அர்" (பாணர்) என்று குறிப்பிட்டனர்.

"பா-இடு-கா-அன்" (பாடகன்) என்றால் பாட்டுகளை வைத்துக் காப்பவன் என்று பொருள்.

இனி "கல்-வி" யில் இன்னொரு விதமானதைக் கவனிப்போம்.

இங்கு "கல்-வி" என்றால் . சற்களை விரையச் செய்வது என்று பொருள். குறி தவறாது தொலையில் வருகிற மிருகங்களை எப்படி அடிப்பதென்பது மிகமிக முக்கியமாக ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இல்லையேல் அன்றைய நிலைமையில் வாழ முடியாது.

கற்களை விரையச் செய்கிறபோது என்ன நடக்கிறது? தொலையில்—ஆங்கே—வருகின்றவை அடிபடுகின்றன; அழிகின்றன. ஆங்கே-தொலையில்—சாவாக இருப்பவை அழிக்கப்படுகின்றன.

இதில் முக்கியமான அம்சம் விரைவுதான். எவ்வளவு விரைவாகக் கை வேலை செய்கிறது; கண் வேலை செய்கிறது; கற்கள் பறக்கின்றன என்ற விஷயமே முக்கியம்.

இந்த விஷயங்களைக் கற்றுத் தேர்ந்தவன், "ஆ-சா-அன்" (ஆசான்) என்று கூறப்பட்டான் ஆங்கேயே (தொலையிலேயே) சாகடிப்பவன் என்று பொருள்.

"ஆ-சா-இர்-ஈ-அன்" (ஆச்சாரியன்) என்றும் கூறப்பட்டான். ஆங்கே (தொலையில்) சாவாக இருப்பதை அழிப்பவன் என்று பொருள்.

ச்அர்-அ-கூ-வா-தீ †

கருத்துக்களை உணர்த்தும் படங்களை வரைவது, சொற்களைக் கட்டுவது, கதைகளைப் புனைவது, கவிதைகளை அமைப்பது முதலிய வேலைகள் உண்டானவுடன், ஒரு புதிய பிரச்னை தோன்றிற்று. எல்லோருக்கும் நினைத்தப்படி படம் வரைய முடியவில்லை. நினைத்தபடி நடிக்க

† ச்அர்-அ-கூ-வா-தீ: ச்அர் என்ற ஒலியின் அழகில் மங்களகரமாக வருகிற தீ.

முடியவில்லை. பேச முடியவில்லை. ஆட முடியவில்லை. சொற்களை ஆக்க முடியவில்லை. ஒரு சிலருக்கே இவையெல்லாம் முடிந்தது.

இது எதனால்?

மேலும், இவற்றில் ஆண்களை விட பெண்கள் சுலபமாக தேர்ச்சியடைந்தனர்.

இதுவும் எதனால்?

இந்தக் கேள்வி பிறந்தபோது, உடனே "கல்லை அழகாக்க உதவுவது எது? நீரா, நெருப்பா? இருட்டா, ஒளியா? விஷ்ணுவா, சிவனா?" என்ற கேள்விகளும் எழுந்தன.

கல்லை அழகுடையதாக மாற்றுவதன் மூலம் காப்பது எது? கல்-ஐ-மா-கா-எ?

கல்லை அழகாக்க வருவது தீ! கல்-அ-வா-தீ! [கலாவதி] என்றனர் ஒரு சாரார்.

கல்லை அழகாக்குவது மழையைத் தருவது! கல்-ஐ வான்-ஈய்! [கலைவாணி] என்றனர் இன்னொரு சாரார்.

பாறையில் சித்திரங்களைத் தோண்டுகிறபோதும் கோடு கிழிக்கிறபோதும் 'ச்அர்' என்ற ஒலி உண்டாகிறது. அந்த ஒலியுடன் தீப்பொறிகள் பறக்கின்றன. ஆகவே, கல்லை அழகாக்க வருவது, 'ச்-அ-ர்' என்ற ஒலியின் அழகிலேயே ஒளியாக வருகிற தீதான்—"ச் அர்-அ.சீ-வா-தீ! (சரசிவதீ) என்றனர். ச்அர் என்ற ஒலியின் அழகில் மங்கலகரமாக வருகிற தீ "ச்அர்-அ-சு-வா-தீ" (சரசுவதீ)

உடனே எதிர் கட்சியினர் ச்அர்-அ-சு-வா-தீ-பிர்-அம்-மா-அம்-பு-தீ-இரி (சரஸ்வதீ பிரம்மப் புத்திரி) என்றனர். ச்அர் என்ற ஒலியின் அழகில் மங்கலகரமாக வரும் தீ, பிரிக்கிற தன்மையினால் மாற்றும் தன்மையுடையதன்

பண்பினால், தீயாக வடிகிறது என்று பொருள். அதாவது தீ தன்னிச்சையாக தோன்றவில்லை; பிர்மம் என்ற தன்மையினால் அது உண்டாக்கப்படுகிறது என்றனர். இதற்கு அவர்கள் வேறு பல ஆதாரங்களைக் காட்டினர்.

சூரிய ஒளியினால் கற்கள் வெடிக்கின்றன. மழை நீரினால் கற்கள் தேய்கின்றன. கல்லின் அழகை இரண்டுமே மாற்றுகின்றன. மழை நீரினாலும் அருவிகளினாலும் தேய்க்கப்படுகிற கற்கள் வால்தவத்தில் அழகுடையவையாக இருக்கின்றன. எழுதுகிறபோது மை வடிவத்தில நீர் இன்றியமையாததாக இருக்கிறது. தோண்டப்பட்டச் சித்திரத்தை மேலும் அழகாக்க, மை வடிவத்தையுடைய நீர் வேண்டியிருக்கிறது. தோண்டுகிறபோது மட்டுமே கல்லில் தீ உண்டாகிறது. தோண்டிய பிறகு அதில் அழகைக் காப்பாற்றுவது மை வடிவத்திலுள்ள நீரே யாகும். அழகுக்குப் பிரதானமானது நீர்தான். ஆகவே "ச்அர்-அ-சு-வா-தீ-பிர்-அம்-மா-அ-சா-தி" (சரஸ்வதி பிரம்ம சதி) என்றனர். ச்அர் என்ற ஒலியின் அழகில் மங்கலகரமாக வருகிற தீ, பிரிக்கிற தன்மையினால் மாற்றும் தன்மையுடையதனால், சாகடிக்கப்படும் தீ என்று பொருள். அதாவது, பிரிக்கிற தன்மையினால் மாற்றும் தன்மையையுடைய பிரம்மம், கல்லிலிருந்து அழகைப் பிரிக்கிறபோது, கல்லிலுள்ள தீயைச் சாகடிக்கிறது. அதன் விளைவாகவே தீப்பொறிகள் தோன்றி, உடனே செத்துவிடுகின்றன. அப்படி தீயைச் சாகடித்தவுடன், கல்லை அழகுடையதாக்குகிறது நீர் என்றனர். ஆகவே "கல்-ஐ-வா இன்-ஈய்-கம்-அல்-அ-தே-வி" (கலைவாணி கமலத்தேவி) என்றனர். கல்லை அழகாக்க வருவதன் மூலம் இனிமையை ஈய்வது, நீராகவும் இருட்டாகவும் அழகைக் கைக்கொள்ள விரைவதுவே என்று பொருள். மேலும், "கல்-ஐ-வா-இன்-ஈய்-வெய்-இன்-தா-மா-ஈர்-ஐ" (கலைவாணி வெண்தாமரை) என்றனர். கல்லை அழகாக்க வருவதன் மூலம இனிமையை ஈய்வது, வெப்பத்தினால் இனிமையைக் கெடுப்பதை மாற்றி,

சரத்தினால் அழகாக்குவது எதுவோ அதுவே தான் என்று பொருள். உடனே சிவன் கட்சி னர் இதை மறுத்து. "கல்-ஐ-வா-இன்-ஈய்-வெண்-தா-மா-ஈர்-ஐ-வா-சீ" (கலைவாணி வெண்தாமரை வாசீ) என்றனர். வெண்மையைக் கெடுத்து மாற்றுகிற ஈரத்தை அழகாக்க வருகிற ஒளியே என்று பொருள். இதனால் "கல்-ஐ-வா-இன்-ஈய்-தா-சீ" (கலைவாணி தாசீ) என்றனர். கலைவாணி தாவுகிற ஒளியே என்று பொருள்.

இந்த விவாதத்திற்கு இடையே இருந்தவர்கள் ஒரு முடிவு கூறினர்.

கல்லை அழகாக்குவது கடுமையான தீயோ அல்லது கடுமையான நீரோ அல்ல. பெண்மையான தீயும் நீருமே இரண்டற கலந்திருப்பதனால்தான் கல்லில் அழகு விளங்குகிறது. கடுமையான வெப்பம் கல்லை உடைத்து விடுகிறது. கடுமையான மழைச் சித்திரத்தை அழித்துவிடுகிறது. இதனால் ஆண் தன்மையுடைய தீயையும் நீரையும் முக்கியமாகக் கருதுவதற்கு இல்லை. பெண் தன்மையுடைய தீயும் நீரும்தான் முக்கியம்.

ஆகவே, சிவன் விஷ்ணு ஆகிய இரண்டும் ஒருமித்து இயங்குவதனால் உண்டாகும் தனித் தன்மையாகிய பிர்மத்தில், பெண் தன்மைக்கு எடுத்துக் காட்டாக உள்ளடங்கியிருப்பதுவே கலைவாணி என்று கூறினர். இந்தப் பெண் தன்மையையே "கல்-ஐ-மா-கா-அள்" (கலைமகள்) என்றனர். கல்லை அழகாக மாற்றிக் காப்பவள் என்று பொருள்.

இந்த குணத்தை வெளியிடவும் ஒரு படத்தை வரைந்தனர். பிர்மத்தில் பிறந்து, பிர்மத்திலேயே வளர்ந்து, பிர்மத்துடனேயே புணர்ந்து, பிர்மத்திலேயே இருக்கும் ஒரு பெண்ணின் வடிவமே அது. அப்பெண்ணுக்குத் தந்தையும் பிர்மம்; தாயும் பிர்மம்; புருஷனும் பிர்மம். இதனால் பிர்மத்திற்கு அடையாளமான தாமரைப் பூவில் அப்பெண் வீற்றிருப்பதாகத் தீட்டினர்.

தாமரைப்பூ "கம்-அல்" (கமல்), "சி-தி" (சிதி) ஆகிய நான்குடனும் சம்பந்தப் பட்டிருப்பதை ஏற்கனவே பார்த்தோம்.

பிர்மத்தில் அடங்கியிருக்கும் இந்த விசேஷ பெண் தன்மைக்கு வண்நகாஅம் அளித்தால், அத்தன்மையிடமிருந்து திருப்பி வண்நகாஅம் கிடைக்கும் என்று நினைத்தனர். அது எந்த அளவுக்குத் திருப்பி வண்நகாஅம் அளிக்கிறதோ அந்த அளவுக்கு "கல்-ஐ" வளர்ச்சி உண்டாகும்; கல்-அ" முயற்சியில் வெற்றி கிட்டும். ஆகவே, "கல்-அ" முயற்சியைத் துவங்குவதற்கு முன் ஒவ்வொருவரும் பிர்மத்தில் அடங்கி 'கல்-ஐ-மா-கா-அள்" என்ற விசேஷ தன்மைக்கு வண்நகாஅம் அளிக்கும் பழக்கம் உண்டாயிற்று.

அக்காலத்தில் ஏற்பட்ட பல தொழில் பிரிவினைகளையும், தீயை வென்றவுடன் ஏற்பட்ட மாறுதல்களையும் அடுத்த பாகத்தில் தொடருவோம்.

(முதல் பாகம் முற்றிற்று)

- தீயை எப்படி வென்றனர்?
- தீயை வென்றவர்களுக்கு என்ன பெயர்?
- வெல்லப்பட்ட தீ எப்படியெப்படி உபயோகிக்கப் பட்டது?
- எத்தகைய மாறுதல்களைச் சமுதாயத்தில் தீ உண்டாக்கிற்று?

அடுத்த பாகத்தில்

A-12/5
...ADU ARCHIVES
106366